தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும்

ஓர் ஒப்பாய்வு

(கடவுட் கொள்கைகள்)

பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு
முனைவர் (Ph. D.) பட்டத்திற்காக
அளிக்கப்பட்ட ஆய்வேடு

மோசசு மைக்கேல் பாரடே, எம்.ஏ., எம்.ஃபில் , பி.எட்.,
தமிழ் விரிவுரையாளர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை-59

தமிழ் ஆராய்ச்சி மையம்
அ. வீரையா வாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரி.
பூண்டி
சூலை 1991

முனைவர் இரா. செயபால், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர் (தேர்வுநிலை)
அ. வீரையா வாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரி (தன்னாட்சி),
பூண்டி,
தஞ்சாவூர் மாவட்டம்.

நாள் : 30.7.91.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

'தமிழ்ச்சித்தர் பாடல்களும் விவிலியமும் — ஓர் ஒப்பாய்வு' (கடவுட் கொள்கைகள்) என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வுரை, பாரதிதாசன் பல்கலைக்கழகப் பிஎச்.டி. பட்டத்திற்காக என் மேற்பார்வையில் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் **திரு. மோசசு மைக்கேல் பாரடே** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட். அவர்கள் 1985 ஆகஸ்டு முதல் 1991 சூலை வரை உருவாக்கிய ஆய்வுப்படைப்பாகும். இவ்வாய்வுரை அல்லது இதன்பகுதிகள் இதற்குமுன் வேறு எந்தப்பட்டத்திற்கோ ஆய்வரங்கிற்கோ பணிக்கப்படவில்லை என்பதற்கும், இஃது ஆய்வாளர்தம் சொந்த முயற்சிப் பயனாகும் என்பதற்கும் சான்றிதழ் வழங்குகிறேன்.

இரா. செயபால்
30.7.91.

(இரா. செயபால்)

டாக்டர், இரா. செயபால், எம்.ஏ.,பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

மோசசு மைக்கேல்பாரடே, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
தமிழ் விரிவுரையாளர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம், சென்னை—59.

நாள் : 30-7-91

ஆய்வாளர் உறுதிமொழி

'தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும் — ஓர் ஒப்பாய்வு' (கடவுட் கொள்கைகள்) என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வுரை, 1985 ஆகஸ்டு முதல் 1991 சூலை வரை யான் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக அமைந்ததாகும். இவ்வாய்வுரை இதற்குமுன் எவ்விதப்பட்டம், சான்றிதழ், பல்கலைக்கழக உறுப்பினர் தகுதி போன்றவற்றிற்குப் பணிக்கப்படவில்லை என்றும் இஃது என்னால் தன்னியலாக உருவாக்கப்பட்டது என்றும் உறுதி கூறுகிறேன்.

(மோசசு மைக்கேல் பாரடே)

நன்றியுரை

இனிய தமிழ் இலக்கியத்தில் இத்தகு உயராய்வினை யான் மேற்கொள்ளுதற்குத் துணைநின்ற பெருமக்களுக்கு என் நன்றியுணர்வைப் புலப்படுத்திக் கொள்வதற்கு இப்பகுதியைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

முதற்கண் இப்பெரும் பணியில் எனக்குத் தோன்றாத் துணையாகித் திருவருள்புரிந்த இயேசுகிறித்துபெருமானின் திருவடிக் கமலங்களை நன்றியுணர்வுடன் வழுத்துகின்றேன்.

எனது ஆய்வுமையமாக அமைந்த தஞ்சை பூண்டி அ. வீரையா வாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரியின் ஆட்சிக் குழுத்தலைவர் உயர்திரு வீ. அப்பாவு வாண்டையார் பி.ஏ., அவர்கட்கும் கல்லூரிச் செயலர் — தாளாளர் உயர்திரு. கி. துளசி ஐயா வாண்டையார் அவர்கட்கும் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் பிறர்க்கும், அன்னார் அளித்த நல்லாதரவுக்காக நன்றி பல படைக்கின்றேன்.

ஆய்வுப்பணியில் என்னைப் பெரிதும் ஊக்குவித்த இக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் மு.சு. கோவிந்தசாமி, எம்.ஏ., அவர்கட்கும் இந்நாள் முதல்வர் பேராசிரியர் ந. மெய்ப்பொருள்., எம்.ஏ., எம்.ஃபில். அவர்கட்கும் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் அமரர் முனைவர் வே. காத்தையன், எம்.ஓ.எல்., பி.எச்டி., அவர்கட்கும் இந்நாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கோ.இரா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பி.எச்டி., அவர்கட்கும் இதய நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆய்வு மேற்கொள்ள அனுமதியும் ஆதரவும் வழங்கிய — யான் முன்னர் பணியாற்றிய திருச்சி பிசப் ஈபர் கல்லூரி நிருவாகத்தினருக்கும் குறிப்பாக, முதல்வர் பேராசிரியர் தே. சுவாமிராஜ் அவர்கட்கும், தற்போது பணியாற்றும் சென்னைக் கிறித்தவக் கல்லூரி நிருவாகத்தினருக்கும் குறிப்பாக,

முதல்வர் முனைவர் பிரான்சிஸ் சௌந்தரராஜ் அவர்கட்கும் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பெ.கு. உலகநாதன் அவர்கட்கும் துறையன்பர்கள் பிறர்க்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

மிகமுக்கியமாக, இந்த ஆய்வுப் பெரும்பணியில் தொடக்கமுதல் இறுதிவரை, தாயாகவும் தந்தையாகவும் நல்வழிகாட்டும் ஆசானாகவும் அமைந்து, எனது பல்வேறு இக்கட்டான சூழல்களுக்கிடையிலும் என்னை உந்தி ஊக்குவித்து, வழிகாட்டிய பேரன்புடைய எனது ஆய்வு நெறியாளர் முனைவர் இரா. செயபால் அவர்கட்கு உளம் கனிந்து நெஞ்சு நெகிழ்ந்து நன்றி பல படைக்கின்றேன்.

ஆய்வுக்காலம் முழுதும் அரியநூல்களைத் தந்தும் ஆலோசனைகளும் அன்புமொழிகளும் கூறியும் என்னை ஊக்குவித்த, நூலகர்கள் உள்ளிட்ட பெருமக்கள் அனைவருக்கும், குறிப்பாக ஆய்வின் இறுதிக்கட்டத்தில் நல்லாலோசனைகள் நல்கிய முனைவர் ஆர். வெங்கட்ராமன், தட்டச்சுப்படிகளைத் திருத்தியுதவிய முனைவர் தி.ரா. செல்வராசன், இரவுபகலாக என்னுடனிருந்து பல்லாற்றானும் உதவிய பேராசிரியர் டேவிட் பிரபாகர், மற்றும் சல்மான்பாரிசு, சீனிவாசன், ஆறுமுகம், ஆதிமூலம், இரகு உள்ளிட்ட மாணவத்தோழர்கள், பொறுமையுடன் உதவி ஒத்துழைத்த என் துணைவி கேரலின் உள்ளிட்ட குடும்பத்தினர் ஆகியோர் அனைவருக்கும், இந்த ஆய்வேட்டை அழகிய முறையில் கம்பியூட்டர் மூலம் அச்சிட்டளித்த எல்.கே.எம். கம்பியூட்டர் பிரிண்ட்ஸ்க்கும் இன்னோரன்ன பிறர்க்கும் ஆயிரமாயிரம் நன்றிகள் உரியன.

உள்ளுறை

இயல்		பக்கம்
	முன்னுரை	1 – 8
1.	தமிழ்ச் சித்தர்கள் – பொது அறிமுகம்	9 – 41
2.	தமிழ்ச் சித்தர்களின் கடவுட் கொள்கைகள்	42 – 85
3.	விவிலியத்தின் கடவுட் கொள்கைகள்	86 – 113
4.	சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் – ஒற்றுமைகள்	114 – 206
5.	சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் – வேற்றுமைகள்	207 – 233
6.	சித்தர் பாடல்களும் விவிலியமும் சமுதாயத்துக்கு வழங்கும் கடவுட் கொள்கைகள்	234 – 248
	நிறைவுரை	249 – 254
	பின்னிணைப்புகள்	i – xxv
	துணை நூற்பட்டியல்	xxvi – xxxviii

முன்னுரை

முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பிலும் தமிழ்ச் சமயச்சிந்தனைகளின் தொகுதியிலும் சித்தர் இலக்கியங்கள் தனியிடம் பெறுவன; தனித்தன்மைகள் மிக்கன; ஆழமும் அழுத்தமும் எளிமையும் ஒருங்கமைந்த உண்மைகளைத் துணிந்துரைக்கும் பெற்றியன. எனினும் குழூஉக் குறிகளாலும் குறியீட்டுச் சொற்களாலும் நிறைந்திருப்பதாலும் மருத்துவம், யோகம், இரசவாதம், ஞானம் முதலிய பலதுறைச் செய்திகளின் கலவையாக விளங்குவதாலும் இவை பலராலும் ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இருப்பினும், சித்தர் பாடல்கள் ஆழ்ந்த அரிய ஆன்மீக உண்மைகளின் சுரங்கமாகவும் புரட்சிச் சிந்தனைகளின் புதையலாகவும் விளங்குவதையும் இலக்கிய ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் அண்மைக் காலத்தில் நன்கு உணரத் தலைப்பட்டுள்ளனர். இதனாற்றான், சித்தர் இலக்கியங்களை — குறிப்பாகச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினர்க்கும் நற்பயன் நல்கவல்ல அவர்தம் ஞானப்பாடல்களைச் செம்மைப்படுத்திப் பதிப்பிடவும் அவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளவும், அவைபற்றி நூல்கள் எழுதவும் பதிப்பாளர்களும் ஆய்வாளர்களும் படைப்பாளர்களும் இந்நாட்களில் ஆர்வம் காட்டுகின்றனர். இலக்கிய உலகின் இருள் சூழ்ந்த பகுதியிலிருந்து சித்தர் இலக்கியங்களை மீட்டு வருவதோடு சித்தர் இலக்கியங்களில் காணப்படும் இருண்ட பகுதிகளில் ஆய்வொளியைப் பாய்ச்சிடவும் இன்று ஆர்வம் வளர்ந்து வருகிறது. இதனைக் க. கைலாசபதி தன் ஆய்வுக்கட்டுரையொன்றில்,

'சித்தர்களைப் பற்றிய ஆர்வம், இந்திய நோக்கிலும் ஒப்பீட்டுப் பார்வைகளிலும் வளர்ந்து வருவதை, அண்மைக்கால ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இந்திய யோகம், தந்திரம், மறைஞானம் (mysticism), சமயப்புரட்சி இவை பற்றிய எந்த முறையான ஆய்வும் சித்தர்களது சிந்தனைகள் இடம் பெறாமல் முழுமையடையாது என்பது வெளிப்படை. இன்னும் சொன்னால், ஆதிக்க எல்லைகளெல்லாம் உடைந்து, மரபு வழிகளுக்கு மாற்றான பல்வேறு சிந்தனைகள்

உலகளாவிய ஆர்வத்தைப் பெற்றுவரும் இந்நாட்களில், இதுவரை அதிகம் அறியப்படாத சித்தர்களது வாழ்வும் வாக்குகளும் உண்மையாகவே வியப்பூட்டும் கண்டுபிடிப்புகளாக அமையக்கூடும்' என்று விளக்குகிறார்.

இந்த நோக்கில் செய்யப்படும் ஆய்வுகள், சித்தர் இலக்கியங்கள் தொடர்பாக நிலவும் பல்வேறு ஐயங்களையும் குழப்பங்களையும் அகற்றித் தெளிவு தரவல்லன. சித்தர்தம் உள்ளக் கருத்துக்களைத் துலக்கிக் காட்டத்தக்கன. குறிப்பாகச் சித்தர்களது ஞானப்பாடல்களில் வெளிப்படும் அவர்தம் சமயச் சிந்தனைகளையும் சீர்திருத்தக் கருத்துக்களையும் கடவுட் கொள்கைகளையும் தெளிவுடன் விளக்கவல்ல புதிய ஆய்வுகள், இலக்கிய உலகின் இன்றைய தேவைகளாக அமைகின்றன. இந்தத் திசையில், அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள சில ஆய்வுகள், சிறந்த முன்னோடி முயற்சிகளாகத் திகழ்கின்றன. அவற்றை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமுடையது.

ஆய்வு முன்னோடிகள்

பொதுவாகச் சித்தர் இலக்கியங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் சிலவேயாகும். அவற்றுள் பெரும்பான்மையானவை மருத்துவம், யோகம் முதலியனபற்றி ஆய்ந்தனவே ஆகும். சித்தர் தம் கடவுட் கொள்கைகள் அடங்கிய ஞானப்பாடல்கள் பற்றி மட்டும் ஆய்ந்தன மிகச்சிலவேயாகும். அவற்றுள்ளும் சில தனிச் சித்தர்களின் இறைக்கோட்பாடுகள் பற்றி எம்.ஃ.பில். பட்டத்துக்கென மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தவிர, முனைவர் (பிஎச்.டி) பட்டத்துக்கென வழங்கப்பட்டுள்ள ஆய்வேடுகள் மிகமிகச் சிலவேயாகும். இவற்றுள், 'சித்தர்களின் கடவுட்கொள்கைகள்' எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு ப.சொ. காயாரோகணம் 1983 இல் வழங்கியுள்ள ஆய்வேடு, ஓர் அடிப்படை ஆதாரமாகவே இத்துறையில் அமைகின்றது. பி. ஜெயா, இந்து சமயச் சிந்தனைகளில் சித்தர் பாடல்கள் பெறும் இடத்தை ஆய்ந்து 1978இல் தம் ஆய்வேட்டைக் கேரளப் பல்கலைக் கழகத்துக்கு ஆங்கிலத்தில் வழங்கியுள்ளார்கள்.

இவற்றுடன் ஆர். வெங்கட்ராமன், தமிழ்ச் சித்தர் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி வரலாற்று நோக்கில் ஆய்ந்து, 1980இல், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துக்கு ஆங்கிலத்தில் வழங்கியுள்ள ஆய்வேடும் சித்தர் இலக்கிய ஆய்வாளர்களுக்கு வழிகாட்டக்கூடிய பல அரிய செய்திகள் நிறைந்ததாக விளங்குகிறது. இவற்றுள் ஆர். வெங்கட்ராமன் படைத்த ஆய்வேடு மட்டும் அண்மையில் நூல் வடிவம் பெற்றுள்ளது. இவ்வாய்வேடுகள் தமிழ்ச் சித்தர்களின் கடவுட் கொள்கைகளை ஒப்பீட்டு நோக்கில் காணும் இவ்வாய்வுக்கு, அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமைந்தவையாகும். இவற்றுடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவுடன் 'சித்தர் இலக்கியம்' என்ற பெயரில் மீ.ப. சோமு மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ள நூல்களும், கமில் வி. சுவலபிள், இரா. மாணிக்கவாசகம், ச. மாடசாமி ஆகியோர் சித்தர் இலக்கியம் பற்றிப் படைத்துள்ள அரிய நூல்களும் இவ்வாய்வுக்கு ஊக்கமும் உந்துதலும் வழங்கியவையாகும்.

ஆய்வுத் தலைப்பும் நோக்கமும்

இத்தகைய ஆய்வுப் பின்புலத்தில் தான், 'தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும்—ஓர் ஒப்பாய்வு' (கடவுட் கொள்கைகள்) எனும் இத்தலைப்பு, இவ்வாய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ச் சித்தர்களின் கடவுட் கொள்கைகளைத் தெளிவுறுத்தும் அடிப்படை ஆய்வும், எச்சமயத்திற்குள்ளிருந்து சித்தர்கள் புரட்சிக்குரல் கொடுத்தார்களோ, அச்சமயச் சிந்தனைகளில் சித்தர்களின் இடத்தை விளக்கும் ஆய்வும் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுவிட்ட நிலையில் சித்தரது கடவுட் கொள்கைகளை விவிலியத்தின் கடவுட் கொள்கைகளுடன் ஒப்பிட்டு ஆய்வது, இரண்டு சிறந்த பயன்களை நல்குமென இவ்வாய்வாளரால் கருதப்பட்டது. ஒன்று, முன்சுட்டப்பட்ட க.கைலாசபதியின் கருத்துக்கொப்ப, இத்தகு ஒப்பாய்வுகள் சித்தர் இலக்கியங்களை மேலும் தெளிவுறுத்தி, அவர்தம் கடவுட் கொள்கைகளைத் துலக்கிக் காட்டும். இரண்டு, சித்தரது கடவுட் கொள்கைகளுடன் கிறித்தவக் கோட்பாடுகளை ஒப்பிட்டுப் பலரும் பலகாலும் கூறியுள்ள கருத்துகள், ஆய்வுநோக்குக்கு உட்படுத்தப்பட்டுத்

தொகுக்கப்படும். இவ்வாறு, சித்தரது கடவுட் கொள்கைகளைத் தெளிவுபடுத்துதல், விவிலியக் கோட்பாடுகளுடன் அவற்றுக்கமைந்த ஒற்றுமைப் பண்புகளை முறையாகத் தொகுத்துப் பார்த்தல், ஒற்றுமைக் கூறுகள் அமைந்த இவ்விரு வகைக் கோட்பாடுகளும் இணைந்து இன்றைய சமுதாயத்துக்கு வழங்கக் கூடிய உண்மைகளையும் செய்திகளையும் விளக்கிக் காட்டல் ஆகிய நோக்கங்களுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு எல்லையும் அணுகு முறையும்

தமிழ்ச் சித்தர்களின் கடவுட் கொள்கைகளையும் விவிலியக் கடவுட் கொள்கைகளையும் ஒப்பிட்டாயும் இவ்வாய்வு, இதன் காலமும் அளவும் கருதி சில வரையறைகளுக்குப்பட்டு மேற்கொள்ளப்படுகிறது. சித்தர்களின் கடவுட் கொள்கைகள் பொது நிலையில் ஒரளவு சுட்டப்பட்டாலும், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அகத்தியர், போகர் ஆகிய ஐவருடைய கருத்துக்களும் சிறப்பாக விளக்கப்படுகின்றன. விவிலியத்தைப் பொறுத்த அளவில், பொதுநிலையில் மட்டுமே அந்நூல் கூறும் கடவுட் கொள்கைகள் பேசப்படுகின்றன. தனிப்பட்ட விவிலிய எழுத்தாளர் எவரது சிறப்பான இறையியற் கோட்பாடுகளும் விவாதிக்கப்படவில்லை. எனினும், புதிய ஏற்பாட்டிலமைந்த இயேசு பெருமானது போதனைகளின் தனிச்சிறப்புகள் மட்டும் விரிவாகப் பேசப்படுகின்றன.

இரு பேரிலக்கியங்களின் இடையிலமைந்த ஒற்றுமைக் கூறுகளையும் சில வேற்றுமைகளையும் ஆயும் இவ்வொப்பாய்வின் தெளிவு கருதி, இரு இலக்கியங்களின் காலம் பற்றிய கருத்துக்கள் இவ்வாய்வில் சுட்டப்படுகின்றன. எனினும், இவ்வாய்வு முழுக்க வரலாற்று நோக்கில் அமைந்ததன்று என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வு மூலம்

இவ்வாய்வுக்கு மூலநூல்களாகவும் முதன்மை ஆதாரங்களாகவும், B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், பூம்புகார் பிரசுரம், பிரேமா பிரசுரம்,

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் மணிவாசகர் பதிப்பகம், மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆகியோர் வெளியிட்ட சித்தர் பாடல் தொகுதிகளும் விவிலியத்தின் 'பவர்' மொழி பெயர்ப்பும் 1988இல் திண்டிவனம் விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையத்தார் வெளியிட்ட கத்தோலிக்க மொழிபெயர்ப்பும் அமைகின்றன. [இவ்வாய்வில் பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள், சீர்திருத்தத் திருச்சபையினர் (protestant) பயன்படுத்தும் 'பவர்' மொழிபெயர்ப்பிலிருந்தும், புதிய ஏற்பாட்டு மேற்கோள்கள் மேற்குறித்த கத்தோலிக்க மொழிபெயர்ப்பிலிருந்தும் தரப்பட்டுள்ளன] இவையேயன்றிப் பலராலும் அறியப்படாத சித்தர் பாடல் தொகுதிகள் பலவும் சென்னை கன்னிமாரா நூலகம், மறைமலையடிகளார் நூலகம், உ.வே.சா. நூலகம், மதுரைத் தமிழ்ச் சங்க நூலகம், சென்னைப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் முதலியவற்றில் இவ்வாய்வாளனால் பார்வையிடப்பெற்றன. இவையும் மூல நூல்கள் வரிசையிலேயே அடங்கும். இந்நூல்கள் பற்றிய விரிவான விவரங்கள் துணைநூற்பட்டியலில் தரப்பட்டுள்ளன.

இவ்வாய்விற்காகச் சித்தர் பாடல்கள் மற்றும் விவிலியம் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைந்த பல்வேறு ஆய்வு நூல்களும் கட்டுரைத் தொகுப்புகளும் சில அகராதிகளும் 'ஆய்வு முன்னோடிகள்' எனும் தலைப்பில் சுட்டப்பட்ட ஆய்வேடுகளும், சித்த மருத்துவம், சித்தர் செயல், மூலிகைமணி, சித்தர் கருவூலம் முதலிய இதழ்களும் துணைமை ஆதாரங்களாகப் பார்வையிடப் பெற்றன.

ஆய்வுப் பகுப்பு

இவ்வொப்பாய்வு, இம்முன்னுரை நீங்கலாக ஆறு இயல்களைக் கொண்டு விளங்குகிறது. இம்முன்னுரை இவ்வாய்வினை மேற்கொள்ள ஆய்வாளர் பெற்ற தூண்டுதல், முன்னோடியாக இத்துறையிலமைந்த சில முக்கிய ஆய்வுகள், ஆய்வுத் தலைப்பும் நோக்கமும், ஆய்வு எல்லையும் அணுகுமுறையும், ஆய்வு ஆதாரங்கள், ஆய்வுப்பகுப்பு ஆகியனவற்றை விளக்குவதாக அமைகின்றது. பிற இயல்கள் சுட்டும் செய்திகள் முறையே கீழே தரப்படுகின்றன.

(1) தமிழ்ச் சித்தர்கள் — பொது அறிமுகம்

இவ்வியலில் சித்தர்கள் யார் என்பது பற்றிப் பல்வேறு அறிஞர்களும் ஆய்வாளர்களும் பல்வேறு கோணங்களில் தந்துள்ள விளக்கங்களும் சித்தர்கள் தாமே தம்மைப்பற்றிக் கூறியுள்ள செய்திகளும் தரப்பட்டுள்ளன. சித்தர்கள் எண்ணிக்கை பற்றியும் சித்தர் இலக்கிய ஆய்வுகளுக்கு அமையக்கூடிய சில தடைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டுள்ளன. சித்தர்கள் காலம் பற்றிய கருத்துக்கள் சிலவும் தரப்பட்டு, இதுபற்றிய பொதுக் கருத்து ஒன்றும் இடம் பெற்றுள்ளது. ஆய்வுக்குரிய ஐந்து சித்தர்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகக் குறிப்புகளும் இயலின் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

(2) தமிழ்ச் சித்தர்களின் கடவுட் கொள்கைகள்

இவ்வியலில் சித்தர்கள் அனைவருக்கும் பொதுவாக அமையக்கூடிய சில கடவுட் கொள்கைகளும் அவர்தம் கடவுட் கொள்கைகளுக்குள் அமையக்கூடிய வேறுபாடுகளும் அவ்வேறுபாடுகளின் அடிப்படையில் தோன்றக்கூடிய பிரிவுகளும் விளக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்குரிய சித்தர் ஐவரின் பாடல்களிலிருந்து வெளிப்படக்கூடிய அவர்தம் கடவுட் கொள்கைகளும் தனித்தனியே விளக்கப்பட்டுள்ளன.

(3) விவிலியத்தின் கடவுட் கொள்கைகள்

விவிலியமே கிறித்தவ நம்பிக்கைகளின் அடிப்படை ஆதார நூலாக விளங்குவதும், விவிலியத்தின் பெயர்க்காரணம், அதன் இருபெரும் பிரிவுகள், ஒவ்வொரு பிரிவிலும் அமைந்த நூல்கள் அவற்றின் மையச் செய்திகள், இவ்விரு பிரிவுகளும் புலப்படுத்தும் கடவுட் கொள்கைகள் ஆகியவையும் இயேசு பெருமானின் போதனைகளின் தனிச்சிறப்புகளும் இவ்வியலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

(4) சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் — ஒற்றுமைகள்

இவ்வாய்வின் மையமாக விளங்கும் இவ்வியல், சித்தர்களின் கடவுட் கொள்கைகளையும் விவிலியக் கடவுட் கொள்கைகளையும் ஒப்பிட்டு ஆய்தற்குரிய அடிப்படைகளையும், இரு இலக்கியங்களின் காலங்களையும் முதற் பகுதியில் விளக்குகிறது. அடுத்த பகுதியில், உருவ வணக்க மறுப்பு, பலதெய்வ — சிறுதெய்வ வணக்க மறுப்பு, பிறவிச் சுழற்சி மறுப்பு, சாதிபேத மறுப்பு, சடங்குகள், சாத்திரங்கள் மறுப்பு, ஆகம வேத புராணங்கள் மறுப்பு, பொய்க்குருக்களைக் கடிதல், மெய்க்குருவைப் போற்றல் ஆகிய தலைப்புக்களில் இரு பேரிலக்கியங்களின் இடையில் அமைந்த ஒற்றுமைப் பண்புகளை விரிவாக விவாதிக்கிறது. இத்தலைப்புகளுக்குள் அடங்காத வேறுசில ஒப்புமைகளும் ஆய்வுக்குரிய தனிச்சித்தர்களின் பாடல்கள் அடிப்படையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

(5) சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் — வேற்றுமைகள்

இவ்வியலில், சித்தர்களின் கடவுட் கொள்கைகளுக்கும் விவிலியக் கடவுட் கொள்கைகளுக்கும் இடையிலமைந்த வேற்றுமைக் கூறுகள் விளக்கப்பட்டுள்ளன. யோக நெறிவழி இறைவனை அறிதல், நமக்குள்ளேயே இறைவனை உணர்தல், உடற்பழிப்பு, பெண்பழிப்பு, புராண மேற்கோள்களையும் இந்து சமயக் கடவுளர் பெயர்களையும் பயன்படுத்துதல், பூசா விதிகள் மந்திரங்கள் யந்திரங்கள் முதலியனவற்றைக் குறிப்பிடுதல் ஆகிய தலைப்புகளில் இவ்வேற்றுமைகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. இவ்வேற்றுமைகளுக்குப் பின்புலமாக, இருவகை இலக்கியங்களும் தோன்றிய சமுதாயப் பண்பாட்டுச் சூழல்களில் அமைந்த வேற்றுமைகளும் சுட்டப்பட்டுள்ளன.

(6) சித்தர்பாடல்களும் விவிலியமும் சமுதாயத்துக்கு வழங்கும் கடவுட் கொள்கைகள்

இரு பேரிலக்கியங்களும் இணைந்து சமுதாயத்துக்கு வழங்கும் கடவுட் கொள்கைகளை இவ்வியல் ஆராய்கின்றது. கடவுளின் தன்மைகளை விளக்குதல், மனித சமுதாயம் கடவுளை அடையும் வழியைப் புலப்படுத்துதல், கடவுளை அடைவதில் உள்ள சமுதாயத் தடைகளைக் கடிதலும் விலக்குதலும் எனும் தலைப்புகளில் இச்செய்திகள் பேசப்பட்டுள்ளன.

பின்னிணைப்புகள்

ஆய்வுப் பொருளை நன்குணர்தற்குத் துணை செய்யக்கூடிய சில செய்திகளும் மூல இலக்கியப் பகுதிகளும் பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. விவிலிய நூல்களின் முழுப் பட்டியல், யோக ஞான சாஸ்திரத் திரட்டில் இடம்பெற்றுள்ள அகத்தியரின் சில முக்கியமான பாடல்கள், அகத்தியர் பெயரால் அமைந்த சில நூல்களின் பட்டியல், 'சிவவாக்கியர் 1000' என்னும் நூலில் காணப்படும் சில பாடல்கள் ஆகியன பின்னிணைப்புகளாக இங்குத் தரப்பட்டுள்ளன.

சித்தர் இலக்கியங்களின் தனிச் சிறப்புகளையும் சமுதாயப் பயன்பாட்டையும் தெளிவுறுத்துதற்கு இந்த ஆய்வு முயற்சி துணைசெய்யும். விவிலியக் கோட்பாடுகளுடன் சித்தர்தம் இறைச்சிந்தனைகளை ஒப்பிட்டுக் காண்பதால், இவ்வாய்வின் வழிச் சித்தர்தம் இறைச் சிந்தனைகள் மேலும் துலக்கமுற வாய்ப்புண்டு.

இயல் ஒன்று

தமிழ்ச்சித்தர்கள் _ பொது அறிமுகம்

இயல் ஒன்று

தமிழ்ச் சித்தர்கள் – பொது அறிமுகம்

தமிழிலக்கிய வரலாற்றிலும் தமிழ்ச் சமயச் சிந்தனைகளின் ஆய்விலும் சித்தர்கள் தனி இடத்தினைப் பெற்றுள்ளனர். இவர்கள் இறைநெறி சார்ந்த தம் இலக்கியங்களில் புரட்சிகரமான புதுமைக் கருத்துகளை வெளியிட்டவர்கள்; மேலும், மருத்துவம், இரசவாதம், சோதிடம், வானியல் முதலிய கலைகளிலும், மந்திரம், தந்திரம், குண்டலினி யோகம் முதலிய யோகப் பயிற்சிகளிலும் பேராற்றல் படைத்தவர்கள்; எவ்வகைச் சமய, சமூக அமைப்புகட்கும் கட்டுப்படாது வாழ்ந்த தனிவகைச் சிந்தனையாளர்கள். இவர்களது வரலாறுகளும் படைப்புகளும் இலக்கிய — சமய ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாத புதிராகவே இன்றும் விளங்குகின்றன.

கமில் வி. சுவலபில்[1] குறிப்பிடுவது போன்று சித்தர்கள் இலக்கியம், சிக்கல்கள் பல கொண்டதெனினும் ஆய்வறிஞர்களின் ஆர்வத்தைத் தூண்டிவிட வல்லதாகவும் விளங்குகிறது. இதனால், சித்தர்கள் இலக்கியங்களையும் அவற்றின் வழி வெளியாகும் பல்வேறு உண்மைகளையும் புரட்சிக் கருத்துக்களையும் பற்றிய ஆய்வுகள் பல இன்று மலர்ந்து வருகின்றன. இத்தகு ஆய்வுகள் இன்னும் விரிவாகவும் மிகுதியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. சித்தர் இலக்கியம் பற்றிய பல சிக்கல்களும் ஐயங்களும் தெளிவு பெற இத்தகைய ஆய்வுகள் துணை செய்யும் என்பது உறுதி.

இந்த வகையில் சித்தர் இலக்கியங்கள் சிலவற்றில் புலனாகும் கடவுட் கொள்கைகளைக் கிறித்தவச் சமயத்தின் திருமறை நூலான விவிலியத்தின் கடவுட் கொள்கைகளுடன் ஒப்பிட்டு ஆயும் இந்த ஆய்வின் முதல் இயல், தமிழ்ச் சித்தர்களைப் பற்றிய ஒரு பொது அறிமுகமாக அமைகின்றது. இவ்வியலில், சித்தர்கள் யார் என்பது பற்றிய பல்வேறு கருத்துக்களும் சித்தர்களின் எண்ணிக்கை பற்றிய கருத்துக்களும் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

பின்னர், சித்தர் இலக்கிய ஆய்வுக்குத் தடைகளாக அமையக் கூடிய செய்திகளும் சுட்டப்படுகின்றன. தமிழ்ச் சித்தர் இலக்கியம் இந்தியா முழுவதும் பரந்து விளங்கியதொரு இயக்கத்தின் கிளை வளர்ச்சியே என்ற கருத்தும் விளக்கப்படுகிறது. சித்தர்கள் காலத்தைப் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களும் அவை பற்றிய மறுப்புரைகளும் தரப்பட்டுச் சித்தர்கள் காலம் பற்றிய பொதுக் கருத்தும் எடுத்துக்கூறப்படுகின்றது. இயலின் இறுதியில், இவ்வாய்வில் இடம் பெறும் ஐந்து சித்தர்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகக் குறிப்புகள் இடம் பெறுகின்றன.

சித்தர்கள் யார்? — சில விளக்கங்கள்

சித்தர்கள் பற்றிய ஆய்வில் முதன்மையாகச் சிந்திக்கப்படுவது சித்தர்கள் யார்? என்ற அடிப்படை வினாவாகும். இந்த அடிப்படை வினாவிற்கு விடை காண்பது அத்துணை எளிதன்று. இவ்வியலின் தொடக்கத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் போன்று பலரும் பல்வேறு விடைகளைப் பல்வேறு கோணங்களிலிருந்து வழங்கியிருக்கிறார்கள்.

பொது நிலையில் தமிழறிஞர்களும் ஆய்வாளர்களும் சித்தர்களைப் பற்றிப் பல விளக்கங்களைத் தந்திருக்கின்றனர். 'சித்தத்தில் சிந்தித்தவாறே உடலும் உண்பனவும் எய்தித் துய்ப்பவர்; கால் பிடித்து மூலக் கலையை எழுப்பி மணி மருந்து மந்திரங்களின் துணையால் மாறாத மணியமுதுண்டு நரை மரண மூப்பறியா நல்லுடம்பு பெற்றவரே சித்தர்' என விளக்குகிறார் சண்முகானந்த சுவாமிகள்[2]. 'சித்தர்கள் பண்டைக் காலத்து அறிவருள் ஒரு சாரார். யோகம் பயின்று விரிந்த காட்சியுற்றுப் பொருள்களின் உண்மையியல்புகளையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்து, அவர்கள் தமிழில் மருத்துவநூல், மந்திர நூல், இரசவாத நூல், யோக நூல், ஞான நூல் எனும் பல்வகை இலக்கியங்களை உலகுக்கு ஈந்தனர்' என்பார் கா. சுப்பிரமணியப் பிள்ளை[3]. மு. அருணாசலம், 'சித்தி எய்தியவர்கள்;

பேரின்பம் சித்திக்கப்பட்டவர்கள்; கடவுளைக் காண முடியுமென்று கண்டு அல்லது அறிந்து தெளிந்தவர்கள்' என்று குறிப்பிடுகின்றார்[4]. மு. வரதராசன், 'சித்தர்கள் சாதி வேறுபாடுகளைக் கடந்தவர்கள்; மூட நம்பிக்கைகளுக்கு இடமளிக்காதவர்கள்; சடங்குகளோடு ஒட்டிய வழிபாடுகளைப் போற்றாதவர்கள்; தத்துவ ஞானிகள்; மெய்யுணர்வு பெற்றவர்கள்' என விளக்குகிறார்[5]. 'சித்தர்கள் விளங்கிய அறிவுடையவர்கள்' என்பார் க. கைலாசபதி[6]. க.த. திருநாவுக்கரசு, சித்தர்களைக் கட்டற்ற சிந்தனையாளராக வருணிக்கிறார்[7]. தெ.பொ. மீனாட்சி சுந்தரன், 'கடவுளைக் காண முயல்பவன் பக்தன்; கண்டு தெளிந்தவன் சித்தன்' எனச் சுருக்கமாகவும் சுவையாகவும் விளக்குகிறார்[8].

இவ்வாறு பொதுநிலையில் சித்தர்களை அறிமுகப்படுத்துவதோடு, சித்து—சித்தி—சித்தர் ஆகிய சொற்களின் அடிப்படையிலும், சித்தர்கள் பற்றிய விளக்கங்கள் இடம் பெறுகின்றன. இச் சொற்கள் தொன்றுதொட்டுத் தமிழிலக்கியங்கள் பலவற்றிலும் பயின்றுவரும் வழக்காறுகளை வைத்தும், தமிழக மக்களின் பேச்சு மொழி, ஊர்ப்பெயர்கள் மற்றும் பழமொழிகளில் இவை இடம் பெறும் தன்மைகளை வைத்தும் இவ்விளக்கங்கள் அமைகின்றன. இவ்வகையில் தரப்படும் விளக்கங்களின் மையக் கருத்துக்களைக் கீழ்க்காணுமாறு சில குறிப்புகளாகத் தொகுத்துக் காணலாம்.

(1) 'சித்து' என்னும் சொல் 'சித்தம்' என்ற சொல்லோடு தொடர்புடையது. எனவே, சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள் எனலாம்[9].

(2) 'சித்தி' என்ற சொல்லுக்கு 'அடைதல்' என்பது பொருள். எனவே சாயுச்சிய நிலை எனப்படும் சித்தி நிலையை அடையப் பெற்றவர்கள் சித்தர்கள்[10].

(3) இறைவனைச் சத்து, சித்து, ஆனந்த வடிவினன் என்பர். இதில் சித்து என்பது பேரறிவினை—தெளிந்த

ஞானத்தைக் குறிக்கும். இறைவனை அறிதலாகிய இப் பேரறிவை—தெளிந்த ஞானத்தைப் பெற்றவர்கள் சித்தர்கள்[11].

(4) பெரும்பான்மை சிவபெருமானும், அருகிய நிலையில் முருகனும் 'சித்தன்' என அழைக்கப்படும் தமிழ் மரபு உண்டு. ஆக இவ்விருவரையும் சித்தராகக் கொண்டு, சமயச் சார்பற்ற நிலையில் பாடி வழிபட்டவர்கள் சித்தர்கள்[12].

சித்து, சித்தர், சித்தன் ஆகிய சொற்கள் திருமுருகாற்றுப்படை[13], தேவாரம்[14], திருவாசகம்[15], திருவிளையாடற்புராணம்[16] முதலிய பல்வேறு இலக்கியங்களில் பயின்று வருகின்றன. இதனைக் குறிப்பிடும் கமில் வி. சுவலபிள்[17], ஆர். வெங்கட்ராமன்[18] முதலிய ஆய்வாளர்கள் இவ்விலக்கியப் பயில்வுகளின் அடிப்படையில் சித்தர்களைப் பற்றி விளக்கியுள்ளனர். ஆர். வெங்கட்ராமன், சமணர்கள் 'சித்தர்' (Siddha) என்ற சொல்லுக்குத் தரும் பொருளின் அடிப்படையில் சித்தர்களைப் பற்றி விளக்க முயல்கிறார்[19]. இவர் இன்னொரு முக்கியமான செய்தியையும் சுட்டிக் காட்டுகிறார். 'சித்தர்' எனப் பொதுவாகக் கூறப்படும் தமிழ்ச்சொல், வடமொழியில் இரு வேறுபட்ட பொருள்களை உள்ளடக்கி நிற்கிறது. சித்தத்தை இறைவனோடு கலக்க விட்டவர்கள் (Cittar), சித்திகளைப் பெற்றவர்கள் (Siddhas) எனும் இருவேறு நிலைகளையும் உணராத நிலையில் தரப்படும் விளக்கங்கள் பொருள் மயக்கத்தைத் தோற்றுவிக்கின்றன என அவர் குறிப்பிடுகிறார்[20]. முன்னர்ச் சுட்டிய அறிஞர்களின் விளக்கங்களையும் இவ்வடிப்படையில் கருதிப் பார்ப்பது கருத்துத் தெளிவுக்கு வழி வகுக்கும் எனலாம்.

இந்த ஆய்வில் சித்தர்கள் யார் என்பது பற்றிய சொல்லாய்வுகள், இரண்டு காரணங்களால் விரிவாக இடம் பெறவில்லை. ஏற்கெனவே பல ஆய்வுகளிலும் இத்தகு சொல்லாய்வுகளும், சொல் விளக்கங்களும் விரிவாக மேற்கொள்ளப்பட்டிருப்பதும், சிக்கல்கள் மிகுந்த சித்தர் இலக்கியத்தின் நோக்கையும்

போக்கையும் இத்தகு சொல்லாய்வுகளால் மட்டுமே அறிந்து தெளிந்துவிட இயலாது என்பதுமே அக்காரணங்கள். மேலும், நடைமுறை வாழ்வில் பொதுமக்கள், வரையறுக்கப்பட்ட எந்த அடிப்படையுமின்றிப் பலரையும் பல்வேறு காரணங்களுக்காகச் சித்தர் என அழைக்கின்றனர். சித்த வைத்தியம் செய்பவரையும், மாந்திரீகம், சோதிடம், நாடி சாத்திரம், இரசவாதம் முதலியவற்றைப் பயிற்சி செய்பவரையும், சித்து வேலைகள் செய்பவரையும் மக்கள் சித்தர் என அழைப்பதுண்டு. இவையேயன்றி, வழக்கத்திற்கு மாறான வியப்பூட்டும் செயல்களைச் செய்யும் எவரையும், மாறுபட்ட துறவு வாழ்க்கை மேற்கொள்பவரையும் மக்கள் சித்தர் என அழைக்கும் போக்கைக் காணலாம். சான்றாக, சுடுகாட்டில் வசிப்பவரையும், கௌபீனம் மட்டுமே அணிந்தவரையும், நீண்ட தாடி வளர்த்தவரையும் கூடச் சித்தர்களாக மக்கள் கருதுகின்றனர்.

பொதுமக்கள் நிலையில் மட்டுமன்றி, சித்தர் பாடல்களைத் தொகுத்தவர்களும் கூடச் சித்தர்கள் யார் என்பதனைத் தெளிவாக வரையறுத்துக் கொண்டு பாடல்களைத் தொகுத்ததாகத் தெரியவில்லை. இந்தக் குறையினை ஆய்வறிஞர்கள் பலரும் தங்கள் நூல்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்[21]. பதினெண் சித்தர் ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல் தொகுப்புகள் பலவற்றில் மிகப் பிற்காலத்தனவாகிய பல பாடல்களும் உரைநடைப் பகுதிகளும் பூசாவிதிகளும் முற்காலச் சித்தர்களாகக் கருதப்படுகிற சிவவாக்கியர், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், பத்திரகிரியார் போன்றோரது பாடல்களுடன் ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருப்பதே இதனை விளக்குகிறது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் பாடல்களையும், முற்காலச் சித்தர்களின் பெயர்களைத் தமக்குத் தாமே சூட்டிக் கொண்டு பாடியவர்களும் மிகமிகப் பிற்பட்ட காலத்தவர்களாகக் கருதப்படக் கூடியவர்களுமாகிய அகத்தியர், உரோமரிஷி, காகபுசுண்டர், சுப்பிரமணியர், திருமூலநாயனார் போன்றோரது பாடல்களையும் இத்தொகுப்புகளில் சேர்த்திருப்பதும் இதற்குச் சான்றாகும்.

சித்தர்களைப் பற்றிய சில முரண்பட்ட கருத்துக்கள்

இவ்வாறு பல்வேறு கோணங்களிலிருந்து பல்வேறு விளக்கங்கள் சித்தர்களைப் பற்றித் தரப்படுகின்றன. இவற்றுள் சில விளக்கங்கள், ஒன்றோடொன்று முழுக்க முரண்பட்டு நிற்பதைக் காணலாம். சித்தர்கள் தாமே தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும் கருத்துக்களிலும் இத்தகு மாறுபாடுகளைக் காண இயலும்.

இந்த நூற்றாண்டின் பல்வேறு காலக் கட்டங்களில் சித்தர்கள் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் சிலர் வெளியிட்டுள்ள கருத்துக்களில் வியப்பூட்டும் அளவுக்கு முரண்பட்ட நிலைகள் காணப்படுகின்றன. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கிய வரலாறு எழுதிய பூரணலிங்கம் பிள்ளை, 'சித்தர் இலக்கியங்கள் தமிழரிடை மிகப் புகழ் பெற்ற இலக்கியங்கள். படித்தவனோ படிக்காதவனோ சித்தர் பாடல்களின் ஒரு சில வரிகளையாவது மனப்பாடம் செய்து வைத்திராத தமிழனைக் காண முடியாது' என்று புகழ்ந்துரைக்கிறார்[22]. மேலும், 'சித்தர்கள் நித்திய ஒளி பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்; ஆரிய சமுதாய அமைப்பையும் சமயச் சடங்குகளையும் வேத முறைகளையும் வெறுத்தவர்கள்; வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் ஒன்றாக நோக்கிய மிக உயர்ந்த ஞானிகள்' என்று விவரிக்கிறார்[23]. ஆனால் 1914ஆம் ஆண்டில் எழுதப்பட்ட நூலில், எம். சீனிவாச ஐயங்கார், 'சித்தர்கள் யோகிகள்; வைத்தியர்கள்; அவர்களிற் சிலர் அகத்தியர், கபிலர், திருவள்ளுவர் முதலிய பழம்பெருஞ் சான்றோர்களது பெயர்களைச் சூட்டிக் கொண்டாலும், அவர்களிற் பெரும்பாலோர் இலக்கியத் திருடர்கள்; வேடதாரிகள். அபின் முதலிய போதைப் பொருள்களை அருந்திக் கனவுலகத்தில் வாழ்ந்து வந்த அவர்களது அகந்தைக்கு ஓர் அளவே இல்லை. அவர்கள் சமயம் ஆத்திகமே எனினும், அது கிட்டத்தட்ட நாத்திகம் போன்றதே' எனக் கடுமையாக விமரிசிக்கின்றார்[24].

1961இல் வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்று நூலில் சி. ஜேசுதாசனும் ஹெப்சிபா ஜேசுதாசனும் சித்தர்களைக் 'குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சுய சிந்தனையாளர்களின் கூட்டம்' என வருணிக்கின்றனர். மேலும், 'சித்தர்கள் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தங்கள் காலத்துச் சமய முறைகளோடு ஒத்துப் போகாத புரட்சியாளர்கள் கூட்டம் ... அவர்கள் ஆற்றல் மிக்க தம் ஆளுமைப் பண்புகளாலும் கருத்துக்களாலும் மக்களிடத்தில் பெரும் மதிப்பு பெற்றிருந்தது வெளிப்படை' என்று குறிப்பிடுகின்றனர்[25]. அதே நேரத்தில் கே.என். சிவராஜப்பிள்ளை தமது 'தமிழகத்தில் அகத்தியர்' என்ற நூலில், சித்தர்களின் படைப்புகளை—குறிப்பாக, அகத்தியரின் பெயரில் வழங்கும் படைப்புகளை, 'தமிழ் இலக்கியத்தின் மிகப் பிற்பட்ட — பிற்போக்கான எழுத்துக்கள்' என இழித்துரைக்கிறார்[26].

அறிஞர்களின் நூல்களில் மட்டுமன்றி, அகராதிகளிலும் கூட சித்தர்களைப் பற்றி முரண்பட்ட விளக்கங்களைக் காண முடிகிறது. சான்றாக, மதுரைத் தமிழ்ப் பேரகராதி, சித்தர்களை 'அணிமா முதலியவை சித்திக்கப் பெற்றவர்கள்' என்று அறிமுகப்படுத்துகிறது[27]. ஆனால், மைரன் வின்சுலோ வெளியிட்ட தமிழ்—ஆங்கில அகராதி சித்தர்களைத் 'தேவகணத்து ஒரு திறத்தோர்' என்றும் 'ஒரு வகை மாய வித்தைக்காரர்கள்' என்றும் 'ஞான சித்தி அடைந்தோர்' என்றும் பலவாறு விவரிக்கின்றது[28].

இனி, சித்தர் சிலர், தாமே தம்மைப் பற்றிக் கூறிக் கொண்ட சில கருத்துக்களை, அவர்தம் பாடல்களினின்று காணலாம்.

(1) 'யோக சமாதி உகந்தவர் சித்தரே' (திருமூலர்)[29]

(2) 'சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்' (அகத்தியர்)[30]

(3) 'சிந்தையிலே களங்கமற்றார் சித்தனாவான்' (அகத்தியர்)[31]

(4) 'தனியிருந்து பார்த்தவனே சித்தன்' (இராமதேவர்)[32]

(5) 'சிந்தை தெளிந்திருப்பவன் ஆர் அவனே சித்தன்' (வால்மீகர்)[33]

(6) 'ஆத்தாளைப் பூசித்தோன் அவனே சித்தன்' (கருவூரார்)[34]

(7) 'ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தர்' (சட்டைமுனி)[35]

(8) 'ஆறியதோர் மனங்கண்டார் அவரே சித்தர்' (சட்டைமுனி)[36]

சித்தர் பற்றிய கருத்துக்களில் நிலவும் இத்தகு முரண்பாடுகளுக்கும், மாறுபாடுகளுக்கும் உரிய காரணங்களும் பின்புலங்களும் இனிவரும் இயல்களில் சுருக்கமாக விவாதிக்கப்படும்.

தமிழ்ச் சித்தர்களின் எண்ணிக்கை பற்றிய செய்திகள்

சித்தர்கள் யார் என்ற வினாவைப் போன்றே சித்தர்கள் எத்தனை பேர் என்ற வினாவும் சிந்திக்கத் தக்கது. தமிழ்ச் சித்தர்களைப் பதினெண்மர் என்பதும் அவர்களது பாடல்களின் தொகுப்பைப் 'பதினெண் சித்தர் பெரிய ஞானக்கோவை' என அழைப்பதும் தமிழகத்தில் நெடுங்காலமாக வழங்கி வரும் மரபு. சித்தர் வணக்கமாக ஆய்வாளர்களால் சுட்டப்படும் பாடல் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது.

'நந்தியகத் தியர்மூலர் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக் கண்ணர்
கந்திடைக்கா டரும் போகர் புலிக்கை யீசர்
கருவூரார் கொங்கணவர் மாகா லாங்கி
சிந்தியழு கண்ணரகப் பையர்பாம் பாட்டித்
தேரைய ரும்குதம்பைச் சட்டச்சித்தர்
செந்தமிழ்ச் சீர் சித்தர்பதி னெண்மர் பாதம்
சிந்தித்தே அணியாகச் சேர்த்து வாழ்வாம்'[37].

இவ்வாறு சித்தர்களைப் பதினெண்மர் என வழங்கினாலும் அவர்களின் எண்ணிக்கை இப்பதினெட்டுக்குள் அடங்குவது அன்று. சித்தர் பாடல் தொகுப்பு நூல்களிலும் சித்தர் பற்றிய ஆய்வுகளிலும் பல்வேறு பட்டியல்கள் காணப்படுகின்றன.

எனினும் அவை அனைத்தும் ஒன்றோடொன்று முரண்படுவனவே. ஒரு பட்டியலில் காணப்படும் பெயர் பிறிதொன்றில் காணப்படுவதில்லை[38]. இவ்வாறிருக்கையில், ஏன் பதினெட்டு என்ற எண்ணால் சித்தர்களின் எண்ணிக்கையைக் குறித்து வந்தனர் என்பது ஆய்வுக்குரியது. இதுபற்றி, இரா. மாணிக்கவாசகம்[39] ப.சொ. காயாரோகணம்[40], மு. அருணாசலம்[41], இரா. இளங்குமரன்[42] முதலிய ஆய்வாளர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். பதினெண் உபபுராணம், பதினெண்பாடை, பதினெண் கணம், பதினெட்டு ஆகமங்கள், பதினெட்டு மெய்யெழுத்துக்கள் என எல்லாவற்றையும் பதினெட்டாகவே வழங்கிய இலக்கிய—புராண மரபுகளைப் பின்பற்றி, சித்தர்களின் எண்ணிக்கையையும் இவ்வாறு குறித்திருக்கலாம் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது[43]. பல்வேறு சித்தர் பாடல் தொகுப்புகளில் இடம் பெறும் சித்தர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் மேல் செல்லுகிறது. சித்தர் பலரானாலும் அவர்களுள் பதினெட்டுப் பேரே வரலாற்றுச் சிறப்புடையவராயிருந்திருக்கலாம் அல்லது முதன்முதலில் சித்தர்களைக் கணக்கிட்டு உரைத்தவர் காலத்தில் பதினெட்டுப் பேரே இருந்திருக்கலாம் என்றும் சில ஆய்வாளர்களால் கருதப்படுகிறது[44]. அறிஞர் கமில் வி. சுவலபிள்ளும்[45] மு. அருணாசலமும்[46] இந்தப் பதினெட்டு என்ற எண்ணே வரலாற்று அடிப்படையற்றதென்றும், 19ஆம் நூற்றாண்டு போல் இதனை உருவாக்கியிருக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

சித்தர் இலக்கிய ஆய்வில் சில சிக்கல்கள்

சித்தர் இலக்கியங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இன்றும் மனநிறைவும் கருத்துத் தெளிவும் தரும் வகையில் சிறப்புற அமையாததனைப் பலரும் தம் நூல்களில் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்நிலைக்குரிய காரணங்கள் ஆய்தற்குரியன. கமில் வி. சுவலபிள் இந்நிலைக்கு மூன்று முக்கியக் காரணங்களைத் தம் ஆய்வுரையில் சுட்டி விளக்குகிறார்[47]. முதலாவது, சித்தர் பாடல்களுக்குத் திருத்தமானதும் இடைச்செருகல்கள் ஆய்ந்து நீக்கப்பட்டு ஆய்வு நோக்கில் அமைந்ததுமான நல்ல பதிப்புகள் இல்லாதது. அடுத்து, சித்தர் பாடல்கள்

கற்றோர்—கல்லாதோர் அனைவருக்கும் விளங்கக்கூடிய 'திறந்த நூல்களாக' (Open texts) இல்லாமல் குழூஉக் குறிகளாலும் பரிபாஷைகளாலும் நிறைந்து 'மூடிய நூல்களாக' (Closed texts) அமைந்திருப்பது. மூன்றாவது, தமிழ்ச் சித்தர் இயக்கத்தை இந்தியா முழுவதும் பரந்ததொரு இயக்கத்தின் ஒரு கிளை வளர்ச்சியாகக் கண்ணோக்கி ஆய்வு செய்யாமல் தனித்ததொரு மரபாகவும் குழுவாகவும் கருதி ஆய்வது.

அண்மைக் காலங்களில் சித்தர் பாடல்களுக்குச் செம்மைப்படுத்தப்பட்ட புதிய பதிப்புகள் சிலவற்றை வெளியிடுவதில் தமிழ்ப் பதிப்பாளர்களும் ஆய்வாளர்களும் ஆர்வம் காட்டி வருவது வரவேற்கத்தக்கது. இத்திசையில் செய்யப்பட வேண்டுவன நிறைய இருப்பினும், சித்தர் இலக்கிய ஆய்வு வளர்ச்சிக்கு முதல் தடையாகக் கமில் வி. சுவலபிள்ளும் பிறரும் கருதியதனைக் களைவதில் தொடக்க முயற்சியாக இஃது அமைகிறது. அடுத்த நிலையில், இன்று பல சித்த மருத்துவ ஆய்வாளர்களும் யோகப் பயிற்சியாளர்களும் சித்தர் பாடல்களின் மறைபொருள்களைத் தெளிவிக்க முயன்று வருகின்றனர். அண்மையில் வெளிவந்துள்ள 'சித்தர் பரிபாஷை அகராதி' என்ற நூல் இதற்கு ஒரு சான்று[48]. சித்தர் இலக்கியங்களில் மருத்துவம் — யோகம் — ஞானம் — சமுதாயச்சீர்திருத்தம் முதலிய அனைத்துவகைப் பாடல்களின் அடிப்படையிலும் துணிவும், உள் நோக்கங்களற்றதும், புதிய கோணங்களிலும் ஒப்பீட்டு முறைகளிலும் அமைவனவுமாகிய பல்வேறு ஆய்வுகள் வெளிவருவது, இவ்விரண்டாவது குறையை ஓரளவேனும் களைவதற்கு வழிவகுக்கும். கமில் வி. சுவலபிள் சுட்டும் மூன்றாவது சிக்கலைப் பற்றி இவ்வியலில் சற்று விரிவாகப் பின்னர் விவாதிக்கப்படும்.

கமில் வி. சுவலபிள் சுட்டும் மூன்று காரணங்களோடு இன்னொரு முக்கிய காரணத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். அது, சித்தர்களின் காலம் எது என்பது பற்றிய உறுதியான கருத்துக்கள் இல்லாமை. சித்தர்களது

காலத்தையும் வரலாற்றையும் ஊடுருவி அறிய முடியாதபடி இயல்பு நிலையிலும், சில அறிஞர்களாலும் சில நம்பிக்கைகளாலும் செயற்கை நிலையிலும் ஆய்வாளர்களுக்குப் பல்வேறு தடைகள் அமைந்து விடுகின்றன. எனினும், சித்தர்கள் காலத்தைப் பற்றிய தெளிவு, சித்தர் ஆய்வில் ஒரு அடிப்படைத் தேவையாகும். குறிப்பாக, சித்தர் இலக்கியத்தை விவிலியத் திருமறைக் கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கும் இந்த ஆய்வின் தெளிவுக்கு, அத்தகு கால வரையறை பெருந்துணை செய்யும். சித்தர்களின் காலம் பற்றிய சில செய்திகளும் கருத்துக்களும் இவ்வியலில் தொடர்ந்து ஆயப்படும்.

சித்தர் இயக்கத்தின் நாடு தழுவிய நிலை

தமிழ்ச் சித்தர்கள் இயக்கத்தினைப் பற்றிய முக்கியமான செய்தி ஒன்றினைக் கமில் வி. சுவலபிள் தமது 'ஆற்றல் கவிஞர்கள்' (The Poets of Powers) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'தமிழ்ச்சித்தர்களின் சிந்தனை, இந்தியா முழுவதும் பரவியிருந்த 'தாந்திரீக' யோக இயக்கத்தின் ஒரு முக்கியமான—சுவையான கிளையேயாகும் ... தமிழ்ச் சித்தர் சிந்தனைகளைப் பற்றிய ஆய்வும் அறிவும் தமிழில் மிகக்குறைவாகவும், மேலோட்டமாகவும் சிறப்பின்றியும் இருப்பதற்கு ஒரு காரணம், அது சரியான கோணத்திலும் சரியான பார்வையிலும் அணுகப்படாததேயாகும். வெளிப்படையாகச் சொன்னால், தமிழ்ச் சித்தர் இயக்கம் இந்தியாவின் பிற பகுதிகளில் காணப்பட்ட, இதனையொத்த பிற இயக்கங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படாமல், தனியாகப் பிரித்து ஆயப்பட்டது. தமிழ்நாட்டுச் சித்தர்கள் ஒப்புமைகளற்றுத் தனித்து நிற்கும் ஒரு சுய சிந்தனையாளர்களின் தொகுதியினர் அல்லர் என்பது உறுதி. அவர்கள் இந்தியா முழுவதும் பரவி நின்ற ஒரு மரபின் (Pan — Indian tradition) பிரிக்க முடியாத ஒரு பிரிவினர் ஆவர்'[49].

இக் கருத்தின் அடிப்படையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு சமயச் சூழல்களிலும் பரந்து விளங்கிய சித்தர் இயக்கத்தைப் பற்றிய

முக்கிய உண்மைகளை இங்கு தொகுத்துக் காண்பது பொருத்தமுடையது. பௌத்த சமயத்தில் 'வஜ்ரயானா' (Vajrayana), 'சகஜயானா' (Sahajayana) ஆகிய தாந்திரீக நெறிகளைப் பின்பற்றினோர் சித்தர்கள் (Siddhas) என்றும், சித்தாசாரியர்கள் (Siddha caryas) என்றும் அழைக்கப்பட்டதுண்டு. வட இந்தியாவில் பீகாரிலும், வடக்கு வங்காளத்திலும் தோன்றியதாகக் கூறப்படும் இவ்வியக்கங்களைப் பற்றிய விரிவான ஆய்வுகள் பல ஏற்கெனவே வெளிவந்துள்ளன[50]. இப்படிப் பௌத்த சமயத்துக்குள் தாந்திரீக நெறியினர் தோன்றிய அதே காலத்தில், வட இந்தியாவில் அங்கிருந்த சைவர்கள் மத்தியிலும் ஒரு யோக நெறி தோன்றியது. இந்நெறியினைப் பின்பற்றியவர்கள் 'கான்பட யோகிகள்' (Kanphata yogis) அல்லது 'நாதசித்தர்கள்' என அழைக்கப்பட்டனர்[51]. இவர்கள் சத்தியநாதர், சதோக நாதர், ஆதி நாதர், அனாதி நாதர், வகுளி நாதர், மதங்க நாதர், மச்சேந்திர நாதர், கடேந்திர நாதர், கோரக்க நாதர் ஆகிய ஒன்பது நவநாதசித்தர்கள். இவர்களுள் கோரக்கர், மச்சேந்திரர் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள். இந்த நாதசித்தர்கள் 84 பேர் என்று சொல்லப்படுகிற ஒரு மரபும் வடநாட்டில் உண்டு. ஆனால், இந்தப் பெயர்ப் பட்டியல்கள் குழப்பமானவையாகவும், புனைகதைகள் நிரம்பியதாகவும் உள்ளதனை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்[52]. இந்த நாதசித்தர் பட்டியலில் இடம் பெறும் கோரக்கர், மச்சேந்திரர், பத்ருஹரி முதலியோர் பெயர்கள் சில மாற்றங்களுடன் கோரக்கர், மச்சமுனி, பத்ரகிரியார் எனத் தமிழ்ச் சித்தர்கள் பட்டியலிலும் இடம் பெறக் காண்கிறோம். இதுவும் சித்தர் இயக்கம் நாடு தழுவியதொன்று என்பதை உறுதி செய்யும் ஒரு குறிப்பாகும்.

கமில் வி. சுவலபிள் தம் நூலில் வட இந்தியாவின் தாந்திரீகச் சித்தயோக நெறிக்கும் தமிழ்ச் சித்தர் நெறிக்கும் இடையிலுள்ள பல்வேறு ஒப்புமைகளைச் சுட்டிக் காட்டுகிறார். முழுமையான உடல்நலம், சாகாமலிருத்தல் ஆகியவற்றை நாடுவதால் மருத்துவத்திலும், இரசவாதத்திலும் காட்டும் ஈடுபாடு அடிப்படையான ஹடயோக உத்திகள், பல்வகைச் சித்திகளாகிய அற்புத

ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுதல் ஆகிய பண்புகளை அவர் ஒற்றுமைக் கூறுகளாகக் குறிப்பிடுகின்றார். வடநாட்டுச் சித்தர் இயக்கத்திற்கும், தமிழ்ச்சித்தர் இயக்கத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளைப் புலப்படுத்தியுள்ள கமில் வி. சுவலபிள், தமிழ்ச் சித்தர்களின் தனித்தன்மைகளை எடுத்துக்காட்டவும் தவறவில்லை. தமிழ்ச் சித்தர் இயக்கத்தின் தனித்தன்மைகளாக, சமய உலகின் சடங்குகளையும் பிற கரும விதிகளையும் எதிர்த்து நிற்கும் தன்மை, பக்தி நிலையைவிட அறக் கோட்டுபாடுகளை மிகுதியும் வலியுறுத்துதல், அறிவு நாட்டமாகிய தத்துவக் கூறு, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி விளக்குகிறார்[53]. இவ்வாறு வடநாட்டுச் சித்தர்களுடன் தமிழ்ச் சித்தர்களை ஒப்பிட்டுக் கருத்துக்களை வெளியிடும் போக்கு ஆர். வெங்கட்ராமன் அவர்களது ஆய்வேட்டிலும் காணப்படுகிறது[54].

தமிழ்ச் சித்தர் இயக்கத்தைப் பற்றிய தெளிந்த அறிவுக்கு இத்தகைய ஒப்பாய்வுகள் பெரும்பயன் நல்கும். தமிழ்ச்சித்தர் மரபு இந்திய நாடு முழுவதும் பரவியிருந்த ஓர் இயக்கத்தின் ஒரு கிளையாக வளர்ந்தது என்பதோடு தமிழ்ச் சித்தர்கள் 'சீனநாட்டுச் சித்தர்கள்' எனப் போற்றப்படும் 'தாவோயி'களுடனும், அரேபியாவில் இசுலாம் சமயத்தின் அடிப்படையில் தோன்றிய சித்தர்களான 'சூஃபி'களுடனும் கொண்டிருந்த தொடர்புகளையும், இவர்களிடையே காணப்படும் ஒற்றுமைக் கூறுகளையும் இணைத்து எண்ணுவது பொருந்தும்.

சித்தர் காலம் பற்றிய வேறுபட்ட கருத்துக்கள்

சித்தர் காலத்தை உறுதியாகத் தெரிந்துகொள்வதற்கும், தெளிவு படுத்துவதற்கும் இயலாமல் போவதற்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானதொன்று, சித்தர்களின் வரலாறுகள் மெய்ப்பிக்க இயலாதனவும் பகுத்தறிவுக்கு ஏற்காதனவுமாகிய பல மாயக்கதைகளால் சூழப்பட்டிருப்பதாகும். குறிப்பாக, 'அபிதான சிந்தாமணி' என்ற நூல் ஒவ்வொரு சித்தரைப் பற்றியும் இப்படிப்பட்ட கதை ஒன்றைச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட கதைகளையும்

வழிவழியாக வழங்கிவரும் செவிவழிச் செய்திகளையும் பொதுமக்கள் மட்டுமேயன்றிச் சித்தர் இலக்கிய ஆய்வாளர் சிலரும் தம் நம்பிக்கைக்குரியவைகளாகக் கருதி, அவற்றின் அடிப்படையில் தம் ஆய்வுரைகளை அமைத்துக் கொள்கிற போக்கைக் காண முடிகிறது.

இத்தகு ஆய்வாளர்களும் நூலாசிரியர்களும் இக்கதைகளை ஓரளவு அப்படியே ஏற்றுக் கொள்வதோடு இத்தகைய காரணங்களால் சித்தர்களின் காலத்தைக் கணிக்கமுடியாதென்றும் சித்தர்கள் கால எல்லைகளைக் கடந்தவர்களென்றும் எழுதி, சித்தர் காலம் பற்றிய ஆய்விற்குத் தடைவிதித்து விடுகின்றனர். எனினும், சித்தர் பற்றிச் சொல்லப்படும் செய்திகளையும் கதைகளையும் ஆய்வுக்குட்படுத்தி அரிய கருத்துக்களையும் முடிவுகளையும் துணிவுடன் வெளியிட்டுள்ள ஆய்வாளர்களும் உளர். சித்தர் காலம் பற்றிய ஆய்வின் தெளிவு கருதி இவ்விரு தரப்பினரின் கருத்துக்களில் முக்கியமான ஓரிரு சான்றுகள் மட்டும் இங்குத் தரப்படுகின்றன.

சித்தர்களின் காலத்தை இன்று நமக்குக் கிடைக்கும் பாடல்களை வைத்துக் கொண்டு கணிக்க இயலாது என்ற கருத்துக்கு இரா. மாணிக்கவாசகம், தமது 'நம் நாட்டுச் சித்தர்கள்' என்ற நூலில் சில கரரணங்களைத் தருகிறார். அவை :

(1) பல்வேறு ஆன்மீகப் பயிற்சிகளால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றவர்களாகவும், தம் காலத்திற்கு முன்னும் பின்னும் போகக் கூடிய இயல்புடையவர்களாகவும் விளங்கும் சித்தர்களின் காலத்தைக் கணிப்பது அத்துணை பொருந்துவதாக இல்லை.

(2) சித்தர்களின் சித்தாந்தம் எழுதாக் கிளவியாகவே — மறையாகவே இருந்துவந்துள்ளது. ஆசிரியர் மாணவருக்குச் சொல்ல, இங்ஙனம் செவி வழியாக இன்றுவரை இருந்து

வருகிறது. எனவே, தற்போதுள்ள சித்தர் இலக்கியங்கள் அந்தந்தச் சித்தர்கள் பெயரால் விளங்குகின்றனவே தவிர, அவர்களால் எழுதப்பெற்றன அல்ல. பின்னர் வந்தவர் யாரேனும் எழுதியிருத்தல் கூடும்.

(3) மேலும் சித்தர் இலக்கியங்களில் அக்கால நிகழ்ச்சிகளையோ செய்திகளையோ சான்றோர்களையோ குறிக்கும் மரபும் காண முடிவதில்லை. எனவே, சித்தர் இலக்கியம் கொண்டு அவர்கள் காலத்தை அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியாது[55].

இரா. மாணிக்கவாசகம் கூறும் இம்மூன்று காரணங்களும் ஆய்வு நெறி முறைகளுக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை. சித்தர்கள் பல நூற்றாண்டுக் காலம் வாழ்பவர்கள் என்று நம்பப்பட்டாலும் இலக்கிய ஆய்வில், அவர்கள் பெயரால் வழங்கும் இலக்கியங்கள் எக்காலத்தில் எழுதப்பட்டன என்பதைப் பற்றியே ஆய்வு செய்யப்படுகிறது. அவ்விலக்கியங்களை அச்சித்தர்கள் எழுதும் முன்போ எழுதிய பின்போ பல்லாண்டுகள் வாழ்ந்திருக்கலாம். எனினும் அது நமது ஆய்விற்குரியதன்று. ஆகவே, சித்தர் இலக்கியத்தின் கால ஆய்வுக்கு அவர்களது காலம் கடந்து வாழும் சித்தி நிலை தடையாக அமைய வேண்டிய தேவையில்லை. மேலும், சித்தர் பெயரால் வழங்கும் இலக்கியங்கள், அவர்கள் மாணவர்கள் எழுதியவையே என்று கொள்வது சித்தர் இலக்கியத்தில் செய்யப்படும் எவ்வகை ஆய்வின் அடிப்படையையும் தகர்த்தெறிந்துவிடும். இப்படி, இலக்கியங்களில் ஆசிரியர்களைப் பற்றி ஐயங்கொள்வதற்கு ஓர் எல்லையே இல்லாமல் போகலாம். எவ்வகை இலக்கியத்திலும் அமைந்துவிடக் கூடிய இடைச் செருகல்கள் சித்தர் இலக்கியத்தில் மிகுதியாக இருப்பதனைக் கருதி அவை முழுக்கப் பிறரால் எழுதப்பட்டன என்று சொல்லிவிடுவது அறிவுலகுக்கும், ஆய்வுநெறிகளுக்கும் பொருந்தாத முயற்சி எனலாம்.

மேலும், சித்தர் இலக்கியங்களில் சமகால அரசர்கள், சான்றோர்கள், நிகழ்ச்சிகள் போன்ற பிற செய்திகளைக் குறிக்கும் மரபு இல்லாதது இயல்பே. ஏனெனில் சித்தர்கள் அக்கால அரசர்களையோ, அரசியல் அமைப்புகளையோ, சமயத் தலைவர்களையோ சார்ந்து வாழ்ந்தவர்கள் அல்லர். உண்மையில் இவற்றை மறுத்தும் எதிர்த்தும் வாழ்ந்த புரட்சியாளர்கள். ஆயினும், அவர்களது இலக்கியங்களில் அக்காலத்தின் வழக்காற்றுச் சொற்கள், பழமொழிகள், சில பொருட்களின் பெயர்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன. ஆய்வுலகம் ஏற்றுக் கொண்ட நெறிமுறைகளின்படி இவற்றைத் துணையாக வைத்துச் சித்தர்களின் காலத்தைக் கணிக்க ஆய்வாளர்கள் பலர் முயன்றிருக்கின்றனர். சான்றாக, சில பிற்காலச் சித்தர்களின் பாடல்களில் இடம் பெறும் வடை, தோசை, சம்பளம், நிமிஷம், நிலுவை, சனியன், விஞ்ஞானம், அங்குலம், நீரிழிவு, சொகுசு, பிராணவாயு போன்ற சொற்களின் அடிப்படையில் அவர்கள் காலத்தைக் கி.பி. 18 அல்லது 19ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கிறார் ச. மாடசாமி[56]. மேலும், சித்தர்களின் காலத்தை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்துள்ள ஆர். வெங்கட்ராமன், தம் ஆய்வேட்டில், 'போகர்—7000' என்ற நூலில், போகர் நீராவி இயந்திரம் (புகை ரதம்), வாயுபலூன் (பரங்கி வித்தை), விமானம், பாராசூட் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்துவதைச் சுட்டிக் காட்டுகிறார்[57]. இவ்வாறே, சிவவாக்கியர் இயற்றிய சிவவாக்கியத்தின் பழைய பதிப்பொன்றில் காணப்படும் கீழ்வரும் பாடலிலுள்ள, இஸ்லாமிய சமயஞ் சார்ந்த பிறமொழிச் சொற்கள், இப்பாடலாசிரியரின் காலத்தைக் கணிக்கத் துணை செய்வன.

'இல்லல்லா மஹம்மது ரசூலல்லா விஸ்லாமதம்
அல்லல்லா வெனுந் துலுக்க ரல்லாக்கை விரலைந்தை
மல்லல்லா கொடுத்து இந்து மதத்தர் கொண்டாடாவிடின்
சொல்லொல்லாச் சுடுகாடாகிச் சுற்றி நாய்களோடுமே'[58].

மேலே எடுத்துக்காட்டியவாறு, சித்தர்களின் காலத்தைக் கணிக்க இயலாது என்னும் கருத்தை ஆதரிக்கின்ற ஆய்வாளர்கள் ஒரு புறம் இருக்க, இதற்கு மறுதலையாகக் கருதுவோரும் ஆய்வுலகில் பலர் உளர். ஆய்வாளர் சிலர் சித்தர் வரலாறு தொடர்பாகக் கூறப்படும் பல்வேறு நம்பவியலாப் பொய்க்கதைகளையும் புனைந்துரைகளையும் மறுத்தும், கண்டித்தும், அவை சித்தர்களின் காலத்தை உறுதி செய்வதற்குப் பெருந்தடைகளாக விளங்குவதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர். சான்றாக, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் உரையுடன் வெளியிடப்பட்டுள்ள 'போகர் வைத்தியம் 700' என்ற நூலின் முன்னுரையில், சே. பிரேமாவும், ப. வெ. நாகராசனும் பதினெண் சித்தர்களுள் ஒருவரான போகரைப் பற்றிச் சொல்லப்படும் பல்வேறு கதைகளும் கருத்துக்களும் அறிவியல் முறையிலான வரலாற்று ஆய்வுக்கும் இலக்கிய ஆய்வுக்கும் சற்றும் பொருந்தாமல் இருப்பதனை விளக்குகின்றனர். மேலும், தமிழிலக்கிய வரலாற்றின் அடிப்படையில் 'பதினெண் சித்தர்கள்' எனப்படும் வழக்கே மிகமிகப் பிற்காலத்தது என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுகின்றனர். போகரின் காலம் பற்றி 'அபிதான சிந்தாமணி' கூறும் உயர்வு நவிற்சியான செய்திகளையும் புனைந்துரைகளையும் தக்க ஆதாரங்களுடன் மறுத்துரைக்கின்றனர். மேலும், சித்தர்கள் பயன்படுத்தும் ஆசிரிய விருத்தம் முதலிய யாப்பு வகைகள் தொல்காப்பியருக்கு மிகப் பிற்பட்டன என்பதைச் சுட்டி, அதன் அடிப்படையிலும் சித்தர்கள் காலத்தைக் கணிக்க முயல்கின்றனர். இவற்றைக் கொண்டு, 'இன்று சித்தர் பாடல்களாக வழங்கும் மிகப்பெரும்பாலான நூல்கள், திண்ணமாக கி.பி. 1000க்குப் பிறகு தோன்றியனவே எனக் கூறலாம். திருமூலர் ஒருவர் மட்டும் இதற்கு விதிவிலக்காகலாம்' எனக் குறிப்பிட்டுள்ளனர்[59].

தமிழ்ச் சித்தர் இயக்கத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வரலாற்று நோக்கில் ஆய்வு செய்துள்ள ஆர். வெங்கட்ராமன், இருபதுக்கும் மேற்பட்ட சித்தர்களின் வரலாற்றை ஆய்ந்து, அவர்கள் வாழ்ந்திருக்கக் கூடிய காலம் இதுவெனக் கணித்துள்ளார். தமிழ்ச் சித்தர்களை வரலாற்று நோக்கில் பார்த்து,

அவர்கள் வாழ்ந்த காலம் பற்றிய புதிய கருத்துக்களை அண்மைக் காலத்தில் வெளியிட்டுள்ள முதல் ஆய்வேடு இதுவெனக் கூறலாம். இவ்வாசிரியர், தமது ஆய்வுக்குரிய சித்தர்களை அச்சித்தர்களின் கொள்கைகளின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரித்துக் கொள்கிறார். சன்மார்க்கச் சித்தர்கள் என்றும் ஞானச் சித்தர்கள் என்றும் காயச்சித்தர்கள் என்றும் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு வகைச் சித்தர்களின் காலமும் இதுவாக இருக்கலாம் எனப் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் விளக்கி, தமது கருத்துக்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். இவரது முடிவுகள் பல, பொதுவாகத் தமிழிலக்கிய உலகில் ஏற்கப்படும் கருத்துக்களினும் வேறுபட்டவையே. எனினும், சித்தர் கால ஆய்வில் இவரது ஆய்வு, புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது எனலாம். மூலர் என்ற பெயரில் மூவரும், கோரக்கர் என்ற பெயரில் இருவரும், புலிப்பாணி என்ற சித்தர் வரிசையில் இன்றுவரை பலரும் இருப்பதாக இவர் குறிப்பிடும் செய்திகள் ஆய்வுலகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்கன. சித்தர் வரிசையில் முக்கியமானவர்களாகக் கருதப்படும் பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர் போன்றோர் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்றும் பாம்பாட்டிச் சித்தர், இடைக்காடர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர், அழுகுணிச் சித்தர் ஆகியோர் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர் கூறுவது குறிப்பிடத்தக்கது[60].

சித்தர் காலம் — பொதுக் கருத்து

சித்தர்களின் காலத்தை உறுதியாகக் கணிக்க இயலுமா என்பது பற்றி ஆய்வாளர்களிடம் இருவேறு கருத்துக்கள் நிலவினாலும், ஆய்வாளர் பலரும் சித்தர்களது காலத்தைப்பற்றிப் பல்வேறு கருத்துக்களைத் தத்தம் நூல்களில் குறிப்பிடத் தவறவில்லை. ப. சொ. காயாரோகணமும்[61] இரா. மாணிக்கவாசகமும்[62] தங்கள் ஆய்வுரைகளில், இத்தகு அறிஞர்கள் பலரின் கருத்துக்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர். ஒவ்வொரு நூற்றாண்டுக்கும்

தமிழ் இலக்கிய வரலாறு எழுதியுள்ள மு. அருணாசலமும்[63] பல்வேறு சித்தர்களின் காலத்தைப் பற்றிய தம் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

இத்தகு பட்டியல்கள் பலவற்றையும் அறிஞர்கள் பலரது கருத்துக்களையும் தொகுத்து நோக்கும்போது, பலராலும் ஏற்கப்படக்கூடிய சில முடிவுகளுக்கு வர இயலும். மேற்குறிக்கப்பட்ட அறிஞர்களது கருத்துக்களின் அடிப்படையில், தமிழ்ச் சித்தர் பண்பாட்டிற்கு வித்திட்ட முதல்வராகிய திருமூலரைக் கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டினராகப் பல தமிழறிஞர்கள் கொள்ளுகின்றனர். ஆனால் கி.பி. 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில்தான் சித்தர் நெறி, குண்டலினி யோகப் பயிற்சிக்கு முதலிடம் தந்து, கோயில்களையும் கோயில் வழிபாடுகளையும் எதிர்த்துச் சாதி சமய முறைகேடுகளையெல்லாம் தட்டிக் கேட்கும் தீவிரமான ஓர் இயக்கமாக எழுந்து பரவுவதைக் காண முடிகிறது. சிவவாக்கியர், பத்திரகிரியார், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், அழுகுணிச் சித்தர் போன்ற ஞானச் சித்தர்கள் பலரையும் இக்காலத்தில் தோன்றித் தொண்டாற்றியவர்களாகக் கருதலாம். இவர்களையடுத்து, பிறிதொரு வகைச் சித்தர்களுடைய படைப்புகள் பல, ஏராளமாக வெளிவந்திருப்பதை அண்மைக் காலங்களில் காணலாம். பல்வேறு ஒற்றுமைக் கூறுகளுடன் விளங்கும் இப்படைப்புகளுள் மருத்துவம் தொடர்பானவை நீங்கலாக மற்ற படைப்புகள், ஞானச் சித்தர்களுடைய படைப்புகளை விடப் பொருளாழத்திலும் இலக்கிய நயத்திலும் குறைந்தும் பேச்சுமொழிச் சொற்கள் நிறைந்தும் காணப்படுகின்றன. சில நூல்கள் சமயச் சடங்குகளையும் பூசைவிதிகளையும் மாய மந்திர வசிய முறைகளையும் விளக்குகின்றன. இவை நந்தீசுவரர், இராம தேவர், காகபுசுண்டர், உரோமரிஷி, அகத்தியர், போகர், சட்டைமுனி, சுப்பிரமணியர் போன்றவர்களுடைய பெயர்களால் அமைந்துள்ளன. இவர்களது பாடல்களின் மொழி நடையாலும் கருத்தமைப்புகளாலும் இவர்களைக் கி.பி. 17 அல்லது 18ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கும் பிற்பட்ட காலத்தவராகவே கருத முடிகிறது. இக்காலத்தில் தூய சித்த நெறிக்குப் புறம்பான போலிச் சித்தர்கள் பலர் தோன்றுவதையும்

இவர்களிற் பலர் வெறும் மாந்திரீகர்களாகவும், ஜாலவித்தைக்காரர்களாகவுமே விளங்குவதையும் இப்பாடல்கள் பலவற்றால் உணர முடிகிறது. தூய ஞானிகளான சித்தர்களும் ஒப்பற்ற யோகச் சிந்தனைகளைப் பிராணாயாமப் பயிற்சிக்குள் மட்டும் அடக்கிவிடுகிற நிலையும் தெரியவருகிறது. எனினும், இக்காலச் சித்தர்கள் பலரது பாடல்களிலும் கூடத் தீவிரமான சமயச் சீர்திருத்தச் சிந்தனைகளும், புதிய உண்மைகளைக் கண்டு துணிவுடன் வெளியிடும் போக்கும் காணப்படுவதையும் மறுக்கவியலாது. அத்தகைய பாடல்கள் சில, இவ்வாய்வில் தொடர்ந்து வரும் இயல்களில் இடம் பெறக் காணலாம்.

சித்தர் பாடல் தொகுப்பின் காலம்

பல்வேறு சித்தர்களின் காலத்தை ஆய்வு செய்வதோடு சித்தர்கள் பலரது ஞானப்பாடல்களின் தொகுப்பாக விளங்கும் 'பதினெண் சித்தர் ஞானக் கோவை' தொகுக்கப்பட்ட காலத்தையும் அறிந்து கொள்ளுதல் இவ்வாய்வுக்குத் துணை செய்யும். இந்தத் தொகுப்பில் காணப்படும் பாடல்கள்தாம் பெரும்பாலும் இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றன.

'பதினெண் சித்தர் ஞானக் கோவை' தொகுக்கப்பட்ட முறையிலுள்ள பல்வேறு குறைகளைக் கமில் வி. சுவலபிள்[64], மு. அருணாசலம்[65], ஆர். வெங்கட்ராமன்[66] முதலிய பல ஆய்வாளர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். இத்தொகுப்பில், பிற்காலத்தில் செய்யப்பட்ட பல பாடல்களும் வசனங்களும் தொகுக்கப் பெற்றிருப்பதன் அடிப்படையில் பார்க்கும்போது இத்தொகுப்பின் காலம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்றே முடிவு செய்ய வேண்டியுள்ளது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் மற்றும் குணங்குடி மஸ்தான் போன்றோரது பாடல்கள் இத்தொகுப்பில் இடம் பெறுவதே இக் கருத்தை உறுதிப்படுத்தும்.

இனி, இவ்வாய்வில், விவிலிய இறையியல் கருத்துக்களோடு ஒப்புநோக்கப்படும் பாடல்களை இயற்றிய ஐந்து சித்தர்களாகிய அகத்தியர்,

சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், போகர், குதம்பைச் சித்தர் ஆகியோரது வரலாறு தொடர்பான சுருக்கமான அறிமுகக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

சிவவாக்கியர்

முற்காலச் சித்தர்களுள் முக்கியமான ஒருவராகக் கருதப்படும் சிவவாக்கியரைப் பற்றிய கதைகள் பல 'அபிதான சிந்தாமணி'[67], கா.சு. பிள்ளை எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு'[68], 'புலவர் சரித்திர தீபகம்'[69], 'புலவர் புராணம்'[70] 'குரு பரம்பர பிரபாவம்'[71] ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. இக் கதைகள் அனைத்தும் ஆய்வுக்குப் பொருந்தாத புராணச் செய்திகளாக விளங்குவதால் அவை இங்கு விரித்துரைக்கப்படவில்லை. எனினும் அவரது காலத்தை ஓரளவு உணர்த்தக்கூடிய சில முக்கியக் குறிப்புகள் மட்டும் இங்குத் தரப்படுகின்றன.

சிவவாக்கியரின் பெயரால் அமைந்துள்ள பாடல்கள் பல வைணவ அடியாராகிய திருமழிசை ஆழ்வார் இயற்றிய பாடல்கள் பலவற்றுடன் சொல்லாலும் பொருளாலும் பெரிதும் ஒன்றுபட்டு நிற்கின்றன. இதன் அடிப்படையில் முதலில் சைவராக இருந்து பாடிய சிவவாக்கியரே பின்னர் உண்மையுணர்ந்து திருமழிசை ஆழ்வாராக வைணவம் தழுவியதாக, வைணவ நூலான 'குருபரம்பர பிரபாவம்' கூறுகிறது[72]. இதன் மறுதலையாகத் திருமழிசை ஆழ்வார் என்ற பெயரோடு சமய வாழ்வைத் தொடங்கியவர், பின்னர் சிவவாக்கியர் என்ற பெயரோடு ஆன்மீக ஞானியாக விளங்கினாரெனப் புலவர் புராணம் விரித்துரைக்கிறது[73]. இந்தக் கதைகளின் அடிப்படையில் பல்வேறு அறிஞர்களும் ஆய்வு செய்து, தங்கள் கருத்துக்களையும் முடிவுகளையும் வழங்கி இருக்கிறார்கள். வி. இராகவன்[74], பி.டி. சீனிவாச ஐயங்கார்[75], ஏ.வி. சுப்பிரமணியம்[76] முதலிய அறிஞர்கள், திருமழிசை ஆழ்வார், சிவவாக்கியர் ஆகிய இருவரையும் ஒருவரென்றே ஏற்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், எம். சீனிவாச ஐயங்கார்[77], சைமன் காசிச்செட்டி[78], இரா. மாணிக்கவாசகம்[79] முதலிய அறிஞர்கள் இதனை மறுத்து, இக்

கதைகளை ஆய்வுக்குப் பொருந்தாத வெறும் கதைகளாகத் தள்ளி விட்டிருக்கின்றனர். இத்தகு பல கருத்துக்களுள், கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிவவாக்கியர் பாடல்களையும் வரலாற்றையும் விரிவாக ஆய்ந்து எழுதியுள்ள மு. அருணாசலத்தின்[80] கருத்து, சிறப்பானதாகவும் பொருத்தமானதாகவும் தோன்றுகிறது. மேற்குறித்த கதைகளை ஆராய்ச்சிக்குப் பொருத்தமற்றவையாக ஒதுக்கிவிடுவதே நன்று என்று அவர் கருதுகின்றார். மேலும், சிவவாக்கியர் பாடல்களில் வரும் சொல்லாட்சிகளை வைத்தும், வேறு சில சான்றுகளாலும் அவரது காலம் 15ஆம் நூற்றாண்டு என்று கூறும் அவர் அச் சிவவாக்கியர், பட்டினத்தாரின் 'திருவிடை மருதூர் மும்மணிக் கோவை'யில் 'சிவவாக்கியத் தேவர்' எனக் குறிக்கப்படுபவரினின்று வேறானவர் என்றும் தெளிவுபடுத்துகிறார்.

பாம்பாட்டிச் சித்தர்

சித்தர் இயக்கத்தின் உண்மையான பிரதிநிதியாகவும், பொதுமக்களிடத்தில் இன்றளவும் மிக்க புகழ் பெற்றவராகவும் கருதப்படும் பாம்பாட்டிச் சித்தரைப் பற்றியும் பல கதைகள் வழங்கி வருகின்றன. இவர் திருக்கோகர்ணத்தில் பிறந்தவரென்று ஒரு கதையும்[81], அந்தணர் குலத்தைச் சேர்ந்த இவர் கொங்குநாட்டில் மருதமலையில் தவம் செய்ததாக ஒரு கதையும்[82] கூறுகின்றன. பாண்டிய நாட்டில் இருந்த இவர், பாம்புகளைப் பிடித்தாட்டிக் கொண்டிருந்தவர் என்றும், ஒருமுறை நவரத்தின பாம்பைப் பிடிக்கச் சென்றபோது சட்டைமுனி அங்கு வர, அவரால் தீட்சை பெற்றுச் சித்தர் நெறியில் சேர்ந்ததாகவும் ஒரு கதை கூறுகிறது[83]. ஆய்வுலகில் உறுதி செய்யமுடியாத இத்தகு கதைகள் பல வழங்கி வந்தாலும், இவரது உண்மைப் பெயரும் காலமும் உறுதியாகத் தெரியவில்லை. அதனால்தான் 'ஆடுபாம்பே' என விளித்துப்பாடும், இவரது பாடல்களின் அடிப்படையில் இவர் பாம்பாட்டிச் சித்தர் என அழைக்கப்படுகிறார். இவரது பாடல்களில் பயின்றுவரும் கப்பல், சுக்கான், சவாரி, ஒயில் முதலிய சொற்களை வைத்து இவர் காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு என மு. அருணாசலம் கருதுகிறார்[84]. ஆனால் சட்டைமுனியின் சமகாலத்தவர் என

வழங்கும் கதையை வைத்து கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்று ஆர். வெங்கட்ராமன் கருதுகிறார்[85]. இவர் ஒரு பாம்பாட்டியாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லப்படும் கதைகளை, இவரது பாடல்களை விரிவாக ஆய்வு செய்துள்ள ச. மாடசாமி மறுக்கிறார்[86]. 'பதினெண் சித்தர் ஞானக் கோவை'யுள் அமைந்துள்ள இவரது பாடல்கள் சிலவற்றில் இடைச் செருகல்களிருப்பதாகவும் ச. மாடசாமி கருதுகிறார்[87]. பாம்பாட்டிச் சித்தர் இயற்றியதாகச் சொல்லப்படும் 'சித்தர் ஆரூடம்' என்ற நூலும் வேறு சில வைத்திய நூல்களும் இவர் எழுதியனவல்ல என மு. அருணாசலமும்[88], ச. மாடசாமியும்[89] தெரிவிக்கின்றனர்.

குதம்பைச் சித்தர்

ஞானச் சித்தர்களுள் ஒருவராகக் கருதப்படும் குதம்பைச் சித்தரின் ஊர், உண்மைப் பெயர் முதலிய செய்திகள் எவையும் நமக்குத் தெரியவில்லை. இவரைப் பற்றிப் பரம்பரைக் கதைகள் எவையும் வழங்குவதாகக் கூடத் தெரியவில்லை. இவர் உண்மைப் பெயர் தெரியாததால், இவரது பாடல்களில் அமைந்துள்ள 'குதம்பாய்' என்ற விளியின் அடிப்படையில் இவர் 'குதம்பைச் சித்தர்' என அழைக்கப்படுகிறார். 'குதம்பை' என்பது இளம் சிறுமியர் அணியும் ஒருவகைக் காதணி. இவரது பெயரை 'அபிதான சிந்தாமணி' 'குதம்பேய்ச் சித்தர்' என தவறாகக் குறிப்பிடுகிறது[90]. இவரது காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு என மு. அருணாசலமும்[91], கி.பி. 17ஆம் நூற்றாண்டு என ஆர். வெங்கட்ராமனும்[92] குறித்துள்ளனர்.

அகத்தியர்

தமிழ் இலக்கிய, இலக்கண வரலாற்றில் அகத்தியர் என்னும் பெயர் மிக அதிகமாக இடம் பெறும் ஒன்றாகும். முத்தமிழுக்கும் முதலிலக்கணம் வகுத்தவரென்றும் சிவபெருமானிடம் தமிழ் உணர்ந்தவரென்றும், பொதிய மலையிலிருந்து தமிழைப் போதிக்கும் குறுமுனிவரென்றும் பலவாறு இவரைப்

பற்றிய கதைகள் வழங்குகின்றன. அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் ரிக் வேதம்[93], மகாபாரதம்[94], இராமாயணம்[95] முதலியவற்றிலும், பரிபாடல்[96], சிலப்பதிகாரம்[97], மணிமேகலை[98], இறையனார் அகப்பொருள் உரை[99] ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

அகத்தியர் என்ற பெயர் தமிழ்ச் சித்தர் இலக்கியத்தோடும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. 'தமிழ்நாட்டிலுள்ள சித்தர்கள் அகத்தியரிலிருந்து தான் தாங்கள் தொடக்கம் பெற்றதாகக் கருதுகின்றனர். அகத்தியர் எழுதியதாக யோகம், வழிபாடு, வைத்தியம், இரசவாதம் ஆகிய துறைகளில் எண்ணற்ற நூல்கள் இன்று உலவுகின்றன. அவைகளின் மொழிநடையை வைத்துப் பார்த்தால், கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக அவைகளைக் கருதமுடியாது' எனத் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் குறிப்பிடுகிறார்[100]. சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் மட்டும் அகத்தியர் பெயரில் சுமார் 96 நூல்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கண்டுள்ளனர்[101]. வைத்தியம், மந்திர ஜாலம், சோதிடம், பூஜாவிதி ஆகிய துறைகளில் எண்ணற்ற நூல்கள் இவர் பெயரால் காணப்படுவதோடு இவர் எழுதிய ஞானப்பாடல்கள் சில 'பதினெண் சித்தர் ஞானக் கோவை'யிலும் வேறு சில தனிப் பதிப்புகளாகவும் வெளிவந்துள்ளன. இவ்வியலில் முன்னரே சுட்டப்பட்டபடி, தமது 'தமிழ்நாட்டில் அகத்தியர்' என்ற நூலில்,

> 'இப்பெயருடன் அமையும் நூல்கள் மருத்துவம், மறைஞானம் முதலிய துறைகள் தொடங்கி மாயமந்திரம், வசியம் முதலிய பல்வேறு துறைகள் பற்றி அமைந்துள்ளன. இவற்றின் ஆசிரியர் நாணமற்ற ஒரு வேடதாரி என்பதற்கே அவை சான்றாக நிற்கின்றன. புகழ்மிக்க தமிழ் இலக்கணத்தை வகுத்த முதல்வர், இத்தகைய பொருளற்றதும், ஆழமற்றதும், பண்பாடுள்ள ஒரு சமுதாயத்துக்குப் பரிந்துரைக்க

முடியாததுமான இழிந்த நூல்களை எழுதும் அளவு தரங்குறைந்திருக்க மாட்டார்' என்றும்

'தமிழிலக்கியத்தின் மிகப் பிற்பட்ட இத்தகு இழிவிலக்கியங்களை ஆய்வது காலக் கேடு'

என்றும் கடுமையாக விமரிசித்துள்ளார்[102].

சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் விளக்க நூற்பட்டியலின் (Descriptive Catalogue) இரண்டாம் பிரிவின் முன்னுரையில் பேராசிரியர் மகாமகோபாத்யாய எஸ். குப்புசாமி சாஸ்திரியார் அகத்தியர் பற்றிக் குறிப்பிடுகையில்,

'இரசவாதம், வைத்தியம், யோகம் ஆகிய சித்தர் தொடர்பான துறைகளில் தமிழில் ஏராளமாக எழுதிக் குவித்தவர் பெயர் அகத்தியர் எனலாம். இப்படிப் பல நூல்கள் எழுதியவராகக் கருதப்படும் இவர் யாரென்று நம்மால் கூற முடியாது. தமிழ் மொழியை ஒழுங்குபடுத்தியவராகவும், முதல் தமிழிலக்கணத்தை எழுதியவராகவும் கருதப்படும் அகத்தியர்தான் இவரென்று சொல்ல முடியாது. பல்வேறு காலங்களில் பல்வேறு எழுத்தாளர்கள் எழுதிய பல்வேறு நூல்களுக்கு மதிப்பும் பழமைச் சிறப்பும் தரும் வகையில் அவற்றை அகத்தியர் எழுதியதாகக் கூறிக் கொண்டனர் என்று கொள்ளலாம். இப் பிற்கால நூல்களின் மொழிநடையைப் பார்க்கும் பொழுது அவை மிகவும் சாதாரண நடையில் அமைந்துள்ளதோடு மிகப் பிற்காலத்தில் எழுதப்பட்டன என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தி விடுகிறது'

எனக் கூறியுள்ளார்[103]. இக் கருத்து ஆய்வாளர் பலரும் ஏற்றுக் கொண்ட கருத்தேயாகும்.

'அகத்தியர் வரலாறு' எழுதிய அ. சிதம்பரனார் தம் நூலில் பல்வேறு காலங்களில் பல்வேறு அகத்தியர்கள் வாழ்ந்ததாக விளக்குகிறார். இவ்வாறு 37 அகத்தியர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்[104].

அகத்தியர் கருத்துக்கள் செவிவழியாகப் பேணப்பட்டுப் பிற்காலத்தில் எழுதப்பெற்றதால் நூலின் நடை பழமைப் பொலிவைப் பெறவில்லை என்போரும் உண்டு[105]. விவிலியம்—திருக்குறள்—சைவசித்தாந்தம் மூன்றையும் ஒப்பிட்டு ஆய்ந்துள்ள மு. தெய்வநாயகம், அகத்தியர் வெளிநாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்த முனிவர் என்ற கருத்தின் அடிப்படையில் அகத்தியர், மேற்கிலுள்ள (குடம்) எருசலேமிலிருந்து இயேசுபெருமானின் நற்செய்தியோடு தமிழகம் வந்த அடியவராக இருந்திருக்கலாம் என ஊகிக்கிறார்[106]. இவையனைத்தும் வரலாற்று நோக்கில் ஆய்ந்து தெளியப்பட வேண்டிய செய்திகளாகும்.

போகர்

போக முனிவரென்றும், போக நாதரென்றும் அழைக்கப்படும் இவரைப் பற்றிப் பல்வேறு விதமான கதைகளும் கருத்துக்களும் நிலவுகின்றன. போகர் ஒரு சீனரென்றும், இவர் பல ஆண்டுகளுக்கு முன்பு சீன தேசத்திலிருந்து பாரத நாட்டிற்கு வந்து 'பாடலிபுத்திரம்', 'கயா' போன்ற வடநாட்டு நகரங்களைச் சுற்றிப் பார்த்த பின்னர் தமிழகத்திற்கு வந்து, இரசவாதமும் வைத்தியமும் கற்றுத் தேர்ந்து மீண்டும் சீன தேசம் சென்றார் எனவும், இவருக்கு ஏராளமான மாணவர்களும் சீடர்களும் உண்டு எனவும், புலிப்பாணிச் சித்தர் அவர்களுள் தலையாயவர் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது[107]. இதற்கு மாறாக இவர் தமிழரே என்றும், சீனா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று சித்த மருத்துவத்தின் பெருமையைப் பரப்பினார் என்றும் சிலர் கூறுவர்[108]. பழனிமலையில் இன்றும் இவரது சமாதி உள்ளதாக மக்கள் நம்புகின்றனர்[109].

புலவர் சரித்திர தீபகம், அபிதான் கோசம், அபிதான சிந்தாமணி ஆகிய நூல்களில் போகர் பற்றிப் பல கதைகள் கூறப்படுகின்றன. இக் கதைகளில் நிறைய கற்பனை கலந்திருப்பதை, சே. பிரேமாவும், ப. வெ. நாகராசனும் தம் ஆய்வில் விளக்குகின்றனர்[110]. எவ்வாறாயினும், இவர் பெயரால் ஏராளமான வைத்திய யோக இரசவாத ஞான நூல்கள் இன்று வழங்குகின்றன. அவற்றுள் 'போகர்—7000 அல்லது சப்தகாண்டம்' என்ற நூலில் இவர் தாம் எகிப்து, ரோமாபுரி, சீனா, மெக்கா, எருசலேம் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்ததாகக் குறிப்பிடுகிறார்[111]. இவரது வரலாற்றை ஆராய்ந்த ஆர். வெங்கட்ராமன், போகர் என்ற பெயரில் மூவர் இருந்ததாக விளக்குகிறார். திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுவது போகர்—I என்றும், சதுரகிரியில் வாழ்ந்து பல நூல்களை எழுதியவர் போகர்—II என்றும், பழனியில் வாழ்ந்தவர் போகர்—III என்றும் இவர் கருதுகிறார்[112].

தொகுப்புரை

இவ்வாறு தமிழ்ச் சித்தர்களைப் பற்றிய பொது அறிமுகமாக் அமைந்த இவ்வியலில், சித்தர்கள் யார் என்பது பற்றிப் பல்வேறு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்பட்டதோடு, சித்தர்களைப் பற்றிச் சித்தர்கள் தாமேயும், பிற அறிஞர்களும் கூறியுள்ள முரண்பட்ட கருத்துக்களும் எடுத்துக்காட்டப்பட்டன.

பின்னர், தமிழ்ச் சித்தர்களின் எண்ணிக்கை பற்றியும் கூறப்பட்டது. தொடர்ந்து சித்தர்களைப் பற்றிய ஆய்வுக்குத் தடைகள் போல அமையும் சில செய்திகள் குறிப்பிடப்பட்டன. அத்தடைகளைக் களையும் ஒரு வழியாக தமிழ்ச் சித்தர் இயக்கம் இந்தியா முழுவதும் பரந்து நின்றதொரு யோக, தாந்திரீக சீர்திருத்த இயக்கத்தின் ஒரு கிளை வளர்ச்சியே என்பது சுட்டப்பட்டது. மேலும், சித்தர்களின் காலத்தைக் கணிப்பது பற்றிய அறிஞர்களின் கருத்துரைகளும் அவை பற்றிய சில மறுப்புரைகளும் தரப்பட்டன. இறுதியில், சித்தர் இயக்கம்

என்பது திருமூலரோடு தொடங்கி கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டளவில் ஒரு தீவிர இயக்கமாக மலர்ந்தது; அதுவே பின்னர் 18 ஆம் நூற்றாண்டளவில் ஆற்றலிலும் ஆழத்திலும் குறைந்து, அளவில் மிகுந்து நின்றது என்னுமொரு பொதுக்கருத்து எட்டப்பட்டது. சித்தர் பாடல்கள் தொகுக்கப்பட்ட காலமும் இங்குச் சுட்டப்பட்டது. இவ்வியலின் இறுதியில் இவ்வாய்வில் இடம்பெறும் சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அகத்தியர், போகர் ஆகிய ஐந்து சித்தர்களின் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகளும் தரப்பட்டன.

* * * * *

இயல் 1

குறிப்புகள்

1. Kamil V. Zvelebil, 'The cittar ; an Enigma', **The Smile of Murugan**, p.218.
2. சண்முகானந்த சுவாமிகள், **திருமூலர் வைத்தியம்**, ப. 4.
3. கா. சுப்பிரமணியப் பிள்ளை, **இலக்கிய வரலாறு—II**, பக். 139–144.
4. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு - 15ஆம் நூற்றாண்டு**, ப. 330.
5. மு வரதராசன், **தமிழ் இலக்கிய வரலாறு**, ப. 190.
6. க. கைலாசபதி, 'சித்தர் தத்துவம்', **ஒப்பியல் இலக்கியம்**, பக். 184, 185.
7. க. த. திருநாவுக்கரசு, 'சித்தர் நெறி', **சித்தாந்தம்**, ப. 78.
8. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், 'சித்தர்' - **கலைக்களஞ்சியம்–தொகுதி 4**, ப. 643.
9. இரா. மாணிக்கவாசகம், **நம் நாட்டுச் சித்தர்கள்**, பக். 40–43.
10. **மே. கூ. நூ.**, ப. 43.
11. **மே. கூ. நூ.**, ப. 43, 44.
12. ப. சொ. காயாரோகணம், **சித்தர்களின் கடவுட் கொள்கை**, ப. 16.
13. **திருமுருகாற்றுப்படை**, அடி 167–169.
14. **தேவாரம்**, 1-7-4; 2-96-10; 4-21-7; 5-87-9; 7-65-3.
15. **திருவாசகம்**, சென்னிப்பத்து, பா. 4.
16. **திருவிளையாடற்புராணம்**, புராணம் : 13, 42.
17. Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, pp.71,72.
18. R. Venkatraman, **A History of the Tamil Siddha Cult**, pp.1, 2.
19. **Loc. cit.**
20. **Ibid.**, pp.2-4.
21. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு - 14ஆம் நூற்றாண்டு**, பக்.344, 345 & Kamil V. Zvelebil, 'The Cittar; an Enigma', **The Smile of Murugan,** pp.218, 219.
22. Poornalingam Pillai, quoted by Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, *p.8*

23. Loc. cit.

24. Loc. cit.

25. C. Jesudassan & Hepzibah Jesudassan, **A History of Tamil Literature**, pp.218-221.

26. K.N. Sivaraja Pillai, **Agastya in the Tamil Land**, pp.38,39.

27. **மதுரைத் தமிழ்ப் பேரகராதி**, ப.எசக.

28. **Tamil and English Dictionary**, (Rev. Miron Winslow (Ed.)), p.448.

29. **திருமந்திரம்**, 1463.

30. **சித்தர் பாடல்கள்**, மணிவாசகர் பதிப்பகம், ப.303.

31. **அகத்தியர் குரு நூல் முப்பூ 50 – 50**, மேற்கோள், இரா. மாணிக்கவாசகம், 'நம் நாட்டுச் சித்தர்கள்', ப. 42.

32. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 319.

33. **மே. கூ. நூ.**, ப. 617.

34. **மே. கூ. நூ.**, ப. 352.

35. **மே. கூ. நூ.**, ப. 717.

36. **மே. கூ. நூ.**, ப. 742.

37. இரா. மாணிக்கவாசகம், **மு. கு. நூ.**, ப. 25.

38. R. Venkatraman, **op. cit.**, pp.198-200.

39. இரா. மாணிக்கவாசகம், **மு. கு. நூ.**, ப. 105–119.

40. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, ப. 20,21.

41. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – 14ஆம் நூற்றாண்டு**, பக். 341,342.

42. இரா. இளங்குமரன், 'சித்தர்', **சித்தர் பாடல்கள்,** பக். x/ix, 1.

43. இரா. மாணிக்கவாசகம், **நம்நாட்டுச் சித்தர்கள்**, பக். 105–115.

44. மு. வை. அரவிந்தன், 'அறிமுகமும் ஆய்வும்', **சித்தர் பாடல்கள்**, ப. xvi.

45. Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, p.28.

46. மு. அருணாசலம், **மு. கு. நூ.** ப. 341.

47. Kamil V. Zvelebil, 'The Cittar ; An Enigma', **The Smile of Murugan**, pp.218-220.

48. இரா. மாணிக்கவாசகம், **சித்தர் பரிபாஷை அகராதி.**
49. Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, p.25.
50. R. Venkatraman, **op. cit.**,4,11.
51. **Ibid.**, p.4.
52. Shashi Bhusan Dosgupta, **Obscure Religious Cults**, p.206.
53. Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, pp.29,30.
54. R. Venkatraman, **op. cit.**,pp.37-40.
55. இரா. மாணிக்கவாசகம், **மு. கு. நூ.**, பக். 230, 231.
56. ச. மாடசாமி, **பாம்பாட்டிச் சித்தர்**, ப. 9.
57. R. Venkatraman, **op. cit.**,p.163.
58. **சிவவாக்கியம்**, (சிறுமணவூர் முனிசாமி முதலியார் பதிப்பு, 1903) பா. 928.
59. சே. பிரேமா & ப. வெ. நாகராசன், 'முன்னுரை', **போகர் வைத்தியம் 700**, ப. xv
60. R. Venkatraman, **op. cit.**,pp.74,75.
61. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, ப. 26.
62. இரா. மாணிக்கவாசகம், **மு. கு. நூ.**, ப. 231, 232.
63. மு. அருணாசலம், **தமிழிலக்கிய வரலாறு - 14ஆம் நூற்றாண்டு**, பக். 338-390.
64. Kamil V. Zvelabil, 'The Cittar ; an Enigma', **The Smile of Murugan**, pp.218,219.
65. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு - 14ஆம் நூற்றாண்டு**, பக். 344, 345.
66. R. Venkatraman, **op. cit.**, pp.14,15.
67. **அபிதான சிந்தாமணி**, ப. 665.
68. கா.சு.பிள்ளை, **தமிழ் இலக்கிய வரலாறு**, ப. 373.
69. **புலவர் சரித்திர தீபகம்**, ப. 143.
70. முருகதாச சுவாமிகள், **புலவர் புராணம்**, (**நம் நாட்டுச் சித்தர்கள்** நூல் மேற்கோள் பக். 167-174).
71. **குரு பரம்பரா பிரபாவம்**, பக். 28,29.

72. **மு. கு. இ.**
73. முருகதாச சுவாமிகள், **புலவர் புராணம், (நம் நாட்டுச் சித்தர்கள்** நூல் மேற்கோள் பக். 167–174).
74. V. Raghavan, **The Great Integrato - The Saints - Singers of India,** p.22.
75. A.V. Subramaniam, **The Poetry and Philosophy of the Tamil Siddhas,** p.43.
76. **Ibid.,** pp.36-49.
77. M. Srinivasa Iyangar, **Tamil Studies,** p.307.
78. Simon Casie Chetty, **The Tamil Studies,** p.108.
79. இரா. மாணிக்கவாசகம், **மு. கு. நூ.,** ப. 193.
80. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – 14ஆம் நூற்றாண்டு,** பக். 347, 348.
81. **அபிதான கோசம்,** ப. 299.
82. **மே. கூ. நூ.,** ப. 136.
83. **அபிதான சிந்தாமணி,** ப. 1081.
84. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – 15ஆம் நூற்றாண்டு,** பக். 330.
85. R. Venkatraman, **op. cit.** p. 70.
86.ச. மாடசாமி, **பாம்பாட்டிச் சித்தர்,** பக். 39–44.
87. **மே. கூ. நூ.,** ப. 62.
88. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – 15ஆம் நூற்றாண்டு,** ப. 331.
89. ச. மாடசாமி, **பாம்பாட்டிச் சித்தர்,** பக். 36.
90. **அபிதான சிந்தாமணி,** ப. 470.
91. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு – 15ஆம் நூற்றாண்டு,** ப. 326,327.
92. R. Venkatraman, **op. cit.,** p. 72.
93. Rig Vedha, quoted by Kamil V. Zvelebil, **The Poets of the Powers,** p.71.
94. **Loc. cit.**
95. **Loc. cit.**

96. **பரிபாடல்**, 11:10-11.

97. **சிலப்பதிகாரம்**, காதை 3, வரி 1; காதை 8, வரி 8.

98. **மணிமேகலை**, காதை 13 ; வரி. 94-96.

99. **இறையனார் அகப்பொருள்உரை** (முதற் சூத்திர உரை).

100. T. P. Meenakshisundaram, quoted by Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, p.71.

101. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, ப. 81.

102. K.N. Sivaraja Pillai, **op. cit.**, pp.38,39.

103. **Loc. cit.**

104. அ. சிதம்பரனார், **அகத்தியர் வரலாறு**.

105. தே. ஆண்டியப்பன் & இரா. குமாரசாமி, **சித்த மருத்துவம்**, பக்.11-13.

106. மு. தெய்வநாயகம், **விவிலியம் - திருக்குறள் - சைவசித்தாந்தம் - ஒப்பாய்வு**, பக். 155, 156.

107. இரா. மாணிக்கவாசகம், **மு. கு. நூ.**, ப. 223.

108. **மே. கூ. நூ.** ப. 221.

109. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, ப. 179.

110. சே. பிரேமா & ப. வெ. நாகராசன், 'முன்னுரை', **மு. கு. நூ.**, பக். ix-xi.

111. **போகர் சப்த காண்டம் 7000**, காண்டம் 3, பா. 216-226.

112. R. Venkatraman, **op. cit.**, pp. 50, 52, 65.

* * * * *

இயல் இரண்டு

தமிழ்ச்சித்தர்களின் கடவுட் கொள்கைகள்

இயல் இரண்டு

சித்தர்களின் கடவுட் கொள்கைகள்

தமிழ்ச் சித்தர்கள் பொதுவாக அவர்களது குண்டலினி யோகப் பயிற்சி, தனிச் சிறப்பு மிக்க மருத்துவமுறை, இரசவாத வித்தைகள், நாடி சாத்திரம், சோதிடக்கலை நூல்கள் போன்ற பலவற்றிற்காக அறியப்பட்டாலும் அவர்களது சமயச் சிந்தனைகளும், தத்துவங்களுமே அவர்களது தனிப் பெருமையைப் பறை சாற்றுவதில் மேலோங்கி நிற்கின்றன எனலாம். ஆய்வுலகத்தைப் பொருத்த அளவிலும் சித்தர்களது மருத்துவ முறைகள், யோக நெறிகள், இரசவாதக் கருத்துகள் முதலியன குறிப்பிட்ட ஒரு சாராரால் மட்டுமே ஆய்வு செய்யப்படக்கூடியன. ஆனால், சித்தர்களது சமயத் தத்துவங்களும் அவற்றை வெளிப்படுத்தும் அவர்களது ஞானப்பாடல்களும் பொதுமக்களனைவருக்கும் உரியன. ஆதலால் அவற்றை அறிவதும் ஆய்வதும் அனைவருக்கும் பயன்தரக்கூடியனவாகும். அந்த வகையில் சித்தர்களின் ஞானப்பாடல்கள் வழிப் புலனாகும் அவர்களது பல்வேறுபட்ட கடவுட் கொள்கைகளையும், அவற்றின் முரண்பாடுகளையும், அவற்றுக்கான காரணங்களையும், அவற்றிடையே விளங்கக் கூடிய பொதுத் தன்மைகளையும் பொது நிலையிலும் இந்த ஆய்வில் இடம்பெறும் ஐந்து சித்தர்தம் பாடல்களின் அடிப்படையிலும் இவ்வியல் எடுத்துக் கூறுகிறது.

சித்தர்களின் கடவுட் கொள்கைகளில் காணப்படும் வேறுபாடுகள்

முந்திய இயலில் சித்தர்கள் யார்? என்ற வினாவுக்கு விடையளிக்க முற்படும் தற்கால அறிஞர்கள் சிலரின் முரண்பட்ட கருத்துக்கள் எடுத்துக்காட்டப்பட்டன. இத்தகைய கருத்து முரண்பாடுகளுக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படலாம். அவற்றுள் முக்கியமான காரணம், சித்தர்கள் அனைவரும் ஒரே விதமான கடவுட் கொள்கைகளும் கோட்பாடுகளும் உடையவர்களென்று பலரும் பிறழ உணர்ந்து விடுவதாகும். இத்தகைய கருத்துடைய அறிஞர்களும் ஆய்வாளர்களும் சித்தர்களைப் பற்றித் தாம் எழுதும் நூல்களில்,

அனைத்துச் சித்தர்களின் சமயச் சிந்தனைகளையும் பொதுப்பட விளக்கி, அவர்தம் இறைநெறிச் சிந்தனைகளுக்குள் உள்ள நுண்ணிய வேறுபாடுகளை எடுத்துக் காட்டத் தவறி விடுகின்றனர். இதனால், இந்நூல்களைப் படிப்பவர்கள் சித்தர்களது கடவுட் கொள்கைகள் பற்றிய ஒரு முழுமையான கருத்தைப் பெறவியலாது போகிறது. மேலும், பல தனிச் சித்தர்களின் சமயச் சிந்தனைகளைப் பற்றிய ஐய வினாக்கள் தோன்றிக் குழப்பம் மேலிட்டு விடுகிறது.

எனினும், சித்தர் இலக்கியங்களை நுணுகிக் கற்ற அறிஞர் சிலர், சித்தர்கள் அனைவருமே, சமய அறிஞர்களைப் போன்று ஏதோ ஒரு தத்துவம் அல்லது சித்தாந்தம் அல்லது அமைப்புக்குள் அடங்கி நின்று பாடியவர்கள் அல்லர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இது பற்றிக் கமில் வி. சுவலபிள் கூறுவதாவது; 'சித்தர்கள், கடவுள், உடலும் ஆன்மாவும்—கர்மாவும் மறுபிறவியும் ஆகிய இவைகளைப் பற்றி என்ன கருத்துடையவர்கள் என்பதை அறிவது மிக முக்கியமானது. ஏனெனில், இவைதாம் இந்திய சமயத் தத்துவத்தின் மிக முக்கியமான பிரச்சினைகளாகும். சித்தர்களின் சிந்தனையே, முழுக்க அனுபவத்தின் அடிப்படையிலானது. சோதனை முறையைச் சார்ந்தது. அவர்களது எழுத்துகள் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஏதோ ஒரு சித்தாந்தத்தின் திட்டவட்டமான விளக்கவுரைகள் அல்ல. ஆகவே, அவர்கள் படைப்புகளைப் பற்றி இன்றைக்கு நமக்கிருக்கும் அறிவை வைத்துக்கொண்டு, அவர்களது எழுத்துகளின் அடிப்படையில் அவர்கள் எந்தச் சமயத் தத்துவத்தைப் பின்பற்றுபவர்களென்று வரையறுப்பது கடினம். எனினும், சில முக்கியமான தன்மைகளை மட்டும் சுட்டிக் காட்ட இயலும்'[1] இதே கருத்தினைச் சி.கோ. தெய்வநாயகமும்[2], க. கைலாசபதியும்[3] தத்தம் நூல்களில் குறிப்பிட்டு விளக்கியுள்ளனர்.

சித்தர்கள் பலரது பாடல்களையும் சற்று நுணுகி ஆராய்ந்தால் இக்கருத்துக்குப் பல்வேறு சான்றுகளைக் காணமுடியும். சான்றாக, ஆகமங்கள், வேதங்கள் போன்றவைகளில் நம்பிக்கைக் கொள்ளாமல் அவற்றின் ஆதிக்கத்தை

எதிர்த்துச் சிவவாக்கியர்[4], பாம்பாட்டிச் சித்தர்[5], அகப்பேய்ச் சித்தர்[6] முதலியோர் பாடியிருக்க, கடுவெளிச் சித்தரோ, 'வேதவிதிப்படி நில்லு' என்று பாடுகிறார்[7]. பல்வேறு இறை உருவங்களைப் பட்டினத்தார் போன்ற சில சித்தர்கள், வருணிக்க[8] வேறுபல சித்தர்கள் உருவ வழிபாட்டை எந்த உருவத்திலாயினும் கண்டித்துப் பாடுவதையும் காணமுடிகிறது[9]. யோகப் பயிற்சியின் மூலம் இறை அனுபவம் பெறுவதை யோக மார்க்கத்தாரான சித்தர்கள் பலரும் பாட[10] அகப்பேய்ச் சித்தர், 'எவ்வளவு காலம் யோகம் இருந்தாலும் முக்தியை அடைய முடியாது', என்று பாடுகிறார்[11]. அவ்வாறே 'ஊன் உடம்பு ஆலயம்'[12] என்றும், 'காயமான பள்ளியில் காணலாம் இறையையே'[13] என்று திருமூலரும், சிவவாக்கியரும் முறையே சொல்ல, உடலைப் பழிக்கும் பட்டினத்தாரும்[14] சித்தர் வரிசையில் சிறப்புறுகிறார்.

மேற்குறித்த அறிஞர்தம் கருத்துக்களையும் சித்தர் பாடல்களிலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட சான்றுகளையும் தொகுத்துப் பார்க்கும்போது, இரண்டு உண்மைகள் தெளிவுபடுகின்றன. ஒன்று, சித்தர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட நிலைகளில் நின்று தம் கடவுட் கோட்பாடுகளை வெளியிட்டிருக்கிறார்கள். சில இடங்களில், ஒரே சிந்தனையைக் கூட வெவ்வேறு சித்தர்கள் வெவ்வேறு முறைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இரண்டு, சித்தர்கள் இறைவனை அடைவதற்கு ஆகம—வேத—புராண—சாத்திரச் சடங்குகளிலும், தம் சொந்த அனுபவங்களையே பெரிதும் சார்ந்து நிற்கிறார்கள். 'ஈழத்துச் சித்தர்கள்' என்ற நூலின் முன்னுரையில், க. கைலாசபதி சித்தர்களின் 'சுவானுபவ' நெறியைக் குறிப்பிட்டுப் பேசுகின்றார்[15]. சித்தர்கள் இவ்வாறு தத்தம் அனுபவங்களைச் சார்ந்து நிற்பதால், அவர்களது இறைச் சிந்தனைகளில் வேறுபாடு காணப்படுவது இயல்பே.

சித்தர்களின் பல பிரிவுகளும் அவர்தம் கொள்கைகளும்

சித்தர்கள், வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாக விளங்குவதால், அவர்களது கருத்துக்களின் அடிப்படையிலும், அவற்றுக்கு அடிப்படைகளாக அமையக்கூடிய பிற பின்புலங்களின் அடிப்படையிலும், அவர்களைச் சில பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்க ஆய்வாளர்கள் முயன்றுள்ளனர். சித்தர் மரபைப் பாலவர்க்கம், போகவர்க்கம், கைலாசவர்க்கம் என மூன்று பிரிவுகளாகப் பெரியவர்கள் கூறுவதாக கே.ஆர். பசுபதி குறிப்பிடுகின்றார்[16]. ஆர். வெங்கட்ராமன்[17], ப.சொ. காயாரோகணம்[18] முதலிய ஆய்வாளர்கள் கைலாயவர்க்கம், மூலவர்க்கம் எனச் சித்தர்களில் இரண்டு பிரிவினர் இயங்குவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். 'கைலாயவர்க்கம்' என்பது அகத்தியரிலிருந்து உருவாகி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பொதிகை மலையை இருப்பிடமாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது. 'மூலவர்க்கம்' என்பது திருமூலரிலிருந்து உருவாகி இன்றைய சீவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள சதுரகிரி மலையை இருப்பிடமாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகள், பெரிதும் சித்தர்கள் வாழ்ந்த இடங்களின் அடிப்படையிலும் குருவாக அமையும் முதற் சித்தர்களின் அடிப்படையிலும் அமைவன. சித்தர்களின் கொள்கைகள் அடிப்படையில் அவர்களை ஞானச் சித்தர்கள் என்றும் காயச் சித்தர்கள் என்றும் பிரித்துக் காண்பது ஆய்வாளர் பலர் பின்பற்றும் மரபு. ஆர். வெங்கட்ராமன் இவ்விரு பிரிவுகளுடன் சன்மார்க்கச் சித்தர்கள் எனும் மூன்றாவது பிரிவையும் சேர்த்து விளக்குகிறார். சன்மார்க்கச் சித்தர்கள் வரிசையில் திருமந்திரம் இயற்றிய திருமூலரும், அத்திருமூலரால் குறிக்கப்படும் போகர் என்பவரும் அடங்குவதாக ஆர். வெங்கட்ராமன் கூறுகின்றார். ஞானச்சித்தர்கள் வரிசையில் பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச்சித்தர், இடைக்காட்டுச் சித்தர், கடுவெளிச் சித்தர் ஆகியோர் அமைவரென்றும், போகர், கோரக்கர், கொங்கணர், கருவூர்சித்தர், மச்சமுனி, சட்டைமுனி, சுந்தரானந்தர், உரோமரிஷி இன்னும்

வைத்திய—இரசவாத—கருத்துக்களைப் பாடிய நூற்றுக்கணக்கான சித்தர்கள் காயச்சித்தர்கள் வரிசையில் அடங்குவர் என்றும் இவர் தெரிவிக்கிறார்[19]. இவரது ஆய்வேட்டைத் தழுவி[20] இம்முவகைச் சித்தர்களின் கொள்கைகள் கீழே தரப்படுகின்றன.

சன்மார்க்கச் சித்தர்கள்

இப்பிரிவினரின் கொள்கைகளை வெளிப்படுத்தக்கூடிய ஒரே நூலான திருமந்திரம், சித்த மார்க்கத்தின் தொடக்க நூல் என்று சொல்லலாம். எனினும், இது சைவசித்தாந்தத்தின் பன்னிரு திருமறைகளுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருப்பதால் சைவ நெறிக்கும் சித்தர் நெறிக்கும் இடையில் பாலம் அமைத்த சிறந்த நூலாகும். சித்தர் இலக்கியம் என்ற வகையில் பல்வேறு தனிச்சிறப்புகளை உடைய நூலாகத் திருமந்திரம் விளங்குகிறது. சான்றாக, காயசித்தர்களைப் போலச் சக்தி வழிபாட்டையும், மந்திர—யந்திரங்களையும் பற்றிப் பேசுகின்றது. அதே நேரத்தில் அவர்களைப் போல, எந்தத் தெய்வத்தின் உருவ வருணனையும் இந்நூலில் இடம் பெறவில்லை. 'ஞானச்சித்தர்களைப்' போன்று சிவபெருமானை 'வெட்டவெளி'யாகவும், 'பாழா'கவும் உருவகிக்கிறது. ஆனால் அவர்களுக்கு மாறுபட்டு, சிவபெருமானை இவ்வண்டத்திலும், அடியவர் இதயத்திலும் நடம்புரிபவராக வருணிக்கிறது. சிவவழிபாட்டையும் சக்தி வழிபாட்டையும் திருமந்திரம் இணைக்கிறது. பல்வேறு வகையான பூசை முறைகளையும், அருச்சனைகளையும் இந்நூல் போற்றிச் சொல்கிறது. எனினும் ஞானச்சித்தர்களைப் போல யோக சமாதி அடைவதையும் திருமந்திரம் போற்றி விளக்குகிறது[21].

ஞானச்சித்தர்கள்

ஞானச் சித்தர்கள் மனித உடம்பை அழியக்கூடியதென்றும் இவ்வுலகத்தைப் பொய்யானதென்றும் கருதுபவர்கள். யோகநெறிகளின் மூலமாக இறைவனோடு ஒன்றி நிற்கும் நிலைக்காக ஏங்கும் இவர்கள், சிவவழிபாடு செய்பவர்கள்; சமுதாயத்தில் சமத்துவத்தை வலியுறுத்தி பிராமண ஆதிக்கத்தையும், பிராமணர்கள் போற்றுகின்ற ஆகம வேத நெறிகளையும், சமயச் சடங்குகளையும் எதிர்த்துக்

குரல் கொடுக்கும் புரட்சியாளர்கள். தங்களைப் பற்றிய செய்திகளை அதிகம் வெளியிட விரும்பாத இவர்கள், 'ஒரே கடவுளை' வணங்கும்படி மக்களை அழைப்பவர்கள். இவர்கள் சமயப் பொதுமையைப் போற்றுபவர்கள் என்ற உண்மைக்குச் சிவவாக்கியரது பாடல்கள் பல சிறந்த சான்றுகளாக அமையக்கூடியன. உருவ வழிபாடு, ஆகம—புராணங்கள், வேத விதிகள், தீர்த்தமாடுதல், புண்ணியத் தலங்களுக்குச் செல்லுதல், உயிர்ப்பலி கொடுத்தல் முதலியவைகளை மிகக் கடுமையாகக் கண்டித்து அவைகளால் பயனேதுமில்லை என்று வலியுறுத்தும் இவர்கள், குண்டலினி யோகத்தால் கூட இறைவனை அடைய முடியாது என்று கூறுகின்றனர்[22].

காயச்சித்தர்கள்

காயச்சித்தர்கள் என்பவர்கள் சக்தியைப் பல்வேறு பெயர்களால் [வாலை, மனோன்மணி, உமைதேவி] வழிபடுபவர்கள். இவர்களில் சிலர் இளம் பெண்களையும், மதுவையும் வைத்து 'வாமபூஜை' [வாமாசாரம்] செய்பவர்கள். இவர்கள் ஞான சித்தர்களைப் போலன்றி இந்த உடம்பை அழியாமல் நிலைநிறுத்துவதிலும் இளமையைப் போற்றிக் காப்பதிலும், பல்வேறு சித்திகளாகிய ஆற்றல்களைப் பெறுவதிலும் விருப்பமுடையவர்கள். அதற்காகவே யோக, வைத்திய இரசவாத மற்றும் மாய வித்தைகளைப் பயின்று நிற்பவர்கள். உடலை அழியாது காக்கும் காயகற்பத்தை உண்டாக்க முனைந்தவர்கள். தாயாகிய சக்தித் தெய்வத்தைப் பல்வேறு சடங்குகள் மூலமாக வழிபட்டவர்கள். இவர்களது பாடல்களில் மிக உயர்ந்த ஆன்மீக இலட்சியங்களை விட, உலகியல் சார்ந்த நோக்கங்களே மிகுந்திருக்கக் காணலாம். சக்தி வழிபாட்டின் மந்திரங்களையும் — சக்கரங்களையும் பயன்படுத்தும் இவர்களில் சிலர் வாமபூஜை முதலியவற்றைக் கண்டித்துப் பாடியதுமுண்டு[23]. இவர்கள் பெயரால் நூற்றுக்கணக்கான வைத்திய இரசவாத நாடி சாத்திர நூல்கள் உலவுவதால் அவை பல்வேறு இடைச்செருகல்களுக்கும் இலக்கியத் திருட்டுகளுக்கும் வழிவகுத்து நிற்கும் அவலத்தையும் உணரலாம்.

இம்மூன்று பிரிவினரேயன்றிச் சித்தர்களைப் போன்ற கவிஞர்கள் என்ற வரிசையில் இராமலிங்க அடிகளார், குணங்குடி மஸ்தான் போன்ற பிற்காலத்தவரைச் சேர்க்கிறார் ஆர். வெங்கட்ராமன்[24]

பொது நிலையில் சித்தர்களின் கடவுட் கொள்கைகள்

சித்தர்களது கடவுட் கொள்கைகள் மற்றும் சமயச் சிந்தனைகளிடையே பல நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுவது, ஆய்வு நோக்கில் புலனாகும் உண்மையாகும். எனினும், சித்தர்கள் அனைவரும் பொதுநிலையில் ஒன்றுபட்ட சமயச் சிந்தனைகள் பலவற்றையும் வெளியிட்டிருக்கிறார்கள். இத்தகு கொள்கைகள் அல்லது கருத்துக்களின் தொகுப்பே 'சித்த மார்க்கம்' அல்லது 'சித்தநெறி'[25] எனப் பொதுவாக அழைக்கப்படுகிறது. சித்தர் பாடல்கள் தொடர்பான பல நூல்களிலும் ஆய்வுரைகளிலும் இத்தகு சிந்தனைகளும் கருத்துக்களும் நன்கு எடுத்துக்காட்டப்படுகின்றன.

சித்தர்களைப் பொது நிலையில் நோக்கும்போது, அவர்களும் பிற சமயவாதிகள் போல ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டிருந்த ஒரு கூட்டத்தினரே. ஆனால் அந்தத் தேடல் முயற்சிகளிலும் தேடிக் கண்ட உண்மைகளை வெளியிட்ட முறைகளிலும் பிறரினும் வேறுபட்டு நிற்கின்றனர். சமயவாதிகள், தத்தம் சமய விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட்டவர்கள். சித்தர்களோ, தம்மைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தச் சமய அமைப்புகளையும் சாராது நின்றவர்கள். ஆதலின், தாம் உணர்ந்த உண்மைகளைத் துணிவுடன் தம் பாடல்களில் வெளியிட்டனர். 'சுதந்திரமான இறைச் சிந்தனைதான் சித்தர்களது அடிப்படை ஒற்றுமை' எனச் ச. மாடசாமி குறிப்பிடுகிறார்[26]. அவர்தம் கடவுட் கொள்கைகளில் முக்கியமான சில சிந்தனைகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளன.

அ. இறை நம்பிக்கையைப் புரட்சிகரமாக வெளிப்படுத்தியவர்கள்

சித்தர்களது பாடல்களில் சாதி அமைப்பு, வேத—ஆகம—புரோகித முறைகள் இவை பற்றிய கண்டனங்களையும் மறுப்புகளையும் பரவலாகவும் மேலோட்டமாகவும் காணும் பலரும், சித்தர்களைக் கடவுள் மறுப்பாளராகக் கருதியதுண்டு. இலக்கிய அறிஞர் சிலரும் கூட இத்தகு கருத்துக் கொண்டிருந்ததுண்டு[27]. சமய

உலகின் கேடுகள் பற்றிய சித்தர்களது கண்டனங்கள், நிறைவான பகுத்தறிவு வாதங்களாகவே அமைகின்றனவாதலால் அவற்றைச் 'சித்த நாத்திகம்' என அழைப்பதுமுண்டு[28]. எனினும் சித்தர்களது பாடல்களை ஆழ்ந்து பயில்வார், அவர்தம் அசைக்க முடியாத இறை நம்பிக்கையைத் தெள்ளிதின் உணரலாம். மகத்தான கடவுளை மறுக்காமல், அந்தக் கடவுளின் பெயரால் மதங்களும் மனிதர்களும் செய்யும் கொடுமைகளை அவர்கள் கண்டித்தனர்.

சமய உலகில் இத்தகு சீர்திருத்தக் கருத்துக்களையும் புரட்சிச் சிந்தனைகளையும் சித்தர்கள் வெளியிட்டமுறை தனிச்சிறப்புடையது. சித்தர்கள் பொதுவாகவே 'குழூஉக்குறி'களாகவும் 'ஏமாற்றும் எளிமை' [புறநிலையில் எளிய சொற்கள் போல் தோன்றினாலும், அனைவராலும் புரிந்து கொள்ளவியலாத உட்பொருள்கள் பல கொண்டு விளங்கும் தன்மை] யுடனும் பாடும் இயல்புடையவர்கள். சித்தர்களது பாடல்களில் அமையும் 'மறை ஞானத் தன்மை' [Mysticism], குறியீட்டு மொழி [Symbolism], 'ஏமாற்றும் எளிமை' [Deceptive Simplicity] ஆகியன பற்றி ஆய்வாளர்கள் பலரும் நிறைய எழுதியிருக்கின்றனர்[29]. சித்தர் இலக்கியங்களை அனைவரும் படித்து உணர்ந்து பயனுற இயலாமல், அவற்றை 'மூடிய நூல்களாக' [Closed texts] ஆக்குவன 'இக்குழூஉக்குறி'களே என கமில் வி. சுவலபிள் குறிப்பிடுகிறார்[30]. எனினும், சித்தர்கள் தம் இலக்கியங்களில் எவ்வெவ்விடங்களில் இத்தகு மொழிநடையைப் பயன்படுத்துகின்றனர்; எங்கே வெளிப்படையாகப் பாடுகின்றனர் என ஆய்வுக்கண்கொண்டு நோக்குவோர்க்கு உண்மை புலனாகும். யோகம் இரசவாதம் வைத்தியம் தொடர்பான உண்மைகளை விளக்கும் போது இத்தகு 'குறிப்பு மொழி'களால் அவர்கள் பேசிடக் காணலாம். ஏனெனில் தக்க ஆசிரியர்களிடம் நேர்முகமாகப் பயின்றறிய வேண்டிய கலைகள் இவை. பொதுமக்கள் அனைவரும் இவற்றை எளிதில் அறிந்து எல்லோரும் இவற்றைச் செயல்படுத்த ஆரம்பித்தால், அதனால் தவறான விளைவுகளும் குழப்பங்களும் ஏற்படலாம். இக்காரணம் கருதியே இச்செய்திகளைச் சித்தர்கள் 'மறைவான மொழியில்' பாடியிருக்க வேண்டும். ஆனால் இறை

உண்மைகள் எல்லா மக்களுக்கும் உரியனவாதலால் அவற்றைப் பொதுமக்களனைவருக்கும் விளங்கும் மொழியில் பாடியிருக்கிறார்கள் எனலாம். அதிலும் யோக நெறி நின்று இறைவனோடு ஒன்றும் அனுபவத்தையோ இறைவனின் இணையற்ற தன்மைகளையோ விளக்கும்போது சில இடங்களில் குறியீட்டு மொழியில் அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

ஆனால், சமய உலகு தொடர்பான கண்டனங்களையும் சீர்திருத்தக் கருத்துக்களையும் பாடும்போது, பாமரர்களும் புரிந்து கொள்ளக்கூடிய வெள்ளை மொழியில் வேகத்துடன் பாடியிருக்கிறார்கள். போலித்துறவியரின் வஞ்சக வாழ்க்கை, உருவ வழிபாட்டின் பயனின்மை, சமயச்சடங்குகள், ஆகம விதிகள் முதலியவற்றின் பெயரால் மக்களை ஏமாற்றும் கொடுமைகள் முதலியவற்றைக் கடுமையான — ஆனால் தெளிவான சொற்களால் கண்டித்திருக்கிறார்கள். இத்தகு வஞ்சகங்களாலும் போலிப் புரட்டுகளாலும் பாதிக்கப்படும் எளியமக்கள், இவற்றை இனங்கண்டு கொள்ள வேண்டும் என்ற சித்தர்களின் இலட்சிய நோக்கே, இதற்குக் காரணமெனலாம். அதனால் தான் இவ்வாறு பாடுவதால் வரும் பின்விளைவுகளுக்குச் சற்றும் அஞ்சாது துணிந்து பேசியிருக்கிறார்கள். சிவவாக்கியர், அகத்தியர், வால்மீகர் முதலிய பல்வேறு சித்தர்களின் பாடல்களிலும், இத்தகு கண்டனங்களுக்குச் சான்றுகள் பல காணலாம்[31]. இதனாலேயே, சித்தர்களும் அவர்தம் இலக்கியங்களும் பல்வேறு பாதிப்புகளுக்கும் பழிப்புகளுக்கும் இலக்காகியுள்ளமைக்கு அகச் சான்றுகள் உள்ளன[32]. இவ்வாறு சித்தர்களின் இறைநம்பிக்கையும் அதனை அவர்கள் வெளிப்படுத்திய முறையும் புரட்சிகரமானது என்பதை உணரலாம். ப.சொ. காயாரோகணம் தமது ஆய்வேட்டில் சித்தர்களது இறை நம்பிக்கையை அவர்கள் பயன்படுத்தின கடவுட் பெயர்களின் அடிப்படையிலும் பல்வேறு கோயில்களில் அவர்கள் சமாதி கொண்டிருப்பதாகக் கூறப்படும் கருத்தின் அடிப்படையிலும் உறுதிப்படுத்துவது[33] இங்குக் குறிப்பிடத்தக்கது.

(ஆ) ஓரிறைக் கோட்பாடுடையவர்கள்

சித்தர்களின் கடவுட் கொள்கைகளைப் பற்றி கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடும்போது, 'அவர்கள் ஓரிறைக் கோட்பாடுடைய தூய்மை வாதிகள்' [A monotheistic Puritan Creed] என்று குறிப்பிடுகிறார்34. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமூலர் வாக்கும்[35], 'ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்; சக்தியே பராபரமே ஒன்றே தெய்வம்; சகலவுயிர் சீவனுக்கும் அதுதானாச்சு', முதலிய அகத்தியர் பாடல்களும்[36] 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற பட்டினத்தார் பாடல் அடியும்[37] 'அங்கும் இங்கும் ஆகி நின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ' என்ற சிவவாக்கியர் கூற்றும்[38] சித்தர்களின் ஓரிறைக் கோட்பாட்டை எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.

ஓரிறைக் கோட்பாட்டை போற்றும் இவர்களிற் சிலர், சிறு தெய்வ வணக்கத்தையும் அவற்றுக்கும் உயிர்ப்பலி தருதலையும் கண்டித்துப் பாடியுள்ளனர். சான்றாக, சிவவாக்கியர், சிறு தெய்வத்துக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலி தருதலையும், பேய்களையும், பிடாரிகளையும் வணங்குவதையும் வன்மையாகக் கண்டித்துப் பாடியுள்ளார்[39], சிவனும் திருமாலும் ஒன்றே என்பது போலச் சமயப் பொதுமை ததும்பச் சிவவாக்கியர் பாடும்பாடல்கட்கும்[40] அவரது ஓரிறைக் கோட்பாடே அடிப்படை எனக் கருதலாம்.

(இ) சிவனை வழிபட்டவர்கள்

சித்தர்கள் சமயத்துறையில் பெரும் சீர்திருத்தங்கள் செய்தவர்கள் என்ற போதிலும், அவர்கள் சிவனை வழிபடுபவர்கள் என்பதும் அடிப்படையில் சைவ நெறியினர் என்பதும் அவர்களைப் பற்றிப் பொதுவாக நிலவும் கருத்துக்களாகும். இஃது உண்மையே என்பதைச் சித்தர்கள் பலரும் தங்கள் பாடல்களில் சிவனை விளித்தும் வேண்டியும், போற்றியும் பாடுதலால்[41] தெளிவாக உணரலாம். காயச்சித்தர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களும் சிவனின் பகுதியாகிய சக்தியைப் பல பெயர்களால் வழிபடுபவர்களே[42] எனினும், சித்தர்களுக்கும் சைவர்களுக்கும்

பல்வேறு வேறுபாடுகள் இருப்பதனை ஆய்வாளர் பலரும் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளனர். சான்றாகச் 'சிவமதத்திற்குள் நின்ற வண்ணம் சைவசித்தாந்தத்தின் இறுதி நிலையாக வாய்ந்த சித்தர்களின் கருத்துக்கள் பிற்காலத் தமிழ்ச் சிந்தனையின் மீது ஏற்படுத்திய அழுத்தம் பெரிது. அச்சிவ மதத்திற்குள் தோன்றிய மிதவியல் நிலைபாடு அது', என்று குணா குறிப்பிடுகிறார்[43].

சித்தர்கள் கொள்கை சைவத்துடன் மாறுபட்டு நிற்பதை, மற்றுமொரு ஆய்வாளர் 'சித்தர்கள் அனைவரும் சைவர்களே எனினும், அவர்களது கொள்கை பக்திக் காலத்தில் வழங்கிய மரபு நெறிச் சைவத்தினும் வேறுபட்டது. அவர்கள் கோயில்களிலுள்ள உருவச் சிலைகளைப் போற்றி வணங்கவில்லை. மாறாக, சிவம் அல்லது கடவுளே பழமையும் சர்வ வல்லமையும் உடைய பரம்பொருள். மனிதனுடைய பாவங்களே அவனது ஆன்மாவுக்கும் அதனைப் படைத்தவருடன் அது ஒன்றுதலுக்கும் இடையில் நின்று தடுப்பன என்ற உண்மையைப் பற்றிக் கொண்டவர்கள். சித்தர் தத்துவத்தின் சாரம் இதுவே'[44] என விளக்குகிறார்.

சித்தர்களின் கடவுட் கொள்கையை ஆய்ந்துள்ள ப.சொ. காயாரோகணம் தமது ஆய்வேட்டில், 'சித்தரது சித்தாந்தமும் சைவ சித்தாந்தமும் பல கொள்கைகளில் ஒற்றுமையுடையனவாக இருந்தாலும், அடிப்படையில் அவை வேறுபாடுகள் கொண்டவை' எனக் குறிப்பிட்டு அத்தகு ஒற்றுமை வேற்றுமைகளை விரிவாக ஆய்ந்து விளக்கியுள்ளார்[45].

இது தொடர்பாக ச. மாடசாமி குறிப்பிடும் கருத்துக்கள் சிந்தனைக்குரியன.

> 'சைவரையும் சித்தரையும் ஒன்றாகக் கருதமுடியாதபடி, அவ்விரு சாராருக்கும் இருந்த பகையுணர்ச்சிக்கு வரலாற்றிலும் இலக்கியத்திலும் சான்றுகள் இருப்பது முன்னரே சுட்டப்பட்டது. இப்பகை உணர்ச்சியை ஏதோ ஒரு கால கட்டத்தில், சமய அடிப்படையில் அல்லாமல் வேறு சில காரணங்களால் தோன்றியிருக்கக் கூடும் எனக் கருதி ஒதுக்கி விட்டாலும்.

ஒரு பெரிய முரண்பாடு, சித்தர்களைச் சைவராகக் கருதவிடாமல் தடுக்கிறது. கோயிலுக்கும் கோயில் வழிபாட்டுக்கும் சிறப்பிடம் தருவதால், 'திருக்கோயில் மதம்' எனச் சைவ சமயம் சிறப்பித்துக் கூறப்படுவதுண்டு. 'கோயிலாவது ஏதடா' எனக் கோயிலையும் 'நட்டக்கல்லும் பேசுமோ?' என உருவ வழிபாட்டையும் பழித்துரைக்கும் சித்தர்களைத் திருக்கோயில் மதத்துக்குள் வைத்துப் பார்ப்பது எவ்வாறு?[46]

அடிப்படையில் உருவ வழிபாட்டையும், கோயில் வழிபாட்டையும் சித்தாந்த சாத்திரங்களையும் ஏற்று நிற்கும் நடைமுறைச் சைவத்தினும், உருவ வழிபாட்டையும் கோயில் குளங்கள் — ஆகம வேத சாத்திரங்களைச் சார்ந்து நிற்கும் நிலையையும் கடுமையாக மறுக்கும் சித்தர் நெறி மாறுபட்டு நிற்பது கண்கூடு.

(ஈ) உருவ வழிபாட்டைக் கடுமையாக மறுப்பவர்கள்

சித்தர்களின் கடவுட் கொள்கைகளுள் முதன்மையானதாகப் பலராலும் கருதப்படுவது, அவர்தம் உருவ வணக்க மறுப்பேயாகும். சித்தர்கள் மிக்க வன்மையுடன் உருவ வழிபாட்டைக் கண்டித்துப் பாடியுள்ள சில பாடல்களை பிற்காலக் கடவுள் மறுப்பு இயக்கத்தினர் தம் கொள்கை விளக்கங்களுக்கு ஆதாரமாக அமைத்துக் கொண்டனர். அத்துணை உணர்ச்சி வேகத்துடனும் கடுமையான சொற்பயில்வுகளாலும் அப்பாடல்கள் அமைந்திருக்கின்றன. ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுவது போல[47] ஆன்மப் பயிற்சியில் குறைந்தவர்கள், உருவ வழிபாட்டைப் பின்பற்றலாம் என இச்சித்தர்கள் மென்மையாகப் பேசியதாகத் தெரியவில்லை. காலத்தால் மிகப்பிற்பட்டவர்களாகக் கருதப்படக்கூடிய காயச் சித்தர்கள் சிலரைத் தவிர, பிற சித்தர்கள் அனைவருமே உருவ வழிபாட்டை மிக வன்மையாக மறுத்தும், கண்டித்தும் பாடியுள்ளனர். இக்கருத்தினை சி. ஜேசுதாசனும் ஹெப்சிபா ஜேசுதாசனும் தம் நூலில், சிவவாக்கியர்—பட்டினத்தார்—பத்திரிகிரியார் முதலியோர்

பாடல்களில் இருந்து மேற்கோள்கள் காட்டி நிறுவுகின்றனர்[48]. உருவ வழிபாட்டைப் போற்றும் சித்தர்கள் சிலரின் பாடல்களும் இடைச்செருகல்களாக இருக்கலாமோ என ஐயுறுகின்றனர்[49]. பல ஆண்டுகளுக்கு முன் சித்தர்களைப் பற்றியும் அவர்களது இரசவாதத்தைப் பற்றியும் கும்பகோணம் கே.சி. வீரராகவ ஐயர் எழுதிய கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'பெரும்பாலான சித்தர்கள், சங்கரரின் ஒருமை வாதத் தத்துவத்தையும், இந்துக்களின் விக்கிரக வழிபாட்டையும் எதிர்த்து மறுத்தவராகவே காணப்படுகின்றனர்[50]. உருவ வழிபாட்டை மறுத்து, சித்தர்கள் பாடிய பாடல்கள் பல உள்ளன. அவற்றுள்ளும் 'நட்டகல்லும் பேசுமோ?'[51] ஓசை உள்ள கல்லை நீர் உடைத்து'[52] கல்லு வெள்ளி செம்பிரும்பு'[53] எனத் தொடங்கும் சிவவாக்கியர் பாடல்களும், 'உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி?'[54] என்ற பாம்பாட்டிச் சித்தர் பாடலும், 'கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே[55] 'உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும்,[56] முதலிய பட்டினத்தார் பாடல்களும், 'பாடினார் இப்படியே சொல்லாவிட்டால்[57] எனத் தொடங்கும் அகத்தியர் ஞானப்பாடலும் பலரும் அறிந்தன.

இவ்விடத்தில், உருவ வழிபாட்டைக் கடுமையாகக் கண்டிக்கும் சித்தர்களுள் சிலர், ஏன் தெய்வ உருவங்கள் பற்றியும் புராணச் செய்திகள் பற்றியும் சில பாடல்களில்[58] பாடியுள்ளனர் என்ற வினா எழுகிறது. இத்தகு பாடல்களை நன்கு ஆய்ந்து நோக்கும்போது, இவ்வினாவுக்குச் சில விடைகள் புலப்படுகின்றன. முதலாவது, ஏற்கனவே உருவ வழிபாட்டில் மூழ்கியிருந்தவர்களும் பல்வேறு புராணக் கதைகளை நம்பி வந்தவர்களுமாகிய பொதுமக்களிடம் சித்தர்கள் தம் சிந்தனைகளை எடுத்துரைக்கத் தலைப்பட்டனர். அச்சிந்தனைகளைப் பொதுமக்கள் நன்கு புரிந்து கொள்ளும் வகையிலே, அவர்கள் ஏற்கனவே அறிந்து நம்பிய செய்திகள் — கதைகளின் அடிப்படையிலேயே தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர். இறையுருவ விளக்கங்களையும் புராணச் செய்திகளையும் சித்தர் தம் பாடல்களில் பயன்படுத்துவதற்கு இதனை ஒரு முக்கியக்காரணமாகக் கருதலாம். மேலும்,

தெய்வங்களின் பெயர்களைப் பல இடங்களில் சித்தர்கள் உருவக நோக்கில் பயன்படுத்துவதையும் காணலாம். யோகநெறிக்குரியதாக உடலின் கண்ணமைந்த ஆறு ஆதாரங்களையும் அறுவகைத் தெய்வங்கள் உறையும் இடங்களாகப் பத்திரகிரியார் பாடியுள்ளமை இதற்கொரு சான்று[59].

மேலும், சித்தர்கள் சிலர் தெய்வ வடிவங்களைத் தம் பாடல்களில் விவரித்துள்ளனர்[60]. இப்பாடல்களை ஆயும் ஆய்வாளர்கள் இத்திருஉருவ விளக்கங்கள், நாயன்மார்கள் – ஆழ்வார்கள் பாடல்களைப் போன்று உணர்வு பூர்வமாக இல்லாமையும் சித்தர்களின் உருவவழிபாட்டு வெறுப்பே இதற்குக் காரணமென்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர்[61].

(உ) உள்ளத்துள் உறையும் இறையைக் காண முயன்றவர்கள்

'சித்தர்கள் வைதீக மதத்தின் அடிப்படைகளை ஏற்றுக் கொண்டு, அவை விதிக்கும் சடங்கு, சம்பிரதாயம், கருமவிதி முதலியவற்றிலிருந்து விலகி, சுவானுபவமும் உள்ளுணர்வும் காட்டும் ஒழுகலாற்றில் நின்று உணர்ச்சி பூர்வமாக மெய்ப்பொருளை நாடுகின்றனர். இதுவே சித்தர் தம் கடவுட் கொள்கை' என்று க. கைலாசபதி விளக்குவார்[62]. அந்த வகையில், இறைவன் சீவனாகிய நமக்குள்ளேயே இருக்கின்றான். இதை நாம் உய்த்துணர வேண்டும் என்று சித்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

> *'சீவனெனச் சிவனென வேறில்லை*
> *சீவனார் சிவனாரை அறிகிலர்*
> *சீவனார் சிவனாரை அறிந்தபின்*
> *சீவனார் சிவனாயிட் டிருப்பாரே'*[63]

எனத் திருமூலர் இவ்வுண்மையைச் சுவைபடப் பாடுகிறார்.

இக்கருத்தினை ஒட்டியே சிவவாக்கியர் இறைவனை, உட்கலந்த சோதி[64] என்றும் 'என்னிலே யிருந்த தொன்று'[65] எனவும் 'என்னகத்துள் ஈசனும்'[66] எனவும் விவரிக்கின்றார். அவரது 'தூரம் தூரம் என்று',[67] 'தீர்த்தம் ஆட

வேண்டுமென்று'[68] கோயிலாவதேதடா?[69] முதலிய பாடல்களும் இந்தக் கொள்கையையே பல கோணங்களில் விளக்குகின்றன. 'பொன்னில் ஒளி போலவும்[70] எள்ளில் எண்ணெய்'[71] போலவும் ஈசன் உயிர்களுக்குள் உறைவதாகப் பாம்பாட்டிச் சித்தர் பாடுகின்றார். இவ்வாறு நமக்குள் இருக்கும் இறைவனை, யோகப் பயிற்சியின் மூலம் நாம் கண்டுணர வேண்டும் என்பதே இச்சித்தர் பாடல்களின் உட்கிடை. இவ்வாறு யோகப் பயிற்சி செய்யும்போது 'காயமான பள்ளியில் காணலாம் இறையையே'[72] என்று உடலின் பெருமையைப் பாடும் நிலையும் சித்தர் பாடல்களில் உண்டு. 'ஊன் உடம்பு ஆலயம்'[73] என்று திருமூலரும் இக்கருத்தை உணர்த்துகிறார். குண்டலினி சக்தியாகிய பாம்பை, ஆறாதாரங்களின் வழியாக உச்சிச்சுழுமுனையில் ஏற்றி, இறையனுபவம் பெறுவதையே பாம்பாட்டிச் சித்தர் பாடுவதாக ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர்.[74] எவ்வாறாயினும் ஞானச் சித்தர்கள் பலரும் காயச்சித்தர்கள் சிலரும், யோகப் பயிற்சியின் வழியாக 'நம்முள்' இருக்கும் இறைவனைக் கண்டுணர வேண்டுமென்று கூறுவதை அவர்தம் பாடல்கள் பலவற்றால் உணரலாம்.

(ஊ) இறைவனைக் குருவழி உணர்ந்தவர்கள்

இறையனுபவம் பெற விழையும் ஆன்ம சாதகன் ஒருவன் குரு ஒருவரை நாடி, அவரால் ஞானம் உணர்த்தப் பெற்றாலன்றி, உய்தி அடையவியலாது என்பது சித்தர் பாடல்கள் உணர்த்தும் ஒரு முக்கியக் கொள்கையாகும். சித்தநெறி பெரும்பாலும் யோகநெறி. அது குருவொருவர் வழி நின்று உணர்தலாகும். மேலும், சித்தர் பாடல்களில் மெய்க் குருவின் பண்புகள் எவை பொய்க்குருக்களின் கேடுகள் எவை என்பனவெல்லாம் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. வால்மீகர் ஞானம்[75], அகத்தியர் ஞானம்[76], சுப்பிரமணியர் ஞானம்[77] முதலிய பாடல்களில் பொய்க்குருக்கள் பற்றியும், குரு வணக்கத்தை விரித்துப் பாடும் பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் மெய்க்குருவின் மேன்மைகள் பற்றியும்[78] பற்பல செய்திகள் பேசப்படுகின்றன. இறைவனே குருவாக வந்து—அருள் செய்து ஞான ஒளி தருவதைச் சில பாடல்கள் உணர்த்துகின்றன. சான்றாக,

ஆசானும் ஈசனும் ஒன்றேயாகும்[79] என்றும் 'ஈசனை ஆசானாய்க் காணும் பேர்கள் இன்பமுடன் கயிலாய மெய்தலாம்'[80] என்றும் திருமூலர் பாடுகின்றனர். மாநிலத்தையே ஒரு நொடியில் வகுத்த 'ஜெகஜோதியை' வணங்கி, அவரை அண்டிக் கொள்ள வேண்டும் என்றும் 'அகத்தியர் ஞானம்' பேசுகிறது[81].

(எ) சமயச் சடங்குகளையும் ஆகம—புராண சாத்திரங்களையும் மறுத்தவர்கள்

எதற்கும்—எவருக்கும் அஞ்சாத சமயச் சீர்திருத்தவாதிகளாகவும் கிளர்ச்சியாளர்களாகவும் விளங்கிய சித்தர்கள் பிராமண ஆதிக்க மறுப்பாளர்களாகவும், சடங்குகளை எதிர்ப்பவர்களாகவும் விளங்கினர். மேலும், பிராமண ஆதிக்கத்துக்கு வழிகோலக்கூடிய ஆகம—புராண சாத்திரங்களையும் இவர்கள் கண்டிக்கின்றனர். சமய உலகில் இவை வணிகக் கருவிகளாகச் சிலரால் பயன்படுத்தப்படுவதால் இவை, தாம் உருவான நோக்கத்துக்கு மாறாக, உண்மைகளை மக்கள் அறிய விடாமல் தடுத்துவிடுகின்றன. இதனைப் பல்வேறு பாடல்களில் சித்தர்கள் கண்டித்துப் பாடுகின்றனர். தல யாத்திரைகள், தீர்த்தமாடல், தேர்த் திருவிழாக்கள், மந்திரம் — மணிமாலை உருட்டல், கோயில் குளம் வழிபடுதல் ஆகிய அனைத்துமே சித்தர்களின் கண்டனத்துக்கும் பரிகாசத்துக்கும் உள்ளாகின்றன. சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், அகத்தியர், வால்மீகர் முதலிய சித்தர்கள் இத்தகு தீவிர சிந்தனையாளர்களாக விளங்குகின்றனர். சித்தர்களின் இத்தகு துணிவான கருத்துகள் பற்றி ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் பின்வருமாறு கூறுகிறார்.

> 'சாதிகளையும் சமய வழிபாட்டு முறைகளையும் மறுத்து இன்று பேசுவதற்குப் பெரிய வீரம் தேவைப்படவில்லை. ஆனால் சித்தர்கள் வாழ்ந்த காலத்தில் இவற்றையெல்லாம் எதிர்த்துப் பாடவேண்டுமானால், அதற்கு அளவு கடந்த வீரம் வேண்டும். சித்தர்களின் சாதனை எளிமையானதல்ல.'[82]

இறைச்சிந்தனைகளோடு சமுதாயச் சிந்தனைகளையும் இணைத்துப் பாடிய சித்தர்களின் தனிச் சிறப்புக்கு இத்தகு பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

பொது நிலையில் சித்தர்களது கடவுட் கொள்கைகள் சில இதுவரை விளக்கப்பட்டன. இனி, இவ்வாய்வில் இடம்பெறும் சித்தர்கள் ஐவரின் இறைச் சிந்தனைகள் சில, அவர்தம் பாடல்களின் அடிப்படையில் தரப்படுகின்றன.

சிவவாக்கியர் பாடல்கள் வெளிப்படுத்தும் கடவுட் கொள்கைகள்

ஞானச்சித்தர்களுள் முக்கியமானவராகக் கருதப்படும் சிவவாக்கியர், ஓர் எழுச்சிச் சித்தராக மட்டுமன்றி உணர்ச்சிக் கவிஞராகவும் விளங்கியவர். எளிமையும் கடுமையும் ஆற்றலும் ஒருங்கமைந்த அவரது பாடல்கள், கற்றோரும்—கல்லாரும் விரும்பிப் போற்றும் பாடல்களாக விளங்குகின்றன. பதினெண் சித்தர் ஞானக் கோவையின் எல்லாப் பதிப்புகளிலும், இவரது பாடல்களே எண்ணிக்கையிலும் மிகுந்து விளங்குகின்றன. பொதுவாக, அனைத்துப் பதிப்புகளிலும் இவரது 527 பாடல்கள் இடம் பெறுகின்றன. இரத்தின நாயக்கர்[83] அண்ட் சன்ஸ் பதிப்பில் 550 பாடல்கள் காணப்படுகின்றன. இஃதன்றி, சிறுமணவூர் முனிசாமி முதலியார் வெளியிட்டுள்ள—பலராலும் அறியப்படாத பதிப்பொன்று 'சிவவாக்கியம்' என்ற பெயரால் 1000 பாடல்களைக் கொண்டு விளங்குகின்றது[84]. இப்பாடல்கள் வழிப்புலனாகும், சிவவாக்கியரின் சமய—சமுதாயச் சிந்தனைகளைக் கமில் வி. சுவலபிள் பின்வருமாறு தொகுத்துரைக்கிறார்;

> 'இந்து மத அமைப்புக்கு — குறிப்பாக பிராமண ஆதிக்க முறைக்கு எதிரான ஒரு பெரிய கிளர்ச்சியாளர் இவர். வேத—ஆகம—அதிகாரங்களை மறுத்து, பிராமணர்களை எதிர்ப்பவர். உருவ வழிபாட்டையும் கோயில் சடங்குகளையும் கண்டிக்கிறார். சாதி அமைப்புக்கு இவர் சரியான எதிரி. எவ்வகையான சம்பிரதாய—ஆசாரங்களுக்கும் எதிரானவர். சைவ

வைணவ பேதங்களை இவர் மறுக்கிறார். வைதீகமத ஆசார—அனுட்டானங்களுக்கு எதிரான இத்தகைய கிளர்ச்சியாளர், அங்கீகரிக்கப்பட்ட சமய மரபினரால் புறக்கணிக்கப்பட்டார். அவரது பாடல்கள் சைவத் திருமுறையில் சேர்க்கப்படாமல் விலக்கப்பட்டன.[85]

பல்வேறு பதிப்புகளில் காணப்படும் சிவவாக்கியரது பாடல்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது, தூக்கலாகத் தெரியும் அவரது இறைச் சிந்தனைகள் சில கீழே தரப்படுகின்றன.

(அ) தன்னுள் இருக்கும் இறையைத் தானறிதல்

சிவவாக்கியர் தம் பாடல்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லும் உண்மை இதுவாகும். இறைவன் நமக்குள்ளேயே 'உட்சோதி'யாக[86] இருக்கின்றான். நம்முள் இருப்பவனை நாமுணரும் வழியறிய வேண்டும். அதற்கு, தன்னைத்தான் அறிந்து, அதன் வழி தன்னுள் இருக்கும் இறையை அறியாமல், காடுமலை மேடுகள் ஏறி கடவுளைத் தேடுவதால் பயனில்லை. இந்த உண்மையை உணராதவர்க்குத் திருவிழாவும், உயிர்ப்பலி தருதலும், நீராடலும், மலர்தூவி அருச்சித்தலும், மந்திரங்களை முணுமுணுத்தலும், இன்ன பிற சடங்குகளும் பொருளற்றதும் பயனற்றதுமான செயல்களாக முடியும் என்பது அவர் கொள்கை. யோகப் பயிற்சியாகிய மூச்சுப் பயிற்சிகளைப் பற்றிச் சிவவாக்கியர் பல்வேறு பாடல்களில் பாடியுள்ளார். இப்பயிற்சிகள் உட்கலந்த இறைவனை உணர்ந்து கொள்வதற்கு உதவுவதோடு, என்றும் இளமையாய் இருப்பதற்கும் இறப்பை வெல்லுதற்கும் துணை நிற்கும் என்று அப்பாடல்கள் கூறுகின்றன.[87] யோக நெறி அறியாதாரால் எளிதில் பொருளுணரவியலா அப்பாடல்களின் மையச் செய்தி இதுவேயாகும்.

(ஆ) ஆகம—வேத—சாத்திரங்களின் மறுப்பு

ஆகமங்களையும் வேதங்களையும் பல்வகைச் சாத்திரங்களையும் இறைவனை அறிவதற்கு உதவும் வழிகளாகச் சுட்டும் சமயவாதிகள் செய்கையைச் சிவவாக்கியர் பெரிதும் மறுத்துப் பாடுகிறார். உண்மையில் அவை இறையனுபவம் பெற உதவாமல், இறைவன் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளவே சாதனங்களாக அமைவதனைத் துணிவுடன் சுட்டுகின்றார். இந்தச் சாத்திரங்களை ஓதிப் பிழைக்கின்ற 'சட்ட நாதப் பட்டருக்கும்' [பூசாரிகள்] கூட அவை சாங்காலத்தில் துணை செய்யவில்லையே என்று நகையாடுகிறார்.[88] இவ்வாறு ஆகம—வேதங்களை மறுப்பதோடு, அவற்றை ஓதுகின்ற சமயவாதிகள் பலரின் பொய்மை வடிவங்களையும் அவர் இனங்காட்டுகிறார். கட்டிய மனைவியை அலைய விட்டுவிட்டு, நாடு நாடாகத் தாம் சென்று, காவியும், சடைமுடி கமண்டலங்களும், உருத்திராட்சமும் தாங்கி, வீடுவீடாகச் சோறு கேட்டு வாங்கிப் பிழைக்கும் கபட வேடதாரிகளைக் கடுமையாகக் கண்டிருக்கிறார்.[89].

(இ) உருவ வழிபாட்டையும் சடங்கு—சம்பிரதாயங்களையும் மறுத்தல்

உள்ளம் ஒன்றாது — உண்மைப் பொருள் அறியாது செய்யப்படும் சடங்குகள் பலவும் இறைவனை அறியத்துணை செய்வதில்லை. மாறாக, அவற்றை மேற்கொள்வோர் இறைவனை அறியாத பேதை மனிதர் என்பதையே அவை வெளிப்படுத்தி நிற்பதாகச் சொல்லுகிறார் சிவவாக்கியர்[90]. இந்த வகையில், தம் பாடல்கள் பலவற்றிலும், தேர்த்திருவிழா எடுத்தல், புலால் உண்ணாது இருத்தல், ஆடுகோழிகளைப் பலியிடுதல், திருநீராடல், புனிதப் பயணங்கள் மேற்கொள்ளல், மணிமாலை உருட்டுதல் முதலிய பல்வேறு சடங்குகளையும் சம்பிரதாயங்களையும், தக்க காரணங்கள் காட்டி, வாதத் திறமையுடன் மறுத்துப்பாடியுள்ளார். இத்தகு பாடல்களின் உச்சக்கட்டமாகவே உருவ வழிபாட்டையும் கோயில் வழிபாட்டையும் கூட அவர் துணிவுடன் விமரிசிக்கின்றார். உள்ளுக்குள் இறைவனை உணராமல், கல்லுக்குள் கடவுளைக் காண விரும்புவதனைப் பேதைமை என்று பேசுகிறார் சிவவாக்கியர்[91]. 'கோயிலும் மனத்துளே குளங்களும்

மனத்துளே' என்ற நிலைக்கு வராதவரை, கோயிலும் குளங்களும் அங்குச் செய்யப்படும் வழிபாடுகளும் நமக்குத் தரக்கூடிய பயன் ஒன்றுமில்லை என்பது அவர் கருத்து[92].

(ஈ) சமயப் பொதுமை போற்றல்

'கண்ணிலே மணியிருக்கக் கண்மறந்தவாறு போல்' தம்முள் இருக்கும் இறைவனை அறியாத மக்களே, எண்ணில்லாத கோடி தேவர்கள் பெயரைச் சொல்லி, என் தெய்வம் உன் தெய்வம் எனச் சண்டையிட்டு மாள்கிறார்கள் எனச் சிவவாக்கியர் கவல்கிறார்[93]

'எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ
அங்கும் இங்கும் ஆயிரண்டு தேவரே யிருப்பரோ
அங்கும் இங்கும் ஆகி நின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ
வங்க வாரம் சொன்ன பேர்கள் வாய் புழுத்து மாள்வரே'[94]

என்பது அவர் துணிவுரை. சைவ—வைணவ மாறுபாட்டைக் கண்டித்து, அரியும் அரனும் ஒன்றே என அவர் பல பாடல்களில் வலியுறுத்திப் பாடுகிறார். நமசிவாயத்தை நயமுறப்பாடும் அவர், எந்தை ராம நாமத்தையும் பாடியுள்ளார். 'தில்லை நாயகன் அவன் திருவரங்கனும் அவன்[95] எனத் தெளிவிக்கிறார். 'நாழி உப்பும் நாழி அப்பும் நாழியான வாறுபோல்' ஆழியோனும் [திருமால்] 'ஈசனும்' [சிவன்] கலந்திருப்பதாக உவமைவழி உணர்த்துகிறார்[96] கடந்து நின்ற கடவுளை 'அரியுமல்ல அயனுமல்ல' என்றும் ஒரிடத்தில்[97] வருணிக்கிறார். சைவத்துக்கும் வைணவத்துக்கும் இடையே சமயப் பொதுமை பேசுவதோடு சிவவாக்கியர் நின்று விடுவதாகத் தெரியவில்லை. சிறுமணவூர் முனிசாமி முதலியார் பதிப்பில் காணப்படும் பாடல்களில், இஸ்லாம்—கிறித்துவ மதங்களைப் பற்றியும் அவர் குறிப்பிடக் காண்கிறோம். இஸ்லாம் சமயத்தினரும் இந்து மதத்தரும் ஒன்றுபட்டு வாழாவிடில் பேரவலம் நிகழுமெனவும் அவர் ஒருபாடலில் எச்சரித்திருக்கிறார்[98]. சிவவாக்கியர் கடவுட் கொள்கைகளில் சமயப் பொதுமையும்

பொறையும் தலையானவை. சமயப் பொதுமையேயன்றி, மனிதப் பொதுமையும் போற்றுபவர் சிவவாக்கியர். இதற்கு மனிதரனைவரும் சமம்—சாதிப் பாகுபாடுகள் அழிதற்குரியன எனும் கருத்தில் அவர் பாடிய சாதி மறுப்புப் பாடல்கள் சான்றாவன.

(ஈ) மறுபிறவி மறுத்தல்

சிவவாக்கியரது சமயச் சிந்தனைகளுள் முக்கியமானதும் ஆய்வுக்குரியதுமாய மற்றொன்று பிறவிச் சுழற்சி பற்றிய அவரது கருத்துகளே.

'கறந்த பால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
துடைந்து போன சங்கினோசை உயிர்களும் உடற்புகா
விரிந்த பூ உதிர்ந்தகாயும் மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே'[99]

எனும் பாடலை ஆதாரமாக்கிச் சிவவாக்கியர் மனித உயிர் பல பிறவிகள் எடுக்கவல்லது எனும் கருத்தை மறுப்பவர் என்று ஆய்வாளர் பலர் குறிப்பிடுகின்றனர்[100]. இதற்கு மறுதலையாக, இறைநிலை உணர்ந்த ஞானிகளையே இப்பாடல் குறிப்பிடுவதாகக் கூறுவாருமுளர். தம்முள் இறைவனை உணர்ந்து கொண்ட உயர் யோகிகள் மீண்டும் பிறவி எடுப்பதில்லை என்பது அத்தகையோர் இப்பாடலுக்குத் தரும் விளக்கம்[101]. எனினும் இப்பாடலின் இறுதி அடியில் சிவவாக்கியர் தரும் அழுத்தமும், வேறுசில பாடல்களில் 'ஆத்துமம் அனாதியோ?'[102] 'உடம்பு உயிர் எடுத்ததோ? உயிர் உடம்பு எடுத்ததோ?'[103] முதலிய வினாக்களை எழுப்பி, 'ஆத்துமம் அனாதியன்று'[104] என விடையிறுப்பதும் அவரை மறுபிறவி மறுப்பாளராகவே காட்டுகின்றன. இதற்கு மாறாக அமையக்கூடிய ஓரிரு குறிப்புகளும் சில பாடல்களில்[105] காணக்கிடக்கின்றன. இது பற்றிச் சிவவாக்கியர் கருத்தை நாம் உறுதியாக உணர இயலாத அளவு, அவரது பாடல்களிற் பல முரண்பாடுகள் ஆய்வாளர்களுக்குத் தோன்றுகின்றன. சிவவாக்கியர் பாடல்களிற்

காணப்படும் பாட பேதங்களும் இடைச் செருகல்களும் இதற்குக் காரணமாகலாம். அவை தனி ஆய்வுக்குரியன.

சிவவாக்கியரின் கடவுட் கொள்கையைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம். 'எங்குமாக நிற்கும் சோதியாக—நம்முள் கலந்து நிற்கும் இறைவனை நமக்குள்ளேயே நாம் உணர்ந்து வணங்க வேண்டும். பூசனை—வாசனை, கோயில்கள்—குளங்கள், சடங்குகள்—சம்பிரதாயங்கள், ஆசாரங்கள்—அனுட்டானங்கள் இவற்றால் இறைமையை உள்ளவாறு உணரலாகாது. சமயங்களாலும் சாத்திரங்களாலும் ஒன்றான இறைவனைக் கூறு போட்டுப் பார்ப்பது கொடிய குற்றம், பரம்பொருளை உணர்த்தாமல், சில போலித் துறவியர் கரத்தில் வியாபாரக் கருவிகளாக விளங்கும் சாதியமைப்பு, வேத—ஆகம விதிகள், புராணக் கதைகள் முதலியன பொருளற்ற புனைவுகள்'.

குதம்பைச் சித்தர் பாடல்கள் வெளிப்படுத்தும் கடவுட் கொள்கைகள்

குதம்பைச் சித்தர் பாடல்களாகப் பதினெண் சித்தர் ஞானக்கோவையில் 32 பாடல்களே இடம் பெறுகின்றன. ஆனால் 'யோக ஞான சாஸ்திரத் திரட்டு' என்ற தொகுப்பில் இவரது பாடல்கள் 246 காணப்படுகின்றன. மற்ற தொகுப்பிலுள்ள 32 பாடல்களும் இத்தொகுப்பில் 215 முதல் 246 வரை தொடர்ச்சியாகக் காணக்கிடக்கின்றன. இப்பாடல்கள் அனைத்தையும் தொகுத்துச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், புலவர் இரா. இளங்குமரன் அவர்களது உரைக் குறிப்புகளுடன் 1987—இல் நூலாக வெளியிட்டுள்ளனர். இத்தொகுப்பிலுள்ள பாடல்கள் கடவுள் வணக்கம், கடவுள் திறம் கூறல், வீட்டையும் வழி முதலிய 21 உட்தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தலைப்புகளின் பொருளை நன்கு அறிந்து கொண்டாலே, குதம்பைச் சித்தருடைய கடவுட் கொள்கைகள் நன்கு புலனாகிவிடும்.

இப்பாடல்களின் வழி வெளிப்படும் குதம்பைச் சித்தருடைய கடவுட் கொள்கைகளில் முதன்மையான சில மட்டும் இங்குத் தரப்படுகின்றன.

(அ) எல்லையற்ற இறைவனின் பெருமையைக் கூறல்

சொற்களைக் கடந்து நிற்கும் இறைவனின் பெருமையைத் தம் பாடல்களில் ஓரளவேனும் விளக்குவதற்குக் குதம்பைச் சித்தர் விழைகிறார். 'காட்சி அகாட்சி கடந்த பிரமம்'[106] 'அண்டத்துக்கப்பால் அகன்ற சுடர்'[107] எவ்வுயிர்க்கும் இரைதரும் ஈசன்'[108] விண்ணொளி[109] காணக்கிடையாத கற்பாந்த கற்பம்[110] மாணிக்கக் குன்று மாசற்ற சோதி[111] தேவரும் சித்தரும் தேடும் முதல்வர்[112] சீவனும் புத்தியும் சித்தமும் தந்தவன்'[113] என்றெல்லாம் கடவுளைப் போற்றிப் பாடுகின்றார். செத்துப் பிறக்கின்ற தெய்வங்களை[114] 'மகத்தான கடவுளோடு' ஒப்பிடலாகாதென உணர்த்துகிறார். அரூபமாய்—ஆதி அந்தமாய்—அநாதியாய் விளங்கும் இறைவன் கருணை கொண்டு நம்மிடம் இறங்கி வருவதாகவும்[115] அந்தச் 'சீரான தேவன்' சிறப்பினை யாராலும் சொல்ல ஆகாதென்றும்[116] அவர் வியந்து பாடுகிறார்.

(ஆ) மனிதர் அனைவரும் இறைவனை வணங்க வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தல்

இறைவனின் மாட்சிமைகளை விவரித்துரைப்பதோடு குதம்பைச் சித்தர் நின்றுவிடவில்லை. இத்தகு இறைவனை உடலெடுத்த மனிதர் அனைவரும் வணங்கவே வேண்டும் என்று வலியுறுத்திப் பாடுகிறார்[117], அவ்வாறு வணங்காத பக்தியற்ற பாவியர்க்கு நரகத் தண்டனை உண்டென்றும் எச்சரிக்கின்றார்[118]. கடவுளை வணங்காதவர்கட்கு மட்டுமல்ல, தவறாகப் பூசைகள் செய்வோர்க்கும் தண்டனை உள்ளதாகப் பாடுகிறார்[119]. இவ்வாறே கள்ளம், காமம், கொலைகள், கபடங்கள் முதலிய அக்கிரமங்கள் இழைப்பாரும் நரகப் படுகுழியில் வீழ்வரெனக் கண்டிப்புடன் பாடுகின்றார்[120]. ஆனால், பற்றற நின்ற இறையைப் பிற பற்றுகளை அகற்றி, பற்றிக் கொள்வோர்க்கு முத்திநிலை வாய்க்குமெனவும் மொழிகின்றார்[121].

(இ) நிலையாமை உணர்ந்து நிலையான நற்செயல்கள் செய்யத் தூண்டுதல்

யாக்கை, இளமை, செல்வம் இம்மூன்றையும் நிலையற்றனவாகக் காட்டும் பக்தி இலக்கியப் பாடல்கள் வரிசையில் குதம்பைச் சித்தர் பாடல்களையும் சேர்க்கலாம்.. மனித உடலின் நிலையாமையையும், இளமை அழகின் நிலையற்ற தன்மையையும், மங்கையர் அழகும் அவர் தரும் போக இன்பமும் நிலையாமையையும் மிக விரிவாகவும் கடுமையாகவும் பாடுகின்றார். பட்டினத்தாரையும் பாம்பாட்டிச் சித்தரையும் போலவே, குதம்பைச் சித்தரும் இவ்வாறு உடற்பழிப்பிலும் பெண்டிர் பழிப்பிலும் துணிந்து நிற்பதை இப்பாடல்கள்[122] உணர்த்துகின்றன. நிலையாமையை உணர்த்தும் குதம்பையார், நாம் செய்யும் நற்செயல்களும் நல்ல பக்தியுமே நிலைத்த பயனும் நீங்கா முக்தியும் தரவல்லன எனவும் உளங்கொள்ளுமாறு உணர்த்துகிறார்[123].

(ஈ) இறைவனின் படைப்பில் எல்லோரும் சமமெனக்கூறல்

சமத்துவ முழக்கம் செய்வதிலும் குதம்பைச் சித்தர் முன்னணியில் நிற்கிறார். சாதி பேதங்களைச் சளைக்காமல் சாடும் குதம்பைச் சித்தர், பார்ப்பார்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும் தீர்ப்பாகச் சொல்வதைக் கண்டிக்கிறார்[124]. கர்த்தர் பார்ப்பாரையும், பறையரையும் ஒன்று போலவே படைத்ததாக விளக்குகிறார்[125]. ஆண்சாதி பெண்சாதி தவிர இறைவன் படைப்பில் வேறு சாதிகள் இல்லை; சாதிப் பாகுபாடுகள் மனிதனின் கற்பனைகளே; சிறந்த நீதிமானே பெரிய 'சாதிமான்' ஆகத் கொள்ளத் தக்கவன் என்பன போன்ற கருத்துகளையெல்லாம் எடுத்துரைக்கின்றார்[126]. சாதி வேறுபாடும் சமய வேறுபாடும் இல்லையென்று நாம் ஓதி உணர்ந்தறிய வேண்டுமென்று அறிவுறுத்துகிறார்[127].

(உ) பொய்ம் மதங்களும் மெய்த்தேவனும் கூறல்

உலகில் நிலவும் பல்வேறு சமயக் கொள்கைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றின் பொய்மையைப் புலப்படுத்துகிறார். அவ்வகையில் சார்வாகம், உருவ வழிபாடு, பாடாண்மதம், நாத்திகம், சூரிய வணக்கம், மனமே தெய்வமென்ற கொள்கை இவற்றையெல்லாம் கடுமையாக மறுத்துப் பாடுகிறார்[128]. மெய்யான இறைவன் ஒருவனே என்று கொள்ளாத இந்த மதங்கள் பற்பலவும், பொய்யான தேவனையே வணங்குவன என்று துணிவுடன் பாடுகிறார்[129].

(ஊ) புறக்கோலங்கள்—சடங்குகளின் பயனின்மையும் இழிவும் கூறுதல்

தவவொழுக்கம் என்ற பெயரால், பொய் வேடம் பூண்டலையும் பொய்மைத் துறவியரைக் கண்டித்து விரிவாகப் பாடுகின்றார் குதம்பைச் சித்தர். 'ஒப்பிலாஞனத் தேவனை' உள்ளத்தில் வைத்தோர்க்கு இத்தகு புறக்கோலங்கள் தேவையற்றன என்று சுட்டுகிறார்[130]. பொய்த்தவ ஒழுக்கங்களை மட்டுமல்ல, திருத்தலங்களுக்குச் செல்லல், நாள் பார்த்தல், சகுனம் பார்த்தல், அஞ்சனம் பார்த்தல், பலிகொடுத்தல் முதலிய பல்வேறு சடங்குகளையும், மாயவித்தை செய்தல், சோதிடம் பார்த்தல், மந்திர தந்திரங்கள் செய்தல், கருவழித்தல் முதலியவற்றையும் கண்டித்துப் பாடுகிறார்[131]. வேத புராண சாத்திரங்கள்[132] வீண் என்று அவர் குறிப்பிடும் பாடல்களும் உள்ளன.

(எ) மெய்யுணர்வாளர் மேன்மை உணர்த்தல்

யோகப் பயிற்சியாலோ வேறு வகையிலோ இறைநிலை உணர்ந்த மெய்யுணர்வாளர் மேன்மைகளைக் குதம்பைச் சித்தர் பாடல்களின் இறுதிப்பகுதி [32 பாடல்கள்] விரிவாகவும் குறியீட்டு மொழியாலும் பேசுகின்றது. மெய்ப்பொருளை உணர்ந்து, மேனிலையில் உள்ள ஞானிகள், காய கற்பங்களையோ பிறபுறக் கோலங்களையோ, இழிந்த ஆசைகளையோ நாடி நிற்க மாட்டார்கள். அவர்கள்

உலகப்பற்றறுத்து உத்தமனை உள்ளத்தில் நிறுத்தி உலவுவர் என்பதே இப்பாடல்களின் கருத்து.

குதம்பைச் சித்தரின் கடவுட் கொள்கைகளைத் தொகுத்துப் பார்த்தால், இணையற்ற இறைவனை எவ்விதப்பேதங்களையும் அகற்றிப் பொய்யான கொள்கைகளையும் புறச்சடங்குகளையும் நீக்கி உள்ளத்தில் உணர்ந்து ஒன்றி வழிபடவேண்டும் என்பதே எனலாம்.

(ஏ) அகத்தியர் பாடல்கள் வெளிப்படுத்தும் கடவுட் கொள்கைகள்

அகத்தியச் சித்தரின் பெயரால் நூற்றுக்கணக்கான வைத்திய நூல்கள் நாட்டில் உலவினாலும், அவர் எழுதிய ஞானப்பாடல்களாக 52 பாடல்கள் மட்டுமே சித்தர் பெரிய ஞானக்கோவையில் 5 பகுதிகளாகக் காணப்படுகின்றன. அகஸ்தியர் ஞானம் என்ற தலைப்பில் 5 பாடல்களும், அகஸ்தியர் ஞானம்—6 என்னும் பகுதியில் 6 பாடல்களும், அகஸ்தியர் ஞானம்—16 என்னும் பகுதியில் 16 பாடல்களும், அகஸ்தியர் ஞானம்—13 என்னும் பகுதியில் 13 பாடல்களும் உள்ளன. இவையன்றி என்.ஜே.எஸ். சிவசுந்தரம் என்பவர் வெளியிட்டுள்ள 'முக்திவழி' என்ற ஆராய்ச்சி நூலிலும்[133] ஞானசிகாமணி வெளியிட்டுள்ள அகத்தியர் ஞானம்—30 என்ற நூலிலும்[134] அகத்தியர் ஞானம்—30 என்னும் பகுதிக்குரிய 30 பாடல்களும் காணக்கிடக்கின்றன. இம்முப்பது பாடல்களை அ. வள்ளிநாயகம் பிள்ளை[135] கே.எஸ். பீட்டர் சுவாமிதாஸ்[136] ஆகியோரும் சிறுசிறு நூல்களாக வெளியிட்டுள்ளனர். இம்முப்பது பாடல்கள் பெரும்பாலும் அகத்தியரை ஒரு கிறித்தவராகக் காட்டுகின்றன. இச்சிறு நூல்களை வெளியிட்டவர்களும் அந்த நோக்குடனேயே உரை விளக்கங்களை எழுதி உள்ளனர். எனினும் கிறித்தவரல்லாத பிற ஆய்வாளர்களும் ஒரிரு இடங்களில் இப்பாடல்களைப் பதிப்பகம் குறிப்பிடாமல் மேற்கோள் காட்டியுள்ளனர்[137]. மேலும் இம்முப்பது பாடல்களும் மிகச்சில மாற்றங்களுடன் 'யோக ஞான சாஸ்திரத்திரட்டு' எனும் தொகுப்பிலும் காணப்படுகின்றன. (பின்னிணைப்பு 3) மொழியமைப்பாலும் சொற்

பயில்வுகளாலும் கருத்தோட்டத்தாலும் இவை அகத்தியரின் பிற ஞானப்பாடல்களுடன் ஒத்தே இருக்கின்றன. இஞ்ஞானப் பாடல்கள் அனைத்தின் அடிப்படையிலும் புலனாகும் அகத்தியரின் கடவுட் கொள்கைகள் சில இங்குத் தரப்படுகின்றன.

(அ) ஒன்றான கடவுளை வணங்குதல்

அகத்தியரின் பாடல்களில் வலியுறுத்திச் சொல்லப்படுகிற ஒரு கருத்து, ஓரிறைக் கோட்பாடு எனலாம். 'சக்தியே பராபரமே ஒன்றே தெய்வம்' சகல உயிர் சீவனுக்கும் அது தானாச்சு'[138] என்றும் 'தானென்ற தானே தானொன்றே தெய்வம்' என்றும்[139] ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேண்டும்' என்றும்[140] அமையும் பாடல் அடிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. அகத்தியர் குறிப்பிடும் இந்த ஒரு கடவுள் யாரென, அவர் பாடல்களில் தெளிவுபடாவிட்டாலும், 'கடவுள் ஒருவரே' என்ற கருத்தில் அவருக்கிருந்த மனஉறுதி இவற்றில் புலனாகிறது.

(ஆ) புராண சாத்திரங்களின் பொய்மைகளை வெளிப்படுத்தல்

இப்பாடல்களின் கருத்தோட்டத்தாலும் மொழியமைப்பாலும் காலத்தால் மிகப் பிற்பட்டவராகக் கருதப்படக்கூடிய இவ்வகத்தியர் துணிவு மிக்கதொரு சமயச் சீர்திருத்தவாதியாக விளங்குகிறார். சமய உலகில் புராணங்கள்—சாத்திரங்கள் போன்றன, மக்கள் இறைவனை அடைய வழிகாட்டும் விளக்குகளாக அமையாமல் மக்களைச் சிலர் ஏய்த்துப் பிழைத்திட உதவும் வணிகக் கருவிகளாக மாறிப்போன வஞ்சகங்களைக் கண்டு மனம் கொதித்துப் பாடியுள்ளார் அகத்தியர். சமயவாதிகள் சிலர், பற்பல விதமாகக் கற்பனை வளர்த்துக் கதைகளையும் காவியங்களையும் புராணங்களையும் உண்டுபண்ணி, மக்களை மயங்க வைத்துக் தயங்காமல் தாங்கள் பிழைக்க வழி வகுத்துக் கொண்டதாகக் கூறுகிறார்[141]. உண்மைக் கடவுளை வெளிப்படவிடாமல் ஆக்கி, மானிடர் உண்மை உணராது கெட்டுப்போக இவை வழி செய்துவிட்டன. இப்புராணங்களும், இப்புராணங்கள் கூறும் தெய்வங்களும் பொய்மைப் புனைவுகளே என்பது அகத்தியரின் துணிவுரை. பாரத இராமாயணக் கதைகளும் நால் வேதங்களும் கூட இப்படிப்பட்டனவே என்று இவர் கடுமையாகச்

சாடுகின்றார்[142]. காசி—கன்னியாகுமரி என்றெல்லாம் புண்ணிய யாத்திரைகள் மேற்கொள்வதும் தீர்த்தங்கள் ஆடுவதும் பயனற்றவையே என்று பாடுகின்றார்[143]

(இ) உருவ வழிபாட்டின் சிறுமை உணர்த்தல்

பெரும்பாலான சித்தர்கள் உருவவழிபாட்டை மறுத்தே பாடியுள்ளனர். அகத்தியரும் உருவ வழிபாட்டையும் உருவவழிபாடு செய்வோரையும் கடுமையான மொழிகளால் சாடுகின்றார்.

> 'வாடுவார் நாமமென்றும் ரூபமென்றும்
> வையகத்திற் கற்செம்பைத் தெய்வ மென்றும்
> நாடுவார் பூரணத்தை அறியாமூடர்'[144]

என்றே இவர் எள்ளி நகையாடுகின்றார்.

(ஈ) பொய்க்குருக்களின் போலிவேடமும் மெய்க்குருவின் மேன்மையும் கூறுதல்

நாட்டில் 'குருக்கள்' என்ற பெயரால் உலவும் பலரது போலி வேடங்களை மிகக் கடுமையான சொற்களால் தம் பாடல்களில் இனங் காட்டியுள்ளார் அகத்தியர். தம்மேல் தெய்வமே வந்தது போல் நாடகமாடி, அதற்கேற்பப் பட்டை அடித்து நீறுபூசிப் பிறவேடங்கள் பூண்டு, மக்களை மயக்கி அவர்களிடமிருந்து பணம் பறிக்கும் பொய்க்குருக்களைப்பற்றி விவரிக்கிறார்[145]. வேதங்கள் — சாத்திரங்கள் — புராணங்கள் — மறுபிறவிக்கொள்கை இவற்றையெல்லாம் சொல்லி மக்களை மருட்டித் தம் சீவனத்துக்காகக் கபட நாடகம் ஆடும் குருக்களை மக்கள் உணர்ந்து தெளிய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்[146] அத்தோடு, மெய்யான குருவின் மேன்மைகளையும் கீழ்வரும் பாடலில் மிக அழகாக விவரித்து, அவரை வணங்கவும் அண்டிக் கொள்ளவும் வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

> 'வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி
> மாநிலத்தை ஒருநொடியில் வகுத்தே மண்ணில்
> குணமான மனிதரையும் படைத்த பின்பு

குழுவலயத்தில் தானுதித்து குருவாய் வந்து
கனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அகண்ட தலம் சென்றவரை அண்டுவாயே'[147]

இவ்வாறே யோக நெறி முறைகளையும் ஒழுக்க வாழ்க்கையையும் விளக்கி வலியுறுத்தும் பாடல்கள் பிறவற்றையும் இவர் பாடியுள்ளார். சுருங்கச் சொல்வதென்றால், கடவுளின் பெயராலும் சமயங்களின் பெயராலும் நடக்கும் வஞ்சகக் கொடுமைகளை அறிந்து விழிப்புடன் அவற்றை விலக்கி, சற்குருவாகிய மெய்த்தெய்வத்தை உணர்ந்து, ஒழுக்க நெறியிலும் யோக நெறியிலும் நின்று அவரை வணங்க வேண்டுமென்பதே அகத்தியரின் கடவுட் கொள்கை எனலாம்.

(8) பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் வெளிப்படுத்தும் கடவுட் கொள்கைகள்

சித்தர் பாடல்களிலேயே பொது மக்களிடத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருப்பன, பாம்பாட்டிச் சித்தரின் பாடல்களேயாகும். 'நாதர் முடி மேலிருக்கும் நாகப்பாம்பே'[148] முதலிய பாம்பாட்டிச் சித்தருடைய பாடல்கள் தமிழக மக்களிடத்தில் ஒரு சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதற்குத் தமிழ்த் திரைப்படங்களிலும் நாடகங்களிலும் அவர் பாடல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது ஒரு சான்று[149].

சித்தர் பாடல்கள் தொகுப்பில் பாம்பாட்டிச் சித்தர் பெயரில் 129 பாடல்கள் காணப்படுகின்றன. இவை கடவுள் வணக்கம் 9 பாடல்கள்; குரு வணக்கம் 10 பாடல்கள்; பாம்பின் சிறப்பு 5 பாடல்கள்; சித்தர் வல்லபம் கூறல் 10 பாடல்கள்; சித்தர் சம்வாதம் 5 பாடல்கள்; பொருளாசை விலக்கல் 10 பாடல்கள்; பெண்ணாசை விலக்கல் 10 பாடல்கள்; சரீரத்தின் குணம் 10 பாடல்கள்; அகப்பற்று நீக்கல் 60 பாடல்கள் எனப் பதினெண் சித்தர் பெரிய ஞானக்கோவை இரத்தின நாயகர் பதிப்பில் பகுக்கப்பட்டிருக்கின்றன.

இதே பாடல்கள் வேறு சில பதிப்புகளில் வேறு வகையாகவும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றன[150].

இனி, இப்பாடல்கள் வழிப் புலப்படும் பாம்பாட்டிச் சித்தரது இறைச் சிந்தனைகள் சில கீழே தரப்படுகின்றன.

(அ) பொய்க்குருக்களைக் கண்டித்தலும் மெய்க்குருவான இறைவனை உணர்த்துதலும்

பாம்பாட்டிச் சித்தருடைய கடவுட் கொள்கைகளில் முக்கியமானது, இறைவனைக் குருவாகக் காட்டுதல் எனலாம். இறைவன் திருவாகவும் குருவாகவும் சிவனாகவும் வெளிப்படுவதாகப் பாடுகிறார்[151]. 'வேதங்கடந்த மெய்ப்பொருள்' என்றும்[152] 'பூரண சற்குரு' என்றும்[153] உள்ளங்கைக் கனிபோல் 'உண்மை உணர்த்தவல்ல உண்மைக் குரு' என்று[154] 'எக்காலமும் வாழும் பரிசுத்த குரு' என்றும்[155] 'குறையில்லாத வேத குரு' என்றும்[156] பலவாறாகக் குருவாக வந்த இறைவனைப் பாடுகிறார். மெய்க்குருவின் மேன்மைகளை விவரிப்பதோடு பொய்ம்மதங்களைப் போதனை செய்யும் பொய்க்குருக்களைக் கண்டித்தும் பாடுகின்றார்[157]. தம்மைத் தாம் அறியாமலும், மந்திரங்களின் பொருளை உணராமலும் மந்திரஞ் சொல்லும் இவர்களது பேதமையையும் வெளிப்படுத்துகின்றார்[158].

(ஆ) ஆகம—சாத்திர—புராணங்களின் பயனின்மை சுட்டல்

யோகப் பயிற்சியாலும் தூய ஒழுக்கத்தாலும் இறையனுபவம் பெறுதலை வலியுறுத்தும் பாம்பாட்டிச் சித்தர், ஆகம—சாத்திர புராணங்களின் பயனின்மையைச் சுட்டுகின்றார்.

'சதுர் வேதம் அறுவகைச் சாத்திரம் பல
தந்திரம் புராணங்களைச் சாற்று மாகமம்
விதம் விதமான வானவேறு நூல்களும்
வீணான நூல்களே யென்று ஆடாய் பாம்பே'[159]

என்று கடுமையாகப் பேசுகின்றார். இந்தச் சாத்திரங்கள் மட்டுமல்ல, இறைவன் திருவடியைக் காணாமல் 'நாட்டுக்கொரு கோயில் கட்டி நாளும் பூசித்தலும்'[160] வீணானதே யென்று விளம்புகின்றார்.

(இ) உருவ வழிபாட்டைக் கண்டித்தல்

மெய்ஞ்ஞானத்தைப் பெறாமல் அஞ்ஞானத்தில் உழலுவோரே உருவ வழிபாட்டை மேற்கொள்வர் என்று பாம்பாட்டிச் சித்தர் பாடுகிறார். 'உளியிட்ட கற்சிலையிலும் சரி அவற்றை வணங்கும் மூடர்களிலும் சரி, உணர்ச்சி என்பதில்லை' என ஒரு பாடலில்[161] குறிப்பிடுகிறார். உருவ வழிபாட்டைக் கடுமையான நடையில் கண்டிப்போருள் பாம்பாட்டிச் சித்தரும் ஒருவர்.

(ஈ) பற்று நீங்கிய வாழ்வை வலியுறுத்தல்

பெண்ணாசை, பொருளாசை, உடலாசை முதலியவற்றின் கேடுகளையும் இவற்றால் வரும் இன்பங்களின் நிலையாமையையும் மிக விரிவாகப் பல பாடல்களில் பாம்பாட்டிச் சித்தர் விளக்குகிறார். இவற்றின் கேடுகளை விளக்கிய பின்னர், அவ்வாசைகள் நீங்கிய வாழ்வு வாழ வேண்டுமென வலியுறுத்துகிறார். தாமரையின் இலையில் தண்ணீர் தங்காதவாறு போலவும்[162] எண்ணெய்க்கும் தண்ணீர்க்கும் கலப்பு இல்லாதவாறு போலவும்[163] இவ்வுலகில் வாழ்ந்தாலும் உலகப்பற்றுகள் அறுத்து வாழ்ந்திட வேண்டுமென அறிவுறுத்துகிறார். இவ்வாறு பற்று நீங்கிய வாழ்வு வாழ்வது இறைவனின் திருக்காட்சியைக் காண்பதற்கே என்றும்[164] தெளிவுறுத்துகிறார். பற்றுகள் நீங்கிப் பரமனைக் காண்பதற்கு வழியாக யோகநெறி முறைகள் பலவற்றையும் பல பாடல்களில் விரித்துரைக்கிறார்.

சித்தர்கட்கே உரிய யோக நெறியில் நின்றார்க்கே விளங்கக்கூடிய குறியீட்டு மொழியால், யோக நிலைகள் பலவற்றாலும் இறைவனை உணரும் உச்சநிலை அடைவது பற்றிப் பற்பல பாடல்களில் விளக்கியுள்ளார். இவரது பாடல்களனைத்தும் பாம்பை முன்னிலைப்படுத்தி அமைந்தன. இவர் குறிப்பிடும் பாம்பு, யோகிகள் ஆறாதாரங்களின் வழியாக உச்சிச் சுழு முனையில் ஏற்றும்

குண்டலினிச் சக்தியே எனப் பொருளுணர்த்துவாரும்[165] அக்கருத்தை மறுப்பாரும்[166] உளர். எவ்வாறாயினும், யோகப் பயிற்சியால் இறையநுபவம் பெறுவதைப் பாம்பாட்டிச் சித்தர் பல்வகையிலும் பல பாடல்களிலும் பாடுகிறார் என்பதில் ஐயமில்லை.

(2) இறையனுபவம் பெற்ற சித்தர்களின் ஆற்றலை விரித்தல்

பாம்பாட்டிச் சித்தர் பாடியனவாகச் சித்தர் ஞானக்கோவையில் காணப்படும் 129 பாடல்களில், சித்தர்களின் ஆற்றலைப் பற்றி இருபத்து நான்குக்கும் மேற்பட்ட பாடல்கள் கூறுகின்றன. யோக நெறிநின்று இறைவனுடன் கலந்த அல்லது இறை நிலையுற்ற சித்தர்களின் எல்லையற்ற ஆற்றல்களை, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை நடையில் மிக விரிவாகப் பட்டியலிட்டுப் பாடுகிறார்.

சான்றுக்குச் சிலவரிகள் :

'எட்டுநாகந்தனைக் கையாலெடுத்தே ஆட்டுவோம்
இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்[167]
....
....
வேதன் செய்த சிருட்டிகள் போல் வேறு செய்குவோம்
வேதனையு மெங்கள் கீழே மேவச் செய்குவோம்
நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்
நாங்கள் செய்யும் செய்கையி தென்றாடு பாம்பே'[168]

இவ்வாறு உலகப் பற்றுகளை நீக்கி, மனிதர் பால் அன்பு கொண்டு, தொண்டு செய்து, பொய் மதங்களைப் போதிக்கும் பொய்க்குருக்களை அறிந்து—விலக்கி, மெய்க்குருவான இறைவனை உணர்ந்து, அவரது அருளால் எல்லையற்ற ஆற்றல்களைப் பெற்று, யோகப் பயிற்சியால் அவருடன் ஒன்றி அவரை வழிபட்டு வாழவேண்டும் என்பதே பாம்பாட்டிச் சித்தரின் கடவுட் கொள்கை எனத் தொகுக்கலாம்.

(9) போகர் பாடல்கள் வெளிப்படுத்தும் கடவுட் கொள்கைகள்

காயச்சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் போகரின் பெயரில் நூற்றுக்கணக்கான வைத்திய மற்றும் இரசவாத நூல்கள் நாட்டில் வழங்கிவருகின்றன. அவரது கடவுட் சிந்தனைகளை உணர்த்தும் ஞானப்பாடல்கள் எவையும் சித்தர் பாடல் திரட்டு நூல்கள் எவற்றிலும் இடம்பெறுவதில்லை. எனினும், **சித்த மருத்துவத்தின் முக்கிய நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் போகர்—7000 அல்லது சப்த காண்டம் என்ற நூலில் ஆய்வாளர்கள் வியப்புறும் வகையில்** போகரது புரட்சிகரமான கடவுட் கொள்கைகள் பலவற்றைக் காணலாம். சித்தர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், இந்நூலாசிரியர் குளிகை பூண்டு, பல தேசங்களையும் சுற்றி வந்ததையும் பற்றிய பகுத்தறிவுக்கு ஒவ்வாததும் நம்புவதற்கரியதும் ஆகிய கதைகளால் இந்நூல் நிறைந்து இருக்கிறது. எனினும் இந்த நூலின் ஆசிரியராகக் கருதப்படும் போகர் பல்வேறு தெய்வங்களைப் பற்றிச் சொல்லும் கருத்துக்கள் திகைப்பூட்டுவதோடு, இவரை ஒரு தீவிரமான சித்த நெறியினராகவும் வெளிப்படுத்துகின்றன. இந்நூல் வழி வெளியாகும் போகரது இறைச் சிந்தனைகள் சில கீழே தரப்படுகின்றன.

(அ) சாத்திர—புராணங்கள் கற்பனையே எனல்

சித்தர்கள் பிறரைப் போன்று இந்நூலாசிரியரும் சமய உலகில் பெரிதாகப் போற்றப்படும் சாத்திரங்கள், புராணங்கள், காவியங்கள் முதலானவை வெறுங் கற்பனைகளும் பொய்ம்மைப் புனைவுகளுமே யென்று கடுமையாகப் பேசுகின்றார். 'கவிவாணர் கட்டும் வாக்கியங்களையெல்லாம் உண்மையென்று நம்பி அவர்கள் கூறிய கற்பனைப் பெயர்களையெல்லாம் கடவுளர் எனப்போற்றி மதிகெட்டு மக்கள் துதிப்பதாக மனம் வருந்துகின்றார்[169]. காவியங்களும் வேதங்களும் பொய்க்கதைகளால் நிறைந்திருப்பதாகச் சாடுகிறார். சில போலித் துறவியர் பிழைப்பதற்கே இக்கட்டுக்கதைகள் உதவுகின்றன என்று வன்மையாகக் கண்டிக்கிறார்[170].

(ஆ) பல தெய்வ அவதாரங்களின் மனிதத் தன்மை கூறல்

சாத்திரங்கள் பலவும் பொய்க்கதைகளே என்று கூறிய போகர், இச்சாத்திரங்களில் தெய்வங்களாக வருணிக்கப்படும் தெய்வ அவதாரங்கள் பலவும் சாதாரண மனிதரே என்று விளக்குகிறார்.

'அதிதமாங் கணபதியும் என்ற நாமம்
அவனிதனில் மனிதரல்லால் வேறொன்றல்ல'[171]

என்று பாடும் இவர், இவ்வாறே ஸ்ரீராமர், கிருஷ்ணன், வடிவேலர், சுப்பிரமணியர் வீரபத்திரன் முதலிய அனைவரும் மனிதரே அல்லாமல் தெய்வங்கள் அல்லரென வலியுறுத்தி விரிவாகப் பாடுகின்றார்[172]. சில இடங்களில் இத்தகு அவதாரங்கள் சிலர் எத்தனை ஆண்டுகள், எவ்வெவ்விடங்களில் வாழ்ந்தனர் எனவும் குறிப்பிடுகிறார்[173].

(இ) பிற சமயங்களைப் போற்றல்

இந்து மதத்தினர் பலரும் வணங்கும் பல தெய்வ அவதாரங்களை மனிதர்களே என்று கூறும் போகர் இஸ்லாம், கிறித்துவ சமயங்களின் புனித நிலங்களாகிய மெக்கா, எருசலேம், எகிப்து முதலிய இடங்களுக்குச் சென்று வந்ததைப் பற்றி விரிவாகவும் உயர்வாகவும் பாடியுள்ளார். மெக்கா சென்று நபிகள் நாயகத்தின் சமாதியையும் பல நபிமார்கள் சீடர்கள் ஆகியோரையும் கண்டதாகவும் கூறுகிறார்[174]. அவ்வாறே எருசலேம் சென்றதாகவும் இம்மானுவேலாம் ஏசுவின் சமாதியையும் ஏசுவின் சீடர்கள் பலரையும் கண்டதாகவும்[175] தேவமாதாவாகிய மரியன்னை வாழ்ந்த எகிப்து தேசம் சென்றதாகவும்[176] பாடுகின்றார். ஏசுவின் பெருமைகளை அவருடைய சீடர்கள் பலர், இவருக்கு எடுத்துரைத்ததாகவும் குறிப்பிடுகிறார்[177]. 'கடவுளாம் ஏசுவின்றன் காட்சி கண்டேன்' என்றே ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்[178]. இஸ்லாம்—கிறித்தவ சமயங்களோடு இந்நூலாசிரியருக்கிருந்த தொடர்பும் அச்சமய மூலவர்கள் பால் இவர் கொண்டிருந்த பக்தியும் பெருமதிப்பும் இப்பாடல்கள் வழிப் புலனாகின்றன.

(ஈ) மரணத்திற்குப் பின் அழியாத மறுமை வாழ்வு உண்டெனல்

கடவுள் தொடர்பான பல்வேறு செய்திகளை எண்ணிறந்த பாடல்களில் பாடும் இந்நூலாசிரியர், இந்நூலின் ஏழாம் காண்டத்தில் அமைந்துள்ள இருபாடல்களில்[179] மெய் எது பொய் எது எனத் தொகுத்துப் பாடுகின்றார். அப்பாடல்களில் 'உலகத்தில் தெய்வமுண்டு; பக்தர்க்கு மோட்சமும் பாவியர்க்கு நரகமும் உண்டு; இவ்வுலகம் அழியப்போகிறது; மனிதர்க்கு இறப்பு உண்டு; வாதம், குளிகை, கற்பம் போன்றன உண்டு; இவையெல்லாம் மெய்யேயாகும்' என்று தெளிவுபடுத்துகிறார். வேறு இருபாடல்களில்[180] உலகத்தில் பிறந்த அனைவரும் அவர் எத்துணைப் பெரிய பூமானும் சீமானும் ஆயினும்— இறந்தே ஆகவேண்டும்; மண்ணான சடலம் மாய்ந்தொழியும்; ஆனால் மாண்ட அனைவரும் கடவுளின் பதியில் காணப்படுவர்; மாண்டவர்கள் எல்லோரும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மீண்டும் உயிரோடெழுவர்; அழியாத நல் ஆத்மாக்கள் இறைவனின் அமர உலகில் நிலையான வாழ்வு பெறுவர் முதலிய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார். 'மரணத்திற்குப் பின் அழியாத மறுமை வாழ்வு' உண்டென்பதில் இந்நூலாசிரியருக்கிருந்த நம்பிக்கை இப்பாடல்களால் புலனாகிறது.

இன்னும் போகர் தம் பிறபாடல்களில்[181] கள்ளச் சைவம், பலவகைத் தீட்டுகள், நாள் பார்த்தல், சகுனம் பார்த்தல் முதலியவைகளை மறுத்துச் சமய வழிப்பட்ட பல மூடநம்பிக்கைகளைக் கண்டிக்கிறார். இத்தகு சீர்திருத்தக் கருத்துக்களுக்கு எதிர்மறையான மாந்திரிக முறைகள், வசிய முறைகள் முதலியனவற்றை விளக்கும் வேறு சில பாடல்களும்[182] இதே நூலில் [போகர் சப்த காண்டம் —7000] அமைந்திருக்கும் முரண்பாட்டையும் ஆய்வாளர் காண முடிகிறது. பாட பேதங்களும் இடைச்செருகல்களும் மிகவாக அமைந்திருக்கக்கூடிய இந்நூலின் இத்தகு முரண்பாடுகள் தனி ஆய்வுக்குரியன.

எனினும், சமய உலகில் நடைபெறும் ஏமாற்று வேலைகளைக் கண்டறிந்து, அழியும் மனிதர்களைத் தெய்வங்களாக வணங்காமல், உண்மையான தெய்வத்

தன்மையுடைய மெய்க்குருக்களைப் பின்பற்றி, அழியாத மறுமை வாழ்வுக்கு உரியராதல் வேண்டும் என்பதே போகரின் கடவுட்கொள்கை எனச் சுருக்கமாகத் தொகுத்துரைக்கலாம்.

தொகுப்புரை

சித்தர்களின் கடவுட் கொள்கைகளை விளக்கும் இவ்விரண்டாம் இயலில் சித்தர்களின் கடவுட் கொள்கைகளுக்குள் அமைந்து கிடைக்கும் வேறுபாடுகளும் அவற்றைத் தெளிவாக உணரும் வகையில் அவர்களது பல பிரிவுகளும் எடுத்துக்காட்டப்பட்டன. குறிப்பாகச் சன்மார்க்கச் சித்தர்கள், ஞானச் சித்தர்கள், காயச்சித்தர்கள் எனும் மூவகை சித்தர்களது கடவுட் கொள்கைகள் விளக்கி உரைக்கப்பட்டன. அவற்றோடு பொது நிலையில் சித்தர்களின் கடவுட்கொள்கைகளாக, அவர்களது பாடல்களால் புலனாகும் சில உண்மைகள் எடுத்துக்காட்டப்பட்டன. அந்த வகையில் சித்தர்களின் புரட்சிகரமான கடவுட் கொள்கை, சைவரினும் மாறுபட்டுச் சிவனை வழிபட்ட முறை, உருவ வழிபாட்டு மறுப்பு, இறைவனைக் குருவாக உணர்தல், தன்னுள் தானே இறைவனை உணர்தல், சமயச் சடங்குகளையும், சாத்திரப் புராணங்களையும் மறுத்தல் ஆகிய செய்திகள் விரித்துரைக்கப்பட்டன. இவ்வியலின் இறுதியில் இவ்வாய்வில் இடம்பெறும் சித்தர்கள் ஐவரின் பாடல்களின் அடிப்படையில் புலனாகும் அவர்களது கடவுட் கொள்கைகள் சில குறிப்புகளாக, சில சான்றுப்பாடல்களோடு தரப்பட்டன.

* * * * *

இயல் 2

குறிப்புகள்

1. Kamil V. Zvelebil, 'The Cittar : an Enigma', **The Smile of Murugan**, p.227.
2. சி. கோ. தெய்வநாயகம், **சித்தர் சிந்தனைகள்**, ப. 37.
3. K. Kailasapathy, 'The Writings of the Tamil Siddhas', **The Sants**, p.393.
4. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, பக். 23,24.
5. **மே. கூ. நூ.**, ப. 213.
6. **மே. கூ. நூ.**, பக். 246, 250.
7. **மே. கூ. நூ.**, ப. 256.
8. **மே. கூ. நூ.**, பக். 102, 145, 323, 324.
9. **மே. கூ. நூ.**, பக். 66, 78, 212.
10. **மே. கூ. நூ.**, பக். 4, 5, 9, 215–218, 333.
11. **மே. கூ. நூ.**, ப. 242.
12. திருமூலர், **திருமந்திரம்**, பா. 1792.
13. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 30.
14. **மே. கூ. நூ.**, பக். 91, 92, 145.
15. க. கைலாசபதி, 'முன்னுரை', **ஈழத்துச் சித்தர்கள்**, ப. vi.
16. கே. ஆர். பசுபதி, **சித்தர்கள்**, பக். 4, 5.
17. R. Venkatraman, **A History of the Tamil Siddha Cult**, p.12.
18. ப. சொ. காயாரோகணம், **சித்தர்களின் கடவுட் கொள்கை**, ப.94.
19. R. Venkatraman, **op. cit.**, p.50.
20. **Ibid.**, pp.182–39.
21. திருமூலர், **திருமந்திரம்**, பா.2936.
22. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 242.

23. சில்லரைக் கோவை, 'நந்தீசர் ஞானம்–100' (மேற்கோள் : R. Venkatraman, op. cit., p.95)

24. R. Venkatraman, **op. cit.,** p.10.

25. சி. கோ. தெய்வநாயகம், **மு. கு. நூ.**, பக். 13, 37.

26. ச. மாடசாமி, **பாம்பாட்டிச் சித்தர்,** ப. 71.

27. எம். சீனிவாச ஐயங்கார், Tamil Studies quoted by Kamil V. Zvelebil, **The Poets of the Powers,** p.8.

28. சி. கோ. தெய்வநாயகம், **மு. கு. நூ.**, ப. 11.

29. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, பக். 42, 43.

30. Kamil V. Zvelebil, 'The Cittar : an Enigma', **The Smile of Murugan,** p.220.

31. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** பக். 39, 306, 307, 618, 619.

32. **அகத்தியர் ஞானம்,** வி. ஞானசிகாமணி பதிப்பு, பா. 20, 25.

33. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, பக். 178, 179.

34. K.A. Neelakanda Sastri, **Development of Religion in South India,** p.95.

35. திருமூலர், **திருமந்திரம்,** பா. 2104.

36. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** பக். 306, 307.

37. **மே, கூ. நூ.**, ப. 108.

38. **மே, கூ. நூ.**, ப. 23.

39. **மே, கூ. நூ.**, பக். 40,80.

40. **மே, கூ. நூ.**, ப. 12.

41. **மே, கூ. நூ.**, பக். 69, 315, 202.

42. **மே, கூ. நூ.**, பக். 319, 323.

43. குணா, **தமிழர் மெய்யியல்,** ப. 304.

44. C. Jesudasan and Hepzhibah Jesudasan, **A History of Tamil Literature,** pp. 220, 221.

45. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, ப. 228.

46. ச. மாடசாமி, **மு. கு. நூ.**, பக். 17, 18.

47. மீ. ப. சோமு, **சித்தர் இலக்கியம்**, முதல் பகுதி, ப. 61.

48. C. Jesudasan and Hepzhibah Jesudasn, **op. cit.**, pp.220, 221.

49. **Ibid.**, p. 221.

50. கே. சி. வீரராகவ ஐயர், மேற்கோள் : க. கைலாசபதி, **ஒப்பியல் இலக்கியம்**, பக். 187–192.

51. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 78.

52. **மே, கூ. நூ.**, ப. 66.

53. **மே. கூ. நூ.**, ப. 82.

54. **மே. கூ. நூ.**, ப. 212.

55. **மே, கூ. நூ.**, ப. 106.

56. **மே, கூ. நூ.**, ப. 114.

57. **மே, கூ. நூ.**, ப. 302.

58. **மே, கூ. நூ.**, பக். 90, 202, 315.

59. **மே, கூ. நூ.**, ப. 179.

60. **மே. கூ. நூ.**, பக். 90, 202.

61. ப. சொ. காயாரோகணம், **மு. கு. நூ.**, ப. 244.

62. க. கைலாசபதி, 'முன்னுரை', **மு. கு. நூ.**, பக் III & IV.

63. திருமூலர், **திருமந்திரம்**, பா. 1979.

64. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 3.

65. **மே. கூ. நூ.**, ப. 4.

66. **மே. கூ. நூ.**, ப. 73.

67. **மே. கூ. நூ.**, ப. 5.

68. **மே, கூ. நூ.**, ப. 13.

69. **மே, கூ. நூ.**, ப. 9.

70. **மே, கூ. நூ.**, ப. 199.

71. **மே, கூ. நூ.**, ப. 199.

72. **மே. கூ. நூ.**, ப. 30.

73. திருமூலர், **திருமந்திரம்**, பா.7/5.

74. கே. ஆர். பசுபதி, **மு. கு. நூ.**, ப. 42.

75. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 618.

76. **மே, கூ. நூ.**, பக்.300, 307.

77. **யோக ஞான சாத்திரத் திரட்டு**, சுப்பிரமணியர் ஞானம் உரு, பா. 7, 16.

78. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, பக். 200, 201.

79. **மே, கூ. நூ.**, ப. 345.

80. **மே, கூ. நூ.**, ப. 345.

81. **அகத்தியர் ஞானம்**, வீ. ஞானசிகாமணி பதிப்பு, பா. 23.

82. A.V. Subramania Iyer, **The Poetry and Philosophy of the Tamil Siddhas**, p.82.

83. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ் பதிப்பு, 1986, ப. 82.

84. **சிவவாக்கியம்**, சிறுமணவூர் முனிசாமி முதலியார். பதிப்பு.

85. Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, p.81.

86. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 4.

87. **மே, கூ. நூ.**, பக். 4, 5.

88. **மே, கூ. நூ.**, ப. 5.

89. **மே, கூ. நூ.**, ப. 81.

90. **மே, கூ. நூ.**, ப. 39.

91. **மே, கூ. நூ.**, ப. 82.

92. **மே, கூ. நூ.**, ப. 9.

93. **மே, கூ. நூ.**, ப. 15.

94. **மே. கூ. நூ.**, ப. 23.

95. **மே, கூ. நூ.**, ப. 12.

96. **மே, கூ. நூ.**, ப. 12.

97. **மே. கூ. நூ.**, ப. 4.

98. **சிவவாக்கியம்**, சிறுமணவூர் முனிசாமி முதலியார், பதிப்பு, பா. 928.

99. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 11.

100. இரா. இளங்குமரன், **சித்தர் பாடல்கள் : சிவவாக்கியர்**, ப. 20.

101. மா. வடிவேலு முதலியார் உரை, பக், 40, 41.

102. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 15.

103. **மே. கூ. நூ.**, ப. 17.

104. **மே. கூ. நூ.**, ப. 61.

105. **மே. கூ. நூ.**, பா. 111, 121.

106. குதம்பைச் சித்தர், (கழகப் பதிப்பு) பா. 6.

107. **மே. கூ. நூ.**, பா. 9.

108. **மே. கூ. நூ.**, பா. 17.

109. **மே. கூ. நூ.**, பா. 14.

110. **மே. கூ. நூ.**, பா. 18.

111. **மே. கூ. நூ.**, பா. 20.

112. **மே. கூ. நூ.**, பா. 21.

113. **மே. கூ. நூ.**, பா. 34.

114. **மே. கூ. நூ.**, பா. 3.

115. **மே. கூ. நூ.**, பா. 48.

116. **மே. கூ. நூ.**, பா. 50.

117. **மே. கூ. நூ.**, பா. 91.

118. மு. கு. இ.

119. **மே. கூ. நூ.**, பா. 90.

120. **மே. கூ. நூ.**, பா. 84.

121. **மே. கூ. நூ.**, பா. 52.

122. **மே. கூ. நூ.**, பக். 40, 41.

123. **மே. கூ. நூ.**, ப. 45.

124. **மே. கூ. நூ.**, பா. 138.

125. **மே. கூ. நூ.**, பா. 139.

126. **மே. கூ. நூ.**, பா. 137.

127. **மே. கூ. நூ.**, பா. 145.

128. **மே. கூ. நூ.**, பக். 48, 49.

129. **மே. கூ. நூ.**, பா. 154.

130. **மே. கூ. நூ.**, பா. 96.

131. **மே. கூ. நூ.**, பக். 54, 55.

132. **மே. கூ. நூ.**, பா. 202.

133. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **முக்திவழி**, 1977.

134. **அகத்தியர் ஞானம்**, வீ. ஞானசிகாமணி பதிப்பு, 1981.

135. விக்கிரம சிங்கபுரத்து அ. வள்ளி நாயகம் பிள்ளை, மேற்கோள், 'முன்னுரை' **அகத்தியர் ஞானம்**, (டாக்டர் வீ. ஞானசிகாமணி பதிப்பு)

136. கே. எஸ். பீட்டர் சுவாமிதாஸ், அகிலாப்பேட்டை, குழுமணி (வழி), திருச்சி மாவட்டம்.

137. இரா. மாணிக்கவாசகம், **நம் நாட்டுச் சித்தர்கள்**, ப. 332.

138. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 306.

139. **மே. கூ. நூ.**, ப. 307

140. **மு. கு. இ.**

141. **மே. கூ. நூ.**, ப. 299.

142. **மே. கூ. நூ.**, ப. 300.

143. **மே. கூ. நூ.**, பக். 304, 305.

144. **மே. கூ. நூ.**, ப. 302.

145. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.**, ப. 181.

146. **மே. கூ. நூ.**, ப. 300.

147. **அகத்தியர் ஞானம்**, வீ. ஞானசிகாமணி பதிப்பு, பா. 23.

148. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 202.

149. **'இரத்தக் கண்ணீர்'**, திரைப்படத்தில் பாம்பாட்டிச் சித்தரின் இரு பாடல்கள் ('உளியிட்டகற்சிலை', 'தன்னை அறிந்து') இடம் பெற்றுள்ளன.

150. மணிவாசகர் நூலகப் பதிப்பு, பிரேமா பிரசுரப் பதிப்புகள் காண்க.

151. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 200.

152. மு. கு. இ.
153. மு. கு. இ.
154. மே. கூ. நூ., ப. 201.
155. மு. கு. இ.
156. மு. கு. இ.
157. மே. கூ. நூ., ப. 200.
158. மே. கூ. நூ., ப. 215.
159. மே. கூ. நூ., ப. 213.
160. மே. கூ. நூ., ப. 212.
161. மு. கு. இ.
162. மே. கூ. நூ., ப. 209.
163. மு. கு. இ.
164. மே. கூ. நூ., பக். 209, 210.
165. கே. ஆர். பசுபதி, மு. கு. நூ., ப. 42.
166. ச. மாடசாமி, மு. கு. நூ., பக். 46–48.
167. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 202.
168. மே. கூ. நூ., ப. 203.
169. 'போகர் — 7000', காண்டம் 6, பா. 623.
170. மே. கூ. நூ., காண்டம் 6, பா. 256.
171. மே. கூ. நூ., காண்டம் 4, பா. 507.
172. மே. கூ. நூ., காண்டம் 4, பா. 507–531, 587–591.
173. மே. கூ. நூ., காண்டம் 6, பா. 5740–5760.
174. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 228–234.
175. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 216.
176. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 219.
177. மு. கு. இ.
178. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 226.

179. **மே. கூ. நூ.**, காண்டம் 7, பா. 172, 173

180. **மே. கூ. நூ.**, காண்டம் 3, பா. 970, 971.

181. **மே. கூ. நூ.**, காண்டம் 6, பா. 237–241.

182. **மே. கூ. நூ.**, காண்டம் 6, பா. 5458–5568.

* * * * *

இயல் மூன்று

விவிலியத்தின் கடவுட் கொள்கைகள்

இயல் மூன்று

விவிலியத்தின் கடவுட் கொள்கைகள்

எண்ணற்ற மக்களால் பின்பற்றப்படும் உலகப் பெருஞ் சமயங்களுள் கிறித்தவ சமயமும் ஒன்றாகும். ஆசியாக் கண்டத்தின் மேல் கோடிப் பகுதியாகிய பாலத்தீனத்தில் உருவான கிறித்தவ சமயத்தின் புனித நூலாகவும் திருமறையாகவும் விளங்குவது பைபிள் என வழங்கப்படும் விவிலியமாகும். கிறித்தவ சமயத்தைத் தோற்றுவித்தவரும் கிறித்தவ நம்பிக்கைகளின் மையமாக விளங்குகிறவருமாகிய இயேசு கிறித்து, தாம் உயிர்த்தெழுந்த பின்னர் தமது மாணாக்கர்களுக்கு, 'உலகெங்கும் போய் படைப்பனைத்திற்கும் நற்செய்தியை அறிவியுங்கள்'[1] என்று கட்டளை கொடுத்து, விண்ணேறிச் சென்றதாக விவிலியம் கூறுகிறது. இயேசு கிறித்துவின் இத்திருக்கட்டளையின் அடிப்படையில் அவரது மாணாக்கர்களும் அடியவர்களும் உலகெங்கும் பரவி, அவரது நற்செய்தியை — அதாவது விவிலிய உண்மைகளை அறிவித்ததாகவும் பரப்பியதாகவும் வரலாற்றின் அடிப்படையில் கிறித்தவர்களால் நம்பப்படுகிறது. அந்த வகையில் இன்று உலகெங்கும் பரவி நிற்கும் கிறித்தவச் சமய நம்பிக்கைகளுக்கும் கொள்கைகளுக்கும் அடிப்படை ஆதார நூலாக விளங்குவது விவிலியமேயாகும். கிறித்தவர்கள் அனைவரும் இத்திருநூற் கருத்துக்களையே தமது சமய நம்பிக்கைகளின் ஆதாரமாகவும், சமய வாழ்வின் மையமாகவும் கொண்டுள்ளனர். இதனாலேயே, கிறித்தவர்கள் 'வேதக்காரர்கள்' என அழைக்கப்படும் வழக்கும் தமிழகத்தில் நிலவுகிறது.

விவிலிய நூல் 'பழைய ஏற்பாடு' எனவும், 'புதிய ஏற்பாடு' எனவும் இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. இவ்விரு பிரிவுகளுள் புதிய ஏற்பாடு, இயேசு நாதரின் பிறப்புத் தொடங்கி அமையும் கிறித்தவ சமயத் தோற்றத்தையும் வளர்ச்சியையும், அதன் அடிப்படைக் கொள்கைகளையும், உண்மைகளையும் வெளிப்படுத்துவதாகும். எனினும் அப்புதிய ஏற்பாட்டிற்கு முன்னோட்டமாகவும் முன்னுரையாகவும் அமையும் பழைய ஏற்பாட்டையும், கிறித்தவர் தம் மறைநூலாகவே

போற்றுவர். எனவே, விவிலியம் என இங்குக் குறிக்கப்படுவது, பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் இருபிரிவுகளையும் உள்ளடக்கிய தொகுதியையே என்பது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான செய்தியாகும்.

விவிலியம் — பெயர்க்காரணம்

'பைபிள்' என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்ட 'பிபிலியா' என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபாகக் கொள்ளப்படுகின்றது. எகிப்திலுள்ள நைல் நதிக்கரையில் வளர்ந்த 'பப்பரைஸ்' என்னும் ஒருவகை நாணற் புற்களால் செய்யப்பட்ட தாள்களில் எழுதப்பட்ட நூல்கள் யாவும் கிரேக்க மொழியில் 'பிபிலியா' என அழைக்கப்பட்டன. இந்த மூல கிரேக்கச் சொல்லே பின்னாளில் 'பைபிள்' என ஆங்கிலத்திலும், 'விவிலியம்' எனத் தமிழிலும் வழங்கப்படலாயிற்று[2]. நாணற்புல்லின் பெயர், அதில் எழுதப்பட்ட நூல்களுக்குப் பொதுப்பெயராகிப் பின்னர் நூல்களில் சிறப்புடையதாகப் போற்றப்பட்ட கிறித்தவத் திருமறைக்குச் சிறப்புப் பெயராயிற்று.

விவிலியத்தின் இருபெரும் பிரிவுகள்

விவிலியத் திருமறை, ஏற்கனவே சுட்டப்பட்டபடி பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் இருபெரும் பிரிவுகளைக் கொண்டது. பழைய ஏற்பாடு (சீர்திருத்தத் திருச்சபையினர் பின்பற்றுகிறபடி) எபிரேய மொழியில் சுமார் ஓராயிரம் ஆண்டுக்கால இடைவெளியில் எழுதப்பட்ட 39 நூல்களை உள்ளடக்கியது. இந்நூல்கள் யூதமக்களின் புனிதநூல்களாகும். இவற்றுள் கடைசி நூல் இயேசு கிறித்து பிறப்பதற்குச் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. கிறித்தவ சமய நிறுவனராகிய இயேசு கிறித்து இசுரவேல் சமயத்தில் — யூதேயா நாட்டில் தோன்றிய ஓர் இசுரவேலர் அல்லது யூதர். இயேசு கிறித்து பிறப்பதற்கு முற்பட்ட இசுரவேலருடைய 1500 வருட கால வரலாற்றையும், அவர்கள் கடவுளைப் புரிந்துகொண்ட தன்மையையும், அவர்களுடைய சமயக் கோட்பாடுகளையும் எடுத்துரைப்பதே பழைய ஏற்பாடு எனலாம். சீர்திருத்தத் திருச்சபையினர் (Protestant Church) பின்பற்றும் பழைய ஏற்பாட்டு நூல்

வரிசை, பழைய எபிரேய வேதத்தைத் தழுவி அமைந்தது[3]. யூதர்களாலும் சீர்திருத்தத் திருச்சபையினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 39 நூல்களோடு வேறுசில நூல்களையும் சேர்த்து 45 நூல்களைப் பழைய ஏற்பாட்டு நூல்களென உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினர் போற்றுகின்றனர்.

அளவில் சிறியதாக அமைந்துள்ள—விவிலியத்தின் இரண்டாம் பகுதியாகிய புதிய ஏற்பாடு, கிரேக்க மொழியில் முதலில் எழுதப்பட்ட 27 நூல்களை உள்ளடக்கியது. இந்நூல்கள் அனைத்தும், இயேசு நாதரின் வாழ்க்கை, அவரது திருப்பணிகள், அவர் கொள்கைகள் ஆகியன பற்றிச் சான்றுரைப்பனவாக உள்ளன. இப்புதிய ஏற்பாட்டு நூல்களுள் காலத்தால் மிகமிக முற்பட்டதாகக் கருதப்படுவது இயேசு நாதரின் பிறப்புக்கு 20 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்டது. இவற்றுள் காலத்தால் மிகமிகப் பிற்பட்ட நூல், கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதிக்குள் எழுதப்பட்டுவிட்டது[4]. புதிய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கையில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினருக்கும் சீர்திருத்தத் திருச்சபையினருக்கும் மாறுபாடு இல்லை.

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இணைந்த முழு நூலையும், கிறித்தவர்கள் தம் திருமறை நூலாக ஏற்கின்றனர். இதற்கு ஒரு முக்கிய காரணம் இவ்விரு பகுதிகளுக்குள்ளும் ஆழ்ந்த ஒருமைப்பாடு நிலவுவதாக அவர்கள் உறுதியாகக் கருதுவதேயாகும். இவ்விரு பகுதிகளின் பெயர்களிலும் பொதுவாக அமைந்துள்ள 'ஏற்பாடு' என்ற சொல், இவ்வொருமைப்பாட்டை வெளிப்படையாகப் புலப்படுத்துகிறது. 'ஏற்பாடு' என்ற சொல் அதன் மூல கிரேக்க மற்றும் எபிரேயச் சொற்களின் அடிப்படையில் ஒப்பந்தம் — உடன்படிக்கை —உடன்பாடு என்றெல்லாம் பொருள்படும். அதாவது 'யாவே' என்றழைக்கப்படும் இறைவனுக்கும் அவர் தமக்குரியவர்களாகத் தெரிந்துகொண்ட மக்களுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையை இது குறிக்கும். இந்த உடன்படிக்கை பழைய

உடன்படிக்கை, அது மாற்றப்பட்ட நிலையில் ஏற்பட்ட புதிய உடன்படிக்கை என இரண்டாக அமைவதனையே விவிலியத்தின் இரு ஏற்பாடுகளும் விவரிக்கின்றன.

இரு ஏற்பாடுகளிடையிலும் நிலவும் ஒருமைப்பாட்டை விவிலிய ஆய்வாளர்கள் பலரும் தம் நூல்களில் விளக்கி எழுதியுள்ளனர். 'மலரும் திருமறை' எழுதிய இரா. எட்வர்ட் சாம், 'நிறைவேறுதல்' (Fulfilment), 'வெளிப்பாடு' (revelation), 'உபதேசம்' (doctrine) ஆகிய மூன்று தன்மைகளின் அடிப்படையில் இவ்வொருமைப்பாட்டினை விளக்கிக் காட்டுகின்றார்[5]. 'பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்து கிடக்கின்றது; புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு விரிந்து கிடக்கின்றது', என்று ஓரிகென் என்ற கிறித்தவப் பெரியாரும் குறிப்பிட்டுள்ளார்[6]. பழைய ஏற்பாடின்றிப் புதிய ஏற்பாட்டைப் புரிந்து கொள்ளவியலாது. அதே போன்று புதிய ஏற்பாடின்றிப் பழைய ஏற்பாட்டின் பெருமையையும் அறிந்து கொள்ளவியலாது. இரண்டும், மனித குலத்தின் மீட்பு வரலாற்றின் உச்சக்கட்டமாக விளங்குகின்ற இயேசு கிறித்துவையே வெளிப்படுத்துகின்றன என்பது கிறித்தவர்களின் அடிப்படை நம்பிக்கையாகும். பழைய ஏற்பாடு இயேசுவை உலகத்திற்கு வந்து மீட்பின் பணியை நிறைவேற்றப் போகின்றவர் என்று சுட்டுகின்றது. புதிய ஏற்பாடோ அவரை உலகத்திற்கு வந்து மீட்பின் பணியை நிறைவேற்றியவராகவும் யுக முடிவில் மீண்டும் வரப்போகின்றவராகவும் விளக்கிக் காட்டுகின்றது. ஆகவே, கருத்துச் செழுமை நிறைந்த பல்வேறு நூல்களின் தொகுப்பாக விளங்கும் விவிலியத்திற்கு ஒருமைத் தன்மை வழங்குபவர் இயேசு கிறித்துவே என்பது கிறித்துவத்தின் மையக் கோட்பாடாகும். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறித்துவின் மூலமாக வெளிப்பட்ட கடவுளே, பழைய ஏற்பாட்டிலும் விவரிக்கப்படுகின்றார் என நம்புவதாலேயே பழைய ஏற்பாடு கிறித்தவர்களுக்குச் சிறப்புடையதாக அமைகின்றது. ஆகவே, இயேசு கிறித்துவை மையமாகக் கொண்டே கிறித்தவர்கள் விவிலியத்தைப் படித்துணர்ந்து ஏற்கிறார்கள் எனத் தெளியலாம்.

பழைய ஏற்பாட்டு நூல் பிரிவுகளும் உள்ளுறைச் சுருக்கமும்

கிறித்தவர்களின் பழைய ஏற்பாடு எபிரேய மொழி பேசி வந்த யூதர்களுக்குத் 'திருமறை'யாய் அமைந்திருக்கிறது எனவே, பிறர் அதனை 'யூதத்திருமறை' எனவும் எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளமையால் 'எபிரேயத் திருமறை' எனவும் குறிப்பிடுவது வழக்கம். யூதர்கள் தம் திருமறையின் (பழைய ஏற்பாடு) நூல்களை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர்[7], முதற்பகுதி 'தோரா' (Torah) எனப்படும் சட்டநூல். இவ்வரிசையில் மோசே எழுதியதாகக் கூறப்படும் முதல் ஐந்து நூல்களும், வேறு பன்னிரண்டு வரலாற்று நூல்களும் அடங்கும். இரண்டாவது பகுதி, 'நபீம்' (Nabim) எனப்படும் தீர்க்கர் நூல்கள். இத்தொகுப்பில், 'முந்திய தீர்க்கர்' அல்லது 'பெரிய தீர்க்கர்' எனப்படும் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியோரது பெரிய தீர்க்கதரிசன நூல்களும், 'பிந்திய தீர்க்கர்' அல்லது சிறிய தீர்க்கர் எனப்படும் ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனாபோன்றோரது சிறிய தீர்க்கதரிசன நூல்களும் அடங்கும். மூன்றாவது பிரிவு, 'கெதூபீம்' (Kethubim), எனப்படும் திருவெழுத்துகள். இத்தொகுப்பில், யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய ஐந்து இலக்கிய நூல்கள் அடங்கும். சீர்திருத்தக் கிறித்தவத் திருச்சபை பின்பற்றும் பழைய ஏற்பாடு பெரும்பாலும் யூதத்த் திருமறையையே தழுவி இருப்பதால் இப்பகுப்பு முறை கிறித்தவர்களின் பழைய ஏற்பாட்டுக்கும் பொருந்தும் எனினும் பழைய ஏற்பாட்டு நூல்களின் உள்ளடக்கத்தை மேலும் தெளிவாகப் புலப்படுத்தும் வகையில் கீழ்வருமாறு[8] பகுத்துக் காண்பதுண்டு.

(1) **ஆகம நூல்கள்—5** (ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்பன)

இவ்வைந்து நூல்களும் மோசே எழுதியனவாகக் கருதப்படுகின்றன. இறைவன் ஆபிரகாமைத் தெரிந்து கொண்டது முதல் மோசேயின் வழி இசுரவேல் மக்களுக்குத் திருக்கட்டளை தந்தது வரை இந்நூல்களில் கூறப்படுகிறது.

(2) **வரலாற்று நூல்கள்—12** (யோசுவா புத்தகம் முதல் எஸ்தர் புத்தகம் வரை) இசுரவேல் மக்களை ஆண்ட பல்வேறு தலைவர்கள்— அரசர்கள் வரலாறு, பேரரசு இரு நாடுகளாதல் முதலிய வரலாற்றுச் செய்திகள் இந்நூல்களில் கூறப்படுகின்றன.

(3) **இலக்கிய நூல்கள்—5** (யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு) இவை, இசுரவேல் மக்களும் அவர்தம் முன்னோடிகளும் இறைவனைப் போற்றிப் பாடிய துதிப்பாடல்களும் சில தத்துவநூல்களும் பழமொழிகளும் ஆகும்.

(4) **தீர்க்கதரிசன நூல்கள்—17** (ஏசாயா தீர்க்கரின் நூல் முதல் மல்கியாவின் நூல் வரை)

ஏசாயா முதலிய 16 தீர்க்கதரிசிகள் வழியாக, இறைவன் தாம் தெரிந்து கொண்ட மக்களுக்கு விடுத்த எச்சரிப்புகள்; அறிவுரைகள், ஆறுதல் மொழிகள், அறைகூவல்கள் முதலியன இந்நூல்களின் உள்ளுறையாகும். இவற்றுள் ஏசாயா, எரேமியா, எசேக்கியல், தானியேல் ஆகியோர் எழுதிய ஐந்து பெரிய தீர்க்கதரிசன நூல்களும், ஓசியா, யோவேல், ஆமோஸ்,, ஒபதியா, யோனா முதலியோர் எழுதிய 12 சிறிய தீர்க்கதரிசன நூல்களும் அடங்கும். இவையே பழைய ஏற்பாட்டு நூல்களின் பொருளடிப்படையிலான பகுப்பு முறைகளாகும்.

பழைய ஏற்பாட்டில் கூறப்படும் வரலாற்றின் சுருக்கம்

பழைய ஏற்பாட்டு நூல்கள் முப்பத்தொன்பதிலும் (சீர்திருத்தத் திருச்சபை மரபு) விரித்துப் பேசப்படும் வரலாற்றுச் செய்திகளின் சுருக்கம் இங்குத் தொகுக்கப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டின் முதல் நூல் (ஆதியாகமம்), இறைவன் உலகங்கள் அனைத்தையும் உயிரினங்களையும், படைப்பனைத்தின் மகுடமாக மனிதனையும், அவனுக்குத் துணையாகப் பெண்ணையும் படைத்த வரலாற்றையும் பேசுகிறது. இறைவனது கட்டளையை அம்முதல் மனிதர் மீறி, இறையுறவை இழந்து இறைத் தண்டனைக்கு இலக்கானதையும் விவிலியம் விவரிக்கிறது. இவ்வாறு இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே ஏற்பட்ட பிளவை நீக்கி உறவைப் புதுப்பிக்கக் கடவுள் திட்டமிடுகின்றார். அத்திட்டம் ஆபிரகாம் என்ற இறையடியாரில்

தொடங்குகிறது. ஆபிரகாமை இறைவன் அழைத்து அவனைப் பெரியதொரு சமுதாயமாக்கி, அவன் வழி உலக மக்களனைவருக்கும் தம் கருணையையும் மீட்பையும் வழங்கிட அவனோடு ஓர் உடன்படிக்கை செய்து கொள்கிறார். இறைவனின் இந்த அழைப்புக்கும் உடன்படிக்கைக்கும் ஆபிரகாம் இசைந்து ஒழுகுகிறான். ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கு வழி, யாக்கோபு என்னும் மறுபெயர் கொண்ட இசுரவேல் என்பான் பிறக்கின்றான். அவன் வழிவந்த மக்களும் அவர்கள் வாழ்ந்த நாடும் முறையே இசுரவேலர், இசுரவேல் என அழைக்கப்பட்டனர். அந்த இசுரவேல் என்பானுக்கு யோசேப்பு உட்பட 12 புதல்வர்கள் பிறக்கின்றனர். அவர்களுள் யூதா என்பானின் கிளைவழி வந்த மக்கள் 'யூதர்' எனப்படுகின்றனர். (இக்குலத்தில் தான் பின்னர் இயேசு கிறித்து உதிக்கின்றார்.)

இப்பன்னிரு புதல்வருள் ஒருவனாகிய யோசேப்பு என்பான் தன் சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு வெளிநாட்டு வியாபாரிகளிடம் விற்கப்படுகிறான். இவனே பின்னர் தன் அறிவாற்றலாலும், இறையருளாலும், எகிப்து நாட்டில் பார்வோனின் பேரரசில் ஆளுநராக உயர்கின்றான். பின் வந்த கொடிய பஞ்சத்தின் விளைவாக, யோசேப்பின் தந்தையும் சகோதரர்களும், தாமும் எகிப்து நாட்டில் குடியேற நேர்கிறது. இவ்வாறு, எகிப்தில் குடியேறிய இசுரவேலர்கள், யோசேப்பின் காலத்திற்குப் பிறகு எகிப்தியர்களால் அடிமைகளாக்கப்பட்டு அல்லலுறுகின்றார்கள். அவர்களது முன்னோனாகிய ஆபிரகாமை அழைத்த இறைவன், அவர்கள் ஏக்கக் குரலுக்குச் செவிமடுத்து, மோசே எனும் தலைவனை அவர்களிடையே எழுப்புகிறார். அந்த மோசே, தம் மக்களை இறைவன் தந்த அற்புத ஆற்றலால், எகிப்தியரிடமிருந்து விடுதலை செய்து, கானான் எனும் புதிய நாட்டை நோக்கி வழி நடத்துகின்றார். அப்புதிய நாட்டில், அம்மக்கள் உயிருள்ள இறைவனுக்குப் பயந்து ஒழுக வேண்டிய அறநெறி — இறைநெறி விதிகளையெல்லாம், இறைவன், மோசேயின்

மூலமாக பத்துக் கட்டளைகளாகவும் அவற்றின் விளக்கவுரைகளாகவும் வழங்குகின்றார்.

ஆனால் இசுரவேல் மக்கள் இறைவனின் திருக்கட்டளைகட்கு முழுவதும் இணங்கி நடக்கவில்லை. அதனால் அவர்கள் பலமுறை இறைவனால் கைவிடப்பட்டு, அவர்களைச் சுற்றிலும் வாழ்ந்த பகையரசராலும் பிறவினத்தவராலும் தோற்கடிக்கப்படுகின்றனர். எனினும் துன்பம் வந்துற்ற போதிலெல்லாம், அவர்கள் 'யாவே' எனும் தம் இறைவனை நோக்கி அபயக்குரல் எழுப்புகின்றனர். இறைவனும் மனமிரங்கி, பகைவர்களிடமிருந்து அவர்களைக் காத்து நல்வழியில் நடத்திச் செல்ல வல்ல, புதிய தலைவர்களையும் தளபதிகளையும் அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கின்றார். அவர்கள் 'நீதிபதிகள்' என்றழைக்கப்பட்டனர்.

பின்னர் காலப்போக்கில் இசுரவேல் மக்களின் விருப்பப்படியே, இறைவன் அவர்களுக்குச் சவுல், தாவீது சாலமோன் முதலிய சிறந்த பேரரசர்களை எழுப்பித் தருகின்றார். சாலமோன் அரசன் காலத்தில், இறைவழிபாட்டுக்காகத் தலைநகர் எருசலேமில் மாபெரும் தேவாலயம் ஒன்று நிறுவப்படுகிறது. சாலமோன் காலத்திற்குப் பிறகு, இசுரவேல், எருசலேமைத் தலைநகராகக் கொண்ட யூதேயா எனும் இரு நாடுகளாகப் பிரிகின்றது. பல்வேறு அரசர்கள், இந்நாடுகளை ஆள்கின்றனர். பெரும்பாலான அரசர்கள் மெய்யான இறைவனின் திருவுளச் சித்தத்திற்கேற்ப நடக்கவில்லை. அவ்வப்போது இறைவன் தம் அடியவர்களான தீர்க்கதரிசிகள் மூலம் தம் மக்களை எச்சரித்து வந்தபோதிலும், மக்களும் முழுமையாகச் செவிகொடுக்கவில்லை.

இறுதியில் கி.மு. 721இல் இசுரவேல் நாடு அசீரியரின் படையெடுப்பாலும், கி.மு. 587இல் யூதேயா நாடு பாபிலோனியராலும் அழிக்கப்பட்டு, இசுரவேலர் இவ்விரு நாடுகளுக்கும் சிறைக் கைதிகளாகச் செல்கின்றனர். பல்லாண்டுகள் அடிமை வாழ்வுக்குப் பிறகு, கி.மு. 536இல் பாபிலோனை வெற்றி கொண்ட கோரேசு எனும் பாரசீக அரசனால், யூதர்கள் தம் தாயகமான யூதேயா திரும்ப அனுமதி பெற்றனர். அணியணியாக யூதர்கள் தம் தாயகம் திரும்பித்

தம் நாட்டையும் இடிக்கப்பட்ட தேவாலயத்தையும் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் இதுதான் பழைய ஏற்பாட்டு நூல்கள் விரித்துரைக்கும்[9] வரலாற்றின் சுருக்கம் அல்லது சாரம் எனலாம்.

பழைய ஏற்பாட்டு உணர்த்தும் சில முக்கிய கடவுட் கொள்கைகள்

அ. இறைவனின் உயரிய இயல்புகள்

மறை நூல்கள் பிறவற்றைப் போலவே, பழைய ஏற்பாட்டு நூல்களும் இறைவனின் எல்லையற்ற ஆற்றலையும் மனித உயிர்களின்பால் அவர் கொண்டுள்ள அன்பையும், பாவம் அண்ட முடியாத அவரது மகா பரிசுத்த நிலையினையும், நீதியின் வடிவாக விளங்கும் மாட்சியையும், தொடக்கமும் முடிவுமற்று விளங்கும் இயல்பினையும் இன்னோரன்ன பிற தன்மைகளையும் விரிவாகப் பேசுகின்றன. கீழ்வரும் சில திருவசனங்கள் சான்றுகளாகக் கருதத்தக்கன.

> 'கர்த்தர், கர்த்தர்; இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன்'[10]
>
> 'உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி அவர் எரிச்சலுள்ள தேவன்'[11]
>
> 'நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாய் இருக்கிறீர்'[12]
>
> 'பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அனாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை; இளைப்படைவதுமில்லை'[13]
>
> 'தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'[14]
>
> 'கர்த்தர் தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணர்'[15]
>
> 'நீதியைச் சரிகட்டுகிறவர்'[16]
>
> 'கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார்'[17]

'கர்த்தர் துன்மார்க்கருடைய மரணத்தை விரும்பாமல், அவன் தன் வழியை விட்டுத் திரும்புவதையே விரும்புகிறார்'[18]

பழைய ஏற்பாட்டின் தொடக்க நூல்களில், இறைவனுக்குரிய சிறப்புப் பெயர்களாகப் பயன்படுத்தப்படும் சில எபிரேயத் தொடர்களின் பொருளை அறிந்து கொள்வது, பழைய ஏற்பாட்டில் பேசப்படும் இறைவனின் பண்புகளை உணர்ந்து கொள்ளத் துணை செய்யும். அத்தகு முக்கியமான பெயர்கள் சில பின்வருமாறு :

	எபிரேயப் பெயர்	பொருள்	நூற்குறிப்பு
1.	'யாவே' (ஜெஹோவா) (YAHWEH) (JEHOVAH)	'இருக்கிறவராகவே இருக்கிறேன் (அல்லது) எல்லாவற்றையும் நிலைபெறச் செய்கின்றவர்	யாத்திராகமம் 3 : 13, 14, 15
2.	ஏல்—ஒலாம் (EL–OLAM)	சதாகாலமுமுள்ள தேவன்	ஆதியாகமம் 21 : 33
3.	ஏல்—எலியோன் (EL–ELYON)	உன்னதமானவர்	எண்ணாகமம் & உபாகமம் 24 : 16
4.	ஏல்—ரோய் (EL–ROI)	என்னைக் காண்கிற தேவன்	ஆதியாகமம் 16 : 13
5.	ஏல்—பேரீத் (EL–BERITH)	உடன்படிக்கையின் தேவன்	நியாயாதிபதிகள் 9 : 4
6.	ஏல்—எல்லோகே—இஸ்ரவேல் (EL–ELOHE–ISRAEL)	இஸ்ரவேலின் தேவன்	ஆதியாகமம் 33 : 20
7.	யேகோவாயீரே (JEHOVAH–JIREH)	கர்த்தர் பார்த்துக் கொள்வார்	ஆதியாகமம் 22 : 14
8.	யேகோவா—ஷாலோம் (JEHOVAH–SHALOM)	சமாதான கர்த்தர்	நியாயாதிபதிகள் 6 : 24
9.	யேகோவா—சிட்கெனு (JEHOVAH–TSIDKENU)	நமது நீதியாய் இருக்கிற கர்த்தர்	எரேமியா 23 : 6[19]
10.	யேகோவா—ஷம்மா (JEHOVAH –SHAMMAH)	நம்மோடிருக்கும் கர்த்தர்	எசேக்கியேல் 48 : 35[20]

பழைய ஏற்பாட்டு நூல்கள் கூறும் செய்திகளின் அடிப்படையில், இறைவனுடைய இயல்புகளாக அவை பேசும் வேறுசில செய்திகளையும் தொகுக்கமுடியும். அவற்றுள் முக்கியமான சில கீழே தரப்படுகின்றன.

(ஆ) வரலாற்று அடிப்படையில் செயல்படும் இறைவன்

உலகச் சமயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சில சிறப்பியல்புகள் இருப்பதாகச் சுட்டப்படுவதுண்டு. அவ்வகையில் யூத கிறித்தவ சமயங்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாக, அவை வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உருவாயினமை விவிலிய ஆய்வாளர்களால் சுட்டப்படுகின்றது[21] இறைவன் உலக வரலாற்றில் அல்லது மனிதகுல வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடும் திட்டத்தோடும் செயலாற்றுகின்றார் எனும் உண்மையை மறைமுகமாகவும் நேரிடையாகவும் வெளிப்படுத்த பழைய ஏற்பாட்டு நூல்கள் முனைகின்றன எனலாம். ஆதியாகமம் என்ற நூலில், ஆபிரகாம் என்ற ஒரு தனி மனிதனுக்குக் கடவுள் விடுக்கும் அழைப்புப் பற்றிக் கூறப்படுகின்றது. கடவுள் ஆபிரகாமை அழைத்து, அவனிலிருந்து பெரியதொரு சமுதாயத்தை உருவாக்கி, அச்சமுதாயத்தினர் அல்லது நாட்டினர் வழியாக உலகினர் அனைவரோடும் தாம் தொடர்பு கொண்டு செயல்பட விரும்புவதை அறிவிக்கிறார். இத்திட்டம் ஆபிரகாமுக்கோ இசுரவேல் நாட்டினருக்கோ உரிய எதிர்காலத் திட்டமாகப் பேசப்படாமல் மனிதகுலம் அனைத்துக்குமுரிய இறைவனின் மீட்புத் திட்டமாக விளங்குவதாக ஆதியாகமமும் தொடர்ந்து வரும் விவிலியத்தின் பிற நூல்களும் விளக்கிக் காட்டுகின்றன. இவ்வாறு மனித குலத்தைக் காப்பதற்கும் மீட்பதற்கும் உரிய தம் திட்டங்களை, உலக வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட இனத்தைத் தேர்ந்து அவர்கள் மூலம் செயல்படுத்தும் தன்மை, இறைவனின் சிறப்பியல்பாகப் பழைய ஏற்பாட்டில் பேசப்படுகிறது. ஆகவே தான் இன்றளவும் விவிலிய அறிஞர்கள் பலரும் வரலாற்று நிகழ்ச்சிகளுடன் பழைய ஏற்பாட்டின் உண்மைகளையும் தீர்க்கதரிசனங்களையும் ஒப்பிட்டு விளக்குகின்றனர்[22].

(இ) தனிமனிதர்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் வழிச் செயல்பட விரும்பும் இறைவன்

இறைவன் ஆபிரகாம் என்ற தனிமனிதனை, ஒரு மாபெரும் எதிர்காலத் திட்டத்தோடும் தொலை நோக்கோடும் அழைப்பதை ஆதியாகமம் 12ஆம் அதிகாரத்திலுள்ள முதல் மூன்று வசனங்கள் தெரிவிக்கின்றன. இவ்வழைப்பு அத்தனிமனிதனுக்கு மட்டும் உரியதாக நின்றுவிடாமல், யூத—கிறித்தவ சமயங்களின் மொத்த வரலாற்றுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஆதாரத் தொடக்கமாக அமைந்துவிட்டது. இறைவன் தம் நோக்கத்திற்கேற்ப, யூத சமுதாயத்திலும் உலக வரலாற்றிலும் பெருஞ் செயல்களைச் செய்திட முற்படும் போதெல்லாம், அதற்கெனத் தனிமனிதர்கள் சிலரைத் தேர்ந்து கொண்டு அவர்கள் வழியாகவே செயல்படுவதாகப் பழைய ஏற்பாட்டு நூல்கள் விவரிக்கின்றன[23]. யாக்கோபு, யோசேப்பு, மோசே, சாமுவேல், தாவீது, தானியேல் போன்றோரும் இவ்வாறு இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட தலைவர்களாகப் பழைய ஏற்பாட்டில் பேசப்படுகின்றவர்களாவர்.

(ஈ) உருவ வணக்கத்தைக் கடிந்து வெறுக்கும் கடவுள்

பழைய ஏற்பாட்டு நூல்கள் காட்டும் இறைவன் மிகமிக அருவருத்து ஒதுக்குவதாக அடிக்கடி வலியுறுத்திக் கூறப்படும் தலையாய குற்றம் (பாவம்), உருவ வணக்கமேயாகும். மோசேயின் மூலமாக இசுரவேல் மக்களுக்கு வழங்கப்பட்ட முதன்மை சான்ற பத்துக் கட்டளைகளில், முதற்கட்டளை, உயிருள்ள மெய்யான இறைவனுக்கு நிகராக எத்தகு வடிவங்களையும் படிமங்களையும் உருவாக்கவும் அவற்றை வழிபடவும் கூடாது என்பதாகும்[24]. பழைய ஏற்பாட்டு நூல்கள் பலவற்றிலும் கடவுள்தாமே நேரடியாகவோ, தம் தீர்க்கர் மூலமாகவோ உருவ வணக்கத்தை மிகக் கடுமையாகக் கடிந்தும் கண்டித்தும் பேசுவதையும் அதற்குரிய தண்டனைகளைச் சுட்டுவதையும் காணமுடிகிறது. குறிப்பாக, உபாகமம், ஏசாயா தீர்க்கரின் நூல், சங்கீதங்கள் முதலிய நூல்களில் இத்தகு செய்திகளை நிரம்பக் காணலாம். சில சான்றுகள் பின்வருமாறு:

'அவர்கள் தேவர்களின் விக்கிரங்களை அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்'......... அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.'[25]

'சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள் தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்'[26]

'தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?'[27]

'சித்திர வேலையான விக்கிரகங்களை நம்பி வார்ப்பிக்கப்பட்ட சொரூபங்களை நோக்கி, 'நீங்கள் எங்கள் தேவர்கள்' என்று சொல்லுகிறவர்கள் பின்னிடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள்'[28]

(உ) தீர்க்கர் மூலமாக மக்களோடு தொடர்ந்து கொள்ளும் இறைவன்

முதல் மனிதனின் கீழ்ப்படியாமையால் மனிதன் இழந்த தெய்வீக உறவைப் புதுப்பிக்க விரும்பியே, இறைவன் ஆபிரகாமை அழைத்து, அவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார். அவ்வுடன்படிக்கையை ஒட்டி ஒழுகாத இசுரவேல் மக்களை அவர் அறவே கைவிட்டு விடவில்லை. தம் தீர்க்கர் மூலமாக எச்சரிப்புகளும் அறவுரைகளும் அறிவுரைகளும் வழங்கித் தாம் தெரிந்து கொண்ட மக்களோடு தொடர்ந்து தொடர்பு கொள்கிறார் என்ற செய்தியையே தீர்க்கதரிசிகளின் நூல்கள் வெளிப்படுத்துகின்றன. தானியேல் என்ற தீர்க்கர், இறைவனை நோக்கிச் செய்யும் மன்றாட்டில் இதனை மிக உருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

'உமது நாமத்தினாலே எங்கள் ராஜாக்களோடும் எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தினுடைய

சகல ஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்குச் செவி கொடாமற் போனோம்.

அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம் பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு எங்களுக்கு முன்பாக வைத்த அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற் போனோம்[29].

(ஊ) பலிகள் சடங்குகளைக் காட்டிலும் தூயவாழ்வை முக்கியப்படுத்தும் இறைவன்

பழைய ஏற்பாட்டு நூல்கள் பலவற்றிலும், இறைவனுக்குச் செலுத்தப்பட வேண்டிய பலிகளையும் இறைவழிபாட்டில் செய்யப்படவேண்டிய சடங்குகளையும் பற்றி மிக விரிவாகப் பேசப்படுகின்றது[30]. என்றாலும், பழைய ஏற்பாட்டில் பேசப்படும் இறைவன், இந்த பலிகளையும் சடங்குகளையும் விடத் தாம் தெரிந்து கொண்ட மக்களின் தூய வாழ்வையும் நல்ல மனத்தையும் கீழ்ப்படிதலையும் அதிகமாக வலியுறுத்துகின்றார்; விரும்புகின்றார் என்பதனைப் பழைய ஏற்பாட்டை நுணுகிப் படித்தால் உணரலாம். பின்வரும் சில வசனங்கள் இக்கருத்துக்குச் சான்றுகளாக அமையக்கூடியன;

'பலியை நீர் விரும்புகிறதில்லை. விரும்பினால் செலுத்துவேன். தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்'[31]

'இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவர வேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும் ஓய்வுநாளையும் சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்க

மாட்டேன்.......... உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்.......... தீமை செய்வதைவிட்டு ஓயுங்கள்.[32]

'ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும் கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக் கனியையும் கொடுக்க வேண்டுமோ?'[33]

'மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?[34]

(எ) மனித மீட்புக்கு நிலையான ஏற்பாடு செய்ய விழையும் இறைவன்

பாவம் செய்து இறையுறவை இழந்த மனித குலத்தைத் தன்னோடு இணைத்துக் கொள்ள விரும்பி இறைவன் செய்த பல்வேறு ஏற்பாடுகளைப் பழைய ஏற்பாடு விவரிக்கிறது. எனினும், அவை முழுதும் வெற்றி பெறாத நிலையில் மனித குலத்தின் பாவங்களுக்கு நிலையான பரிகாரம் செய்யவும், மனிதன் பாவமற்ற தூய வாழ்வு வாழ அவனைத் தகுதிப்படுத்தவும், நிலையான ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு இறைவன் விழைந்தார். அதற்கென அவர் வகுத்த திட்டம், பழைய ஏற்பாட்டின் முதல் நூலிலிருந்து இறுதி நூல் வரை, முன்னுரை மொழிகளாக — தீர்க்கதரிசனங்களாக வெளிப்படுகின்றது. இறைவன் தம் ஒரே திருமகனை, இவ்வுலகுக்கு மீட்பராக — தியாக பலியாக அனுப்புவதே அத்திட்டம் என்று விவிலிய அறிஞர்கள் விளக்குகின்றனர்[35]. இவ்வாறு இறைவனின் திருமகன் மானிட அவதாரம் செய்யப் போவதனை முன்னுரைக்கும் பழைய ஏற்பாட்டுத் திருவசனங்கள் சில பின்வருமாறு;

> 'உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்றார்'[36]

> 'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு எனப்படும். அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதன் சமாதானத்துக்கும் முடிவில்லை'.[37]

புதிய ஏற்பாடு — நூற்பிரிவுகளும் உள்ளுறைச் சுருக்கமும்

கிறித்தவ நம்பிக்கையின் அடிப்படை ஆதார நூலான புதிய ஏற்பாட்டில் 27 நூல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் முதல் நான்கு நூல்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் எனும் இயேசு பெருமானின் மாணாக்கர்களால் எழுதப்பட்ட 'நற்செய்தி' நூல்கள் (Gospels). இவை இயேசு கிறித்துவின் பிறப்பு, அவரது திருப்பணிகள், போதனைகள், சிலுவைத் தியாக மரணம், உயிர்த்தெழுதல், இவ்வுலகில் இறையரசை நிறுவ தாம் மீண்டும் வரப் போவதாகத் தம் மாணாக்கருக்கு வாக்களித்து விண்ணேறிச் செல்லுதல் ஆகிய செய்திகளை விளக்கியுரைக்கின்றன. இந்த நான்கு நற்செய்தி நூல்களின் உட்கிடக்கையும் இயேசு நாதரின் வாழ்வும் போதனைகளுமே என்றாலும் இச்செய்திகளை இவை வேறுவேறு கோணங்களில் எடுத்தியம்புவதாக விவிலிய ஆய்வாளர்கள் விளக்குவர்[38].

இந்நூல்களைத் தொடர்ந்து வரும் அப்போத்தலர் திருப்பணி எனும் நூல், இம்மாணாக்கர்கள் வழியாகக் கிறித்தவ நற்செய்தியை ஏற்றுக்கொண்ட அடியவர்களின் தொகுதியாகிய திருச்சபை உருவாக்கப்பட்ட வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் எடுத்தோதுகிறது.

அடுத்து வரும் 21 சிறு நூல்களும் பல்வேறு இடங்களில் இயேசுவின் அடியவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைக் குழுக்களுக்கு அவ் அடியவர்களும் திருச்சபைத் தலைவர்களும் எழுதிய கடிதங்களாகும். பிலேமோன் என்ற தனி நபருக்கு எழுதப்பட்டதொரு கடிதமும் இப்பிரிவிலடங்கும். இக்கடிதங்களில் இயேசுவின் அடியவர்கள் திருச்சபைகளுக்கு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், திருமறை விளக்கங்களையும் எழுதியுள்ளனர்.

புதிய ஏற்பாட்டின் இறுதி நூலான வெளிப்படுத்தல் ஆகமம், உலக வரலாற்றின் இறுதியில் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளையும் இறைமகன் இயேசு இவ்வுலகத்திற்குத் திரும்பி வந்து இறுதி நியாயத்தீர்ப்பு நிகழ்த்தப் போவதையும் பற்றி விளக்குகிறது. தரிசனக் காட்சிகளாகவும், உருவக நடையிலும் எதிர்காலத்தில் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளை எடுத்தியம்பும் இந்நூல் பொருளுணர்ந்து கொள்ளுதற்கு அரியதொரு நூலாகும்.

புதிய ஏற்பாடு உணர்த்தும் கடவுட் கொள்கைகள்

புதிய ஏற்பாட்டு நூல்களும் பழைய ஏற்பாட்டு நூல்களைப் போலவே இறைவனின் பல்வேறு இயல்புகளையும் அருட்செயல்களையும், மனிதகுலத்தோடு இறைவன் கொண்டுள்ள உறவையும் விரித்துப் பேசுகின்றன. எனினும், பழைய ஏற்பாடு கடவுளை வெளிப்படுத்தும் முறைக்கும் புதிய ஏற்பாடு கடவுளை வெளிப்படுத்தும் முறைக்கும் பெரும் வேற்றுமை உண்டு. பழைய ஏற்பாடு, கடவுளை வரலாற்று நிகழ்ச்சிகளிலும் தீர்க்கர்கள் மூலமாகவும் வெளிப்படுபவராகவும் விவரிக்கிறது. ஆனால், புதிய ஏற்பாடு, கிறித்துவையே கடவுளின் முழுமையும் தெளிவுமான வெளிப்பாடாக வலியுறுத்திக் காட்டுகிறது[39]. எபிரேயர் 1 : 1 இன் படி, பூர்வகாலத்தில் பங்குபங்காகவும், வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலம் தம்மை வெளிப்படுத்திய இறைவன், இயேசு கிறித்துவில் தம்மை முழுமையாக வெளிப்படுத்தி உள்ளார். இதனால் புதியஏற்பாட்டின் செய்தியும்

மையமும் இயேசுகிறித்துவே என்று கூறிவிடலாம். புதிய ஏற்பாடு உணர்த்தும் கடவுட் கொள்கையை, இயேசுகிறித்துவை மையமாக வைத்தே உணரவியலும்.

புதிய ஏற்பாட்டில் கடவுளைப் பற்றிய பொது விளக்கங்கள்

இயேசு கிறித்துவை மையமாகக் கொண்டே புதிய ஏற்பாடு கடவுளை விவரித்துக் காட்டினாலும், கடவுளின் பொதுவான தன்மைகளைப் பழைய ஏற்பாட்டைப் போல விவரிக்கும் சில இடங்களுமுள. அத்தகு புதிய ஏற்பாட்டு வசனங்கள் சில கீழ் வருமாறு :

> 'கடவுள் ஒளியாயிருக்கிறார்'[40]
>
> 'கடவுள் அன்பாயிருக்கிறார்'[41]
>
> 'கடவுள் ஆவியாயிருக்கிறார்'[42]
>
> 'தேவன் நித்தியானந்தமுள்ள ஏகச் சக்கராதிபதியும் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறார்'.[43]
>
> 'மனிதருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது'[44]

இவ்வாறு, புதிய ஏற்பாடு கடவுளின் மாண்புமிக்க இயல்புகளைப் பற்றித்தரும் விளக்கங்கள் அனைத்தும் இயேசு கிறித்துவில் முழுமையாகப் பொருந்தி நிற்பதனையும் புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள் தெளிவு படுத்துகின்றனர். சான்றாக, 1 யோவான் 1 : 5, 'கடவுள் ஒளியாயிருக்கிறார்' எனப் பொதுநிலையில் கூற, யோவான் 9 : 5இல், இயேசு பெருமான், 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்', என மொழிந்துள்ளார்.

இயேசு கிறித்துவில் கடவுளின் முழு வெளிப்பாடு

ஊனுடலில் வெளிப்பட்ட இயேசுகிறித்து, இறைவெளிப்பாட்டின் உச்சக் கட்டமாக இருக்கின்றார் என்பதே புதிய ஏற்பாடு, கடவுளைப் பற்றிக் கூறும் மையக்கோட்பாடாகும். இதனைப் புதிய ஏற்பாட்டில் அமைந்த யோவான் 1 : 14, 1 தீமோத்தேயு 3 : 10, கொலோசேயர் 2 : 9, எபிரேயர் 1 : 1 ஆகிய வாக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. இயேசுகிறித்துவின் புனித வாழ்வு, திருப்பணிகள், இறைப் போதனைகள், தியாக மரணம், வெற்றிகரமான உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் வழியாக இறைவனின் நல்லியல்புகளையும் மனிதனைப் பற்றியும் உலக வரலாற்றைப் பற்றியும் இறைவன் கொண்டுள்ள நோக்கங்களையும் புதிய ஏற்பாடு வெளிப்படுத்த முயல்கின்றனது. கடவுள் நம் தந்தை;[45] அவர் அனைத்தையும் படைத்துப் பராமரிப்பவர்;[46] அவர் பாவியாகிய மனிதனைத் தேடி வருகின்றவர்;[47] அவர் தமது உயிரைத் தந்து அவனை மீட்டுக் கொள்கின்றார்[48] முதலிய பல்வேறு பேருண்மைகளை இயேசு பெருமானின் வாழ்வின் மூலம் புதிய ஏற்பாட்டு நூல்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த அடிப்படையில் தான் இயேசுவைக் கண்டவன் இறைவனையே கண்டுவிட்டான்[49] என்று புதிய ஏற்பாடு போதிக்கின்றது. இயேசுபெருமானின் வாழ்வு மற்றும் போதனைகளின் அடிப்படையில் அமைந்த கிறித்தவத்தின் முக்கியமான கடவுட் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்:

(i) 'இயேசு பெருமான் இறைவனை முழுமையாக வெளிப்படுத்துவதோடு, மனிதனை இறைவனோடு இணைக்கும் இணைப்புப் பாலமாகவும் விளங்குகின்றார்[50]. (ii) ஆதி மனிதர் இறைவனின் கட்டளையை மீறியதால் இறையுறவை இழந்தனர். பல்வேறு தீர்க்கர்கள் மூலமாக இறைவன் பல்வேறு காலங்களில் மனித குலத்தோடு தொடர்பு கொண்டு வந்தாலும், அறுபட்ட உறவு முழுமையாகச் சரிப்படுத்தப்படவில்லை. ஏனெனில் இறையுறவு அறுபடக் காரணமான மனிதனின் பாவத்துக்குப் பரிகாரம் செய்யப்படும் வரை, அஃது இயலாது. (iii) மனிதன்,

தான் இயற்றும் நற்செயல்களாலோ, பலிகள் சடங்குகள் போன்றவற்றாலோ, தன் பாவ வினைகட்குப் பரிகாரம் செய்து கொள்ள இயலாது. ஆகவே, இறைவனின் இணையற்ற ஒரே திரு அவதாரமாக வெளிப்பட்ட இயேசு, மனிதனின் பாவத்துக்குத் தாமே பரிகாரமாக மாறிச் சிலுவை வேள்வியில் தம்மையே பலிப்பொருளாகப் படைத்து, மனிதனை மீட்டுக் கொண்டார். (iv) மனித அவதாரமெடுத்து வந்து சிலுவை மரணத்தினால் மனிதகுலத்துக்கு நிலையான மீட்பு வழங்கிய இயேசு பெருமான், மரணத்தை வென்று மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, விண்ணகமேறிச் சென்றதினால், தம் இறைத் தன்மையையும் உறுதிப்படுத்தினார். இவ்வாறு அவர் முழுமையான மனிதகுமாரனாகவும், முழுமையான தேவ குமாரனாகவும் விளங்கினார்; விளங்குகிறார். இயேசு பெருமான் வழங்கும் இந்த மீட்பினை நம்பிக்கையால் தமக்குரியதாக ஏற்போர், இவ்வுலகில் ஒரு புதுவாழ்வும் மறுவுலகில் நிலையான பெரு வாழ்வும் பெற்று மகிழ்வர். இதுவே புதிய ஏற்பாட்டின் மையமான அருட்செய்தியாகும். ஆகவேதான் இராபின் பாயிட் என்னும் மறை நூலறிஞர், 'இயேசு கிறித்துவில் கடவுளின் முழு வெளிப்பாட்டையும் கண்டு, அவரோடு கொண்ட உறவால் தம் வாழ்வு முழுவதும் மாற்றப்பட்டுப் புதுமையாக்கப்பட்டவர்கள், அவரைக் குறித்துக் கொடுத்த நற்சான்றுரைகளே புதிய ஏற்பாட்டு நூல்கள்' எனக் குறிப்பிட்டார்[51].

இயேசு கிறித்துவின் போதனைகளின் தனிச் சிறப்புகள்

கிறித்தவ நம்பிக்கையின்படி இவ்வுலகில் மனிதனாக வந்த இறைமகனாகிய இயேசு கிறித்து தமது சிலுவைத் தியாக மரணத்தின் வழியாக மனித குலத்தின் மீட்பராகவும் விளங்குகிறார். இயேசு, தமது புனித வாழ்வின் வழியாக மட்டுமன்றி அருள்மொழிகளின் வழியாகவும் இறைவனை மனிதனுக்கு வெளிப்படுத்திக் காட்டினார். இறைவனின் இயல்புகளை மட்டுமல்ல, இறைவனுக்கேற்ப வாழும் வாழ்வின் முறைகளையும் தெளிவுபட விளக்கிக் காட்டினார். ஆகவே தான் கிறித்தவர்களோடு பிறசமயத்தவரும் கூட அவரது போதனைகளின் அடிப்படையில் அவரைச் சிறந்ததொரு ஞானகுருவாகப் பாராட்டுகின்றனர். இயேசு

கிறித்துவும் தாமே மெய்யான 'குரு' என்றும் மனிதர் பிறரை அவ்வாறு அழைப்பது ஏற்புடையதன்று எனவும் ஓரிடத்தில் கூறியுள்ளார்[52]. இவ்வாறு 'பூரணசற்குரு' வாகக் கிறித்தவரால் ஏற்கப்படும் இயேசுவின் போதனைகளின் சில தனிச் சிறப்புகளை இங்குக் காண்பது பொருத்தமுடையது.

(1) புறச்சடங்குகளினும் அகத்தூய்மையையும் அன்பு நெறியையும் வலியுறுத்துதல்

இயேசு பெருமானது அருளுரைகள் அடங்கிய புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நூல்களாகிய 'நற்செய்தி நூல்களைப்' (Gospels) படித்தால், இயேசு பெருமான் புறச் சடங்குகள், புறக்கோலங்களினும் அகத்தூய்மையையும் அன்பு நெறியையுமே அதிகமாக வலியுறுத்தினார் என்பது தெள்ளிதின் விளங்கும். வழி வழியாகச் செய்து வரும் பலிகள், காணிக்கைகள், பிற வழிபாட்டுச் சடங்குகள் முதலியவற்றை மேற்கொண்டு, அவற்றின் உட்பொருளான இறைப்பற்றையும் மனித அன்பையும் வெளிப்படுத்தத் தவறிய வேதபாரகர், பரிசேயர் முதலியோரை அவர் கண்டித்தார். புறக்கோலங்களைப் பூண்டு, பிறரது புகழுரைகளையும் வணக்க வழிபாடுகளையும் பெரிதும்நாடி எளிய மக்கள் மேலோ தாங்கவியலாப் பெருஞ்சுமைகளைக் கட்டளைகளாகவும் சட்ட விதிகளாகவும் சுமத்திய 'மாயக்காரரான' சமயத்தலைவர்களை அவர் கடிந்து சாடினார்[53]. ஏழை எளிய மக்களை ஏய்த்துப் பிழைப்பதற்குச் சமயம் ஒரு கருவியாக அமைந்துவிட்ட அவலத்தைக் கண்டு மனம் வெதும்பினார். அவ்வாறு ஏய்த்துப் பிழைப்போர், இறைவனின் தண்டனைக்கு இலக்காவர் என எச்சரித்துப் பேசினார்[54]. காணிக்கைகளை விட நீதிநெறியும் இறையன்பும், பலிகளைவிடக் கருணை நெஞ்சமுமே மேலானவை என்று அவர் தெளிவுபடுத்தினார்[55]. புறக்கோலங்கள் அல்ல, அகத்தூய்மையே இறைவன் விரும்புவது என்று அவர் சுட்டிக் காட்டினார். அகத்தூய்மையின்றிப் புறச் சடங்குகளையே போற்றி நிற்போரை 'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்' எனச் சாடவும் அவர் தயங்கவில்லை[56]. இறைவனின் ஆலயம், வணிக நோக்குக் கொண்ட வஞ்சகரின் கூடாரமாக

மாறிய போது, கசையடி கொடுத்திடக் கையினில் சவுக்கினை ஏந்தவும் அவர் துணிந்தார்[57]

(2) ஏழை எளிய மக்களுக்கு இறையன்பை வெளிப்படுத்துதல்

இயேசு பெருமான், மண்ணுலகில் திருப்பணி நிகழ்த்திய நாட்களிலெல்லாம், ஏழை எளிய மக்களின் — சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட சாமானியர்களின் இதயத்தைக் கவர்ந்த இனிய நண்பனாகவும், அவர்தம் வணக்கத்துக்குரிய வழிகாட்டியாகவும் விளங்கினார். 'மிக்க செல்வமுடையோன், இறையரசினுள் வருதல், ஒட்டகம் ஊசித் துளையினுள் நுழைதல் போலக் கடுமையானது' என்று கூறிய அவர்[58], செல்வத்தின் மேல் நம்பிக்கை வைத்து வாழ்வோர் மேல் 'ஐயோ' எனும் அவலச் சொல்லை உதிர்த்தவர்[59] 'ஏழைகளாகிய நீங்கள் பேறு பெற்றவர்கள்; இறையரசு உங்களுக்குரியது' எனக் கனிவுடன் மொழிந்தார்[60]. ஏழை எளிய மக்களை அடக்கி ஒடுக்கிய அக்காலப் பெருஞ்செல்வர்களையும் சமயத்தலைவர்களையும் மிகக் கடுமையான சொற்களில் அவர் அச்சமின்றிச் சாடினார். அதே நேரத்தில் ஏழை எளிய மக்களோடு கலந்து பழகி, 'ஏழைப் பங்காளராக' வாழ்ந்து இறைவனின் அன்பை அவர்களுக்குத் தம் அருள் மொழிகளாலும் அருட்செயல்களாலும் வெளிப்படுத்தினார். இவ்வுலகில் ஏழையாக இருப்பினும், இறைநெறியைக் கடைப்பிடித்து ஒழுகினால், மறுமை வாழ்வில் இறைவனோடு பெருவாழ்வு வாழலாம் என்பதை இலாசரு—ஆபிரகாம் உவமைக் கதைமூலம் உறுதிப்படுத்தினார்[61]. பொருள் நிலையில் ஏழைகளாக வாழ்ந்தவர்களை மட்டுமன்றி, அக்காலச் சமுதாயத்தில் 'பாவிகள்—இழிந்தவர்கள்' என வெறுத்தொதுக்கப்பட்ட ஆயக்காரர், பொருள் மகளிர் முதலியவர்களைக் கூட அவர் புறக்கணித்து விடாமல், அவர்கட்கும் இறை அன்பைக் காட்டி, அவர்கள் புதுவாழ்வு பெறச் செய்தார். 'பாவிகளின் நண்பர்' என்றே அவர் அழைக்கப்பட்டார்[62].

(3) அருள்மொழிகளும் அருட்செயல்களும் இணைந்து அமைதல்

இயேசு பெருமானின் மண்ணுலகத் திருப்பணி வாழ்வைக் கூர்ந்து நோக்கினால், அஃது அறவுரைகளும் அருட்செயல்களும் இணைந்ததொன்றாகவே

விளங்கிடக் காணலாம். இறைவனைப் பற்றியும் மறுமை வாழ்வைப் பற்றியும் வெறும் அறவுரைகள் மட்டும் அவர் நிகழ்த்திவிடவில்லை. விவிலிய நூலாசிரியர்களின் கூற்றுப்படி இயேசு பெருமான் தம் தெய்வீக ஆற்றலால் பிணியுற்றோருக்கு நலமளித்தல், பசியோடு வந்தோரின் பசிதீர்த்தல், கண்—கரம்—கால்கள் இழந்தோர்க்கு அவை வழங்கல், தொழுநோயரையும் தொட்டுச் சுகமளித்தல் முதலிய அற்புத அருட்செயல்களையும் நிகழ்த்தினார். இம்மை வாழ்வுக்குரிய அன்புச் செயல்களையும் இம்மைக்கும் மறுமைக்குமுரிய அருளுரைகளையும் அவர் இணைத்தே வழங்கினார். இறைவனுக்குரிய நாளெனவும் பிறசெயல்கள் யாதும் செய்தலாகாதெனவும் யூதர்களால் கருதப்பட்ட 'ஓய்வுநாளில்', முடங்கிய கரம் கொண்ட ஒருவனுக்கு நலமளித்து அந்த ஓய்வுநாள் முறைமைக்குப் புது விளக்கமே தந்தார்[63]. இயேசு பெருமானின் திருப்பணியின் இருபக்கங்களாக அவரது அறவுரைகளும் அருட்செயல்களும் அமைந்து நின்றன. இறைப்பணி ஆற்றிடத் தம் மாணாக்கரை இவ்வுலகுக்குள் அனுப்பியபோதும், இவ்வாறு இரண்டையும் இணைத்தே நிகழ்த்திட, கட்டளையும் ஆற்றலும் தந்து அனுப்புவதை நற்செய்தி நூல்களில் காணலாம்[64]. சொல்லும் செயலும்—போதனையும் சாதனையும் இணைந்து நின்ற இனிய வாழ்வாகவே அவரது அருள்வாழ்வு திகழ்ந்தது.

(4) தியாக வாழ்வினை வலியுறுத்தல்

இம்மண்ணுலகில் ஓர் ஏழைத்தாயின் மகனாக மாட்டுக்கொட்டிலில் அவதரித்த இயேசு பெருமான், எளிய தியாக வாழ்வையே மேற்கொண்டார். 'நரிகளுக்குக் குழிகளும் வானில் பறக்கும் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனித குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை,' என்று அவர் உரைத்த சுய அறிமுக மொழிகள்[65], அவரது தியாக வாழ்வினை விளக்கப் போதுமானவை. தம்மைப் பின்பற்றுவோரும் தமது மாணாக்கரும் கூட இத்தகு தியாக வாழ்வையே மேற்கொள்ளுதல் வேண்டும் என அவர் வலியுறுத்தி வந்தார். 'தன் உயிரைக் காக்க விரும்புபவன் அதை இழந்து விடுவான். என் பொருட்டும் என் நற்செய்தியின் பொருட்டும் அதனை இழந்து விடுபவன் அதை மீட்டுக்

கொள்வான்' என அவர் பகர்ந்தார்[66]. நண்பருக்காக—பிறருக்காக உயிரும் தரத் துணியும் அன்பே மேலான அன்பு[67] என்றார் அவர். இறையருட்பணியின் பொருட்டுத் தம் உடைமைகளை இழந்து—உற்றாரைத் துறந்து, உறுதுயர் சகித்திடத் துணிந்திடுவோர்க்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் பெரும்பலன் உண்டு என அவர் உறுதி கூறினார்[68]. தம்மைப் போலவே தம் மாணாக்கரும் வாழ வேண்டும் என்பதே அவர் அறிவுரையின் உள்விழைவு.

(5) எதிர்கால 'இறையரசு'க்கு மக்களைத் தயார்ப்படுத்துதல்

இயேசு பெருமான், தம்மைப் பின்பற்றுவோர் பெறும் இம்மை வாழ்வுக்குரிய நலங்களைப் பற்றி எடுத்துரைப்பதோடு நிற்கவில்லை. மறுமை வாழ்வுபற்றி அவர்களுக்குத் தெளிவுபடுத்தவும் அதற்கு அவர்களைத் தயார்ப்படுத்தவும் முயன்றார். 'இம்மண்ணக வாழ்வு மறைந்து போகும் மாயவாழ்வு; இறைமகன் மீண்டு வந்து நடுத்தீர்ப்புச் செய்து நிறுவப் போகும் இறையரசின் வாழ்வோ அழியாத பெருவாழ்வு; அவலமற்ற மகிழ்ச்சி வாழ்வு; அநீதியற்ற தூய வாழ்வு' என அவர் வலியுறுத்திப் போதித்தார். அந்த 'மரணமில்லாப் பெரு வாழ்வுக்குத் தகுதியுடையராகுமாறு மக்களைப் பலவகைகளிலும் அவர் வேண்டினார். இறைமகனாகிய தம்மிலும், தாம் கூறும் நற்செய்தியிலும் நம்பிக்கை வைத்தலும்[69] ஏழை எளிய மக்களுக்கு உதவுதலுமே[70] இந்த 'நீடுவாழ்வை' உரித்தாக்கிக் கொள்ளுதற்குரிய தகுதிகள் என்று அவர் அழுத்தமாகப் போதித்தார். தமது 'இரண்டாம் வருகை' யெனும் மாபெரும் நிகழ்ச்சியே, இவ்வுலகில் 'இறையரசு' முழுமையாக நிறுவப்படுவதற்குரிய தொடக்கமாக அமையுமென்று அவர் விளக்கினார்[71]. இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து நிகழவுள்ள இறைவனின் இறுதி நியாயத்தீர்ப்புப் பற்றியும் இவற்றைச் சந்திக்க மக்கள் மேற்கொள்ள வேண்டிய ஆயத்தங்கள் பற்றியும் மிகவும் விரிவாக அவர் விளக்கிச் செல்லுவதையும் 'நற்செய்தி நூல்களின்' பல்வேறு அத்தியாயங்களில் படித்திடலாம்[72].

தொகுப்புரை

விவிலியத் திருமறையின் கடவுட் கொள்கைகளை விளக்கும் இம்மூன்றாம் இயலில், கிறித்தவர் சமய நம்பிக்கைகட்கு விவிலியமே அடிப்படை ஆதாரமாக விளங்குவது விளக்கப்பட்டது. பின்னர் விவிலியத்தின் பெயர்க்காரணமும் அதன் இரு பெரும் பிரிவுகளுக்குமுள்ள தொடர்புறவும் அப்பிரிவுகளில் அமைந்த நூல்களும் சுட்டப்பட்டன. தொடர்ந்து முதற்பிரிவாகிய பழைய ஏற்பாட்டில் கூறப்படும் மொத்த வரலாற்றுச் செய்திகளின் சுருக்கமும், அப்பிரிவு நூல்களின் வகைப்பாடுகளும் தரப்பட்டன. அப்பழைய ஏற்பாடு உணர்த்தும் முக்கியமான கடவுட் கொள்கைகள் சில சுட்டப்பட்டன.

அவ்வாறே புதிய ஏற்பாட்டு நூல்களின் வகைப்பாடுகளும் அவை கூறும் செய்திகளின் சாரமும் தரப்பட்டன. மேலும் புதிய ஏற்பாட்டுக் கடவுட் கொள்கைகளின் மையமாக இயேசு கிறித்து விளங்குவது தெளிவுறுத்தப்பட்டது. இயேசுவின் போதனைகளின் சில தனிச்சிறப்புகளும் விளக்கப்பட்டன.

* * * * *

இயல் 3

குறிப்புகள்

1. **மாற்கு**, 16 : 15.
2. K. Luke, **TPI Companion to the Bible,** Volume I. p.3.
3. **Ibid.,** pp. 8, 9.
4. ROBIN BOYD, **What is Christianity?,** p. 89.
5. இரா. எட்வர்ட்சாம், **மலரும் திருமறை**, பக். 181–184.
6. சாமுவேல், அமிர்தம், 'பழைய ஏற்பாட்டு இறையியல்', **திருமறைத் தோழன்**, பக். 188, 189.
7. சாமுவேல், அமிர்தம், 'பழைய ஏற்பாட்டுக் கனோன்', **திருமறைத் தோழன்**, பக். 128.
8. ROBIN BOYD, **What is Christianity?** pp. 103, 104.
9. **Thompson Chain Reference Bible,** Table No.4222 - b, p.186.
10. **யாத்திராகமம்**, 34 : 6.
11. **உபாகமம்**, 4 : 24.
12. **சங்கீதம்**, 90 : 2.
13. **ஏசாயா**, 40 : 28.
14. **மே. கூ. நா.**, 6 : 3.
15. **ஆபகூக்**, 1 : 13.
16. **நாகூம்**, 1 : 2.
17. **சங்கீதம்**, 146 : 10.
18. **எசேக்கியேல்**, 18 : 23.
19. **The New Bible Dictionary,** pp. 429-431.
    The Interpreter's Dictionary of the Bible, pp. 407-436.
20. **The New Bible Dictionary,** p. 431.
21. இரா. எட்வர்ட்சாம், **மலரும் திருமறை**, பக். 37–39, 165, 166.
22. BERNHARD W. ANDERSON, **Understanding the old Testament,** pp. 1-3.

23. **ஆதியாகமம்**, 12 : 1–3, **யாத்திராகமம்**, 4 : 11–16, **எரேமியா**, 1 : 4–10.
24. **யாத்திராகமம்**, 20 : 4,5.
25. **உபாகமம்**, 7 : 25.
26. **சங்கீதம்**, 96 : 5.
27. **ஏசாயா**, 40 : 18.
28. **மே. கூ. நூ.**, 3 : 15.
29. **தானியேல்**, 9 : 6, 9
30. **யாத்திராகமம்**, அத்தியாயங்கள் : 24–31. & **லேவியராகமம்**, அத்தியாயங்கள் : 1–7, 14–17, 23–27.
31. **சங்கீதம்**, 51 : 16, 17.
32. **ஏசாயா**, 1 : 13, 16.
33. **மீகா**, 6 : 7.
34. **மே. கூ. நூ.**, 6 : 8.
35. இரா. எட்வர்ட் சாம், **மு. கு. நூ.**, ப. 111.
36. **ஆதியாகமம்**, 3 : 15.
37. **ஏசாயா**, 9 : 6,7.
38. தியான் சந்த்கார், மத்தேயு எழுதின சுவிசேஷம், **'திருமறை விளக்கவுரை'**, (இரண்டாம் பகுதி) ப.2.
39. **The Interpreter's Dictionary of the Bible**, pp. 425-436.
40. **I யோவான்**, 1 : 5.
41. **மே. கூ. நூ.**, 4 : 8.
42. **யோவான்**, ௪ : ௨௪.
43. **I தீமோத்தேயு**, 6 : 15, 16.
44. **அப்போத்தலர் திருப்பணி**, 17 : 29.
45. **மத்தேயு**, 6 : 9.
46. **மே. கூ. நூ.**, 6 : 30.
47. **லூக்கா**, அத்தியாயம் : 15.
48. **மாற்கு**, 10 : 45.

49. யோவான், 14 : 9.
50. மே. கூ. நூ., 1 : 18, 14 : 6.
51. ROBIN BOYD, What is Christianity?, p.98.
52. மத்தேயு, 23 : 8,10.
53. மே. கூ. நூ., 23 : 2–7 & லூக்கா, 11 : 46.
54. மத்தேயு, 23 : 14, 15, 33.
55. லூக்கா, 11 : 42 & மத்தேயு, 12 : 7, 23 : 23.
56. மத்தேயு, 23 : 27.
57. யோவான், 2 : 13–16.
58. மத்தேயு, 19 : 23, 24 & லூக்கா, 18 : 25.
59. மாற்கு, 10 : 24 & லூக்கா, 6 : 24, 25.
60. லூக்கா, 6 : 20.
61. மே. கூ. நூ., 16 : 19–31.
62. மத்தேயு, 11 : 19 & லூக்கா, 7 : 34.
63. மாற்கு, 3 : 1–5.
64. மத்தேயு, 10 : 7, 8 & லூக்கா, 10 : 9.
65. லூக்கா, 9 : 58.
66. மத்தேயு, 16 : 25, மாற்கு, 8 : 35 & யோவான், 12 : 24, 25.
67. யோவான், 15 : 13.
68. மாற்கு, 10 : 29, 30 & மத்தேயு, 19 : 28, 29.
69. யோவான், 3 : 36, மத்தேயு, 4 : 17, 23 & மாற்கு, 1 : 14, 15.
70. மத்தேயு, 25 : 31–46.
71. மத்தேயு, அத்தியாயம் : 24.
72. மத்தேயு, அத்தியாயங்கள் : 24, 25, லூக்கா அத்தியாயம் : 21 & மாற்கு அத்தியாயம் : 13.

* * * * *

இயல் நான்கு

சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் – ஒற்றுமைகள்

இயல் நான்கு

சித்தர்களின் கடவுட் கொள்கைகளும், விவிலியம் கூறும் கடவுட் கொள்கைகளும் — ஒற்றுமைகள்

இவ்வாய்வின் இரண்டாம் மூன்றாம் இயல்களில் முறையே சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் விரிவாக விளக்கப்பட்டன. இவ்வாய்வின் மையமாக அமையக் கூடிய இந்த நான்காம் இயலில், இவ்விரு வகைக் கடவுட் கோட்பாடுகளிடையே அமையும் ஒற்றுமைக் கூறுகள் விளக்கப்படுகின்றன. முதற்கண், இவ்விரண்டு கோட்பாடுகளும் ஒற்றுமையுடையன எனக் கருதுதற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் அமையக்கூடிய சில செய்திகள் சுட்டப்படுகின்றன.

I. ஒற்றுமைச் சிந்தனைக்கு அடித்தளங்கள்

சித்தர்களின் கடவுட் கோட்பாடுகளும் விவிலியக் கோட்பாடுகளும் பல வகைகளிலும் ஒற்றுமையுடையன என்ற கருத்து, தமிழாய்வு உலகிலும் கிறித்தவ உலகிலும் பலராலும் பல ஆண்டுகளாகக் கருதப்பட்டும் எழுதப்பட்டும் வருவதொன்றேயாகும். இவ்வாறு தமிழறிஞர்களும் கிறித்தவ அறிஞர்களும் கருதுதற்குரிய அடிப்படைகளும் ஆதாரங்களும் மூன்று தலைப்புகளில் இங்குத் தொகுக்கப்படுகின்றன.

(அ) சித்தர் இலக்கியங்கள் மேல் வைதிகர்களும் சைவர்களும் காட்டிய வெறுப்பு

சித்தர்கள் சமய உலகில் பெருஞ் சீர்திருத்தவாதிகளாக விளங்கினர் என்பதை அவர்கள் பாடல்கள் வழி உணரலாம். இரண்டாம் இயலில் சுட்டியவாறு, சித்தர்கள் பொதுவாகச் சிவனையும் சக்தியையும் வழிபட்டவர்களே எனினும், அவர்தம் நெறி நடைமுறைச் சைவத்திலும் மாறுபட்டு விளங்கியது. அதுமட்டுமன்றி வேத ஆகம புராண வழிப்பட்ட சமயச் சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் அவர்கள் மறுத்தனர். மேலும், இச்சடங்குகளையும் வழிபாட்டு

முறைகளையும் நிகழ்த்தி வந்த பிராமணர்களும் சித்தர்களின் கண்டனத்துக்கு உள்ளாயினர். இத்தகு காரணங்களால் சித்தர்களின் இலக்கியங்கள் நெடுங்காலமாகவே வேத சமயங்களைப் பின்பற்றிய வைதிகர்களாலும் சைவர்களாலும் புறக்கணிக்கப்பட்டும் வெறுக்கப்பட்டும் வந்துள்ளன. இவ்வாறு வைதிகர்—சைவர் ஆகிய இரு சாராருடைய வெறுப்புக்கும் பழிப்புக்கும் சித்தர்களும் அவர்தம் இலக்கியங்களும் உள்ளானமைக்கு ஏராளமான அக—புறச் சான்றுகள் உள்ளன.

வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு ஞானியைச் சைவர்கள் கல்லெறிந்து விரட்டிய ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சிவவாக்கியர் தம் பாடலொன்றில் குறிப்பிடுகிறார்[1]. சிவவாக்கியர் குறிப்பிடும் ஞானி ஒரு சித்தரென ஊகிக்கலாம்; சிவவாக்கியர் மற்றொரு பாடலில் 'சைவரான மூடரே!' என விளிப்பதும்[2] இத்தகு நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட வெறுப்பினால்தான் என ஊகிக்கலாம்.

மேலும், சித்தர்கள் தம் பாடல்களில் வேத—ஆகம சாத்திரப் புராணங்களைக் கண்டிப்பதாலும், தாம் கண்டு கொண்ட புதிய இறையுண்மைகளைத் துணிந்து வெளிப்படுத்துவதாலும், அப்பாடல்கள் சைவர்கள், வைதிகர்கள் உள்ளிட்ட பலராலும் புறக்கணிக்கப்பட்டும் தீயிடப்பட்டும் அழிக்கப்பட்டும் வந்திருக்கின்றன. இவ்வுண்மைக்குப் பல அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் கிடைக்கின்றன. 'யோக ஞான சாஸ்திரத் திரட்டு' என்ற தொகுப்பில் 'அகஸ்தியர் ஞான விளக்கம்' என்ற தலைப்பில் காணப்படும் பாடல்கள் சிலவற்றில் அகத்தியர் இதுபற்றிப் பேசுகின்றார்:

'முன் போலச் சித்த ரெல்லாங் கொஞ்சங் கொஞ்சம்
மூடினதைத் திறந்துவிட்டார் முடுகி நானும்
அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்ச மாக
அரனார்தா னுரைத்தபடி யறிவித்தேனே'
அறிவித்தே னென்று சொன்ன வார்த்தை கேட்டு
ஐயையோ உலகத்தில் அநேகம் பேர்கள்
பொறியான அறிவுமிக வழிந்து போனார்[3]

என்பது அத்தகையதொரு பாடல். மேலும், தாம் சில உண்மைகளை உரைத்துவிட்டதால், பிற சித்தர்களும் தம்மைக் கோபித்ததாகவும் இவ்வுண்மைகளை இதுகாறும் மறைத்து வைத்திருந்த பெரியோர் பிறர் தமது நூலைக் கிழிக்கப் பார்ப்பதாகவும் மற்றொரு பாடலில் குறிப்பிடுகிறார்[4].

போகரும், போகர்—7000 என்ற நூலின் சில பாடல்களில் தமது பாடல்கள் மறைக்கப்படுவதையும் அழிக்கப்படுவதையும் பற்றிக் குறிப்பிடுகிறார்[5]. `சித்த மருத்துவம்' என்ற நூலிலும் இச்செய்தி விளக்கப்படுகிறது.

'தீதறவே வெளித் தோன்றச் சொன்னேன் என்று
சித்த ரெல்லாம் மேன்மேலே சண்டை செய்தார்;
வாதாடி அவருடனே வளமாய்ப் பேசி
வாங்கினேன் காண் உலகத்தார் பிழைக்க வென்றே'

என்ற போகரின் பாடலை இந்நூலாசிரியர்கள் மேற்கோள் காட்டுகின்றனர்[6]. மேலும், தமிழ்நாட்டு மரபுவழி இந்துக்கள் பலர் சித்தர்கள் மேல் கடும் வெறுப்புக் கொண்டு, அவர்தம் இலக்கியங்களை அழிக்கவும் அவமதிக்கவும் முனைந்து நின்றதைக் கமில் வி. சுவலபிள் தம் கட்டுரைகளில் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். குறிப்பாக, சிவவாக்கியருடைய பாடல்களைச் சைவர்கள் தேடிப்பிடித்து எரித்திருக்கிறார்கள் என்ற செய்தியை வரலாற்றாதாரத்துடன் குறிப்பிடுகின்றார்[7].

சித்தர்கள் மேல் சைவர்கள் கொண்ட வெறுப்பு, தற்காலம் வரை தொடர்கின்றதெனலாம். இந்நூற்றாண்டில் எழுதப்பட்ட 'திருநான்மறை விளக்க ஆராய்ச்சி' எனும் நூலில் வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை,

'இதுகாறும் சைவ சரித்திர வரிசையிலே நுழைதற்கு இடம்
பெறாத — பஞ்சம நிலையிலே நிற்கும் சித்தர் நூல்,
அவ்வியாசத்தில் அக்கிரஸ்தானம் பெற்றுவிட்டது'[8]

என்று குறிப்பிடுகிறார். அதே நூலில், மா. சாம்பசிவம் பிள்ளை,

> 'சைவ சமயத்தைத் தாபித்து உபகரித்த சைவ சமயக் குரவர்கள் கற்பித்த வழிீயக் கடைப்பிடித்து ஒழுகும் சைவமக்களும் சித்தர் நூலை நோக்கவும் இசைவரா? ஒருக்காலும் இசையார்'[9]

என எழுதுகிறார். இங்கு, முதல் இயலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள கே.என். சிவராஜபிள்ளையின் சித்தர் பற்றிய கருத்துக்களும் ஒப்புநோக்கத்தக்கன[10]. 'வள்ளலார் மறைந்தது எப்படி?' என்னும் நூலின் முன்னுரையில், ஊரன் அடிகள் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> 'சித்தாந்த சைவத்திற்கும் சித்தர் சைவத்திற்கும் வேறுபாடுண்டு. திருமந்திரத்தில் சித்தாந்த சைவத்திற்கு உடன்பாடில்லாத கருத்துக்கள் சிலவும் உ௳ளவென்பர். இன்றைய சித்தாந்த பண்டிதர் சிலர், தேவாரத் திருவாசகங்களைப் பிரமாணமாகக் கொள்ளும் அளவிற்குத் திருமந்திரத்தைப் பிரமாணமாகக் கொள்ளாமையைப் பலரும் அறியாவிடினும், சிலராவது அறிவர். தாயுமானவரை ஒப்புக் கொள்ளாத சித்தாந்த வித்தகர்களும் உண்டு. (வறட்டுச்) சித்தாந்தம் அவர்கள் உள்ளத்தில் அவ்வளவு ஊறிக்கிடக்கிறது'[11].

மருத்துவம், யோகம் முதலியவை தொடர்பான பல அரிய செய்திகளைக் குழூஉக் குறிகளால் பாடியுள்ள சித்தர்கள், தம் புரட்சிகரமான இறைச் சிந்தனைகளை வெளிப்படையாகப் பாடியுள்ளனர். ஆனால் அத்தகைய பாடல்கள் வைதீகர், சைவர் முதலான பிறராலும் சித்தர்களுள்ளேயே சிலராலும் மறைக்கவும் அழிக்கவும் பட்டுள்ளன என்ற உண்மை மேற்குறித்த சான்றுகளால் புலனாகிறது.

ஆ. கிறித்தவர்கள் சித்தர் பாடல்களில் காட்டும் ஆர்வமும் விருப்பமும்

நெடுங்காலமாகவே தமிழகத்தில் வாழ்ந்த கிறித்தவ அருட்பணியாளர்களும், பிற கிறித்தவர்களும் சித்தர் பாடல்களில் பேரார்வமும் பெரு விருப்பமும் காட்டி வந்துள்ளனர். சிவவாக்கியர் பாடல்களைச் சைவர்கள் எதிர்த்த போது, கிறித்தவர்களே அவற்றைக் காப்பாற்றி வைத்ததாக வரலாற்று ஆதாரங்கள் வழி அறியலாகின்றது[12]. ச. மாடசாமி தம் 'பாம்பாட்டிச் சித்தர்' எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> 'கிறித்தவமும் இசுலாமியமும் வெளியே இருந்து இங்கு வந்து வேதமதத்தை எதிர்த்தவை. சித்தர் நெறி இங்கேயே வேத நெறிக்கு அடங்காமல் வளர்ந்தது. வேத சமயங்களுடன் சித்தர் நெறி நடத்திய போருக்குக் கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்களின் ஆதரவு நிச்சயமாகக் கிடைத்திருக்கும்'.[13]

கிறித்தவச் சமய உண்மைகளை உறுதிப்படுத்துவதற்கும் வைதிக சமயம் உள்ளிட்ட பிறசமயக் கருத்துக்களை மறுப்பதற்கும் சித்தர் பாடல்களைக் கிறித்தவத் தொண்டர்களும் எழுத்தாளர்களும் பயன்படுத்திக் கொள்வது, நெடுங்காலமாகவே நிகழ்ந்து வருவதொன்றாகும். மேலை நாட்டிலிருந்து, தமிழகம் போந்த கிறித்தவ அறிஞர் ராபர்ட்—டி— நொபிலி என்ற தத்துவ போதக சுவாமிகள், தம்முடைய 'ஞானோபதேசம்' என்ற நூலில், தம் கருத்துக்களுக்கு ஆதரவாகச் சிவவாக்கியர் பட்டினத்தார் பாடல்களைச் சான்றாக் காட்டுகிறார்[14]. வீரமாமுனிவர், சித்தர் மருத்துவத்தில் ஈடுபாடு கொண்டு, அத்துறையில் சில நூல்கள் இயற்றியுள்ளார்[15]. 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் 'சுவிசேடக் கவிராயர்' எனப் போற்றப்பட்டவருமான வேதநாயகம் சாஸ்திரியார், கடுவெளிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், ஞானவெட்டியான் போன்ற சித்தர்களின் பாடல்களின் அமைப்பையும் பொருளையும் தழுவிப் பல பாடல்கள் இயற்றியுள்ளார்[16].

ஆங்கில அறிஞர் சார்லஸ் கோவர், 1872இல் வெளியிட்ட 'தென்னிந்திய நாட்டுப் பாடல்களின்' தொகுப்பில் சித்தர் பாடல்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்[17]. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹென்றி மார்டின் ஸ்கட்டர் முதலிய பல கிறித்தவ அருள்தொண்டர்கள் (மிஷனெரிகள்) தாம் வெளியிட்ட சிறு நூல்களிலும் பிரதிகளிலும் சித்தர் பாடல்கள் பலவற்றை மேற்கோள் காட்டியிருப்பதையும் தற்காலச்சித்தர் பாடல் தொகுப்புகளில் அதே பாடல்கள் பல மாறுதல்களுடன் காணப்படுவதையும் க. கைலாசபதி கட்டுரையொன்றில் எடுத்துக் காட்டியுள்ளார்[18]

பல்லாண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்து அருட்பணியாற்றிவரும் தமிழ் இலக்கியங்களிலும் தமிழ் இசையிலும் அரும்புலமை பெற்றவருமான எய்ச்.ஏ. பாப்லி அவர்கள் 1917இல் வெளியிட்டுள்ள 'சற்சமய விளக்கம்' என்ற நூலில், கிறித்தவ உண்மைகளை விளக்க, பிற தமிழ் இலக்கியச் சான்றுகளோடு, திருமந்திரம் உள்ளிட்ட சித்தர் இலக்கியங்கள் பலவற்றையும் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளார்[19]. 1977இல் N.J.S. சிவசுந்தரம் என்பவர் வெளியிட்டுள்ள சுமார் 400 பக்கங்கள் கொண்ட 'முக்திவழி' என்ற நூலும், பல்வேறு சித்தர் பாடல்களின் அடிப்படையில், சமய உலகில் இன்று காணப்படும் பல மூட வணக்கங்களையும் நம்பிக்கைகளையும் கண்டிப்பதோடு மனிதனுக்கு இறைவனை வெளிப்படுத்த வல்ல மெய்க்குரு இயேசுவே என்று வலியுறுத்தியும் பேசுகிறது[20]. 1978இல் முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட 'கிறிஸ்தவம் தேவையா' என்ற சமய ஆராய்ச்சி நூலில் சாது செல்லப்பா என்பவர், சித்தர் பாடல்கள் பலவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ உண்மைகளை உறுதிப்படுத்துகின்றார்[21]. இவையேயன்றி, இப்போக்கிலமைந்த எண்ணற்ற சிறு நூல்கள், கிறித்தவர்கள் பலரால் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், பொதுமக்களிடத்தில் பெரிதும் அறிமுகமாகாத பல சித்தர் பாடல்களைச் சிறுசிறு நூல்களாகப் பதிப்பிடும் முயற்சியிலும் பல கிறித்தவர்கள்

ஈடுபட்டுள்ளனர் சான்றாக, கிறித்தவ இலக்கியச் சங்கத்தார் (CLS)[22] அ. வள்ளி நாயகம் பிள்ளை[23] வீ. ஞானசிகாமணி[24] போன்றோர் 'அகத்தியர்' பாடல்கள் சிலவற்றைப் பதிப்பிட்டுள்ளனர். இவருள் வீ. ஞானசிகாமணி, அப்பாடல்களுக்குத் தெளிவுரையும் எழுதியுள்ளார்.

1986இல் சென்னைக்கு வந்த கத்தோலிக்கக் கிறித்தவ சமயத் தலைவர் போப்பாண்டவர், தம் சொற்பொழிவில் 'ஒன்றென்றிரு' என்ற பட்டினத்தார் பாடலை முழுமையாகச் சொல்லிக் காட்டியுள்ளார்.[25]

(இ) சித்தர் பாடல்களில் ஆய்வாளர் பலரும் கிறித்தவப் பொருள் காணல்

சித்தர் இலக்கியங்கள் மேல் கிறித்தவத்தின் தாக்கம் இருப்பதாக மேனாட்டு உள்நாட்டு ஆய்வாளர்கள் சிலர் கருதியுள்ளனர். 'சூஃபிகள்' எனப்படும் இஸ்லாமியச் சித்தர்களின் இலக்கியங்களில் கிறித்தவத் தாக்கம் புலனாவதாகக் க. நாராயணன் குறிப்பிடுகிறார்.[26]

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஆய்வு நூலை எழுதிய டாக்டர் இராபர்ட் கால்டுவெல், அந்நூலுக்கு எழுதியுள்ள விரிவான முன்னுரையில், பிற்காலச் சித்தர்கள் கிறித்தவக் கருத்துக்களின் ஆழமான தாக்குறவுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதைச் சித்தர் பாடல்களிலிருந்து சான்றுகள் காட்டி விளக்கியுள்ளார். குறிப்பாக, 'வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனாகி' எனத் தொடங்கும் அகத்தியச் சித்தரின் பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் காட்டி, இப்பாடல் குறிப்பிடும் 'குரு' இயேசு கிறித்துவே எனச் சுட்டுகின்றார்[27]. கால்டுவெலின் இக்கருத்தைத் தம் ஆய்வுக் கட்டுரையொன்றில் மேற்கோள் காட்டும் க. கைலாசபதி, கால்டுவெல் உள்ளிட்ட 19ஆம் நூற்றாண்டுக் கிறித்தவ அருட்பணியாளர்களின் கருத்துக்கள், பல்வேறு தமிழ் ஆய்வாளர்களால் எதிரொலிக்கப்பட்டதாகக் கூறுகிறார்[28].

'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதியுள்ள சி. ஜேசுதாசனும் ஹெப்சிபா ஜேசுதாசனும் பட்டினத்தாருடைய 'ஒன்றென்றிரு: தெய்வம் உண்டென்றிரு' என்ற

பாடற் கருத்துக்கள் கிறித்தவக் கோட்பாடுகளாகவே காணப்படுவதாகக் கருதுகின்றனர்[29]. ச. மாடசாமி என்பவர் சமூகச் சீர்திருத்தம், சமத்துவம், சாதி மறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வாளர் பலரும் சித்தர் பாடல்களில் கிறித்தவச் செல்வாக்கைக் காண்பதாகக் குறிப்பிடுகின்றார்[30]. சித்த மருத்துவம் தொடர்பாக T.V. சாம்பசிவம்பிள்ளை வெளியிட்டுள்ள அகராதியின் மூன்றாம் தொகுதியில், சிவவாக்கியர், தமிழகம் போந்து கிறித்து நெறியைப் பரப்பிய தூயதோமையர் மூலம் கிறித்தவராகி, சிலகாலம் கிறித்தவராக விளங்கினாரெனக் குறிப்பிட்டுள்ளார்[31].

'விவிலியம் — திருக்குறள் — சைவசித்தாந்தம்' ஆகியவற்றை ஒப்பிட்டாய்ந்துள்ள மு. தெய்வநாயகம், தம் பிஎச்.டி. ஆய்வேட்டில்,

> 'இயேசுவின் நற்செய்தியின் பயனால், திராவிட சமயமாகத் திராவிடப் பண்பாட்டின் அடிப்படையில் எழுந்த சைவத்தை ஆரியர்கள் தங்களுக்கு ஏற்றவாறு வளைத்தும் திருத்தியும் ஆரிய வைதீகத்திற்கு அடிமைப்படுத்த முயன்ற போது, அதைப் பொறாமல் மறுத்தெழுந்தவர்களே சித்த மரபினராவர்'

என எழுதியுள்ளார்.[32] தம் ஆய்வு முடிவுகளுக்கு ஆதாரங்களாக இவர் குறிப்பிடும் பல செய்திகளில் ஒன்று, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நடந்த குகை இடிக் கலகம். சித்தர்கள் வாழ்ந்த குகைகளைச் சிதைக்கவும் அவர்களைக் கொல்லவும் பிராமண ஆதரவாளர்கள் முயன்ற போது, இரு சாராருக்கும் இடையில் நிகழ்ந்த போராட்டமே இவ்வாறு கல்வெட்டுகளில் குறிக்கப்படுவதாக அவர் விளக்குகிறார்[33]. மேலும், மருத்துவத் தொண்டினையும் அறிவுத் தொண்டினையும் தம் இலக்கியங்கள் வழி நிகழ்த்திய சித்தர்களைக் கிறித்தவ அருட்தொண்டர்களுடன் ஒப்பிட்டும் சில கருத்துக்களை இவர் எழுதியுள்ளார். 'தமிழகச் சித்தர்களின் கோட்பாடுகளும் சமயச் சிந்தனைகளும் கிருத்துவ சமயக் கோட்பாட்டிற்கு மிக நெருங்கி வருவதாக' வீ.ப.கா. சுந்தரமும்[34] கருதுகிறார்.

சித்த மருத்துவம் தொடர்பான பல நூல்கள் எழுதியுள்ள பலராமையா, தம் 'சாகாக்கலை' என்ற நூலில், சித்தர்கள் பேசும் மரணமில்லாத வாழ்வை, விவிலியம் பேசும் 'நித்திய ஜீவன்' அல்லது 'நிலையான வாழ்வுடன்' ஒப்பிட்டு எழுதியுள்ளார்[35]. அவ்வாறே அண்மையில் வெளிவந்துள்ள 'ஞானக்கனல்' என்ற சித்தர் இலக்கிய ஆய்வு நூலிலும், பா. கமலக்கண்ணன் என்பவர், சித்தர்களின் கருத்துக்களை விவிலியக் கருத்துக்களுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார்[36].

கால ஒப்பீடு சித்தர் பாடல்களில் வெளிப்படும் கடவுட் கோட்பாடுகளும் விவிலியக் கோட்பாடுகளும் ஒற்றுமையுடையன எனக் கருதுவதற்கு ஆதாரமான சில செய்திகளும் அறிஞர் சிலரது கருத்துக்களும் இதுவரை சுட்டப்பட்டன. இனி, இத்தகைய தாக்குறவுகட்கும் தொடர்புகட்குமான வாய்ப்புக் கூறுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, இரு பேரிலக்கியங்களின் காலத்தையும் தெளிவுபடுத்திக்கொள்வது, இவ்வாய்வுக்கு அடிப்படையான தேவையாகும். எனினும், இவ்வாய்வு, முழுமையும் வரலாற்று நோக்கில் அமையாது இலக்கிய–இறையியல் ஒப்பீட்டினையே நோக்கமாகக் கொண்டு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

சித்தர் இலக்கியக் காலம்

இவ்வாய்வின் முதல் இயலில், சித்தர்களது காலத்தைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு, பொதுக் கருத்து ஒன்றும் சுட்டப்பட்டது. கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டளவில் திருமூலரோடு தொடங்கிய சித்தர் இயக்கம், 15–16ஆம் நூற்றாண்டளவில் குண்டலினி யோகப் பயிற்சிக்கு முதலிடம் தந்து கோயில்களையும் கோயில் வழிபாடுகளையும் எதிர்த்து, சாதி சமய முறைகேடுகளையெல்லாம் தட்டிக் கேட்கும் ஒரு தீவிர இயக்கமாக மலர்ந்தது. இதற்குப் பின்னர் 17 அல்லது 18ஆம் நூற்றாண்டு, அல்லது அதற்கும் பிற்பட்ட காலத்தவராகக் கருதப்படக்கூடிய நந்தீசுவரர், இராமதேவர், அகத்தியர், சட்டைமுனி, சுப்பிரமணியச் சித்தர், போகர் போன்றோர், 'காயச் சித்தர்களாக' விளங்கி மருத்துவம், காயகற்பம் முதலிய செய்திகளைப் பற்றி ஏராளமான

பாடல்கள் எழுதியதோடு, சமயச் சீர்திருத்தங்களாக அமையக்கூடிய பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளனர்.

இச்சித்தர்களின் காலம் பற்றி — ஆய்வாளர்களிடம் ஒத்த கருத்துக்கள் இல்லையென்பது கருதத்தக்கது. குறிப்பாக, இவ்வாய்வில் கருதப்படும் சித்தர் ஐவரது காலங்களைப் பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. எனினும், வரலாற்று நோக்கில் சித்தர்களைப் பற்றி ஆய்வு செய்துள்ள ஆர். வெங்கட்ராமன் தம் ஆய்வேட்டில், இவ்வைவருள் சிவவாக்கியர் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனவும், பாம்பாட்டிச் சித்தரும், குதம்பைச் சித்தரும் 17ஆம் நூற்றாண்டினர் எனவும், போகர் (இவர் கருத்துப்படி போகர் III) 17 அல்லது 18ஆம் நூற்றாண்டினர் எனவும் கருதுகின்றார். அகத்தியர் பற்றி இவர், காலக்கணிப்பு ஏதும் செய்யவில்லை[37]. இன்றைய ஆய்வுநிலையில் பெரிதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இவர் கருத்துக்கள் விளங்குகின்றன எனலாம். எனினும், *'சிவவாக்கியம்—1000'* என்ற நூலில் காணப்படும் இஸ்லாம் மதம், ஏசு மதம் பற்றிய பாடல்களையும்[38] இத்தகு பிற பாடல்களையும் வைத்து நோக்கும் போது, இப்பாடல்களின் ஆசிரியரது காலத்தை 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்னும் கொண்டு செல்ல முடியும்.

விவிலியக் கருத்துக்கள் தமிழகத்தில் பரவிய காலம்

நீண்ட நெடுங்காலமாகவே கிறித்தவச் சமயமும் அதன் ஆரம்ப நிலையாகிய யூத சமயமும் தோன்றி வளர்ந்த பாலத்தீன, எகிப்து நாடுகளுடன் தமிழகம் தொடர்பு கொண்டிருந்தது. குறிப்பாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் 'யவனர்' என்ற சொல்லால் குறிக்கப்படுவோர், யூத—கிறித்தவ சமயங்களுடன் தொடர்புடைய கிரேக்கர், உரோமர், யூதர், சீரியர் முதலியோரே எனவும் பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன[39]. வணிகத் துறையில் வலுப் பெற்றிருந்த இத்தொடர்பின் விளைவாகவே, தமிழ்ச் சொற்கள் பல, விவிலியம் எழுதப்பட்ட எபிரேய, கிரேக்க மொழிகளில் கலந்து மருவிப் பயின்று வருகின்றன என்பதை

ஆய்வாளர்கள் பலர் சுட்டியுள்ளனர். சான்றாக, 'கவி', 'தோகை' ஆகிய சொற்கள், எபிரேய மொழியில் 'கோபிம்' (quophim) 'துக்கிம்' (Tukkiym) என வழங்குவதாகவும், 'அரிசி', 'இஞ்சிவேர்', 'கார்ப்பு' முதலிய சொற்கள் கிரேக்க மொழியில் முறையே, 'ஒருட்சா', (Orutza) 'ஜிஞ்ஜர் கிரிஸ்' (ginger–gris), 'கார்பியோஸ்' (Karpio's) என வழங்குவதாகவும் ஆய்வாளர்கள் சிலர் எழுதியுள்ளனர்[40].

தமிழகத்துக்கும் கிறித்தவம் உருவான நாடுகளுக்கும் இடையே இத்தகு தொடர்புகள், பழங்காலத்திலேயே நிலவினாலும் இவ்வாய்வுக்குப் பயன்படும் வகையில், விவிலியக் கருத்துக்கள் தமிழில் வந்து பரவிய காலம் பற்றித் தெளிவுபடுத்திக் கொள்வது மிகவும் தேவையானது. முதன் முதலாக விவிலியத்தின் புதிய ஏற்பாட்டின் தமிழ் மொழிபெயர்ப்பு, 1715இல் தான் வெளியிடப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன[41].

தரங்கம்பாடியில் கிறித்தவ அருட்பணி செய்த பர்தலோமேயு சீகன்பால்கு என்பவரால் இம்மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது[42]. அவ்வாறே 1725ஆம் ஆண்டு மறைத்திரு பெஞ்சமின் சூல்ச் என்பவர் பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியினை நிறைவு செய்தார். இப்பணியின் ஆரம்ப வேலைகளும் சீகன்பால்கினாலேயே செய்யப்பட்டது.. பின்னர், பெப்ரீஷியஸ் என்னும் லுத்தரன் அருள்தொண்டர், பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்தார். அவரது மொழிபெயர்ப்பு அவர் காலத்திலேயே, முழுதுமாக வெளியிடப்படாமல், 1777இல் ஆதியாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையிலும், 1782இல் ரூத் முதல் யோபு வரையிலும், 1791இல் சங்கீதங்கள் தொடங்கி உன்னதப்பாட்டு வரையிலும் 1796ஆம் ஆண்டில் தீர்க்கதரிசன நூல்களும் பிரசுரிக்கப்பட்டன. இரேனியஸ் போதகர் மொழி பெயர்த்த முழு புதிய ஏற்பாடு 1827இல் வெளியிடப்பட்டது. 1840இல் முதல் முறையாகப் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சேர்ந்த ஒரே நூலாகத் திருமறை வெளியிடப்பட்டது. இதில் பெப்ரீஷியஸ் போதகருடைய

பழைய ஏற்பாட்டு மொழியாக்கமும் இரேனியுஸ் ஐயருடைய புதிய ஏற்பாட்டு மொழியாக்கமும் அடங்கியிருந்தது. பெர்சிவல் போதகர் தலைமையில் அமைந்த குழு 1847 அல்லது 1848இல் ஒரு மொழியாக்கத்தை முடித்திருந்தது. சீர்திருத்தத் திருச்சபைக் கிறித்தவர்கள் பலராலும் இன்று வரை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்படும் 'பவர் மொழிபெயர்ப்பு' 1871இல் வெளியிடப்பட்டது[43]. இதைத் தொடர்ந்து 1881, 1885, 1936, 1949 ஆகிய ஆண்டுகளிலும் சீர்திருத்தத் திருச்சபைப் பிரிவுகளால் பல மொழி பெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினர் 1857, 1890, 1904, 1960 ஆகிய ஆண்டுகளில் திருமறையைப் பகுதியாகவும் முழுமையாகவும் தமிழில் மொழிபெயர்த்து, வெளியிட்டுள்ளனர்[44]. இன்றும் இருவகைத் திருச்சபையினரும் தனித்தனியாகவும் இணைந்தும் திருமறைத் தமிழ் மொழியாக்கப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு, தமிழில் விவிலியத் திருமறை 1715இல் தான் முதன்முதல் வெளியிடப்பட்டிருந்தாலும், அதற்குப் பல்லாண்டுகள் முன்னரே இம்முயற்சியில் இறையருள் தொண்டர்கள் பலர் ஈடுபட்டிருந்தனர். மேலும், பல்வேறு கிறித்தவ இலக்கியங்களை—கிறித்தவ உண்மைகளைத் தமிழில் எடுத்துரைக்கும் சிறுசிறு நூல்களைத் தமிழகத்திலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் இலங்கையிலும் இருந்து, இத்தொண்டர்கள் வெளியிட்டுள்ளனர். இந்தியாவில் முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட தமிழ் நூலே, ஒரு கிறித்தவநூல்தான் என்பது குறிப்பிடத்தக்கதொரு வரலாற்றுண்மை. 1577இல் இயேசு சங்கத்தைச் சேர்ந்த (Jesuit Society) ஹென்றிக்ஸ் (H. Henrigues) என்பவர் கொல்லத்தில் 16 பக்கங்கள் கொண்ட — 'Doctrina Christam' என்ற போர்த்துகேயப் பெயர் கொண்ட ஒரு வினாவிடை நூலை வெளியிட்டார். இதுவே தமிழின் முதல் அச்சு நூலாகும். இதே நூலைச் சற்று விரிவுபடுத்தி 112 பக்கங்களோடு இவரே 1579இல் வெளியிட்டார்[45]. இதனைத் தொடர்ந்து வேறுபல கிறித்தவ நூல்களும் காலந்தோறும் கிறித்தவ அருள்தொண்டர்களால் வெளியிடப்பட்டுத் தமிழகத்தில் கிறித்தவ உண்மைகளைப் பரப்பி வந்தன.

மேலும், ஐரோப்பிய அருள் தொண்டர்கள், 18, 19ஆம் நூற்றாண்டுகளிலும் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் பல்வேறு வெளியீட்டுக் கழகங்கள் வாயிலாகத்[46] தொடர்ந்து நூல்களை வெளியிட்டு, தமிழகத்தில் கிறித்தவக் கருத்துக்களைப் பரப்பி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இரு பேரிலக்கியங்களின் காலம் பற்றியும் இதுவரை விளக்கப்பட்ட செய்திகளை இணைத்துப் பார்க்கும் வகையில், ச. மாடசாமி அவர்களின் பின்வரும் கருத்துக்கள் இங்குக் கருதத்தக்கன.

> 'சித்தர்களின் காலத்தைக் கணிக்கத் தமிழகத்தில் கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்களின் எழுச்சியை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.
>
> கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்களின் வருகைக்கு முன்னதாகச் சித்தர் நெறியைக் கொண்டு செல்ல முடியாது. 13, 14ஆம் நூற்றாண்டுகளிலேயே இஸ்லாமிய கிறிஸ்தவ சமயங்கள் தமிழகத்தில் நுழைகின்றன. சித்தர் நெறி விசிறப்பட்ட நெருப்பு போலக் கிளர்ந்தெழுவது, 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில் எனலாம். சித்தர்களின் மொழி நடையை ஆய்வோர், அது 15ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வைக்க முடியாதபடி அமைந்திருப்பதாகவே கருதுகின்றனர்'[47]

சித்தர் பாடல்களும் விவிலியமும் — கடவுட் கொள்கைகளின் ஒப்பாய்வு

பொதுவாக, உருவ வணக்க மறுப்பு, சடங்குகள்—பொய்த்தவ வேடங்கள் முதலியவற்றைக் கண்டித்தல், சாதிமறுப்பு, சமத்துவம் பேணல் முதலியனவற்றைச் சித்தர் இலக்கியங்கட்கும் விவிலியத்துக்கும் உரிய பொதுப் பண்புகளாக ஆய்வாளர் சுட்டுவர். மேற்குறித்தன போன்ற விவிலியக் கருத்துக்கள் பல, சித்தர் பாடல்களிலும் வலியுறுத்தப்படுகின்றன. எனினும், விவிலியத்தினும் காலத்தால்

பிற்பட்ட சித்தர் பாடல்கள் பலவும் இத்தகு கோட்பாடுகளையும் கருத்துக்களையும் பேசுவதால், விவிலியத்துடன் ஒன்றுபட்டுத் தோன்றினாலும் தமக்குரிய கருத்து மூலங்களை அவை வெளிப்படையாகச் சுட்டுவதில்லை. ஆனால் சிவவாக்கியர், அகத்தியர், போகர், சுப்பிரமணியர் முதலிய சித்தர்கள் பெயரால் அமைந்த பாடல்கள் சில, வெளிப்படையாகவே கிறித்தவச் சமயத்தைப் பற்றியும் விவிலியத்தைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. விவிலியத்துக்கும் சித்தர் பாடல்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமைக்கூறுகளை ஆயும் இவ்வாய்வு, இவ்விரு நிலைகளையும் உட்கொண்டே செய்யப்படுகின்றது. மறைமுகமாகவும் நேரடியாகவும் அமைந்த இவ்வொற்றுமைக் கூறுகள், சில தலைப்புகளின் கீழ் இங்கு விளக்கப்படுகின்றன.

அ. உருவ வணக்க மறுப்பு

சித்தர் பாடல்கள்

சித்தர்களின் கடவுட் கொள்கைகளில் முதன்மையானதாகவும் மிக வெளிப்படையானதாகவும் பலராலும் கருதப்படுவது, அவர்தம் உருவ வணக்க மறுப்பே ஆகும். மிக்க உணர்ச்சி வேகத்துடனும் கடுமையான சொற்பயில்வுகளோடும் சித்தர்கள் உருவ வழிபாட்டை மறுத்திருப்பது இவ்வாய்வில் முன்னரே கூறப்பட்டது. எனினும் இதற்குரிய விரிவான சான்றுகள் தனித்தனிச் சித்தர் பாடல்களினின்று இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

உருவ வணக்கத்தைக் கண்டித்துப் பேசும் சித்தர்களுள் முக்கியமானவராக சிவவாக்கியரைக் கருதலாம். உள்ளுக்குள் இறைவனை உணராமல், கல்லுக்குள் கடவுளைக் காண முயல்வோரின் பேதைமையை சிவவாக்கியர் கண்டிக்கிறார். செங்கல்லிலும் கருங்கல்லிலும் சிவந்த சாதி லிங்கத்திலும் செம்பிலும் தராவிலும் சிவன் இருப்பான் என்று சொல்கிறீர்களே! உம்மையே நீர் அறிந்து உணர்ந்து கொண்டால் அந்த அம்பலவாணனைக் கண்டு கொண்டதாகவும் என்று ஒரு பாடலில் கூறுகிறார்[48]. இன்னொரு பாடலில், 'நீங்களாகப் பண்ணி வைத்த கல்லைப் பழம்பொருள் என்று எண்ணிக் கொண்டு அதை வழிபடுகிறீர்களே!

உங்களைப் படைக்கவும், உருப்பண்ணவும் அழிக்கவும் வல்ல இறைவனை நெஞ்சத்தில் நினையுங்கள்' என்று பேசுகிறார்[49]. பல்வேறு வடிவங்களில் உருவமைக்கப்படும் தெய்வங்களை வேறொரு பாடலில் நகையாடுகிறார்[50]. பிறிதொரு பாடலில், மரம், கல், வெள்ளி, செம்பு, இரும்பு, இவைகளால் நாம் அமைத்துப் போற்றி வழிபடும் தெய்வச் சிலைகள் நம் தொல்லையை அகற்றி இன்பசுகம் தருமா என்ற வினாவினை எழுப்பி, அதற்கு இல்லை இல்லை என்று ஐந்து முறை விடை தருகிறார்[51]. 'கட்டையால் செய் தேவரும்' எனத் தொடங்கும் பாடலும் இதே கருத்தமைந்ததாகும்[52].

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களிலும் உருவ வணக்க மறுப்புக் காணப்படுகிறது. சிவவாக்கியர் பாடல்களைப் போல் அத்தகு மறுப்புப் பாடல்கள் எண்ணிக்கையில் மிகுதியாக அமையாவிட்டாலும் உணர்ச்சி வேகத்துடன் உள்ளத்தில் ஊடுருவும் வண்ணம் அமைந்துள்ளது.

'உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி?
உலகத்தின் மூடர்களுக்கு உண்டோ உணர்ச்சி?
புளியிட்ட செம்பில் குற்றம் போமோ? அஞ்ஞானம்
போகாது மூடருக்கென்று ஆடாய் பாம்பே"

என்று அவர் பாடுகிறார்[53] அண்மைக் காலத்தில் வெளிவந்த சமுதாயச் சீர்திருத்தத் திரைப்படம் ஒன்றிலும்[54] இப்பாடல் வரிகள் இடம் பெற்றமை, மக்கள் மேல் இப்பாடல் ஏற்படுத்திய பாதிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

குதம்பைச் சித்தர் பாடல்களிலும் கூரிய சொற்களால் உருவ வழிபாடு கண்டிக்கப்படுகிறது.

'கல்லினைச் செம்பினைக் கட்டையைக் கும்பிடல்
புல்லறிவாகுமேடி குதம்பாய்
புல்லறிவாகுமேடி'[55]

நீண்ட குரங்கினை நெடிய பருந்தினை
வேண்டப்பயன் வருமோ—குதம்பாய்
வேண்டப்பயன் வருமோ'[56]

என்பன சில சான்றுகள்.

அகத்தியர் பெயரால் அமைந்த பாடல்கள் பலவற்றிலும் உருவவழிபாடு கொச்சைச் சொற்களாலும், கடுமையாகவும் கண்டனம் செய்யப்படுவதை நிரம்பக் காணமுடிகிறது. சான்றாக,

'வாடுவார் நாமமென்றும் ரூபமென்றும்
வையகத்திற்கற் செம்பைத் தெய்வமென்றும்
நாடுவார் பூரணத்தை யறியா மூடர்
நாய்போலக் குரைத்தல்லோ ஒழிவார் காணே'[57]

என ஒரு பாடலில் பாடுகிறார். இன்னொரு பாடலில், சிவலிங்கம், விட்டுணுலிங்கம், வேதாந்தலிங்கம் முதலானவற்றையெல்லாம் விரித்துப்பார்த்தால் விரும்பத் தகாத வெறுப்புத் தான் உண்டாகும் என்று கடுமையாகச் சாடுகிறார்[58].

இவ்வாறு இவ்வாய்வில் சிறப்பாகக் கருதப்படும் சித்தர்கள் மட்டுமன்றி, மற்ற சித்தர்கள் பலரும் உருவ வழிபாட்டை மறுத்துப் பாடியுள்ளனர். திருக்கோயில் வழிபாட்டையும், திருத்தலங்களையும் புராண நம்பிக்கைகளையும், ஏற்றுப் பாடிய பட்டினத்தார் பாடல்களிலும் கூட உருவ வழிபாடு மறுக்கப்பட்டிருப்பதற்குச் சான்றுகள் உள்ளன[59].

'சுப்பிரமணியர் ஞான சைதன்யம்' என்ற தலைப்பில் அமைந்த பாடல் ஒன்று,

'நல்லோர்கள் விரதமிரார் திதிகள் பண்ணார்
நலமில்லாக் கற்செம்பை நமஸ்கரியார்
பொருந்தி நின்ற மரப்பாவை மண்ணை வேண்டார்'[60]

எனக் கூறுகிறது. 'முக்தி வழி' என்ற நூலில் அகத்தியர் பெயரால் அமைந்த பாடல் ஒன்று,

'அண்டரண்டம் கடந்து நின்ற ஜோதி தானும்
அவனிதனில் உழைந்த கல்லில் அமருமோ சொல்
எண்டிசையும் எவ்வுயிருமான சோதி
ஈனமரங்கல்லுகளிலிருப்பாரோதான்'[61]

எனக் கேட்கிறது.

கணபதி தாசரின் 'ஞானக்கும்மி', 'உருப்படுவெங்கல்லும் செம்பும் உண்மையாய்த் தெய்வமென்றே மருப்பினை மலரைச் சூட்டி மணியாட்டித் தூபங் காட்டி விருப்பமுற்றலைந்தாய்' எனப்பாடுகிறது62

இவ்வாறு பெரும்பான்மையான சித்தர்கள் உருவ வழிபாட்டை மறுத்தும் கண்டித்தும் பாடியுள்ளனர்.

விவிலியம்

கிறித்தவச் சமயத்தின் உயிர் நாடியான கடவுட் கோட்பாடுகளுள் உருவ வணக்க மறுப்பும் ஒன்றாகும். பழைய ஏற்பாட்டில் கடவுள், மோசேயின் மூலமாக, இசுரவேல் மக்கள்தம் வாழ்வில் பின்பற்ற வேண்டி முதன்மையான விதிமுறைகளாகப் பத்துக் கட்டளைகளை வழங்குகின்றார். அம்முக்கியக் கட்டளைகளுள் முதன்மையானது உருவ வணக்க மறுப்பேயாகும்.[63]

பழைய ஏற்பாடு முழுவதிலும் உருவ வணக்க மறுப்பும் கண்டனமும் மிக வன்மையாகவும் கடுமையாகவும் அமைந்திருக்கக் காணலாம். இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகக் கருதப்பட்ட இசுரவேலர்கள் இறைவனுக் கெதிராக இழைத்த பாவங்களுள் தலைமையானதாகப் பழைய ஏற்பாடு கண்டிப்பது இவ்வுருவ வணக்கத்தையே ஆகும். இதற்குரிய காரணங்கள் பற்றி மறைநூல் வல்லுனர்களும் வரலாற்றாய்வாளர்களும் பல்வேறு கருத்துக்களை

வெளியிட்டுள்ளனர்[64]. அவற்றுள் முக்கியமானதாகக் கருதத்தக்கது, இசுரவேலரின் சமுதாயச் சூழலேயாகும். உருவ வணக்கத்தை மறுத்து, 'ஏகோவா' என்னும் ஓர் இறையையே தொழுது வந்த இசுரவேலரைச் சுற்றிலும் உருவ வழிபாட்டிலும் பல தெய்வ வணக்கத்திலும் ஊறி மூழ்கிக் கிடந்த பல்வேறு இன மக்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வினத்தவர்க்கும் அந்நாட்டவர்க்கும் இசுரவேலருக்கும் இடையில் எப்போதும் போர்களும், பூசல்களும் மூண்டு வந்தன. இறையருளால் இப்போர்கள் பலவற்றிலும் இசுரவேலர் பிறரை மேற்கொண்டனர். இந்நிலையில் அவர்கள் உருவ வழிபாட்டுக்கு இணங்குதல் என்பது பிறவினத்தாரிடம் முழுக்க அடிபணிவதற்கும் தங்களைக் காத்து வழி நடத்தி வரும் 'ஏகோவா' இறைவனுக்கு நன்றித் துரோகம் செய்வதற்கும் ஒப்பாகும். ஆகவேதான் உருவ வழிபாட்டுக்கு எதிராக இசுரவேலர்கள் அழுத்தமாக எச்சரிக்கப்படுகின்றனர். இதற்குரிய வேறு சில அகச் சான்றுகளும் பழைய ஏற்பாட்டிலிருந்து இங்குத் தரப்படுகின்றன. உபாகமம் என்ற நூலின் ஏழாம் அத்தியாயத்தில் இசுரவேலர்க்குத் தரப்படும் இறைக்கட்டளைகள் சிலவற்றைக் காணலாம்.

> 'நீங்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டியது என்னவென்றால்; அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப் போடவேண்டும்'[65]
>
> 'அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய் ... அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்'[66]

எபிரேய மொழியின் துதிப்பாடல்களாக அமையும் 'சங்கீதங்கள்' நூலிலும் உருவ வணக்கத்தை மறுத்தும், ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தியும் பல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. சில சான்றுகள்;

'சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள் தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்'[67]

'சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப் பற்றிப் பெருமை பாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக; தேவர்களே, நீங்களெல்லாரும் அவரைத் தொழுது கொள்ளுங்கள்'[68]

'அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும் மனிதருடைய கைவேலையுமாயிருக்கிறது[69]

ஏசாயாவின் தீர்க்கதரிசன ஆகமத்தில் உருவழிபாட்டை எள்ளி நகையாடியும் அவ்வழிபாடு செய்வோரைக் கண்டித்தும் விரிவாகப் பேசப்படுகின்றது. உயிரும் உணர்வுமற்ற பல்வேறு பணிகளுக்குப் பயன்படுகிற மரங்களில் ஒரு துண்டை எடுத்து, 'இது வழிபாட்டுக்கும் வணக்கத்துக்குமுரிய தெய்வம்' என்று உரைப்போரின் பேதைமையை அத்தீர்க்கர்[70] வழியாக வெளிப்படும் இறைவாக்குக் கண்டித்துரைக்கிறது.

பழைய ஏற்பாட்டில் இவ்வாறு விரிவாகவும் வெளிப்படையாகவும் பேசப்படும் உருவ வணக்க மறுப்பு, புதிய ஏற்பாட்டில் அத்துணை விரிவாகப் பேசப்படவில்லை. இதற்குக் காரணம், பழைய ஏற்பாட்டு யூத சமயத்தின் மூலக் கோட்பாடுகளின் மேல் நிறுவப்பட்ட கிறித்தவ சமயத்துக்கு, உருவ வணக்க மறுப்பு என்பது அடிப்படைக் கொள்கையாகும். ஆகவே, அதனை அடிக்கடி வலியுறுத்த வேண்டிய அவசியம் எழவில்லை. எனினும், புனித பவுலடிகளார் கொரிந்து என்னும் நகரில் அமைந்த திருச்சபையின் மக்களுக்கு உருவ வணக்கத்தின் கேடுபாடுகளையும் அதனைத் தவிர்க்க வேண்டிய வழிமுறைகளையும் பன்முறை தெளிவுபடுத்துகின்றார். ஓரிடத்தில் விக்கிரகவழிபாடுகளுக்கு விலகியோட வேண்டும் என்று எச்சரிக்கின்றார்[71]. விக்கிரகங்களையும் வழிபட்டுவிட்டு, இயேசுபெருமான் நிறுவின நற்கருணை விருந்திலும் பங்கு பெறுவது பொருந்தாச் செயலென்று கண்டிக்கிறார்[72]. உருவ

வணக்கம் செய்வாரோடு ஓரிறைக் கோட்பாடுடைய கிறித்தவர்க்கு உறவேது என்று பிறிதோரிடத்தில் வினவுகிறார்[73]. உருவ வணக்கம் செய்பவர்கள் 'இறையரசுக்குள் வரவியலாது' என்றே தெளிவாகக் கூறுகிறார்[74]. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணுதலை இயன்றவரைத் தவிர்த்து விடுதல் வேண்டுமென்று அறிவுறுத்துகின்றார்[75]. வேறுசில இடங்களிலும்[76] உருவ வணக்க மறுப்பைப் பற்றிய செய்திகளைப் புதிய ஏற்பாட்டில் படிக்க முடிகின்றது.

ஒப்பீடு

இவ்வாறு இரு பேரிலக்கியங்களும் உருவ வழிபாட்டைக் கடுமையாகவும் வெளிப்படையாகவும் கண்டனம் செய்கின்றன. உருவ வழிபாட்டை மறுப்பதற்குச் சித்தர்களும் விவிலிய எழுத்தாளர்களும் காட்டும் காரணங்களும் பல இடங்களிலும் ஒன்றாகவே அமைகின்றன. இரண்டு இணைச் சான்றுகள் மட்டும் கீழே தரப்படுகின்றன. பட்டினத்தாருடைய 'சொல்லிலும் சொல்லின் முடிவிலும்' எனத் தொடங்கும் பாடலையும்[77] விவிலியத்தில் இடம் பெறும் சங்கீதக் கருத்தையும்[78] இணைத்துப் பார்க்கலாம். சிவவாக்கியரின் பாடல் ஒன்றும், ஏசாயா தீர்க்கதரிசன நூலின் சில வசனங்களும் ஒரே கருத்தைச் சொல்லுகின்றன.

> 'ஓசை பெற்றகல்லை நீர் உடைத்துருக்கள் செய்கிறீர்
> பூசை பெற்ற கல்லிலே பூவும் நீறுஞ் சாற்றுவீர்
> வாசலிற் பதிந்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
> ஈசனுக் குகந்த கல்லிரண்டு கல்லுமல்லவே'

இது சிவவாக்கியரின் பாடல்[79].

> 'தச்சன் உளியால் ஒரு சிலை செதுக்கி அதன்முன்
> தெண்டனிடுகிறான். அதில் பாதியை அடுப்பெரிக்கிறான்.
> மற்றொரு பாகத்தைப் பயன்படுத்தி இறைச்சி சமைத்துச்
> சுவையான உணவுப் பொருட்களைத் தயாரித்து வயிறாரச்
> சாப்பிடுகிறான். சாப்பிட்டபின் குளிர்காய்கிறான். 'நன்றாக

குளிர் காய்ந்தேன்; நல்ல தீ வளர்த்தேன்' என்று சொல்லிக் கொள்கிறான். மீதியைக் கொண்டோ தனக்கொரு தெய்வமாகச் சிலை செதுக்கி, 'என்னை மீட்டருள்க!' என மன்றாடுகிறான்.[80]

இவ்வாறு உருவ வணக்க மறுப்பு என்னும் கருத்தில் சித்தர் இலக்கியங்களும் விவிலியமும் ஒன்றுபட்ட கருத்துக்களை ஒன்றுபட்ட குரலில் பேசுகின்றன.

ஆ. பல தெய்வ — சிறுதெய்வ வணக்க மறுப்பு

சித்தர் பாடல்கள்

சித்தர்களின் கடவுட் கோட்பாடுகளில், உருவ வணக்க மறுப்புக்கு அடுத்த நிலையில் பெரிதும் பேசப்படுவது, அவர்தம் ஒரிறைக் கோட்பாடே எனலாம். உருவ வணக்கம் என்பது, பல தெய்வ—சிறு தெய்வ வணக்கத்தோடு எப்போதும் இயைபுடையது என்பது வெளிப்படை. ஆதலின், உருவ வணக்கத்தை மறுக்கும் சித்தர்கள் பலரும், பலதெய்வங்களையும் சிறு தெய்வங்களையும் வணங்குவதை மறுப்பதும் எள்ளி நகையாடுவதும் இயல்பே. 'ஒன்றே கடவுள்' என்ற அடிப்படையில் நின்று, அவர்கள் இவ்வாறு பேசுவதனை அவர்தம் பல்வேறு பாடல்களால் தெள்ளிதின் உணரலாம்.

சிவவாக்கியர் பாடல்கள் பலவற்றிலும் பலதெய்வ வணக்கம் கடுமையாகச் சாடப்படுவதனைக் காணமுடிகின்றது. 'எல்லாம் வல்ல இறைவனை இதயத்தால் நன்கு உணர்ந்தவர்கள் கண்ட கோயில் தெய்வம் என்று கையெடுப்பதில்லையே' என்று துணிவுடன் கூறுகிறார்[81]. அண்டர்கோன்' ஆகிய இறைவனின் இருப்பிடத்தை அறிந்துணர்ந்த ஞானிகள்—வேதப்பொருளை நன்குணர்ந்த பெருமக்கள் இவ்வாறு செய்தலில்லை எனப் பிறிதொரு பாடலில் தெளிவுபடுத்துகிறார்[82]. 'உன் தெய்வம் என் தெய்வம்' எனப் பற்பல தெய்வங்கள் சொல்லி பாகுபாடு செய்வாரைக் கண்டிக்கும் அவரது பாடல் இது :

'எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரேர்
அங்குமிங்கு மாகி நின்ற வாதிமூர்த்தி யொன்றலோ
அங்குமிங்கு மாகி நின்ற வாதிமூர்த்தி யொன்றெனில்
வங்கவாரஞ் சொன்ன பேர்கள் வாய் புழுத்து மாள்வரே'[83]

ஒன்றான தெய்வத்தைக் கூறுபோட்டுப் பிரிக்கும் கொடுமையை இவ்வாறு அவர் வன்மையாகக் கண்டிக்கிறார்.

'பேய்கள் பேய்கள்' என்றும் சொல்லிவிட்டு அச்சத்தால் அவற்றையும் வணங்கும் மக்களை நோக்கி, அவர் தொடுக்கும் வினாக்களைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

'பேய்கள் பேய்கள் என்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள்
பேய்கள் பூசை கொள்ளுமோ பிடாரி பூசை கொள்ளுமோ
ஆதி பூசை கொள்ளுமோ அனாதி பூசை கொள்ளுமோ
காயமான பேயலோ கணக்கறிந்து கொண்டதே'[84]

'குல தெய்வம்' என்ற பெயரால் பல்வேறு சிறு தெய்வங்களை வணங்குவதையும் அவற்றுக்குப் பலிகள் இடுவதையும் சிவவாக்கியர் கண்டித்துப் பாடியுள்ளார்[85]. பின்னாளில் இராமலிங்க அடிகளார் சிறு தெய்வங்களை வணங்குவதையும் அவற்றுக்குப் பலியிடுதலையும் பற்றிப் பாடியதற்கு, இப்பாடல் முன்னோடியாகத் திகழ்கிறது[86].

இனி, அகத்தியர் பெயரால் அமைந்த பாடல்கள் பல, ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தியும், பல தெய்வ வணக்கத்தைச் சாடியும் பேசுகின்றன. 'சத்தியே பராபரமே 'ஒன்றே 'தெய்வம்'[87] 'ஒருவன் என்றே தெய்வத்தை வணங்க வேணும்[88] தானென்ன்ற தானே தானொன்றே தெய்வம்[89] மூச்சூரும் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல, மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்[90] ஆகிய அவரது பாடல் அடிகள் ஒன்றான இறைவனை உணர்த்திக் காட்டுவன. மேலும் மக்கள் தொழுகின்ற பல தெய்வங்களை அவர் மறுத்துச் சில பாடல்கள் பாடியுள்ளார்.

'பகீரதியும் கலைமகளாம் வாணிதாச்னும்
பார்வதியும் ஆறுமுகனும் பலபேர்தானும்
சகியாத மூர்த்திகளாம் இவர்கள் தானும்
சுத்த சிவனிருப்பிடமோ சாற்றுவீரே'[91]

என்பது அத்தகு பாடல்களுள் ஒன்று. 'தாரணியிற் பலதெய்வம் தொழவே வேண்டாம்[92] என்பது அவரது உள்ளக்கருத்தை உணர்த்தும் பாடலடியாகும்.

குதம்பைச் சித்தர் பாடல்கள் பலவற்றிலும் இக் கருத்தே மிக வன்மையாக வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாகச் 'சமய நிலை கூறல்' எனும் தலைப்பில் பல்வேறு வித இறைவணக்கங்களையும் சமய தத்துவங்களையும் குறிப்பிட்டுச் சாடிய பின்னர்,

'மெய்த் தேவன் ஒன்றென்று வேண்டாத பன்மதம்
பொய்த் தேவைப் போற்றுமடி — குதம்பாய்
பொய்த் தேவைப் போற்றுமடி[93]

என்று முடிவாகக் கூறுகின்றார்.

'செத்துப் பிறக்கின்ற தேவைத் துதிப்போர்க்கு
முத்திதான் இல்லையடி குதம்பாய்
முத்திதான் இல்லையடி'[94]

என்பது அவரது இன்னொரு பாடல். இதற்கு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் 'பிறந்து இறக்கும் சிறு தெய்வத்தை வணங்குவார், வீடுபேறு அடையார்" என உரை எழுதப்பட்டுள்ளது95. இன்னொரு பாடல்

'தேவரும் சித்தரும் தேடு முதல்வர்
மூவரும் ஆவாரடி—குதம்பாய்
மூவரும் ஆவாரடி'[96]

என அமைந்துள்ளது. இப்பாடலின் இரண்டாமடி சில பதிப்புகளில் 'மூவரும் ஆவாரோடி' என அமைந்து உள்ளது[97]. இப்படி மெய்யான இறைவன் ஒருவரே எனவும், பல தெய்வ வணக்கம் பொருந்தாதது எனவும் குதம்பைச் சித்தர் வலியுறுத்துகிறார்.

'போகர் சப்த காண்டம் 7000' எனும் நூலில் போகர் எனும் சித்தர் இன்று பலராலும் தொழப்படும் கிருஷ்ணன், கணபதி, வடிவேலர், சுப்ரமண்யர், வீரபத்திரன் முதலிய பலரும் மனிதரே அன்றித் தேவர்கள் அல்லர் எனப் பல்வேறு பாடல்களில் விரிவாக விளக்கியுரைக்கின்றார். சான்றுக்குச் சில வரிகள் :

'அதிதமாங் கணபதியு மென்ற நாமம்
அவனிதனில் மனிதரல்லால் வேறொன்றல்ல'
ஏச்சலுடன் இவர்கள் எல்லாம் மனிதரல்லால்
எழிலான தெய்வமென்று சொல்லொண்ணாதே'[98]

சித்தர்கள் பிறரும் கூட பல தெய்வ—சிறு தெய்வ வணக்கங்களை மறுத்துப் பாடியுள்ளனர். 'சுப்ரமணியர் ஞானம்' என்ற நூலின் ஆசிரியர், அனைத்துச் சமயங்களையும் தெய்வங்களையும் மறுத்துப் பேசுகிறார்[99].

ஒரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தும் பிறிதொரு பாடல் 'கொங்கணர்' பெயரால் சில பதிப்புகளில் காணப்படுகிறது.

'கடவுளோன் ஒருவனுண்டே வேதம் ஒன்றே
காரண சற்குரு தீட்சை தானுமொன்றே
அடைவுடனே யவனருளும் பதவி ஒன்றே
யம்புவியின் மனுப் பிறவியானதொன்றே
நடைவழியும் பல மனுவோர்க் கொன்றே
யல்லானால் வேதமறு சமய நடக்கை வேறாத்

திடமுடைய தேவர் பலருண்டென் போர்கள்
தீ நரகுக்காளாவார் திண்ணந்தானே'[100]

பட்டினத்தாருடைய 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு எனும் பாடலடி[101] இக் கருத்துக்களைத் தொகுத்துரைக்கும் பொன்மொழி எனப் போற்றலாம்.

விவிலியம்

ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தும் உலகப் பெருஞ்சமயங்களுள் கிறித்தவமும் ஒன்று. பழைய ஏற்பாட்டில் இறைவனால் தரப்பட்டுள்ள பத்துக்கட்டளைகளில் முதற்கட்டளை, இறைவன் ஒருவரே; அவரையன்றி வேறு எதனையும் எவரையும் எவ்வகை வடிவிலும் வணங்குதலும் வழிபடுதலும் கூடாது' என்பதாகும்[102]. பழைய ஏற்பாட்டு நூல் முழுவதிலும் யூதர்கட்கு இக்கட்டளை மிக வலியுறுத்தப்பட்டுப் பலராலும் பல்வகையிலும் பேசப்படுவதைக் காணலாம். உயிரும், உணர்வுமற்ற விக்கிரகங்களை வணங்குதல் பேதைமை என்றும் பாவம் என்றும் அவ்வாறு 'ஏகோவா' இறைவனை விடுத்துப் பிற தெய்வங்களை வணங்குவோர் வேதனையுறுவர் எனவும் 'சங்கீதம்' எனும் திருப்பாடல் நூலில் பல இடங்களில் வலியுறுத்தப்படுகிறது[103]. பழைய ஏற்பாட்டில் அமைந்த வரலாற்று நூல்கள் பலவும், ஒன்றான இறைவனாகிய 'ஏகோவா'வை மறந்துப் பிற தெய்வங்களை வணங்கிய மன்னர்களும், மக்களும் அப்பாவத்தினால் இறைவனின் சினத்துக்கு இலக்காகி பெருந்தோல்வியும் பேரழிவும் பெருந்துயரும் அடைந்த பல நிகழ்ச்சிகளை விவரிக்கின்றன[104].

'ஏகோவா' இறைவனின் அடியவரான எலியாத் தீர்க்கதரிசிக்கும் 'பாகால்' எனும் அந்நிய தெய்வத்தைப் பின்பற்றும் நானூறு தீர்க்கதரிசிகளுக்கும் இடையில் நிகழ்ந்த சம்வாதத்தையும் அதன் இறுதி விளைவையும் 'இராஜாக்கள்' நூலின் முதற் பிரிவில் காணலாம்[105].

இவ்வாறு, பழைய ஏற்பாடு வலியுறுத்தும் 'ஓரிறைக் கோட்பாடு' யூத சமயத்தின் பின்வளர்ச்சியான கிறித்தவ சமயத்துக்கும் அடிப்படை அறமாக

அமைந்துள்ளது. இதனாற்றான் பாலை நிலத்தில் தம்மைச் சோதனைக்குட்படுத்த வந்த சாத்தானிடம் இயேசுபெருமான் 'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்பாயாக என மறைநூலில் எழுதியிருக்கின்றதே' எனப் பழைய ஏற்பாட்டு வாக்கியத்தை மேற்கோள் காட்டிக் பதிலளிக்கிறார்[106]. புதிய ஏற்பாட்டின் முக்கிய எழுத்தாளரான புனித பவுலடிகளாரும் இதனைத் தம் திருமுகங்கள் பலவற்றிலும் ஐயத்துக்கிடமின்றித் தெளிவுபடுத்துகின்றார். கிறித்தவச் சமயத்தின் மைய நம்பிக்கைகளைத் தொகுத்தும் செறித்தும் வெளிப்படுத்தக்கூடிய அவரது வாக்கியங்கள் சில பின்வருமாறு :

> 'கடவுள் ஒருவரே, கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே, இவர் அனைவரின் மீட்புக்கு ஈடாகத் தம்மையே கையளித்தார்'[107]

> 'உலகத்தில் தெய்வத்தின் சிலையென்பது ஒன்றுமே இல்லை. ஒரே கடவுளைத் தவிர வேறில்லை.

> இது நமக்குத் தெரிந்ததே; கடவுளர் எனக் கருதப்படுவோர் வானத்திலும் வையத்திலும் பலர் இருக்கலாம். இத்தகைய கடவுளர் பலரும் ஆண்டவர்கள் பலரும் இருந்தே வருகிறார்கள். நமக்கோ கடவுள் ஒருவரே; அவர் பரம தந்தை; அவரிடம் இருந்தே எல்லாம் வந்தன. அவருக்காகவே நாம் இருக்கிறோம். ஆண்டவரும் ஒருவர்தான்; அவரே இயேசு கிறிஸ்து'[108].

இவ்வாறு பலதெய்வ வணக்கத்தை வன்மையாக மறுத்து, இயேசு கிறித்துவின் வழியாக வெளிப்பட்ட ஒரே இறைவனை வணங்குதலை விவிலியம் வலியுறுத்தி விதிக்கின்றது.

ஒப்பீடு

இவ்வாறு பல தெய்வங்களையும், சிறு தெய்வங்களையும் வணங்குதலையும் அவற்றுக்குப் பலி முதலியனவற்றை இடுதலையும் இரு பேரிலக்கியங்களுமே கண்டித்துப் பேசுகின்றன. குறிப்பாகச் சிவவாக்கியரின் 'உங்கள் தேகம் நோய் பெறின்' என்ற பாடலையும்[109] தாவீதரசரின், 'வேறு தெய்வங்களை வழிபடுவோர் தங்கள் துன்பங்களைப் பெருக்கிக் கொள்கின்றனர். அவற்றுக்குச் செய்யப்படும் இரத்தப் பலிகளில்[110] நான் கலந்து கொள்ளமாட்டேன்' என்ற மொழிகளையும் ஒப்புநோக்கிப் பார்க்கலாம். இவ்வாறே, ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்திடுவதிலும் இரு பேரிலக்கியங்களும் ஒன்றுபட்டு நிற்பதனை மேற்குறித்த அகச்சான்றுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

இ. பிறவிச் சுழற்சி மறுப்பு

சித்தர்களின் பாடல்கள் வெளிப்படுத்தும் கடவுட்கொள்கைகளுள் ஒன்றாக மறுபிறவிக் கொள்கை அல்லது பிறவிச் சுழற்சி மறுப்பினையும் கருதலாம். எனினும் சித்தர் இலக்கியங்களை ஆழ்ந்து கற்ற ஆய்வாளர்களுள்ளும், அறிஞர்களுள்ளும் இது பற்றிய வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஒருசார் அறிஞர்கள் சித்தர்கள் பலரும் — குறிப்பாகச் சிவவாக்கியர்—மறு பிறவிக் கொள்கையை மறுப்பவர் என்று விளக்குகின்றனர். சாமி. சிதம்பரனார் தமது, 'சித்தர்கள் கண்ட விஞ்ஞானம், தத்துவம்' என்ற நூலில் சித்தர்களை மறுபிறவி மறுப்பாளராகக் காட்டுவதோடு சங்க காலத்திலேயே இத்தகு கருத்துடையோர் இருந்தீனைப் புறநானூற்றின் 214 ஆவது பாடலை மேற்கோள் காட்டி விளக்குகின்றார்[111]. எய்ச்.ஏ. பாப்லி[112] சாது செல்லப்பா[113] போன்ற கிறித்தவ எழுத்தாளர்களும் சித்தர்கள் மறுபிறவி மறுப்பாளர்கள் எனும் கருத்தைத் தம் நூல்களில் வலியுறுத்துகின்றனர். கமில் வி. சுவலபிள் 'சித்தர் பாடல்களில் கர்மா, மறுபிறவி எடுத்தல் முதலியன எளிமையாகவும், வன்மையாகவும் மறுக்கப்படுகின்றன' எனக் குறிப்பிடுகிறார்[114] க. கைலாசபதி, 'இந்திய மனத்தில் ஆழமாக ஊறிக் கிடக்கும் பல பிறவிக் கோட்பாட்டை மறுப்பதற்குச் சிவவாக்கியர்

துணிந்தெழுகின்றார்' என்னே எழுதியுள்ளார்.[115] 'சித்தர் மெய்ப்பொருள்' என்றும் நூலின் ஆசிரியர் வி. பலராமய்யா, தம் நூலில் இக்கருத்தைக் குறிப்பிட்டு, இந்தத் தத்துவத்தைச் சிவவாக்கியர், திருவள்ளுவ நாயனார் ஆகிய இரு சித்தர்கள் மட்டுமே கூறுவதாகக் குறிப்பிடுகிறார்.[116] இவ்வறிஞர்கள் அனைவரும் தம் கருத்துக்கு ஆதாரமாகச் சிவவாக்கியரின் பின்வரும் பாடலைக் குறிப்பிடுவது கருதத்தக்கது.

> 'கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
> உடைந்த சங்கினோசையும் உயிர்களும் உடல்புகா
> விழுந்த பூவுதிர்ந்த காயும் மீண்டுபோய் மரம்புகா
> இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே[117]

இப்பாடல் இறைநிலை கண்ட உயர் யோகிகட்கே பொருந்துமெனவும் அத்தகு ஞானச் சித்தரே பிறவிகளைக் கடந்தவர்கள் என்றும் அறிஞர் சிலர் சுட்டுகின்றனர்[118]. இக்கருத்துடைய அறிஞர்கள் சான்று காட்டக் கூடிய பாடல் ஒன்று, சிவவாக்கியர் பெயரால் பதினெண் சித்தர் ஞானக் கோவையில் காணப்படுகிறது.

> 'அல்லல் வாசலொன்பது மறுத்தடைந்த வாசலும்
> சொல்லும் வாசலோரைந்தும் சொம்மிவிம்மி நின்றதும்
> நல்ல வாசலைத் திறந்து ஞான வாசலூடு போய்
> எல்லை வாசல் கண்டவர் இனிப் பிறப்பதில்லையே'[119]

என்பது அப்பாடல். எனினும் சிவவாக்கியர் வேறு சில பாடல்களில் ஆத்துமம் அனாதியோ?[120] உடம்பு உயிர் எடுத்ததோ? உயிர் உடம்பு எடுத்தோ?[121] முதலிய வினாக்களை எழுப்பி, ஆத்துமம் அனாதியல்ல[122] என விடையிறுக்கிறார். இக்கருத்தினையும் 'கறந்த பால் முலைபுகா' என்னும் பாடலின் இறுதி அடியில் வெளிப்படும் அழுத்தத்தையும் கருதிப் பார்க்கும்போது, சிவவாக்கியர் மறுபிறவி மறுப்பாளராகவே தோன்றுகிறார். எனினும் இக் கருத்தை உறுதி செய்ய

இயலாத அளவு, அவரது பாடல்களிற் சில முரண்பாடுகளும் தோன்றுகின்றன. சிவவாக்கியர் பாடல்களில் காணப்படும் பாடபேதங்களும் இடைச் செருகல்களும் இதற்குக் காரணங்கள் ஆகலாம். அவை தனி ஆய்வுக்குரியன.

மேற்குறித்த கமில் வி. சுவலபிள், க. கைலாசபதி முதலிய அறிஞர்கள் கருத்துக்கு மாறாக பி. ஜெயா தம் ஆய்வேட்டில்,

> 'ஆத்துமாக்கள் மறுபிறவி எடுப்பது பற்றிய கொள்கையில், சித்தர்கள் இந்து சமயத் தத்துவத்திற்கு ஒத்த நம்பிக்கையையே கொண்டிருந்தனர். இருவினைகளையும் விட்டு நீங்குவதால் மட்டுமே பிறப்பு—இறப்பு ஆகியவற்றிலிருந்து, விடுதலை பெற முடியும் என அவர்கள் கருதினர்'

எனக் குறிப்பிட்டுள்ளார்[123].

சிவவாக்கியரை மறுபிறவி மறுப்பாளராகக் காட்டக்கூடிய இன்னொருபாடல், 'முக்திவழி' எனும் நூலில் காணப்படுகிறது.

> 'பல்லுயிர்களாய் மனு பிறக்குமென்று பாரிலே
> சொல்லும் வேதமோதுகின்ற துஷ்டர்காள் அறிகிலீர்
> வல்லதோர் சுரைவித்திட மாறிப்பாகலாகுமோ
> இல்லையே இறந்த பேரினிப் பிறப்பதில்லையே'[124]

அகத்தியர் பெயரால் அமைந்த பாடலொன்று மறுபிறவிக் கொள்கையை எள்ளி நகையாடி, தம் *சீவனத்துக்காகச்* சிலர் கதை கூறுவதாகப் பேசுகிறது[125]. பிறவிச் சுழற்சிக் கொள்கையை மிக வேகமாக மறுக்கும் இன்னொரு சித்தர் 'ஞானவெட்டியான் 1500' என்னும் நூலின் ஆசிரியராகிய திருவள்ளுவநாயனாராகும் மறுபிறவியை மறுக்கும் பல வாதங்களைத் தம் பாடலில் அவர் எடுத்து வைக்கிறார். வேரற்றமரம் துளிர்க்காதது போல, செத்த சவம் மீண்டும் உலகில்

மழலையாக வந்து பிறப்பதில்லையெனவும் 'மறுபிறவிக்கொள்கை' பேசிப் பலரும் பிறரிடம் பொருள் பறிப்பதாகவும் பாடுகிறார்[126].

இப்பாடற் கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது சித்தர்களுள் ஒரு சாரார், மறுபிறவிக்கோட்பாட்டை உறுதியாக மறுத்திருப்பது புலனாகிறது.

விவிலியம்

மனித ஆன்மா பல பிறவிகள் எடுத்து இறுதியில் முக்திநிலை அடையும் எனும் கோட்பாட்டை மறுக்கும் பெருஞ்சமயங்களாக யூதமும் கிறித்தவமும் இசுலாமும் விளக்குகின்றன. கிறித்தவ சமயத்தின் இது தொடர்பான நம்பிக்கையை, புதிய ஏற்பாட்டிலுள்ள எபிரேயர் எனும் தலைப்பிட்ட நூலின் பின்வரும் வசனங்கள் தெரிவிக்கின்றன.

> 'அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறித்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்[127].

இவ்வாறு, மனித வாழ்க்கையில் மரணம் என்பது மனிதரனைவருக்கும் விதிக்கப்பட்ட இறைவிதி என்பதும், அம்மரணத்துக்குப் பின் மனிதரனைவரும் இறைவனால் தாம் தம் வாழ்க்கையில் ஆற்றிய செயல்களுக்கேற்ப நியாயம் தீர்க்கப்படுவர் என்பதும் அந்நியாயத் தீர்ப்பின் முடிவு, நிலையான மோட்ச வாழ்வாக அல்லது நரகத் தண்டனையாக அமையும் என்பதும் கிறித்தவம் உணர்த்தும் உறுதியான நம்பிக்கைகளாகும். இந்த இறுதியான—இறைவனின் நடுத்தீர்ப்புப் பற்றி இயேசுபெருமான் தெள்ளத் தெளிவாகத் தமது போதனைகளில் குறிப்பிடுகின்றார். இறைவன் மேலும், இறைமகனாகிய தம்மேலும் வைக்கும் விசுவாசம்[128] ஏதுமற்ற எளியவர்க்கு இயற்றும் கருணைச் செயல்கள்[129]

ஆகியவற்றின் அடிப்படையில் அனைத்து மனிதரும் இறைவனால் தீர்க்கப்படுவர் என்று இயேசுபெருமான் விளக்கியுள்ளார். புதிய ஏற்பாட்டின் இறுதி நூலான வெளிப்படுத்தல் ஆகமம் இந்த நியாயத் தீர்ப்பு நிகழும் காட்சியைப் பின்வருமாறு வருணிக்கிறது.

> 'பின் வெண்மையான பெரியதோர் அரியணையையும் அதில் வீற்றிருப்பவரையும் கண்டேன். அவருடைய முன்னிலையில் மண்ணகமும் விண்ணகமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. இறந்திருந்த சிறியோர் பெரியோர் அனைவரும் அரியணை முன் நிற்கக் கண்டேன். அப்போது ஏட்டுச் சுருள்கள் பிரிக்கப்பட்டன. 'வேறொரு சுருளும் பிரிக்கப்பட்டது. அது வாழ்வு நூல். இறந்தவர்களின் செயல்கள் அச்சுருள்களில் குறித்திருந்தன. அச் செயல்களுக்கேற்ப அவர்களுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது'[130]

இந்த இறுதித் தீர்ப்பைப் பற்றிய நம்பிக்கை புதிய ஏற்பாட்டில் மட்டுமன்று, யூத சமயத்தின் வேத நூலான பழைய ஏற்பாட்டு நூல்களிலும் வெளிப்படுகின்றது[131].

இவ்வாறு விவிலியம் இறுதி நியாயத் தீர்ப்பைப் பற்றி உறுதியுடன் பேசுவதால், மனிதர் இறந்த பிறகு மீண்டும் பல பிறவிகள் எடுப்பர் எனும் கருத்துக்கும் கோட்பாட்டுக்கும் கிறித்தவ நம்பிகையில் இடமே இராது போகிறது.

ஒப்பீடு

இவ்வாறு சித்தர் இலக்கியங்களில் சிலவும் விவிலியமும் மறுபிறவிக் கோட்பாட்டை மறுத்தும் பேசுகின்றன. இந்து சமயத்தத்துவத்தில் மிகவும் அழுத்தமாகவும் ஆழமாகவும் ஊறிக் கிடக்கின்றன மறு பிறவிக் கோட்பாட்டைப் பிற்காலச் சித்தர்கள் எனக் கருதத்தக்க சிவவாக்கியர், அகத்தியர், திருவள்ளுவ நாயனார் முதலிய சித்தர் சிலர் மட்டும் துணிவுடன் மறுத்திருப்பதற்கு அவர்கள்

மேல் கிறித்தவ சமயக் கருத்துக்கள் ஏற்படுத்திய பாதிப்பு காரணமாகலாம் எனக் கூறலாம்.

ஈ. சாதி பேத எதிர்ப்பு

சித்தர் இலக்கியங்கள், தாம் வாழ்ந்த சமுதாயத்தில் நிலவிய பல்வேறு கொடுமைகளுக்கு எதிராகச் சித்தர்கள் எழுப்பிய கண்டனக் குரலுக்குச் சான்று பகர்கின்றன. அவ்வாறு, சித்தர்கள் தம் இலக்கியங்களில் கண்டித்த சமுதாயக் கொடுமைகளுள், சாதிப் பாகுபாடு முதன்மையானது, சாதி பேதங்களையும் அதனால் சமுதாயத்தில் நிலவிய ஏற்றத் தாழ்வுகளையும் கண்டித்தும் மறுத்தும் பேசாத சித்தர்களே இல்லை எனலாம். சித்தர்களின் இந்தச் சாதி பேத எதிர்ப்பை, அவர்தம் கடவுட் கொள்கைகளுள் ஒன்றாகச் சுட்டுவது பொருந்துமா? அதனை அவர்தம் சமுதாயச் சீர்திருத்தக் கருத்தாகக் கொள்ளுவதன்றோ பொருந்தும் என்பன போன்ற வினாக்கள் எழலாம். எனினும், நம் சமுதாயத்தில் நிலவும் சாதிப் பிரிவுகள் வேத—புராண சாத்திரங்களின் அங்கீகாரத்தைப் பெற்றனவாகவும், மக்களின் சமய நம்பிக்கைகளோடு தொடர்புடையனவாகவும் விளங்குகின்றன. ஆகவேதான், சாதி பேதங்களை மறுக்கும் சித்தர்களும் அதனை வெறும் சமுதாயப் பிரச்னையாக மட்டுமே கருதாது சமயப் பிரச்னையாகவும் கருதித் தம் கருத்துக்களையும் கண்டனங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் அகச் சான்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

சாதி மறுப்புப் பாடல்களை மிகக் கடுமையான நடையில் பல்வேறு கோணங்களில் பாடிய சித்தர்களில் சிவவாக்கியர் முன்னணியில் நிற்பவர்.

> 'சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெல்லாம்
> பூத வாசல் ஒன்றல்லோ பூதமைந்து மொன்றல்லோ'
> காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன்னொன்றலோ
> சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே[132]

என மனிதனின் பிறப்பு மூலத்தைச் சுட்டி உவமை நயத்தோடு கேட்கிறார். ஒரே பொன் பல வடிவங்களில் பலவகை அணிகலங்களாகச் செய்யப்படுவது

போல, ஒரே மூலத்திலிருந்து ஒரே வகையாகப் பிறக்கும் மானிடர்களை வடிவ வேறுபாட்டாலோ நிற வேறுபாட்டாலோ சாதிகளாகப் பேதப்படுத்துவது குற்றம் என்று தெளிவுபடுத்துகிறார்[133]. அனைத்துக்கும் மூலமான இறைவனே பற்பல வடிவங்களில் பல்லுயிர்களாகக் காட்சியளிக்கின்றான் என்ற ஞான நிலையை நாம் எய்தி விட்டால், சாதி பேதங்கள் சொல்லும் தவற்றினைச் செய்ய மாட்டோம் என்பது அவர் துணிபு. இதனை

'ஆதியான தொன்றுமே அநேகநேக ரூபமாய்
சாதிபேத மாயெழுந்து சர்வ சீவனானபின்
ஆவியோடு ஒடுகின்ற மீண்டுமந்த சென்மமாம்
சோதியான ஞானியர்க்குஞ் சுத்தமாயிருப்பரே'[134]

என்ற பாடல் விளக்குகிறது.

ஆதிமூலமாக நிற்கும் ஆண்டவனைத் தம்முள் பேதியாமல் பெற்றுணர்ந்த ஞானிகளுக்குச் சாதி பேதமென்பது சற்றுமில்லை என்று இன்னொரு பாடலிலும் வலியுறுத்துகிறார்[135] கடவுள் நிலையைக் காட்டிச் சாதி பேதத்தை மறுக்கும் சிவவாக்கியர், தம் கருத்தை நிலைநாட்ட மனித உறவுகளைக் காட்டி அழுத்தமாக வாதிடவும் துணிகிறார். 'எருமையும் பசுவும் புணருமானால் சாதி மாறிக் கன்று பிறக்கலாம். ஆனால் ஒரு வேதியனும், புலைச்சியும் உறவு கொள்ளும்போது மனித குலத்தைச் சாராத வேறொரு உயிரும் பிறப்பதில்லை! ஏன்? என்று வினவுகிறார்.[136] இதே வாதத்தை, 'பறைச்சி யாவது ஏதடா? பனத்தியாவது ஏதடா?' என்ற பாடலிலும் அவர் எடுத்துரைப்பதைக் காணலாம்[137]

பாம்பாட்டிச் சித்தர் 'சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்' என உறுதிபட முழங்குகிறார்[138].

குதம்பைச் சித்தரோ, 'சாதி வேற்றுமை இன்மை' என்ற தனித்தலைப்பில் 9 கண்ணிகள் பாடியிருக்கிறார். 'இறைவன் தன் படைப்பில் சிலரை உயர்வாகவும் சிலரைத் தாழ்வாகவும் படைக்கவே இல்லை. இத்தகு பேதங்கள் மனித

கற்பனைகளும் கட்டுக்கதைகளும் ஆகும். நீதிநெறியோடு வாழ்பவனே உயர் சாதியினனாகப் போற்றப்பட வேண்டும். சாதி பேதம் பேசுவோர் இறைவனின் சோதியைக் காணாதவர்கள்; உண்மையில் ஆண் பெண் எனும் இரு பிரிவையன்றி, வேறு சாதிகள் இல்லை; பேசுவதும் வீண் என்பது அவர் பாடல் கருத்துக்களின் தொகுப்புரை[139].

அகத்தியச் சித்தரின் பாடல்கள் பல சாதி பேதங்களைச் சொல்லி அவற்றுக்கு வேத ஆதாரங்களைக் காட்டுவதன் மூலம் வயிறு வளர்ப்போரையும் மக்களை ஏய்ப்போரையும் கடுமையாகச் சாடுகின்றன[140]. போகரும் சைவமென்றும் சாதியென்றும் பலப்பல சொல்லிப் பாகுபாடு செய்து, அதன் மூலம் பிழைப்பு நடத்தும் ஏமாற்று மானிடர் பலரைச் 'சத்தகாண்டம் 7000' என்ற நூலில் கடுமையாகச் சாடுகின்றார்[141].

இவர்களேயன்றிச் சித்தர் பிறரும் சாதி பேதங்களை மறுத்தும் கண்டித்தும் பாடியுள்ளனர். காகபுசுண்டர் என்பவர் தற்கால வழக்கிலுள்ள கொச்சைச் சொற்களைப் பயன்படுத்தி, 'பார்ப்பார்கள்', என எவரும் இல்லையெனவும், சூத்திரர், வைசியர், சத்திரியர் எனப்படும் பாகுபாடுகள் பொய்ம்மையே எனவும் பாடுகின்ற பாடல்கள் சில பழம்பதிப்புகளில் காணப்படுகின்றன[142].

சாதிபேதத்தை மறுக்கும் வேறுசில சித்தர்களின் பாடல் வரிகள்

'சாதிபேதந் தனைக் குறித்து தயங்கி மயங்கித் தளராதே,
சாதியாவ தெவரறிவார்? சருவவுடலுமொன்றாச்சே[143]

(சிவானந்த போகம்)

'சாதி பேதங்கள் சொல்லுகிறீர் தெய்வம்
தானென்றொருவுடல் பேதமுண்டோ[144] (கொங்கணர்)

'சாதி குலமில்லை சற்குரு வறிந்தால்[145] (ஞான ஏற்றம்)

'ஆதி கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்ப தெக்காலம்[146] (பத்திரகிரியார்)

இவ்வாறு சித்தர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் சாதி பேதங்களையும் அவற்றுக்கும் காரணமான சாத்திரங்களையும் அவற்றைக் கற்பித்து அவற்றால் பிழைப்பு நடத்தும் மானிடரையும் கண்டனம் செய்வதை அவர்தம் பாடல்கள் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

விவிலியம்

'சாதி குலங்கள் எனும் மனிதக் கற்பனைகளின் அடிப்படையில் இறைவனின் இணையற்ற படைப்புகளாகிய மனிதர்களைக் கூறுபடுத்துவதையும் இழிவுபடுத்துவதையும் கொடுமைப்படுத்துவதையும் கண்டிக்கும் உலகச் சமயங்களுள் கிறித்தவமும் ஒன்று என்பதற்கு உலகவரலாறு சான்று பகர்கின்றது. கிறித்தவ சமயம் எந்தெந்த நாடுகளிலெல்லாம் பரவியதோ, அங்கெல்லாம் சாதிப் பாகுபாடுகள், நிறவெறி, இனவெறி முதலிய கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மக்களை விடுதலை செய்வதற்கு அச்சமயத் தொண்டர்கள் அரும்பணி புரிந்திருக்கின்றனர். இதற்குக் காரணம், இறைவன் மனிதர்கள் அனைவரையும் தம் சொந்தச் சாயலில் எந்தப் பாகுபாடுமின்றிப் படைத்ததாக விவிலியம் போதிக்கிறது[147]. மனிதகுல வரலாற்றில் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதற்கு ஒரு ஊடகமாகவும் கருவியாகவும் பிரதிநிதியாகவும் யூத குலத்தை இறைவன் தேர்ந்து கொண்டதாகப் பழைய ஏற்பாடு போதித்தாலும்[148] யூதர்களுக்கு எவ்விதச் சிறப்புத் தன்மையையும் விவிலியம் கற்பித்திடவில்லை. உண்மையில் உயிருள்ள ஒரே இறைவனை மனிதகுலம் முழுமைக்கும் வெளிப்படுத்தும் பொறுப்பும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதே பழைய ஏற்பாட்டு வரலாறும் உண்மைகளும் உணர்த்துவதாகும். இச்சிறப்பும் இறைவனின் காரணங் கூறவியலா அருளால் அவர்களுக்கு வழங்கப்பட்டதேயன்றி, அவர்தம் தகுதியுடைமையால் அன்று என்பதும் விவிலிய நூல்கள் விளக்கும் உண்மையாகும்[149]. இக்கருத்தினை அடியொற்றியே புதிய ஏற்பாட்டு நூல்களும் பேசுகின்றன. மீட்பு,

மனித குலத்துக்கு[150] யூதர்கள் வழியாக வருகிறது என்று கூறிய இயேசு 'மீட்பு மனிதர் அனைவருக்கும் உரியது' என்பதைத் தம் அடிப்படைப்போதனையாக வலியுறுத்திப் பேசி இருக்கின்றார்[151].

சாதிப் பாகுபாடுகள், வேத புராணங்களின் அடிப்படையில் கற்பிக்கப்படுவதையும் அங்கீகரிக்கப்படுவதையும் சித்தர்கள் கடுமையாகக் கண்டித்திருக்கின்றனர். ஆனால், அதே சாதிப் பாகுபாடுகளை மறுப்பதற்கும் கண்டிப்பதற்கும் விவிலிய வேத உண்மைகள் துணை செய்கின்றன. இறைவனின் படைப்பிலேயே சாதிப் பிரிவுகள் அமைந்திருப்பதாகப் புராணங்கள் பேசுகின்றன. ஆனால், மனித குலத்தின் அனைத்துப் பாகுபாடுகளையும் பிரிவினைகளையும் இறைமகன் இயேசு சிலுவையில் தகர்த்தெறிந்து மானிட இனத்தை ஒன்றுபடுத்திவிட்டதாக விவிலியம் போதிக்கிறது.

> 'கிறிஸ்துவே நம் சமாதானம்; அவரே யூத இனத்தையும் புறவினத்தையும் ஒன்றாக இணைத்தார். தடைச் சுவரென நின்ற பகைமையைத் தம் ஊனுடலில் தகர்த்தெறிந்தார்; இவ்விரு இனத்தாரிலிருந்து தமக்குள் புதியதொரு மனுக்குலத்தைப் படைத்துச் சமாதானம் செய்யும்படிப் பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை வெறுமை ஆக்கினார்'[152].

என்பது இவ்வுண்மையை விளக்கும் விவிலியம் பகுதிகளுள் ஒன்று.

இதே உண்மையைப் புதிய ஏற்பாட்டின் வேறு பல நூல்களிலும் தெளிவாகக் காணலாம். கலாத்தியர்[153] கொலோசேயர்[154] கொரிந்தியர்[155] ஆகிய மூன்று நூல்களிலும் பவுலடிகளார் இக்கருத்தை எழுதியுள்ளார். கொலோசேயருக்கு எழுதிய கடிதத்தில்,

> 'இப்புது வாழ்வில் கிரேக்கனென்றும் யூதனென்றும் இல்லை; விருத்த சேதனம் பெற்றவனென்றும் பெறாதவன் என்றும்

> இல்லை; மிலேச்சன் என்றும் சீத்தியன் என்றும் இல்லை;
> அடிமையென்றும் உரிமைக் குடிமகன் என்றும் இல்லை;
> கிறிஸ்துவே அனைவரிலும் அனைத்துமானவர்'

என்று அவர் தெளிவுபடுத்துகிறார்.[156]

இவ்வாறு அனைத்து மனிதரும் ஒன்றே என்னும் கருத்தை யூத சமயத்தின் அக்காலச் சூழலுக்கேற்ப விவிலிய நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. அத்துடன், கிறிஸ்து பெருமானின் சிலுவைத் தியாகமும் அதனால் கிட்டும் புதுவாழ்வுமே மனிதகுலம் அனைத்தையும் பாகுபாடுகளும், பிரிவினைகளும் நீக்கி ஒன்றுபடுத்தும் இறையருட் சாதனங்கள் என்ற உண்மையும் வலியுறுத்தப்படுகின்றது.

ஒப்பீடு

இவ்வாறு, விவிலியமும் சித்தர் பாடல்களும் சாதிப்பாகுபாடுகளை அழுத்தமும் தெளிவுமாக மறுத்து உரைக்கின்றன. சாதிப் பிரிவுகட்கு அன்று, மனிதர்கள் அனைவரின் இணையான சமநிலைக்கே இறைவனின் படைப்பும் இறைவன் தரும் அருள்வாழ்வும் அடிப்படைகள் ஆகின்றன என்ற உண்மையையும் இவ்விரு பேரிலக்கியங்களும் தெளிவுபடுத்தி வலியுறுத்துகின்றன. இதனாலேயே ச. மாடசாமி,

> 'பொதுவாகச் சமூகச்சீர்திருத்தம், சமத்துவம், சாதிமறுப்பு ஆகியவற்றை மேல்நாட்டார் கொள்கையாகக் கொண்டு, சித்தர் பாடல்களில் கிறிஸ்தவ, இசுலாமியச் செல்வாக்கைக் காண்பவர் உளர்'

என அறிஞர்கள் பலரது கருத்தைத் தம் நூலில் எதிரொலிக்கின்றார்.

உ. சடங்குகள் சாத்திரங்கள் முதலியவற்றை மறுத்தல்

சித்தர் பாடல்கள்

சித்தர்கள், சமுதாயத்தில் நிலவிய சாதிப் பாகுபாடுகளைக் கண்டித்ததோடு, அவை வளருவதற்கும் வேரூன்றுவதற்கும் துணையாக இருக்கின்ற சாத்திரங்களையும்

சடங்குகளையும் கூடக் கண்டித்தனர். 'சாதியினால் தீமையேயன்றி அணுவளவும் நன்மை இல்லை ஆதல் போல, சாத்திரத்தாலும் சடங்குகளாலும் கூட நன்மை இல்லை என்பது சித்தர்கள் கருத்து' என இரா. மாணிக்கவாசகம் கூறுகிறார்[157] கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்று இராமலிங்க அடிகளார் கூறியது[158] இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

பல்வேறு விதமான சடங்குகளையும் அவற்றுக்கு அடிப்படையாக அமைகின்ற சாத்திரங்களையும் மறுத்தும் எள்ளி நகையாடியும் பாடியவர்களில் சிவவாக்கியர் முன்னோடியாக விளங்குகிறார். பல்வேறு சமயச் சடங்குகள் நிகழுதற்குக் களமாக அமைகின்ற கோயிலையும் குளத்தையுமே அவர் சாடத் துணிகின்றார். 'கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா' என்றும் 'கோயில்பள்ளி ஏதடா குறித்து நின்றதேதடா' வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா' என்றும் துணிவுடன் வினவி[159] மனத்தையும் உடலையுமே(காயம்) கோயில்களாகத் தூய்மை செய்து அவற்றுள் இறைவனை உணர வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்,[160] மனத்தூய்மையும் உடற்றூய்மையும் இன்றிச் செய்யப்படும் வழிபாட்டுச் சடங்குகளால் நன்மையேதும் இல்லையென்பதே அவர் கருத்தெனத் தெளியலாம். பக்தர்கள் கூடி ஆரவாரமாகத் தேரிழுத்தல், காலை மாலை நீரில் முழுகுதல், குடுமியும் கோவணமும் தரித்தல், குண்டலங்கள் பூண்டு குளங்களில் முழுகுதல், தண்ணீரில் பலவகைச் சடங்குகள் செய்தல், சட்டையும் பட்டையும் இட்டு மணிகள் துலக்குதல் முதலிய பல்வகைச் சமய வழிபாட்டுச் சடங்குகளும் சிவவாக்கியரால் நகையாடப்படுகின்றன,[161] புறச்சடங்குகள் செய்வதன் போலித் தன்மையை சிவவாக்கியர் கண்டிக்கிறார். இதயத்துக்குள்ளே இறைவனைக் காண இயலாதவர்கள்தான், ஈசன் இங்கேயில்லை அங்கேயில்லை என்று அங்குமிங்கும் ஓடுகிறார்களெனப் புண்ணிய யாத்திரைகளையும் அவர் பரிகசிக்கின்றார்[162]. எச்சிற் பொருளை இறைவனுக்குப் படைத்தலாகாது எனுமொரு ஆசாரத்தை மறுத்தும் எதிர்த்தும் சிவவாக்கியர் சில பாடல்களில் வாதிடுகின்றார்[163]. அவ்வாறே புலால் உண்ணாமையையும் கூட மறுத்துப் பாடுகின்றார்[164]. உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கத்தை மிக வன்மையாகச்

சாடுகின்றார்165 இப்படிப்பட்ட பல்வேறு சமயச் சடங்குகளை மறுத்தும் அவற்றின் பொருந்தாமையை வெளிப்படுத்தியும் சிவவாக்கியர் பாடல்கள் பாடியுள்ளார்.

சமயச் சடங்குகளுக்கு ஆதாரமான சாத்திரங்களையும் தத்துவங்களையும் அவர் கண்டிக்கின்றார்[166]. 'சாவதான தத்துவச் சடங்கு செய்யும் ஊமைகாள்' என்றும் 'சட்டையிட்டு மணி துலக்கும் சாத்திரச் சழக்கரே'[167] என்றும் பரிகசிக்கின்றார்.

சிவவாக்கியருக்கு அடுத்த நிலையில் சாத்திரங்களையும் சடங்குகளையும் வெளிப்படையாகக் கண்டிப்பதில் முன்னிற்கிறார் எனலாம். 'சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்'[168] எனச் சித்த தத்துவத்தின் அடிப்படையையே அவர் வரையறுக்கின்றார். பல்வேறு சமயச் சடங்குகளும் அவற்றை நியாயப்படுத்தும் சாத்திரங்களும் ஒரு சிலர் தாம் பிழைப்பதற்காகச் செய்த தந்திரங்களே என்பது அவர் துணிவு.

'தயங்காமல் பிழைப்பதற்கே இந்த ஞானம்
சார்வாகப் பார்ட்டும் ஞானம் வேறே
மயங்குதற்கு ஞானம் பார் முன்னோர்கூடி
மாட்டினார் கதை காவ்ய புராணமென்றும்
இயலான ரசந்தனி லீப் புகுந்தாற் போலும்
இசைத் திட்டார் சாத்திரங்கள் ஆறென்றே தான்'[169]

என்பது அவர் பாடல்.

'நிசமான நால்வேதம் ஆறு சாஸ்திரம்
நினைவதுவை மறைத்து வைக்கும் பூர்ண சாஸ்திரம்
வசமான நால்மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குச மசக்குக் குசமசக்கு அப்பா அப்பா'[170]

என்பது 'யோக ஞான சாஸ்திரத் திரட்டு' எனும் தொகுப்பில் காணப்படும் அவரது பிறிதொரு பாடல். அகத்தியர் பெயரால் அமைந்த வேறுசில பாடல்களும் சாத்திரங்களையும் சடங்குகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

'சாஸ்திரமாங் குப்பையெல்லாம் தள்ளிப் போடு'[171]

என்றும் அவர் பாடியுள்ளார்.

பாம்பாட்டிச் சித்தரும் பல்வேறு இடங்களுக்குப் புண்ணிய யாத்திரை செல்லுதல் முதலிய சடங்குகளையும் சாத்திரங்களையும் கண்டித்துப் பாடியுள்ளார்.

'காடுமலை நதி பதி காசி முதலாய்க்
கால்கடுக்க ஓடிற்பலன் காணலாகு மோ'
'ஏட்டுச் சுரைக்காய்க் கறிக்கிங் கெய்திடாது போல்
எண்டிசை திரிந்துங் கதியெய்தலில்லையே'[172]

என அவர் தெளிவுபடுத்துகின்றார்.

குதம்பைச் சித்தரும் சாத்திர சடங்குகளைக் கண்டித்துப் பலபாடல்கள் பாடியுள்ளார். பற்பல கோயில்கள் தேடிச் சென்று வழிபடுவதனை மறுத்து,

'கோயில் பல தேடிக் கும்பிட்ட தாலுனக்
கேதும் பலன் வருமோ'[173] என்றும்

'மெய்த் தலத்தில்லாத மெய்ப் பொருளானவர்
பொய்த் தலத்தெய்த லுண்டோ'[174] என்றும்

'அன்பான பத்தர் அகக் கோயில் கர்த்தற்கே
இன்பான கோயிலடி'[175]

என்றும் பாடுகின்றார். இவரும் சிவவாக்கியரைப் போலவே நம் மனத்தையும் உடலையும் கோயில்களாகப் போற்றுமாறு வலியுறுத்துவது கருதத்தக்கது.

'காசி ராமேச்சுரம் எனக் கால்நோவப் புண்ணிய யாத்திரை செல்லுவதை இன்னொரு பாடலில்[176] நகையாடுகின்றார். 'அறியாமை அகற்றல்' எனத் தனித் தலைப்பே தந்து, மக்கள் செய்யும் பல சமயச் சடங்குகள் அவர்தம் அறியாமையின் விளைவாக அமைவதனைச் சுட்டிக் காட்டுகின்றார்[177]. சகுனம் பார்த்தல், நாள் பார்த்தல், அஞ்சனம் பார்த்தல், மாயவித்தை செய்தல், கருக்கலைத்தல் முதலிய பலவும் அஞ்ஞானச் சடங்குகள் எனவும் அக்கிரமச் செயல்கள் எனவும் தமது பாடல்களில் அவர் கண்டிக்கின்றார்[178]. சாத்திரச் சடங்குகள் பற்றிய அவரது கருத்துக்களின் தொகுப்புரையாக,

'வேதம் புராணம் விளங்கிய சாத்திரம்
போதனை ஆகுமடி — குதம்பாய்
போதனை ஆகுமடி'[179]
யாகாதி கன்மங்கள் யாவுஞ் சடங்குகள்
ஆகாத செய்கையடி — குதம்பாய்
ஆகாத செய்கையடி'[180]

ஆகிய இரு பாடல்கள் அமையத்தக்கன. 'போகர் சத்த காண்டம் — 7000' எனும் நூலின் ஆசிரியர், நல்ல நாள் கெட்டநாள் பார்த்தல், பல வகையான தீட்டுக்கள், சைவ உணவு பற்றிய ஆசாரங்கள், இறந்தவர்கள் தொடர்பான சாத்திரங்கள் முதலான பல்வகைச் சாத்திரங்களையும் சடங்குகளையும் கண்டித்தும் மறுத்தும் பாடியுள்ளார்[181].

சித்தர்கள் பிறரும் சடங்குகளையும் சாத்திரங்களையும் மறுத்தும் கண்டித்தும் பாடியுள்ளமைக்கு மிகப்பல அகச் சான்றுகள் உள்ளன.

'சாத்திர சூத்திரமும் அகப் பேய்
சங்கற்ப மான தெல்லாம்
பார்த்திடலாகா தே அகப் பேய்
பாழ்பலங் கண்டாயே[182] என அறிவுறுத்துகிறார்.

அகப்பேய்ச் சித்தர் . இவர் பெயரால் காணப்படும் ஒரு பாடல்

'தீர்த்தமாடினாலும் அகப்பேய் தீவினை போகாதே
காசிக்குப் போனாலும் அகப் பேய் கன் மந் தொலைலையாதே'[183]

என அமைந்துள்ளது. 'சாத்திரம் இல்லையடி சலனங் கடந்ததடி[184] எனவும் இவர் பாடியுள்ளார். இதே கருத்தைக் கடுவெளிச் சித்தர்,

'காசிக் கோடில் வினை போமோ—அந்தக்
கங்கையாடில் கதிதானு முண்டோ
பேசு முன் கன் மங்கள் சாமோ[185]
'போற்றும் சடங்கை நண்ணாதே'[186] எனவும் கூறுகின்றார்.

சாத்திரச் சடங்குகளை மறுக்கும் சித்தர் பிறரின் பாடல் வரிகள் சில கீழ்வருமாறு :

'பல பொருளாய்ச் சாத்திரங்கள் பார்க்க வேண்டாம்[187]
'தீர்த்தமு மாடிக் கொள்வீர் தெளிந்தவர் போல்
ஜெபதப சாஸ்திரங்கள் ஓதிக் கொள்வீர்
யாத்திரைத் தீர்த்தங்களாடி நதிகள் தோறும்
அலைந்தலைந்து சுற்றி அலைகின்றீர்
மாற்றியே பிறப்ப மென்று பொய்ப் பிரட்டு
வாய் சமத்து சாஸ்திரம் சொல் மடையர்களே![188]

'கூடாதே செகத்தோர் களிடத்திற் சேர்ந்து
கூச்சலிட்டு வாய் வீரம் பேசிடாதே
பாடாதே சாஸ்திரங்கள் பேசிடாதே
பரம குரு தன்னைக் கண்டு பணிந்து கொள்ளே[189]
'தத்துவக் குப்பையைத் தள்ளுங் கடி வேத
சாத்திரப் பொத்தலை மூடுங்கடி'[190]

''சாத்திரத்தைச் சுட்டு சதுர் மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயர் அறுப்பது எக்காலம்.[191]

'சாத்திரம் பார்த்தாலும் தானு மென்ன வேதந்
தானுமே பார்த்திருந்தாலு மென்ன'[192]

'வார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன் சொல்லாம்
சாத்திரங்கள் சொல்லிச் சதுர் இழந்து கெட்டேனே'[193]

இவ்வாறு, பல்வேறு சித்தர்களும், மனிதர்களை மூட நம்பிக்கைகளில் ஆழ்த்தி, அவர்களுக்குள் பிரிவினைகளை வளர்த்து, அவர்தம் நல்வாழ்வுக்குத் தடைகளாக நிற்கும் சடங்குகளையும் அவற்றை உறுதிப்படுத்தும் சாத்திரங்களையும் ஒருமித்த குரலில் கண்டித்துப் பேசுகின்றனர்.

விவிலியம்

பக்தி இயக்கக் காலத்தில் தழைத்து நின்ற சைவ—வைணவ நெறிகள் பிற்காலத்தில் இந்து மதம் எனும் பொதுப் பெயரைப் பெற்றன. இந்து மதமாகப் பரிணமித்த பிறகு, இச்சமயத்தில் காலப் போக்கில் ஏராளமான சடங்குகள் பெருத்து விட்டன. இச்சடங்குகள் பலவும் மக்களது அறியாமையை வளர்த்ததோடு, சமயத்தின் பெயரால் சிலர் மக்களைச் சுரண்டவும் ஏமாற்றவும் வழி வகுத்துவிட்டன. இந்நிலையில்தான் சித்தர்கள் இச்சடங்குகளையும் சடங்குகட்குக் காரணமான சாத்திரங்களையும் கண்டித்துப் பாடத் துணிந்தனர்.

கிறித்தவத்தின் மூலச் சமயம் எனக் கருதப்படக்கூடிய யூத சமயமும், சடங்குகளும் ஆசார அனுட்டானங்களும் மிகுந்ததொரு சமயமாகும். தற்கால இந்துமதத்தை இவ்வகையில் யூத சமயம் ஒத்திருக்கின்றதெனலாம். யூத சமயத்தினர் பின்பற்ற வேண்டிய பல்வேறு சடங்குகளையும் ஆசார விதிகளையும் அவர்கள் இறைவனுக்குப் படைக்க வேண்டிய பல்வேறு பலிகளையும் பற்றிய விதிமுறைகளையும் கட்டளைகளும் பழைய ஏற்பாட்டு நூல்களில் படிக்கலாம். குறிப்பாக, உபாகமம்,

லேவியராகமம் ஆகிய நூல்களில் இத்தகு சடங்குகளும் பலிகளும் அவற்றுக்கான விதிமுறைகளும் மிக விரிவாகப் பேசப்படுகின்றன[194]. இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகக் கருதப்பட்ட இஸ்ரவேல் மக்களில் ஒரு பிரிவினராகிய லேவியர் என்பவர், இச்சமயச் சடங்குகளையும் கோயில் வழிபாட்டு முறைகளையும் நிகழ்த்துவதற்காக, இறைவிதிப்படிப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள் இயற்ற வேண்டிய பல்வேறு சமயச் சடங்குகளும் பலிமுறைகளுமே லேவியராகமம் என்னும் நூலில் பெரிதும் பேசப்படுகின்றன[195]. எனினும், சமயச் சடங்குகளையும் காணிக்கைகளையும் பலிகளையும் விட, உள்ளத் தூய்மையும் இறைவனுக்கு அஞ்சி நல்வாழ்வு வாழுதலுமே முக்கியமானவை என்ற உண்மை பழைய ஏற்பாட்டு நூல்களிலும் சில இடங்களில்[196] வெளிப்படுத்தப்படுகின்றது.

இத்தகைய யூதகுலத்தில் தான், தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடியே இறைமகன் இயேசுகிறித்து அவதரித்தார்; காலப்போக்கில் யூத சமயத்தின் சடங்குகளும் பலி முறைகளும், அச்சமயத் தலைவர்கள் மக்களை ஏமாற்றுவதற்கும் சுரண்டுவதற்கும் உதவும் கருவிகளாக மாறிவிட்டதைக் கண்டு மனம் வெதும்பினார். மக்கள், இறைவனைக் காண்பதற்கும் இதயத்தால் உணருவதற்கும் இவை துணைகளாக அன்றித் தடைகளாக மாறி விட்டதையும் இயேசுபெருமான் நன்குணர்ந்தார். ஆகவே, இச்சடங்குகளையும் அவற்றை நியாயப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் சாத்திர விதிகளையும் மறுத்தார்[197]. சொல்லப்பட்ட வேத வாக்கியங்களின்—இறைக்கட்டளைகளின் உண்மைப் பொருளை உணர்த்தினார். காலப்போக்கில் அவற்றின் அகத்துறையும் உண்மைகளை மறந்துவிட்டுப் புறச்சடங்குகளை மட்டும் பற்றிக் கொள்ளும் பொதுமக்களின் அறியாமையையும், அதனைப் பயன்படுத்திப் பிழைப்பு நடத்தும் சமயத்தலைவர்களின் கபடத் தன்மையையும் அம்பலப்படுத்தினார்;[198] அழுத்தமாகக் கண்டித்தார். புறச் சடங்குகளைச் செய்யுமாறு மக்களைத் தூண்டி, அதனால் பிழைப்பு நடத்தும் சமயப் போதகர்கள் மக்களைத் தூய அன்பு வாழ்வுக்கு வழி நடத்தாத வஞ்சகத்தை அவர் கண்டித்தார். மக்களும் உண்மைப் பொருளை உணர்ந்து

பின்பற்றாமல் வெறும் வெளிப்புறச் சடங்குகளை மட்டுமே இயற்றி அதில் நிறைவு காணும் அறியாமையையும் கண்டித்தார்[199]. இவ்வாறு மரபுவழிச் சடங்குகளை உண்மை உணராது செய்யும் போது, அதனால் இறைவனின் கட்டளைகளை நாம் வெறுமையாக்குகின்றோம்; மீறுகின்றோம் என அவர் தெளிவுபடுத்தினார்[200]. இப்படிப் புறச் சடங்குகளை வலியுறுத்தாது, அகத்தூய்மையையும் அன்பையுமே வலியுறுத்துவதென்பது, இயேசுபெருமானையே மையமாகக் கொண்ட கிறித்தவர் சமயத்தின் அடிப்படை இயல்புகளில் ஒன்றாக அமைந்துவிட்டது.

ஆகவேதான் இயேசு பிரானின் அடியொற்றி வந்த புனிதபவுல் அடிகளாரும் தம் திருமுகங்களில் வெற்றுச் சடங்குகளையும் அவற்றுக்குக் காரணமான மனிதரால் உருவாக்கப்பட்ட சாத்திரத் தத்துவங்களையும் கண்டிப்பதனைப் புதிய ஏற்பாட்டு நூல்களில் காண முடிகின்றது. சான்றாகக் கொலோசேயருக்கு எழுதின கடிதத்தில்,

> 'மேலும் மனிதப் பரம்பரையில் வந்த போலி ஞானத்தாலும் பொருளற்ற ஏமாற்றுப் பேச்சாலும் யாரும் கவரப்படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். இப்போலி ஞானம் கிறித்துவைச் சார்ந்ததன்று, இவ்வுலகப் பூதங்களையே சார்ந்தது" என்றும்' எனவே, உணவு—பானம் குறித்தோ திருவிழா—அமாவாசை —ஓய்வுநாள் குறித்தோ உங்களை யாரும் குறைகூற விடாதீர்கள். இவையெல்லாம் வர இருந்தவற்றின் வெறும் நிழலே. உண்மைப் பொருளோ கிறிஸ்துவின் உடல்தான்'

என்றும்,

> 'கிறிஸ்துவோடு நீங்கள் இறந்து உலகப் பூதங்களின் பிடியினின்று விடுதலை அடைந்தீர்கள் அல்லவா? அப்படியானால் இன்னமும் இவ்வுலக வாழ்க்கையே வாழ்வது

போல, அதன் விதிகளுக்கு உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதேன்?

என்றும் அறிவுறுத்துகின்றார்[201] தாமே ஒரு காலத்தில் பரம்பரை மரபுகளில் மிகுந்த பற்று வைத்து, இறைவனின் திருச்சபையைத் துன்புறுத்தியதாகவும் இப்போதோ உண்மையைக் கிறிஸ்துவின் வழி உணர்ந்திருப்பதாகவும் பிறிதோரிடத்தில் பவுலடிகள் தெளிவுபடுத்துகின்றார்[202]. இவ்வாறு கிறித்தவத்தின் மூலவரான கிறித்து பெருமானும் கிறித்தவ மறைநூல் ஆசிரியருள் முக்கியமானவராகிய பவுலடிகளும் பொருளற்ற சமயச் சடங்குகளையும் அவற்றுக்கு அடிப்படையான போதனைகளையும் கண்டிப்பதனை விவிலியத்தின் புதிய ஏற்பாட்டு நூல்களில் தெளிவாகக் காணமுடிகிறது.

ஒப்பீடு

இவ்வாறு சமயச் சடங்குகளையும் அவற்றுக்குக் காரணமான சாத்திரங்களையும் சித்தர் பாடல்களும் விவிலியமும் ஆகிய இரு பேரிலக்கியங்களுமே ஒருமிக்கக் கண்டிக்கின்றன. இந்து சமயத்தில் பாமர மக்களின் அறியாமையின் வெளியீடுகளாகவும் மதத் தலைவர்கள் சிலரின் வியாபாரக் கருவிகளாகவும் விளங்கும் சடங்குகளையும் அவற்றுக்கு நியாயம் கற்பிக்கும் சாத்திரங்களையும் சித்தர்கள் கண்டித்துப் பாடினர். அவ்வாறே யூத சமயத்தில் நிலவிய பொருளற்ற சடங்குகளையும் அவற்றுக்குக் காரணமான சமய விதிகளையும் சமயத்தலைவர்களையும் இயேசு பெருமானும் அவர்தம் அடியவர்களும் கண்டித்துப் பேசினர். இந்த ஒற்றுமையே இவ்வாய்வில் சுட்டப்படுவதாகும்.

ஊ. ஆகம வேத புராணங்கள் மறுப்பு

சித்தர் பாடல்கள்

மக்களின் சமயவாழ்வில் காணப்படும் மேம்போக்கான சில சடங்குகளையும் சாத்திரங்களையும் மறுத்ததோடு, சமய நம்பிக்கைகளின் அடிப்படைகளாக அமையும் வேதங்களையும் ஆகம நூல்களையும் கூட அவர்கள் மறுத்தும் சாடியும்

பாடலாயினர். இக்காரணத்தினால், சித்தர்கள் வைதீக சமயத்தினரின் வெறுப்புக்கும் பழிப்புக்கும் இலக்காயினர். இதுபற்றிக் க. கைலாசபதி,

> 'சித்தருக்கு எதிரான வைதீக சமயிகளின் கோபாவேசத்துக்குக் காரணம், எமக்குத் தெரிந்ததே. இடைக்காலச் சமுதாயம் வேத வாக்கை மூலாதாரமாய்க் கொண்டு வருணாசிரம தருமத்தின் அடிப்படையிற் கட்டி எழுப்பப்பட்டிருந்தது. வேத வழக்கொடு மாறுபடும் எதுவும் ஆக்குரோசத்துடன் கண்டிக்கப்பட்டது. சித்தர்களோ அடிப்படையையே கோடரி கொண்டு வெட்டினர்.
>
> 'சதுர் வேதம் அறுவகைச் சாத்திரம் பல
> தந்திரம் புராணங்களை சாற்றுமா கமம்
> விதம் விதமானவான வேறு நூல்களும்
> வீணான நூல்களே என்றாடாய் பாம்பே'
>
> இது பாம்பாட்டிச் சித்தர் பாடல். இதைவிடக் கொடிய வேத நிந்தனையும் பழிப்புரையும் வேறு என்ன இருந்திருக்க முடியும்? இந்து மரபு வழிச் சமுதாயம் புனிதத்திலும் புனிதமானவை என்று போற்றுவனவற்றை 'வீணானவை' என்று அடித்துக் கூறுகிறார் பாம்பாட்டிச் சித்தர்'[203]

என்று கூறுகிறார்.

சித்தர்கள் ஆகமவேதங்களையும் புராணங்களையும் மறுப்பதற்கொரு முக்கிய காரணம், இவை வருணாசிரம தருமத்தின் அடிப்படையில் சாதிப்பிரிவினைகளை நியாயப்படுத்துவதாகும் என்பது கைலாசபதியின் கருத்து.

'அகத்தியர்' பெயரால் அமைந்த பல பாடல்கள் ஆகமவேத புராணங்களைக் கடுமையாகச் சாடுகின்றன. பாரதம், புராணங்கள், நால்வேதம், ஆறு சாத்திரங்கள்

ஆகியனவெல்லாம் சிலபேர் தம் சீவனத்துக்காக உருவாக்கிய கதைகள் என்று கூறுகிறார்[204]. இக்கதைகளும் புராணங்களும் கர்த்தராகிய இறைவனை மனிதருக்கு வெளிப்படுத்துவதற்கு மாறாக கடவுளைத் தெளிவாக அறியவொட்டாமல் மறைப்பனவாகவே அமைந்து விடுவதாக இப்பாடல்களின் ஆசிரியர் குறை கூறுகின்றார்[205].

'அகத்தியர் ஞானம்30' எனும் பெயரிலும் 'யோகஞான சாஸ்திரத் திரட்டு' எனும் தொகுப்பிலும் காணப்படும் பல பாடல்கள், வேதங்களுக்கும் புராணங்களுக்கும் எதிரான இக்கருத்துக்களை மிகக் கடுமையான நடையில் கூறுகின்றன. நான்கு வேதங்களையும் கலந்து குழப்பி அவற்றை உருவாக்கியோர் மனிதர்களை மயக்கத்துக்குள்ளாக்கி விட்டதாக மற்றொரு பாடலில் அகத்தியர் குறிப்பிடுகிறார்[206].

வியாச முனிவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பல வேதங்கள் கடவுளைப் பற்றிய உண்மைகளை மனிதர்க்குத் தெளிவுபடுத்தவில்லை. சித்தர்களாகிய ஞானிகளோ, மறைக்கப்பட்ட இவ்வுண்மைகள் ஓரளவேனும் மக்களுக்கு வெளிப்படும்படி, அவற்றைச் சற்றே திறந்துவிட்டார்கள். ஆனால் தாமோ இறைவனின் கட்டளைப்படி, முழுமையாக அவ்வுண்மைகளை வெளிப்படுத்துவதாகப் பாடல் ஒன்றில் அகத்தியர் குறிப்பிடுகிறார்.

'இன்பமாய் நால்வேதம் வந்தவாறும்
எழுதினார் வியாசமுனி ரத்தினம் போல்
அன்பாகப் பலவிதத்திற் கட்டிப் போட்டார்
அதினாலே மானிடர்கள் கெட்டுப் போனார்
முன் போலச் சித்த ரெல்லாங் கொஞ்சங் கொஞ்சம்
மூடினதைத் திறந்து விட்டார் முடுகி நானும்
அன்பாகத் திறந்து விட்டேன் வெளிச்சமாக
அரனார் தானுரைத்தபடி யறிவித்தேனே'[207] என்பது அப்பாடல்.

க. கைலாசபதி குறிப்பிடுவது போல[208] சித்தர்கள் தம் காலத்தில் சமயப்புரட்சியொன்றினை நிகழ்த்த முயன்றதை இத்தகு பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

சடங்குகளையும் சாத்திரங்களையும் கடுமையாகக் கண்டித்த சிவவாக்கியர் ஆகமங்களையும் வேதங்களையும் கூட மறுத்துப் பாடியுள்ளார். யோகப் பயிற்சியாலோ, பிறநெறிகளாலோ *நமக்குள்ளேயே இறைவனை உணராத நிலையில், 'சாமம்* நாலு வேதமும் சகல சாத்திரங்களும் சேமமாகவோதினும்' இறைவனை அறிய முடியாதெனக் கூறுகின்றார்[209]. மேலும், யோகப் பயிற்சியை வலியுறுத்துகையில் 'வேர்த்திரைப்பு வந்த போது வேதம் வந்து உதவுமோ' என்று சாத்திரங்களை[210] ஓதும் சட்ட நாதப் பட்டரை விளித்து வினவுகின்றார். இறைவனை அறிந்தவர்கட்கு இவ்வேதங்களும் ஆகமங்களும் வெறும் கதையாகத் தோன்றுவதாகவும் பாடுகின்றார்[211].

'சிட்ட ரோது வேதமும் சிறந்த ஆகமங்களும்
நட்ட காரணங்களும் நவின்ற மெய்ம் மைநூல்களும்
கட்டி வைத்த போதகங் கதைக் குகந்த பித் தெலாம்
பெட்டதாய் முடிந்ததே பிரானையானறிந்த பின்[212]
'நூறு கோடி யாகமங்கள் நூறு கோடி மந்திரம்
நூறு கோடி நாளிருந்து மோதினாலதென் பயன்
ஆறு மாறு மாறு மாயகத்திலோ ரெழுத்துமாய்
ஏறு *சீரெழுத்தை* யோத *வீசன்* வந்து பேசுமே[213]

என்பன இக்கருத்தை விளக்கும் அவரது பாடல்கள். எனினும், இவ்வேதங்களும் சாத்திரங்களும் மனிதருக்குள் பேதங்களை வளர்க்கத் துணை போவதை, இன்னொரு பாடலில் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்[214]. சடங்குகளையும் சாத்திரங்களையும் கண்டித்துப் பாடிய அளவு, கடுமையாக, வேதங்களையும் ஆகமங்களையும் மறுத்திடவில்லை. எனினும் உள்ளத்துக்குள் இறைவனை உணரும்

முயற்சியும் யோகப் பயிற்சியுமே அவற்றிலும் முக்கியமானவை என அவர் தெளிவுபடுத்துவதை உணர முடிகிறது.

குதம்பைச் சித்தர், 'சமய நிலைகூறல்' எனும் தலைப்பில் சார்வாகம், உருவவணக்கம், பாடாண்மதம், கதிரவச் சமயம் எனப்படும் பல்வகைச் சமயத்தத்துவங்களையும் மறுத்துரைத்து விட்டு, அப்பகுதியின் இறுதியில்,

> 'பற்பல மார்க்கம் பகர்ந்திடும் வேதங்கள்
> கற்பனையாகுமடி — குதம்பாய்
> கற்பனையாகுமடி'

என்று தொகுத்துரைக்கின்றார்[215]. 'போகர் சத்த காண்டம் 7000' எனும் நூலிலும், ஆகமவேதங்கள் உள்ளிட்ட சமய நூல்களைச் சாடியும் எள்ளி நகையாடியும் பேசுகின்ற பல பாடல்கள் காணப்படுகின்றன. போகர், 'ஆதியந்த வஸ்து'வை நுணுக்கமுடன் காட்டாத நூல்கள் எல்லாம் தீது சொன்ன நூல்களே என்று பாடுகின்றார்[216]. வீண்கதைகள், என்றும் 'மயக்கம் தருவன' என்றும் இவர் சாத்திரங்களை இகழ்கின்றார்[217].

கடவுளுக்குப் பற்பல நாமங்களைச் சூட்டி மக்களை நம்ப வைக்கும் நூல்கள் பலவும் 'புல்லவும் கவிவாணர் கட்டும் வாக்கியம்' தாம் என்று இன்னொரு பாடலில் குறிப்பிடுகிறார்[218].

வேறுசில சித்தர்களும் கூட ஆகம வேதங்களைக் கண்டித்துப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது. 'வேத விதிப்படி நில்லு' — நல்லோர் மேவும் வழியினை வேண்டியே செல்லு'[219] எனப்பாடிய கடுவெளிச் சித்தரே, 'பொய் வேதத்தினைப் பாராதே — அந்த போதகர் சொற்புத்தி போத வோராதே'[220] என்றும் அறிவுறுத்துகிறார். வேதங்கள் எனப்படும் சமய நூல்களையும் கூடப் பகுத்தறிந்து, கொள்ளத்தக்கன இவை; தள்ளத்தக்கன இவை எனத் தெளிய வேண்டுமென்பது அவர் அறிவுரையின் உட்கருத்து எனலாம்.

'திருவள்ளுவ நாயனார்' அருளிச் செய்ததாகச் சொல்லப்படும் 'ஞான வெட்டியான் 1500' என்ற நூலில் காணப்படும் ஒரு பாடல், புராணங்கள் முதலிய சமய நூல்கள் பலவற்றையும் கடுமையாகச் சாடுகின்றது.

'வியாசர் சொல்லும் பாரதத்தில் வெகுபொய் வீணாம்
மேதினியோர் மாய்கையினில் விரும்பச் சொன்னார்
ஆய்ந்து கவி பாடிவிட்டான் கம்பன் வம்பன்
அதீத ராமாயணத்தில் அநேகம் பொய்தான்[221] என்பது அப்பாடல்.

இவ்வாறு மக்களுக்கு இறைவனைப் பற்றிய தெளிவை உண்டாக்காமல், மயக்கத்தை ஏற்படுத்தி, சமய உலகில் சிலர் பிழைத்திட உதவும் வியாபாரக் கருவிகளாக அமையும் சமய நூல்கள் அனைத்தையும் புரட்சிச் சித்தர்கள் கடுமையாகக் கண்டிக்கின்றனர். எச்சமய நூலையும், அஃது வேதமெனப்படுவதால் மட்டுமே அதனைப் போற்றாது, அந்நூல் மக்கட் சமுதாயத்தால் ஏற்படுத்தும் விளைவை' வைத்தே அதனை மதிப்பிடும் துணிவினைச் சித்தர்கள் பெற்றிருந்தமை இப்பாடல்களால் புலனாகின்றது எனலாம்.

விவிலியம்

சித்தர்களைப் போலவே, கிறித்தவ சமய முலவரான இயேசுபெருமானும் தமக்கு முன்னர் அமைந்த வேத நூல்களை, அவற்றின் விளைவை வைத்தே மதிப்பிடுவதைக் காண முடிகின்றது. யூத சமயத்தின் வேதமெனக் கருதப்படும் பழைய ஏற்பாட்டு நூல், அம்மக்களுக்குரிய இறைவிதிகளாலும் நியாயப்பிரமாணங்களாலும் தீர்க்கதரிசனங்களாலும் நிறைந்துள்ளது. இவற்றை (நியாயப்பிரமாணங்கள், தீர்க்கதரிசனங்கள்) அழிப்பதற்கு அன்று; நிறை வேற்றுவதற்கே இவ்வுலகில் தாம் வந்ததாக இயேசு பெருமான் கூறினார்[222]. அவ்வாறே, யூத சமயத்தின் நிறைவேறுதலாகவே கிறித்தவ நெறி அமைகின்றது என்பது கிறித்தவர்களின் அடிப்படை நம்பிக்கையாகும். எனினும், அன்பு மார்க்கத்தைப் போதித்த இயேசுபெருமான், 'சட்ட மார்க்கம்' (Legal Religion) எனப்பட்ட

யூதமார்க்கம் போற்றிய பழைய ஏற்பாட்டுக்குக் கட்டளைகள் பலவற்றை மாற்றியும் திருத்தியும் புதுப்பித்தும் அமைப்பதை இயேசுபெருமானின் போதனைகளில் நிரம்பக் காணமுடிகின்றது. மத்தேயு, லூக்கா முதலிய நற்செய்தி நூல்களில் இதற்கான சான்றுகளைக் காணலாம்[223].

மேலும், வேதாகமக் கட்டளைகள் பலவற்றையும் தூய நெஞ்சோடு மக்களுக்குப் போதிக்காமலும் தாமும் அவற்றைக் கடைப்பிடியாமலும், அக்கட்டளைகளைப் பயன்படுத்தி மக்களை ஏய்த்துப் பிழைத்து வந்த அக்கால யூத சமயத்தலைவர்களை வெளிப்படையாகக் கண்டிக்கவும் இயேசுபெருமான் தயங்கவில்லை[224]. மேலும், இயேசுபெருமானும்[225] அவர் வழி வந்த மறைநூல் ஆசிரியருமான புனித பவுலடிகளாரும்[226] மக்களைக் கிறித்து பெருமானிடம் வழி நடத்தாமல் மனத்தை மயக்குவனவும், மனிதர்கள் கற்பனையுமான – வஞ்சகமான சமயத் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் பின்பற்ற வேண்டாமென எச்சரிக்கின்றார்.

ஒப்பீடு

இவ்வாறு சித்தர் பாடல்களிலும், புதிய ஏற்பாட்டு நூல்களிலும், ~~மக்களிலும்,~~ மக்களின் அறியாமையை வளர்த்துச் சமயத் தலைவர்களால் தவறாகப் பயன்படுத்தப்படும் சமய நூல்கள் அனைத்தும் கண்டிக்கப்படுவதனைக் காண முடிகின்றது. 'வேதம்' என்ற உயர்ந்த பெயர் வழங்கப்படுவதாலேயே, அனைத்துப் சமய நூல்களையும் ஏற்றுப் போற்றிட வேண்டுவதில்லை என்பது இவ்விரு பேரிலக்கியங்களின் அறிவுரையாகும். மக்கட் சமுதாயத்தின் மீது அந்நூல்கள் ஏற்படுத்தும் விளைவுகளே முக்கியம் என்பது கருத்து.

எ. பொய்க் குருக்களைக் கடிதலும் மெய்க்குருவைப் போற்றலும்

சித்தர் பாடல்கள் : சித்தமார்க்கம், குரு ஒருவர் தரும் பயிற்சியையும் போதனையும் அடிப்படையாகக் கொண்டது. குருவொருவர் உணர்த்துவதாலும் நெறிப்படுத்துவதாலுமே ஒருவர் சித்தராக மாறுகின்றார். மேலும் சித்தநெறி

என்பது பெரும்பான்மையும் யோகப் பயிற்சியை மையமாகக் கொண்டது. யோகநெறி குருவொருவர் வழிநின்று உணர வேண்டுவதாகும்[227] இக்காரணம் பற்றியே 'குருக்கள்' எனப்படுவோரின் பெருமை, சித்தர் பாடல்களில் மிக அதிகமாகவும் அடிக்கடியும் பேசப்படுகின்றது. மேலும், 'குரு' என்னும் சொல்லைப் பல்வேறு பொருள்களில் சித்தர்கள் கையாண்டுள்ளனர். மருத்துவம் சார்ந்த நிலையிலும் யோகம் சார்ந்த நிலையிலும் அச்சொல் வெவ்வேறு பொருள்களைத் தருவதற்கான சான்றுகளைச் சித்தர் பாடல்களில் காணமுடியும்[228].

எனினும் சித்தநெறியில் அல்லது யோகநெறியில் தமக்கு உண்மைகளை உணர்த்திப் பயிற்றுவிக்கும் ஆசானையே 'குரு'வாகப் போற்றி விவரிப்பதற்கான சான்றுகள் உள்ளன. மெய்க்குருவின் மேன்மைகளையும் சிறந்த பண்புகளையும் அளவிடற்கரிய அவரது ஆற்றல்களையும் சித்தர்கள் தம் பாடல்களில் விவரிக்கின்றனர். அத்துடன் பொய்க்குருக்கள் அல்லது கள்ளக் குருக்கள், மக்களை யோகசாதனைகளின் பெயராலோ ஆகம வேதங்களின் பெயராலோ ஏய்த்துப் பிழைப்பதையும் சுட்டிக்காட்டி, மக்களை எச்சரிக்க அவர்கள் தயங்கவில்லை.

மேலும், சித்தர்கள் அனைவரும் தமது மூலகுருவாகவும் முதற்குருவாகவும் சிவனையே கருதினர் என்பது குறிப்பிடத்தக்கது. இறைவனே குருவாக அமைதலை 'ஆசானும் ஈசானும் ஒன்றேயாகும்' என்ற திருமூலரின்' தொடர் தெளிவுபடுத்துகிறது[229].

சித்தர் பலரது பாடல்களில் 'குரு' பற்றி வரும் குறிப்புகள் சில அகச்சான்றுகளாகக் கீழே தரப்படுகின்றன. பாம்பாட்டிச் சித்தர் 'குரு வணக்கம்' எனத் தனித்தலைப்பிட்டுப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்[230]. இப்பாடல்களிலும் தமது பிறபாடல்களிலும் மெய்யான குருவின் மேன்மைகளை மிகவிரிவாகப் பாடியுள்ளார். இவர் சிறந்த குருநாதரை ஏற்று, தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவருக்குக் காணிக்கையாகப் படைத்து, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் பொருந்த அவரைப்புகழும் மாணவராக இருந்துள்ளனர். இவரது

குருநாதர் பொய்க்குருக்களைப் புத்தி சொல்லி நன்னெறிப்படுத்தியவர். உண்மைப் பொருள் இன்னதென்று யாவருக்கும் உணர்த்தியவர். காயம் அழியாத நிலையைக் கண்டவர்; கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தினைக் கைவரப்பெற்றவர்; குளிகையை வாயிலிட்டு அட்டதிக்கும் அண்டவெளியிலும் வட்டமிடும் வல்லமை படைத்தவர் என்றெல்லாம் தமது குருநாதரின் 'வல்லபத்தினை'ப் பாம்பாட்டியார் புகழ்ந்து பாடுகின்றார்.

கண்ணிகளாக அமைந்த கடவுள் வணக்கத்தில்[231] ஆதிதேவனை—சிவனை அதாவது இறைவனையே குருவாக அவர் போற்றிப்பாடுவதையும் உணர முடிகின்றது. எவ்வுயிரையும் எவ்வுலகையும் படைத்துக் காத்துப் பராமரிக்கும் இறைவனையே மெய்க்குருவாக அவர் வருணிப்பது புலப்படுகிறது.

பாம்பாட்டிச் சித்தருக்கு அடுத்தநிலையில், அகத்தியர் பெயரால் அமைந்த பல பாடல்களில் 'குரு'வைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பல்வேறு பெயர்களில் மக்களை ஏய்க்கும் பொய்க்குருக்களைப் பற்றிய கண்டனங்களாகவே இவரது பாடல்கள் பெரிதும் அமைகின்றன[232]. சாதிக்கொரு குருவென்றும் சமயத்திற்கு ஒரு குருவென்றும் பலர் நாட்டில் திரிந்து வாதங்கள் செய்து நீதி நெறியின்றி மக்களை ஏய்ப்பதாகவும் தம்மைத்தாம் அறியாதார் சான்றோர் சொன்ன முன்னைப் பழநூல்களின் முறைமைகளை அறியாதார், தம் சீடர்களுக்கு முக்திகாட்டி ஈடேற்றம் கொடுப்பதாகக் கூறுவதாகவும் இவர் கூறுகின்றார். குருவேடம் பூண்டு, குடிகெடுக்கும் சண்டாளர்கள் எனச் சிலரைச் சாடுகின்றார்[233] இப்படிப் பொய்க்குருக்களைச் சாடும் இவரது பாடல் ஒன்று,

'சோதியென்னும் குருநாதன் தன்னை யன்றித்
தொல்புவியிற் குருக்களென்று சொல் லொண்ணாதே'[234]

என்று முடிகின்றது.

'மண்டலத்தில் சற்குருவை வணங்கி நின்றால்
மாறாத பெருவாழ்வு வாழலாமே'[235]

என இக்கருத்தையே கூறுகிறது.

சிவவாக்கியர் பாடல்களிலும் 'குரு'வைப்பற்றிய குறிப்புகள் மேற்போக்காகக் காணப்படுகின்றன. பல பாடல்களில் 'குரு' என்ற சொல்லைப் பயன்படுத்தாமலே குருவாக வந்த இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றார்[236]. 'திருத்தி வைத்த சற்குருவைச் சீர் பெற வணங்கிடுவீர்' என ஒரு பாடலில் அவர் பேசுகிறார்[237] அதே பாடலில் 'குருக் கொடுக்கும் பித்தரும் குருக் கொள் வந்த சித்தனும் பருத்திபட்ட நாடுதான் பன்னிரண்டும் பட்டதே' எனவும் வருந்துகின்றார்.

குதம்பைச் சித்தர் பாடல்களில் 'குரு' என்ற சொல் பயின்று வருதலைக் காண இயலவில்லை எனினும் இறைவனைக் குருநிலையில் வைத்து, அவர் பாடும் சில குறிப்புகளைக் காணமுடிகின்றது[238]

போகரின் 'சத்த காண்டம் 7000' என்ற நூலில், ஒரு பாடலில் தாமே வழி காட்டுவதாகக் கூறிக்கொள்ளும் பொய்க்குருக்கள் கடுமையாகச் சாடப்படுகின்றனர்.

'கொள்ளவுமே குருப் பேய்கள் கூறுந்தன்மை
குருடருக்குக் குருடர் நெறி கூறல் போலும்
பொள்ளவுமே போகாத துயரில் மேவிப்
புகுமாறு செய்துவைப்பார் பொல்லாக் காமி'[239]

இவ்வாய்வில் கருதப்படும் சித்தர் ஐவரன்றிச் சித்தர் பிறரும் குருக்களைப்பற்றிப் பலபாடல்களில் பாடுகின்றனர். சான்றாக, பத்திரகிரியார் தம் மெய்ஞ்ஞானப் புலம்பலில்,

'அருவாய் உருவாகி ஆதியந்தமாகி நின்ற
குருவாகி வந்தெனை யாட் கொண்டருள்வ தெக்காலம்'

என்று ஏங்குகின்றார்[240] பட்டினத்தார் அருட் புலம்பலில் இடம்பெறும் இருபாடல்கள் பின்வருமாறு:

'கொள்ளைப் பிறப்பறுக்கக் கொண்டான் குருவடிவம்
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி'[241]

'குருவாகி வந்தானோ குலமறுக்க வந்தானோ
உருவாகி வந்தானோ உருவழிக்க வந்தானோ'[242]

இவ்வாறு குருவாகி வந்த இறைவனைப் பாடிப்பரவும் பட்டினத்தார்

'குருமார்க்க மில்லாத குருடருடன் கூடி
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்து கெட்டேனே'[243]

என மனம் வருந்தியும் பாடுகின்றார். 'கொங்கணர் நடுக்காண்டம் 500' என்ற நூலிலுள்ள பாடல் ஒன்று, மக்கள் குருவின்றியும் தவறான குருக்களைப் பின் பற்றியும் கெடுவதைப் பற்றிப் பேசுகிறது[244].

கடுவெளிச் சித்தர் 'மெய்க்குரு சொற்கேளாதே'[245] என அறிவுறுத்துகிறார். 'கடுவெளிச் சித்தர் பூரண ஞானம்' எனும் நூலில் காணப்படும் ஒரு கண்ணி

'குருவைத் தொழுதிடுவேன் கும்பிடுவேன் ஆதரிப்பேன்
குருவினுட சீர்பாதம் என்னையாகொண்டேன் தலைமேலே'[246]

என்று குறிப்பிடுகிறது.

'வால்மீகர் ஞானம்' எனும் தலைப்பில் அமைந்த சிலபாடல்கள் 'குருக்கள்' என்ற பெயரால் மக்களை ஏய்க்கும் 'கசடர்' சிலரது தந்திரங்களையும் வஞ்சகங்களையும் சாடுகின்றன[247]. திருமாலையே நேரில் கண்டதாகவும் சிவபூசை, தீட்சை என்றும் கூறி இவர்கள் பற்பல வேடங்கள் புனைந்து மக்களை வஞ்சிப்பதாகவும் இவர் எச்சரிக்கின்றார்[248].

'நெறிப்பட்ட சற்குரு நேர்வழிகாட்டில்
பிரிவற்றிருக்குஞ் சிவம்'[249]

என்பது ஔவைக் குறள்களுள் ஒன்று.

'ஞான வெட்டியான்' என்ற நூலின் ஆசிரியர்,

'பொய்க்குருவினாலெனது பொக்கிஷமெல்லாஞ் சிதைந்து
கைப்பொருளெலா மிழந்தேன் காரியக் குருக்களினால்
இப்படியாய் மேதினியில் யான் சிலநாள் போன பின்பு
மெய்க்குரு முனியருளால் மெய்ஞ்ஞானம் பெற்றேனே'[250]

எனத் தம் அனுபவத்தைப் பாடுகிறார்.

இவ்வாறு சித்தர்கள் பலரும் பொய்க்குருக்களைக் கண்டித்தும் மெய்க் குருக்களின் மேன்மைகளை விரித்தும் இறைவனே குருவாக வருகின்றான் என்ற பேருண்மையை விளக்கியும் பாடுகின்றனர் என்பது பெறப்பட்டது.

விவிலியம் : விவிலிய மறைநூலின் முதற்பெரும் பிரிவும் யூத சமயத்தின் மறைநூலுமான பழைய ஏற்பாட்டில், அச்சமயத்தின் வழிபாட்டுச் சடங்குகளையும் பலிகளையும் இயற்றுவோர் 'ஆசாரியர்' என்றும் 'லேவியர்' என்றும் அழைக்கப்பட்டனர்[251]. பழைய ஏற்பாட்டின் ஆரம்பநூல்கள், இச்சமயக் குருக்கள் ஆற்றிட வேண்டிய பல்வேறு கடமைகளையும் சடங்குகளையும் விரிவாகப் பேசுகின்றன. இக்கடமைகளினின்று தவறுவோர் பெறும் இறைத்தண்டனைகளும் ஆங்காங்குச் சுட்டப்படுகின்றன[252]. யூத சமயத்தில் மதகுருக்கள் மிக உயர்ந்த நிலையில் போற்றப்பட்டதை விவிலியமும்[253] வரலாறும் எடுத்துரைக்கின்றன.

யூதசமயத்தை அடியொற்றிக் கிறித்தவ சமயத்தை உருவாக்கிய கிறித்துபெருமான் தம் போதனைகளில் சமயக் குருக்களைப் பற்றியும் சமயக் குருக்களை நோக்கியும் கூறும் பல கருத்துக்களைக் காணலாம். சமயக் குருக்கள் மக்களிடம் மதிப்பையும் பணத்தையும் பெறுவதற்காகச் செய்யும் தந்திரங்களையும் அவர்தம் அடக்கு முறைகளையும் தூய்மையற்ற வாழ்வையும் 'கடுமையாகச் சாடுகின்றார்.

'சமயக் குருக்களிடம் எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் நீண்ட அங்கி தரித்து நடமாட விரும்புகின்றார்கள். பொது இடங்களில் வணக்கத்தையும் செபக்கூடங்களில் முதல் இருக்கைகளையும் விருந்துகளில் முதல் இடங்களையும் பெற ஆசிக்கிறார்கள். கைம்பெண்களின் உடைமைகளை விழுங்குகிறார்கள். பார்வைக்கோ நீண்ட செபம் செய்கிறார்கள். இவர்கள் அதிக தண்டனைக்கு ஆளாவார்கள்[254]

என்பது அவரது கண்டன உரைகளில் ஒரு பகுதி.

இயேசுபெருமானின் கருத்தையொட்டிப் புதிய ஏற்பாட்டு நூல்கள் பிறவற்றின் ஆசிரியர்களும் பொய்க்குருக்கள் அல்லது பொய்ப் போதகர்களைக் கண்டித்து எழுதியுள்ளனர். தவறான போதகர்களைப் பற்றிப் புனித பவுலடிகள் தீமோத்தேயுவுக்கு எழுதுகின்றார்[255]. நலமிக்க போதனைகளைப் புறக்கணித்துத் தமக்கேற்றவகையில் நயமாகப் போதிக்கும் போதகர்களையே தேடும் மக்களைக் கண்டித்தும் பவுலடிகள் எழுதுகிறார்[256]. இயேசு பெருமானின் மூத்த மாணாக்கராகிய புனித பேதுருவும் தம் கடிதத்தில் போலிப்போதகர்களையும் போலித் தீர்க்கதரிசிகளையும் சுட்டிக்காட்டி, எச்சரித்து எழுதியுள்ளார்[257]. இவைகள் எல்லாம் பொய்க்குருக்களைக் கண்டித்தும் அவர்களிடமிருந்து விலகியொழுகுமாறு மக்களை எச்சரித்தும் எழுதப்பட்டன எனலாம்.

இயேசுபெருமானை அவர் வாழ்ந்த காலத்திலே அனைத்து மக்களும் முழுமையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தெய்வீக உண்மைகளைப் போதிக்கும் ஞான குருவாக மதித்துப் போற்றி வந்தனர் என்பது விவிலியத்தின் வழி புலப்படுகிறது. யூதமறைநூலறிஞன் நிக்கொதேமு ஒருமுறை இயேசுவைப் பார்த்து, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம்' என்று கூறுகின்றான்[258]. பிறிதொரு நிகழ்ச்சியில் இயேசுபெருமான் தம்சீடர்களைப் பார்த்து, நீங்கள் என்னைப் போதகர் என்றும் ஆண்டவர் என்றும் சொல்கிறீர்கள்.

நீங்கள் சொல்வது சரியே' எனக்கூறுகின்றார்[259]. இதனால் பொதுமக்களும் சீடர்களும் அவரை 'ஞான குரு'வாக மதித்தமை வெளிப்படுகிறது.

இவ்வுண்மைகளின் நிறைவுநிலையாக, இறைவனின் ஒரே வெளிப்பாடாகவும் ஒப்பற்ற திருமகனாகவும் கிறித்தவர்கள் வணங்கும் இயேசுபெருமான், தாமே தம்மைப் பற்றிக் கூறும் செய்திகள் அமைகின்றன.

> 'நீங்களோ 'போதகரே' என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்கள் போதகர் ஒருவரே. நீங்கள் அனைவரும் சகோதரர். மண்ணுலகில் ஒருவரையும் தந்தையென்று கூறவேண்டாம். ஏனெனில் விண்ணுலகில் உள்ளவர் ஒருவரே உங்கள் தந்தை. குரு என்றும் அழைக்கப்படவேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் குரு.'[260]

இவ்வாறு இறைமகனாகிய தாமே மெய்க்குரு என்பதை இயேசுபெருமான் தெளிவுபடுத்துகின்றார். இவ்வாறு விவிலியத்தில் பொய்க்குருக்களைப் பற்றிய கண்டனங்களையும் இறைவனே மெய்க்குரு' என்ற உண்மை பற்றிய விளக்கங்களையும் காண முடிகின்றது.

ஒப்பீடு : இவ்வாறு சித்தர் பாடல்களிலும் விவிலியத்திலும் குரு வணக்கம் தொடர்பான பல செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன. பொய்க்குருக்கள் அல்லது கள்ளக்குருக்கள் எனப்படுவோரின் வஞ்சகங்களும் போலித்தனங்களும் இருபேரிலக்கியங்களிலுமே கண்டிக்கப்படுகின்றன. மெய்யான குருக்களின் மாண்புகளும் நன்கு விரித்துரைக்கப்படுகின்றன.

இத்துடன், 'இறைவனே குருவாக வந்து உண்மையினை உணர்த்துகின்றான்' எனச் சித்தர் பாடல்களில் பேசப்படும் செய்தி, 'கிறித்துவாகிய இறைமகனே மெய்க்குரு; பிறரல்லர்' என்ற இயேசுபெருமானின் மணிமொழியுடன் ஒன்றுபட்டு நிற்கின்றது. குருவாக வந்த இறைவனைப் பற்றிச் சித்தர்கள் கூறும் பல செய்திகளும் வருணனைகளும், ஒன்றான இறைவனை மனித குலத்துக்கு வெளிப்படுத்த

மனித அவதாரமெடுத்து மண்ணகத்துக்கு வந்ததாகக் 'கிறித்தவர்கள் ஏற்கும் இயேசுபெருமானுக்கு மிகவும் பொருந்துவனபோல் தோன்றுகின்றன. கிறித்துநெறி சார்ந்த தமிழறிஞர் பலரும் இவ்வாறே கருதி, சித்தர்கள் பாடும் 'சற்குரு' இயேசு கிறித்துவே எனத்தம் ஆய்வுநூல்களில் நிறுவ முயன்றிருக்கின்றனர்[261].

இயேசுபெருமானுக்குப் பொருந்தும் வகையில் அமைந்த சித்தர்களின் 'குருவணக்கப் பாடல்கள்' சில இங்குத் தரப்படுகின்றன. சிவவாக்கியர் தமது பாடல்களில் 'திருத்தி வைத்த சற்குரு'[262]. எனக் குறிப்பிடுவதும் பின்வரும் வேறு இரு பாடல்களில் கூறப்படும் வருணனைகளும் இயேசுபெருமானுக்கே பெரிதும் பொருந்துவனவாகக் கருதுவாருளர்.

'விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப் பொருள்
கண்ணிலாணியாகவே கலந்து நின்ற தெம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்த பின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வதுண்மையே'[263]

'நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓரிலை
நீரினோடு கூடிநின்றும் நீரிலாத வாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்புகண்டிருப்பரே'[264]

இவற்றுள், இரண்டாவது பாடல்கூறும் செய்தி, இயேசுபிரான், 'உலகிலிருக்கும் பொழுதே நான் இதைச் சொல்லுகிறேன்... நான் உலகைச் சார்ந்தவன் அல்லன்[265] எனக்கூறிய வாக்குடன் இணைத்தெண்ணத் தக்கது. சிவவாக்கியரது 'வானவர் நிறைந்த சோதி'[266] என்னும் பாடலும் இறைவனின் மானிட அவதாரத்தை, இயேசுவுக்குப் பொருந்தும் வகையில் குறிப்பதாகக் கருத வாய்ப்புள்ளது. எனினும், இப்பாடல் குறிப்பிடும் உண்மைப்பொருள் இதுதானென்னளவும் அறுதியிட்டுக் கூறவியலாது.

அகத்தியர் பெயரால் அமைந்த பலபாடல்களின் செய்திகள் இயேசுபெருமானுக்கே ஏற்புடையனவாகக் கருதத்தக்கன. குறிப்பாகப் பின்வரும் பாடல், கிறித்துபெருமானையே சுட்டுவதாக டாக்டர் கால்டுவெல் உள்ளிட்ட அறிஞர் சிலர் கருதியுள்ளனர்.

'வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாநிலத்தை யொருநொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்திற் தானுதித்துக் குருவாய் வந்து
கனமான சமுசாரம் ஒன்றில்லாமற்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை யிருத்திப்போட்டு
அகண்டதலம் சென்றவரை யண்டு வாயே'[267]

'அகத்தியர் ஞானம் 30' எனும் பெயருடைய தொகுப்பில் உள்ள ஒரு பாடல், 'சரியாக ஆத்துமத்தின் கசட்டைத் தீர்க்கும் சற்குரு',[268] வைப்பற்றிப் பேசுகின்றது. இன்னொரு பாடல், 'அனாதியான சச்சிதானந்தனையே' சற்குரு'வாகப்[269] பேசுகிறது. இப்பாடல்கள் குறிப்பிடும் சற்குருவின் பண்புகள் இயேசுவுக்கே பொருந்துவன எனச் சிலர் கருதுகின்றனர்[270].

பாம்பாட்டிச் சித்தருடைய குருவணக்கப் பாடல்களை இயேசுபெருமானுக்குப் பொருத்தி உரைக்கிறார் சாது செல்லப்பா[271] என்பவர். இவ்வகையான சிந்தனையில் தோன்றும் வேறு சில ஒப்பீடுகளும் இங்குத் தரப்படுகின்றன.

'சோதிமயமான பரிசுத்த வத்துவைத்
தொழுதழுதலற்றித் தொந்தோமெனவே'[272]

எனப் பாம்பாட்டிச் சித்தர் பாடுகிறார். 'நானே உலகின் ஒளி'[273] என இயேசுபெருமான் கூறினார்.

'பொய்ம்மதங்கள் போதனைசெய் பொய்க்குருக்களைப்
புத்திசொல்லி நன்னெறியிற் போக விடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்க்குரு'[274] வைப் பாம்பாட்டியார் வருணிக்கிறார்.

'உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆட்டுமந்தைக்கு வாயில்நானே. எனக்கு முன்பு வந்தவர்கள் அனைவரும் திருடர், கொள்ளைக்காரர். அவர்களுக்கு ஆடுகள் செவிகொடுக்கவில்லை. நானே வாயில், என் வழியாக நுழைபவன் மீட்புப்பெறுவான்..... நல்ல ஆயன் நானே'[275]

என இயேசு கிறித்து கூறுவதனை இப்பாடலுடன் ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

'அங்கையிற் கண்ணாடிபோல ஆதிவத்துவை அறிவிக்கும் எங்களுயிரான குரு[276] வைப் பற்றியும் வீடுபெறும் வகையை மென்மேலுங் காட்டும் மெய்க்குரு'[277] வைப் பற்றியும் பாம்பாட்டிச் சித்தர் பாடுகிறார். 'அருளும் உண்மையும் இயேசு கிறித்துவழியாக வந்தன. யாரும் கடவுளை என்றுமே கண்டதில்லை; தந்தையின் அணைப்பிலுள்ள ஒரே பேறானவர்தாம் அவரை வெளிப்படுத்தினார்'[278] என்ற விவிலிய வாசகமும் 'நானே வழியும் உண்மையும் உயிரும். என் வழியாகவன்றி எவனும் தந்தையிடம் வருவதில்லை, நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள்[279] என்ற இயேசுபெருமானின் கூற்றும் பாம்பாட்டிச் சித்தரின் பாடல் அடிகளுடன் ஒப்பிடத்தக்கன.

இவ்வாய்வில் முதன்மை பெறாத சித்தர் பிறரது. வேறு சில பாடல்களும் இயேசுபெருமானாகிய குருவுக்கே பொருந்துவனவாக எடுத்துக்காட்டப்படுகின்றன. 'கௌதமர்' என்பவரது பெயரால் அமைந்த

'சற்குருவின் பெருமைதனை யுலகு தன்னிற்
  தானறியச் சாற்றுகிறோம் சார்ந்து கேளும்
சற்குருவாய் எவ்வுயிர்க்குந் தானே தானாய்ச்

சகலசீ வான்மாவின் குருவு மாகிச்
சற்குருவே பேரொளியாய் நின்ற சோதி
தாரணியில் மானிடத்தின் சட்டை சார்த்திச்
சொற்குருக்கள் தங்களுக்குஞ் சீடன் போலாய்ப்
புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே'[280]

என்ற பாடல், இத்தகு பாடல்களுள் ஒன்று . மேலும் , பட்டினத்தார், பத்திரகிரியார் போன்றோரது பாடல்கள் சிலவும்[281] இயேசுபெருமானுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் உள்ளன.

இத்தகு பாடல்களையும் திருமந்திரம், தாயுமானவரின் பராபரக்கண்ணி, சிவஞான சித்தியார், திருவாய்மொழி, திருக்களிற்றுப் படியார் முதலிய இலக்கியங்களில் குருவாகி வந்த இறைவனைப் பற்றிப் பேசும் பாடல்களையும் பாப்புலி[282], சாது செல்லப்பா[283], தாமஸ் இரத்தினம்[284] முதலிய கிறித்தவ எழுத்தாளர்கள் தம் நூல்களில் இயேசுபெருமானுடன் பொருத்திக் காட்டுகின்றனர். இதன்வழி சித்தர்கள் பேசும் 'பரமகுரு'வாகவும் 'சற்குரு'வாகவும் இயேசுவை நிறுவ முயல்கின்றனர். 'அகத்தியர் ஞானம்' என்ற நூலின் பதிப்பாசிரியர் வீ. ஞானசிகாமணியும்[285] 'வணங்குவாய் செகசோதி' என்ற பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இராபர்ட் கால்டுவெல்லும்[286] இக்கருத்துடையோரே.

சைவ—வைணவ இலக்கியங்கள், மனிதவடிவில் குருவாக வந்த இறைவன் இவர்தான் என எவரையும் துல்லியமாகச் சுட்டிக்காட்டுவதில்லை. இறைவன், அவ்வப்போது குருவாகத் தோன்றித் தரிசனமும் தீட்சையும் தருகின்றான் எனும் கருத்து சைவ—வைணவரிடையே நிலவுகின்றது. எனினும் சித்தர் கூறும் 'குரு'வாக இயேசுபெருமானையும் எண்ணிப் பார்ப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன என்பதை மேற்குறித்த பாடல்களும் விளக்கங்களும் சுட்டுகின்றன.

ஏ. சித்தர் பாடல்களில் வெளிப்படும் கிறித்தவக் கருத்துக்களும் கிறித்தவம் தொடர்பான செய்திகளும்

சித்தர்களின் பாடல்களும் விவிலியக் கருத்துக்களும் சில தலைப்புகளின் அடிப்படையில் இதுவரை ஒப்பிடப்பட்டன. இனி, இவ்வாய்வில் பேசப்படும் சித்தர் ஐவரது பாடல்களில் வெளிப்படும் வேறுசில கிறித்தவக் கருத்துகளும் நம்பிக்கைகளும் கிறித்தவம் தொடர்பான செய்திகளும் எடுத்துக்காட்டப்படும். ஒவ்வொரு சித்தரது பாடல்களாக, முறையே இக்கருத்துக்களும் செய்திகளும் இங்குத் தரப்படுகின்றன.

சிவவாக்கியர்

சிவவாக்கியரது பாடல்களில் உருவ வணக்க மறுப்பு, சாத்திரச் சடங்குகளை மறுத்தல், பிறவிச் சுழற்சி மறுப்பு முதலிய கிறித்தவத்துக்கும் ஏற்புடைய கருத்துக்கள் காணப்படுவது முன்னர் விளக்கப்பட்டது. இறைவன் குருவாக வருகை தருவது பற்றிப் பேசும் சிவவாக்கியரது பாடல்கள் சில, இயேசுபெருமானுடைய மானிட அவதாரத்துக்கும் பொருந்தும் வகையில் உள்ளமையும் முன்னரே கூறப்பட்டது.

இவையன்றி, ‘சிவவாக்கியம்—1000 பாடல்’ என்ற தலைப்புடன் சிறுமணவூர் முனுசாமி முதலியார் அவர்களால் 1903இல் பதிப்பிடப்பட்டுள்ள நூலில் காணப்படும் சில பாடல்கள், இஸ்லாம்—கிறிஸ்தவ சமயங்களின் போதனைகளைச் சிவவாக்கியர் நன்கு அறிந்திருந்தமை வெளிப்படுத்துகின்றன. பின்வரும் இருபாடல்களில், மனிதப்படைப்பு, இறுதி நியாயத் தீர்ப்பு முதலியன பற்றிய கிறித்தவ நம்பிக்கைகளைக் குறிப்பிட்டுவிட்டு, அவை பற்றிய சில வினாக்களை எழுப்புகின்றார். இவ்வினாக்களின் அடிப்படையில், சிவவாக்கியர் இக் கிறித்தவ நம்பிக்கைகளை மறுக்கின்றாரா? ஐயுறுகின்றாரா? பரிகசிக்கின்றாரா? என உறுதி செய்ய இயலவில்லை. எனினும், கிறித்தவம் பற்றிய தெளிவான அறிவு, இப் பாடல்களின் ஆசிரியருக்கு இருந்தமை மட்டும் புலப்படுகின்றது.

'ஏசு மதவாதிகள் இறந்தபின் கடைசியிற்
பாசம் வைத் தொருமிக்கப் பலரையும் எழுப்பியே
நேசமுறப் பா பத்தை நிராகரித்து மோட்சத்தில்
வாசமிக வைக்கவே சர்வேசர் வரலுண்மையோ'[287]

'மண்ணினிற்றன் சாயலாய் மனிதனைப் படைத்ததின்
எண்ணத்தாற் கழுதையினை எத்தேவன் சிருஷ்டித்தார்
குண்ண வாதாமெலும் பினைக் கொண்டே வாளினைப் படைத்
தண்ணே வுயிரேற்றிய திவ்வாறெனக் குரையுமே'[288]

இப்பாடல்கள், உண்மையில் சிவவாக்கியர் பாடியனவா, இடைச் செருகல்களா எனும் ஐயம் எழலாம். ஆனால், இந்த ஐயம், சித்தர்கள் அனைவருடைய பாடல்கள் தொடர்பாகவுமே எழுப்பப்படக் கூடியதே. சித்தர்பாடல் தொகுப்புகளின் பதிப்பில் காணப்படும் குறைகள் பற்றி, இவ்வாய்வின் தொடக்கத்திலேயே விவாதிக்கப்பட்ட செய்திகள் இங்கு கருதத்தக்கன[289].

பாம்பாட்டிச் சித்தர்

பாம்பாட்டித் சித்தருடைய பாடல்களில் காணப்படும் உருவ வணக்க மறுப்பு, சடங்கு சாத்திர மறுப்பு, சாதிபேத எதிர்ப்பு முதலிய செய்திகள், கிறித்தவத்துக்கும் ஏற்புடையனவாக அமைவது முன்னரே விளக்கப்பட்டது. மேலும், பாம்பாட்டிச் சித்தருடைய குருவணக்கப் பாடல்கள் சில, இயேசு பெருமானுடைய வாழ்வுடனும் அறிவுரைகளுடனும் பொருந்தி நிற்பதும் முன்னரே சுட்டப்பட்டது. இனி, வேறுசில பாடல்களில் பிரதிபலிக்கும் கிறித்தவக் கருத்துக்கள் தரப்படுகின்றன.

மனிதன் படைக்கப்பட்ட வரலாற்றைப் பழைய ஏற்பாட்டின் முதல் நூல் 'தேவனாகிய கர்த்தர், மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் ஜீவ ஆத்துமாவானான்' என்று பேசுகிறது[290]. பாம்பாட்டிச் சித்தரின் உருவகப்பாடல் ஒன்று இக் கருத்தைப் பிரதிபலிப்பதுபோல் உள்ளது.

'மரப்பாவை போலவொரு மண்ணுருச் செய்து
வளமான சீவனென்னும் சூத்திரம் மாட்டித்
திரைக்குள் ளிருந்தசைப்போன் தீர்ந்த பொழுதே
தேகம் விழுமென்று தெளிந்தாடாய் பாம்பே'[291]

பிறிதொரு பாடலிலும் இறைவனைக் குயவனாகவும், மனித உடலை மட்பாண்டமாகவும் அவர் உருவகிப்பது இங்குக் கருதத்தக்கது[292] களிமண்ணினாலொரு கப்பல் சேர்த்தே' எனப் பிறிதோரிடத்திலும் பாடுகிறார்[293].

இறைவனின் அடியவர்கள், இவ்வுலக வாழ்வில் ஒட்டுதலின்றி, வாழவேண்டும். அவர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும், உலகியல் நோக்கோடும், உலக நடைமுறைகளை முழுக்க ஏற்றும் வாழ்பவர் அல்லர் என்பது கிறித்தவத்தின் போதனை. இதனை 'நான் உலகைச் சார்ந்தவனாய் இராதது போல அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்லர்' எனத் தம் சீடரைப் பற்றி இயேசுபெருமானும்[294] 'இவ்வுலகம் காட்டும் மாதிரியைப் பின்பற்றாதிருங்கள்' எனப் புனித பவுலடிகளும்[295] 'உலகத்தோடு நட்புக் கொள்வது கடவுளைப் பகைப்பது' எனப் புனித யாக்கோபுவும்[296] கூறியனவும் இவையன்ன பிற விவிலிய வாக்குகளும் தெள்ளிதின் உணர்த்தும். பாம்பாட்டிச் சித்தர் பாடல்களிலும் இவ்வுண்மை வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

'எண்ணெய்க்குந் தண்ணீருக்குந் தொந்தம் இல்லாவாறுபோல்
எப்போதும் இப்புவியில் எய்த வேண்டும்'[297]

'தாமரையினிலையிலே தண்ணீர் தங்காத
தன்மைபோலச் சகத்தாசை தள்ளிவிட்டெங்கும்
தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்
தொழுது தொழுது தொழுதாடாய் பாம்பே'[298]

எனும் இருபாடல்கள் இவ்வுண்மையினை விளக்கி உரைப்பன.

இம்மை வாழ்வு நிலையற்றது. மறுமையிலே 'சீயோன்மலை' என வருணிக்கப்படும் நித்திய வீட்டிலே, அழியாத உடலுடன் அழியாத வாழ்வு பெறுவோம் என்பது, நித்திய வாழ்வு பற்றிய கிறித்தவ நம்பிக்கை[299]. இந் நம்பிக்கை, புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்திலும் மிக விரிவாகப் பேசப்படுகின்றது. வேறு பிற சமயங்களிலும் ஓரளவு பேசப்படும் இக்கருத்தினைப் பாம்பாட்டிச் சித்தர் தம் பாடல்களில் வெளிப்படுத்தும் முறை, விவிலியப் புதிய ஏற்பாட்டு நடையைத் தழுவி அமைந்ததுபோல உள்ளது.

> 'நித்தியமென்னும் மலையில் நின்றுகொண்டோம் யாம்
> நினைத்தபடியே முடித்து நின்மலமானோம்
> சத்தியமாய் எங்கள் கடந் தானழியாதே
> சந்ததமும் வாழ்வோ மென்றாடாய் பாம்பே'[300]

யோகப் பயிற்சியினால் பெறும் உயர் நிலையையோ, காயகற்பம் உண்டு பெறும் அழியா உடலையோ இப்பாடல் குறிப்பதாகக் கருதுவாரும் இருக்கலாம். எனினும் வேறு கண்ணோட்டத்தில் நோக்குவார்க்கு இக் கிறித்தவப் பொருளும் புலப்படலாம். இவ்வாறு, பாம்பாட்டிச் சித்தருடைய பாடல்கள் சிலவற்றில் கிறித்தவக் கருத்துக்களின் சாயல்கள் சிலவற்றைக் காண முடிகிறது.

குதம்பைச் சித்தர்

உருவ வணக்க மறுப்பு, பல தெய்வ வணக்க மறுப்பு, சடங்கு சாத்திர மறுப்பு முதலிய கிறித்தவச் சார்புடைய கருத்துக்கள் பல, குதம்பைச் சித்தர் பாடல்களிலும் பேசப்படுவது விளக்கப்பட்டது. இவையன்றி, கிறித்தவத்தில் பேசப்படுகின்ற வேறு பல செய்திகளும், குதம்பைச் சித்தர் பாடல்களில் பேசப்படுவதை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அண்மையில் வெளியிட்டுள்ள குதம்பைச் சித்தர் பாடல்களின் விரிவாக்கப்பட்ட பதிப்பில் காணமுடிகின்றது.

ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து அனைத்து உலகங்களையும் அனைத்து உயிர்களையும் இறைவன் படைத்ததாக விவிலியம் கூறும்[301]. குதம்பைச் சித்தர் பாடல்களிலும் இக் கருத்து கூறப்படுகின்றது.

'ஒன்றுமிலா வெளிக்குள்ளே பல் லண்டத்தை
நின்றிடச் செய்தானடி — குதம்பாய்
நின்றிடச் செய்தானடி.'[302]

'கருவிகளில்லாமற் காணும் பல்லண்டங்கள்
உருவுறச் செய்தானடி — குதம்பாய்
உருவுறச் செய்தானடி.'[303]

எவ்வுலகமும் தோன்றுமுன்னே இருந்தவராகிய இறைவன், இறங்கி வந்து அருளிச் செய்யும் தன்மையால் இங்கு மானிடனாக வந்தார். அவர் அறியாதது ஒன்றுமில்லை என்பது இயோசு பெருமானைப் பற்றி விவிலியம் வெளிப்படுத்தும் உண்மையாகும்[304] இதே கருத்து, குதம்பைச் சித்தர் பாடல்களில் வெளிப்படும் முறை இது :

'அண்டம் உண்டாகு முன்னாக அநாதியாய்க்
கண்டது பிர்மமடி — குதம்பாய்
கண்டது பிர்மமடி.'[305]

'தணிவான புத்தியால் தானுவறியாதோர்
அணுவேனும் இல்லையடி — குதம்பாய்
அணுவேனும் இல்லையடி.'[306]

பாவத்தின் பிறப்பிடத்தை விளக்கும்போது, புனித யாக்கோபு என்பவர் தம் கடிதத்தில், 'இச்சையே கருவுற்றுப் பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து, சாவை ஈன்றெடுக்கிறது.' என எழுதியுள்ளார்[307] குதம்பைச் சித்தரின் பின்வரும் பாடலும் இதே கருத்தைக் கூறுகிறது.

'இச்சை பிறப்பினை எய்விக்கும் என்பது
நிச்சயம் ஆகுமடி குதம்பாய்
நிச்சயம் ஆகுமடி'[308]

இங்கு 'பிறப்பு' என்பது, விவிலியக் கருத்தையொட்டி 'பாவத்தின் பிறப்பு' எனப் பொருள்படுவதாகக் கருத வாய்ப்புள்ளது.

'கைகளால் கட்டப்படும் ஆலயத்தில் இறைவன் தங்குவதில்லை,
மனித உடலே இறைவனின் ஆலயம். மனிதனின் மனமே,
இறைவனின் ஆலயம்.

என விவிலியம் வலியுறுத்திப் பேசுகின்றது[309]. குதம்பைச் சித்தர் பாடல்களிலும் இக் கருத்து நன்கு வெளிப்படுகின்றது.

'சிற்பர்கள் கட்டும் திருக்கோயில் உள்ளாகத்
தற்பரம் வாழ்வதுண்டோ—குதம்பாய்
தற்பரம் வாழ்வதுண்டோ'[310]

'தன்னாலுண்டாஞ் சிட்டி தன்னாலே சிட்டித்த
புன்கோயிலுள்ளவன் யார் — குதம்பாய்
புன்கோயிலுள்ளவன் யார்'[311]

'அன்பான பத்தர் அகக் கோயில் கர்த்தற்கே
இன்பான கோயிலடி குதம்பாய்
இன்பான கோயிலடி'[312]

'மெய்த்தலத் தில்லாத மெய்ப் பொருளானவர்
பொய்த்தலத் தெய்வ துண்டோ குதம்பாய்
பொய்த்தலத் தெய்வ துண்டோ'[313]

பெற்றோரின் பாவங்களுக்காகப் பிள்ளைகளும், பிள்ளைகளுடைய பாவங்களுக்காகப் பெற்றோரும் தண்டிக்கப்படுவதை மறுத்து, பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் தீர்க்கதரிசன நூலில் 18ஆம் அத்தியாயத்தில் விரிவாகப் பேசப்படுகிறது.

'பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதும் இல்லை. தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. நீதிமானுடைய நீதி அவன் மேல்தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் இருக்கும்'.

என்பது இவ்வத்தியாயம் பேசும் செய்திகளின் தொகுப்புரையாக அமையும் பகுதியாகும்[314]. இயேசுபெருமானும் பிறவிக் குருடன் ஒருவனை அற்புதமாகச் சுகமாக்குமுன், அவனைப் பற்றித் தம்மை வினவிய மக்களுக்கு இவ்வாறு பதிலிறுத்தார்.

'இவன் குருடனாய் பிறந்தது இவன் செய்த பாவமுமன்று; இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமும் அன்று; கடவுளுடைய செயல்கள் இவன்மட்டில் வெளிப்படும் பொருட்டே இவன் இப்படிப் பிறந்தான்'[315]

இவ்வரிய உண்மையினை, குதம்பைச் சித்தர் இவ்வாறு பாடுகின்றார்

'தந்தை தாய் செய்வினை சந்ததிக்காம் என்பார்
சிந்தை தெளிந்திலரே — குதம்பாய்
சிந்தை தெளிந்திலரே'[316]

'பிள்ளைகள் செய்தன்மம் பெற்றோர்க்குறுமென்றல்
வெள்ளறிவாகுமடி — குதம்பாய்
வெள்ளறிவாகுமடி'[317]

தாமே பாவம் புரியும் இயல்புடைய மனிதரால், அவர்கள் சமயக் குருக்களே ஆயினும், பிறர் பாவத்தை நீக்கவியலாது; பாவமற்ற இறைமகனே மனிதரின் பாவத்தைப் போக்க இயலும் என்பது கிறித்தவத்தின் அடிப்படை உண்மைகளுள் ஒன்று. இக்கருத்து

'தன்பாவம் நீக்காத தன்மையர் மற்றவர்
வன்பாவம் நீக்குவரோ'[318]

என்ற குதம்பையார் பாடலடியில் எதிரொலிக்கின்றது.

'இறைவன் ஆவியாயிருக்கிறார்' என்பது விவிலியவாசகம்.[319]

'ஆத்துமம் தன்னை அருபமாய் எண்ணினாய்
கூத்தன் அவ்வாறல்லவோ குதம்பாய்
கூத்தன் அவ்வாறல்லவோ' என்பது
இணையான கருத்துடைய குதம்பையார் பாடல்.[320]

'இறைமகனை நம்பி வழிபடாதார் இறைவனின் சினத்தண்டனைக்கு இலக்காவர்' என்று புதிய ஏற்பாடு உறுதிபடக் கூறுகிறது. 'நிரய (நரக) நிலைமை' என்னும் தலைப்பில் அமைந்த குதம்பைச் சித்தர் பாடல்களும் இக்கருத்தைப் பேசுகின்றன.

'காயமெடுத்தாதி கர்த்தரை எண்ணார்க்குத்
தீயாம் நரகமடி குதம்பாய்
தீயாம் நரகமடி'[321]

'அன்போடு நற்புத்தி ஆதிமேல் வையார்க்குத்
துன்பாம் நரகமடி குதம்பாய்
துன்பாம் நரகமடி'[322]

இக்கருத்துக்களேயன்றி, கிறித்தவர்கள் தம் வழிபாட்டிலும், விவிலிய நூலிலும் மிகவும் பயன்படுத்துகின்ற தேவன், செபமாலை, பாக்கியவான்கள்,

கர்த்தர் ஆகிய சொற்கள், குதம்பைச் சித்தர் பாடல்களில் மிக அதிகமாய்ப் பயின்று வருகின்றன[322]. விவிலியத் தமிழ்மொழிபெயர்ப்புகளின் காலத்தைக் கருதிப் பார்க்கும்போது, குதம்பைச் சித்தர் மீது விவிலியத் தமிழ்மொழி பெயர்ப்புகளும் பிற கிறித்தவத் தமிழ் நூல்களும் தம் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது. எனினும் இது பற்றிய விரிவான தனி ஆய்வே இக்கருத்துக்களை உறுதிப்படுத்த இயலும்.

அகத்தியர்

அகத்தியர் பெயரால் அமைந்த பாடல்கள் பலவற்றில் அமைந்த கருத்துக்களுக்கும் விவிலியத்துக்கும் இடையிலான ஒப்புமை, ஏற்கனவே உருவ வணக்க மறுப்பு, சாத்திர சடங்கு மறுப்பு, பல தெய்வ வணக்க மறுப்பு, சாதிபேத எதிர்ப்பு முதலிய தலைப்புகளில் சுட்டப்பட்டது. இவையன்றி, கிறித்தவ நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கக் கூடிய வேறுபல பாடல்கள் 'அகத்தியர் ஞானம்30' என்ற பெயரிலும் 'அகத்தியர் ஞான விளக்கம்' என்ற பெயரிலும் காணப்படும் தொகுப்புகளில் காணக்கிடக்கின்றன. சில சான்றுகள் கீழே தரப்படுகின்றன.

'அகத்தியர் ஞானம்' பலவகை வேதங்களையும் புராணங்களையும் கடுமையாகச் சாடிவிட்டுப் பிறிதொரு மறையை அல்லது வேதத்தை மட்டும் உயர்வாகப் பேசுகின்றது. இங்குக் குறிப்பிடப்படுவது கிறித்தவ வேதமான விவிலியமே என்று 'அகத்தியர் ஞானம்30' என்ற நூலைத் தெளிவுரையுடன் வெளியிட்டுள்ள வீ. ஞானசிகாமணி கருதுகின்றார்[324].

'நிசமான நால்வேதம் ஆறு சாஸ்திரம்
நினைவதுவை மறைத்து வைக்கும் பூர்ணசாஸ்திரம்
வசமான நால்மதத்தில் வந்த சாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குசமசக்கு குசமசக்கு அப்பா அப்பா
கூறுகிறேன் சுய வேத சாஸ்திரந்தன்னை

நிசமாய் நம்பின பேர்க்கீடேற்றமுண்டு
நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே'
'வரிசிப்பாய் நிலை தவறா மார்க்கந் தேடி
வணங்குமந்த மறை புகுந்து வாழுவாயே'[325]

இவ்வாறே, இப்பாடல்களில் 'பத்துமொழி' 'நெறிபத்தும்' 'கைக் கொள்ள வேணும் என்றால் இன்னம் வேறே கற்பனையும் உண்டு' என்றெல்லாம் குறிப்பிடப்படுவது பழைய ஏற்பாட்டில் இறைவனால் வழங்கப்பட்டதாகப் பேசப்படும் 'பத்துக் கற்பனைகளே' எனவும் வீ. ஞானசிகாமணி தன் ஆய்வுரையில் விளக்குகின்றார்[326].

இறைவனை முழுமையாக ஏற்க விரும்பும் அடியவர், தம் பாவங்களுக்காக உணர்வுடன் வருந்தி, கண்ணீர் விட்டு குறைகளை முறையிட்டு, மன்னிப்புப் பெற்று, இயேசுபெருமான் மேல் வைக்கும் நம்பிக்கையின் வழியாக மீட்படைய வேண்டும் என்பது கிறித்துவப் போதனை. இவ்வாறு இறைமகனை நம்பி ஏற்போர், தம் இறைநம்பிக்கையை வெளிப்படுத்தும் வண்ணம், நீருக்குள் மூழ்கி, 'திருமுழுக்கு' 'ஞானஸ்நானம்' என்றெல்லாம் அழைக்கப்படும் ஞானதீட்சை பெறுவது, கிறித்தவ மரபுப்படி அமைந்த நம்பிக்கை. பின்வரும் இருபாடல்களும் இச் செய்திகளையே சுட்டுவனவாகக் கிறித்தவ அறிஞர்கள் கருதுகின்றனர்.

'கண்ணீரைத் தான் விட்டு உள் அசுத்தம் போக்கி
காரண சற்குரு தன்னாற் சுத்தமாக்கி
வெண்ணீறாய் வேதாந்தத் திருவினுள்ளே
வீடேக வேணுமென்னில் விரும்பிக் கேளு
தண்ணீரை உருவேற்றித் தியானஞ் செய்து
சச்சிதானந்தனையே சரணஞ் செய்து
கண்ணீர் விட்டதழுதருந்திச் சட்டை போக்கி
கரையேற வேணுமிதைக் கைக் கொள்வீரே'[327]

'கழுவியே ஆத்துமத்தைப் புடத்தில் போட்டு
காசகன்ற தட்சணையாய் வைத்துக் கொண்டு
மெழுகுவாயிருதயத்தைக் கண்ணீராலே
மெழுகினபின் தேவபக்தி அதிலே வைத்து
தொழுகுவாய் தவஞானத் தீபமேந்தி
தோத்தரிப்பாய் சகல நன்மை சொரூபி கண்டாய்
முழுகுவாய் சிறுபொய்கைக் குள்ளே நீயும்
முக்திபரன் அருகிருப்பாய் முச்சுடராய்த் தானே'[328]

இப் பாடல்களுக்கு வேறுவகையில் எவரும் பொருளுரைக்காத இன்றைய நிலையில், இவ்விளக்கங்களை ஏற்புடையனவாகக் கருதக் கூடிய வாய்ப்புள்ளது.

மேலும் தந்தை—மைந்தர்—தூய ஆவிஎன மூன்று நிலைகளில் இறைவன் வெளிப்பட்டாலும், 'இறைவன் ஒருவரே' என்பது மும்மையொருமை (திரியேகத்) தத்துவம்' எனப்படும் கிறித்தவ நம்பிக்கை. இவ்வுண்மையினை விளக்குவனபோல் அமையும் ஒரு பாடலும் சில தொடர்களும் இத் தொகுப்பில் காணப்படுகின்றன. அவை.

முச்சுடரும் ஒன்றாம் மும்மூர்த்தியல்ல
மூவருமே ஆளுருவம் ஒன்றேயாகும்
அச்சுதாயிவர்களுமே ஆண் பெண்ணல்ல
அரியல்ல அயனல்ல லிங்கமல்ல
சச்சிதானந்தனையே வணக்கம் செய்து
சற்குருவைத் தரிசித்து சரணம் பற்றி
எச்சரிக்கை கொண்டு நட அப்பா அப்பா!
எண்ணில்லா முக்திவழி எய்துவாயே![329]

'முக்திபரன் அருகிருப்பாய் முச்சுடராய்த் தானே'[330]
'திரிபொருளை அறிவினால் உணர்ந்து பார்த்து'[331]

அலகை எனப்படும் பிசாசு, தேவதூதர்களுள் ஒருவனாக இருந்தவன் என்றும், தன் கருவத்தாலே தேவ லோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான் எனவும், அவன் தள்ளப்பட்ட நாள்முதல், மனிதர்களையும் தன்னைப் போலவே தீயவராக்கப் பலவகைகளிலும் முயல்கிறான் எனவும் விவிலியம் கூறுகிறது. எசேக்கியேல் என்ற பழைய ஏற்பாட்டு நூலில் இது பற்றிக் கூறப்படும் பகுதி இது:

> 'மனுபுத்திரனே! நீ தீரு ராஜாவைக் குறித்துப் புலம்பி, அவனை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்.
>
> நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்; பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப் பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திர நீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக் கொண்டிருக்கிறது. நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாதசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. ..... உன் வியாபாரத்தின் மிகுதியினால் உன் கொடுமை அதிகரித்து நீ பாவஞ் செய்தாய். ஆகையால், நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேரூபாய் இருந்த உன்னை, அக்கினிமயமான, கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன்.'[332]

புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தின விசேடம் என்ற நூலிலே, 'வையகமே, பெருங்கடலே! உங்களுக்கு ஐயோ கேடு! அலகை கடுங் கோபத்துடன் உங்களிடம் வந்துள்ளது. தனக்கு எஞ்சியிருப்பது சிறிது காலமே என்று

அதற்குத் தெரியும்' என்றும் 'அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படும் அப்பாம்பைப் பிடித்து ஆயிரம் ஆண்டளவு கட்டி வைத்தார். பின்பு அதைப் பாதாளத்தில் எறிந்து, குழியை அடைத்து அதற்கு முத்திரையிட்டார்.' என்றும் எழுதப்பட்டுள்ளது[333] இச் செய்திகளை அப்படியே எதிரொலிப்பதுபோல், பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

'அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று
ஆங்காரத் தானெடுத்து அகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று
நித்தியமும் மானிடரை மோசம் போக்கி
பலகலையும் உணரறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச் செய்யும்
நிலையதுவை யறியாமற் போனார் போனார்
நினைத்துப் பார் புலத்தியனே நிசமாய்த் தானே'[334]

இவையேயன்றி, கிறித்தவர்கள்தம் விவிலிய நூலிலும் வழிபாடுகளிலும் பெரிதும் பயன்படுத்தும் செபம், திருச் சித்தம், பூரண ஞானம், ஆத்துமம், தேவபக்தி , அலகை முதலிய சொற்களை இப்பாடல்களின் ஆசிரியர் தாராளமாகக் கையாளுவதைக் காணமுடிகின்றது[335]. எனினும், இப்பாடல்களில் இயேசு, கிறித்து முதலிய இறைப் பெயர்கள் வெளிப்படையாகப் பயன்படுத்தப்படவில்லை. அவ்வாறு பயன்படுத்தாமலே, கிறித்தவ உண்மைகளை வெளியிடுவதற்கு சமுதாயவியற் காரணங்கள் இருந்திருக்கலாம்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் போது, இப்பாடல்களின் ஆசிரியர் மிகப் பிற்பட்ட காலத்தவர் என்றும் இவர்மேல் கிறித்தவத்தின் பாதிப்பு மிக அதிகமாக இருந்துள்ளது என்றும் ஊகிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

போகர்

போகர் என்று இவ்வாய்வில் குறிப்பிடப்படும் சித்தர் 'சத்த காண்டம் 7000' எனப்படும் நூலின் ஆசிரியரே ஆவார். இந்நூலினுள்ளும் பெரும்பகுதி, வைத்தியஞ் சார்ந்த பாடல்களே. எனினும், இவரது பாடல்கள் சில, கிறித்தவக் கோட்பாடுகளுடன் ஒன்றுபடுவது முன்னரும் சுட்டப்பட்டது.

மேலும், இந்நூலாசிரியர், குளிகை பூண்டு தாம் ரோமாபுரி, எழுபத்து (எகிப்து), சீனா, எருசலேம் முதலிய பல நாடு நகரங்களுக்குச் சென்று வந்தததாகச் சில பாடல்களில் கூறுகின்றார். அங்கே தாம் கண்ட மக்களையும் பெரியோரையும் பற்றிப் பேசுகின்றார். உரோமாபுரியில் அவர் கண்டவை பற்றி விளக்கும் பாடல் இது

'இறங்கினேன் ராசரிட சமாதி கண்டேன்
    எழிலான ஏசுவின்றன் சீடர் கண்டேன்
சுறங்கமுடன் இம்மான்வேல் சமாதி கண்டேன்
    சுத்தனாம் பரிசுத்தர் சமாதி கண்டேன்
வரங்கொடுக்கும் இசுரவேல் சமாதி கண்டேன்
    வளமுடனே ரோமாபுரி தேசத்தார்கள்
திறமுடனே ரோமாபுரிக் கோட்டைக்குள்
    போகுவதும் வருகுவதும் கண்டேன் தானே'[336]

மேலும், ஏசுபிரானின் சீடர்களது சமாதிகளைக் கண்டதாகவும் ஏசுபிரானைக் கோடிக்கணக்கானோர் வணங்கிவரங் கேட்பதாகவும் பாடுகின்றார். உரோமாபுரியில் பல அரசர்கள் துறவிகள் சமாதிகளைக் கண்டதாகப் பாடுகின்றார். மேலும் மாதாவின் தேசத்துக்குப் போனதாகவும் யூதநாட்டு இருடி (ரிஷி)களைச் சந்தித்ததாகவும் பேசுகிறார்[337]. மேலும் அவர்

'எண்ணவே ஏசுவின்தன் மகிமை மெத்த
எடுத்துரைத்தார் சீடர்வர்க்கம் அநேகம்பேர்கள்'[338]

என்று பாடுவதனின்று, கிறித்தவப் பெரியோர்களிடம் அச்சமய உண்மைகளை இவர் நன்கு ஓதி உணர்ந்துள்ளமை புலப்படுகிறது. இன்னொரு பாடலின் ஆரம்ப அடிகளும் இதனை உணர்த்தும்.

'காட்டி வந்தேன் சீனபதி தன்னிற் சென்றேன்
கடவுளாம் ஏசுவின்றன் காட்சி கண்டேன்'[339]

ஏசுபெருமானைக் கடவுள் என்றே பக்தி உணர்வுடன் போகர் குறிப்பிடுவது கருதத் தக்கது.

இப் பூவுலகில் இறையடியார் மாண்டாலும், இறைவனின் நடுத் தீர்ப்பு நாளில் அவர்கள் அனைவரும் உயிர்த்து எழுவர். இறைவனின் பிள்ளைகள் அழியாத பெருவாழ்வுக்கு உரியராக, இறைவனின் விண்ணக வீட்டில் நிலைவாழ்வு பெறுவர் என்பது கிறித்தவத்தின் அடிப்படை நம்பிக்கை. புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்திலுமே — குறிப்பாக கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் கடிதம், வெளிப்படுத்தின விசேடம் ஆகிய நூல்களில் இவ்வுண்மைகள் விளக்கியுரைக்கப்படுகின்றன. இதே உண்மைகளை வெளிப்படுத்தக் கூடிய போகருடைய பாடல்கள் இவை :

'தாமான வையகத்தில் மாண்ட மாண்பர்
தாரணியில் வைகுண்ட பதியில்தானும்
கோமானாம் அரசர் முதல் குருக்கள் தாமும்
கோலமுடன் ராஜாதி ராஜர் தாமும்
பூமானாம் சீமான்கள் எவரையும் தான்
பொன்னுலகப் பதிதனிலே காணலாகும்
தாமான சடலமது மண்ணேயாகும்
நாதாந்தக் காற்றது தான் அழியாதென்றே'[340]

'அழியாது மாண்டவர்கள் எல்லாரும்தான்
அப்பனுட பதிதனிலே காணலாகும்

அழியாது யாத்மந்தா னெந்த நாளும்
அமரரது பதிதனிலே காணலாகும்
அழியாது மாண்டவர் களொரு காலந்தான்
அப்பனே ஒருகால மெழுந்திருப்பார்
அழியாது ஒருக்காலும் அவர் தமக்கு
அப்பனே நீயுண்டு கேள்வியுண்டே'[341]

இச் செய்திகளைத் தொகுத்து நோக்கும்போது, இந்த 'சத்த காண்டம் 7000' என்ற நூலின் ஆசிரியரும் மிகப் பிற்பட்ட காலத்தவராக இருந்திருக்க வேண்டும் எனவும், கிறித்தவ நெறியை நன்குணர்ந்தவராகவும் அதனால் ஈர்க்கப்பட்டவராகவும் விளங்கினார் எனவும் கருதிட இடமிருக்கின்றது.

சித்தர் பிறர்

இவ்வாய்வில் சிறப்பாகக் கருதப்படும் சித்தர் ஐவரன்றிச் சித்தர் பிறரது சில பாடல்களும் கிறித்தவ நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சான்றுக்கு, இறைவன் அனைத்துலகங்களையும் அனைத்துயிர்களையும் தம் சொல்லாலேயே உருவாக்கினார் என்ற கிறித்தவ நம்பிக்கையைப் பிரதிபலிப்பது போல அமைந்த இடைக்காட்டுச் சித்தர் பாடல் இது :

'எல்லாவுலகமும் எல்லா வுயிர்களும்
எல்லாப் பொருள்களும் எண்ணரிய
வல்லாளன் ஆதி பரம சிவனது
சொல்லால் ஆகுமே கோனாரே'[342]

மனிதன் ஆன்மப் பூர்வமாக மறுபிறப்பு எய்தினால்தான் இறையரசில் நுழைய முடியும் என இயேசுபெருமான் போதித்தார். பட்டினத்தார் பாடலொன்றும் அதே கருத்தைப் புலப்படுத்துகின்றது.

'நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன

மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லையே—மாமறை நூல்

ஏற்றிக் கிடக்கும் ஏழுகோடி மந்திரமென்ன கண்டாய்

ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றாயே'[343]

தொகுப்புரை

இவ்வாறு, உருவ வணக்க மறுப்பு, பலதெய்வ - சிறு தெய்வ வணக்க மறுப்பு, பிறவிச் சுழற்சி மறுப்பு, சாதிபேத எதிர்ப்பு, சடங்கு சாத்திரங்கள் புராணங்கள் முதலியவற்றை மறுத்தல் ஆகிய செய்திகளின் அடிப்படையிலும் தனிச் சித்தர்களது சில பாடல்கள் அடிப்படையிலும் சித்தர் பாடல்களும் விவிலியமும் ஒன்றுபட்டு நிற்கின்றன எனும் உண்மை பல்வேறு அகச் சான்றுகளுடன் இதுவரை விளக்கப்பட்டது.

* * * * *

இயல் 4

குறிப்புகள்

1. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 28.
2. **மே. கூ. நூ.**, ப. 25.
3. 'அகஸ்தியா் ஞான விளக்கம்', **யோக ஞான சாஸ்திரத்திரட்டு**, பா. 13, 14.
4. **மே. கூ. நூ.**, பா. 25.
5. **போகர் சப்த காண்டம் 7000**, 'முதல் காண்டம்', பா. 438.
6. தே. ஆண்டியப்பன் & இரா. குமாரசாமி, **சித்த மருத்துவம்**, ப. 11.
7. Kamil V. Zvelebil, **The Poets of the Powers**, p. 20.
8. வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளை, **திருநான்மறை விளக்க ஆராய்ச்சி**, ப. 32.
9. மா. சாம்பசிவம்பிள்ளை, **திருநான்மறை விளக்க ஆராய்ச்சி**, ப. 210.
10. K.N. Sivarajapillai, **Agastya in the Tamil Land**, pp. 38, 39.
11. ஊரன் அடிகள், **வள்ளலார் மறைந்தது எப்படி?**, 'முன்னுரை', பக். VI and VII.
12. Kamil V. Zvelebil, **op. cit.**, p. 20.
13. ச. மாடசாமி, **பாம்பாட்டிச் சித்தர்**, ப. 14.
14. **மு. கு. இ.**
15. **மே. கூ. நூ.**, ப. 15.
16. **மு. கு. இ.**
17. P. Jaya, **Works of Cittars and their place in Hindu Religious thought and in Tamil Literature**, p. 93.
18. K. Kailasapathy, 'The writings of the Tamil Siddhas', **The Sants**, p. 389.
19. எய்ச். ஏ. பாப்லி, **சற்சமய விளக்கம்**, 1917.
20. என், ஜே. எஸ். சிவசுந்தரம், **முக்திவழி**, 1977.
21. சாது செல்லப்பா, **கிறிஸ்தவம் தேவையா?**, 1978.
22. **அகத்தியர் ஞானம்**, (M.R.T. & B. S. General Series, No.45 in Union with the C.L.S.) ஆண்டு தெரியவில்லை.

23. **மே. கூ. நூ.**, (பதிப்பு ; ஆ. வள்ளிநாயகம், விக்கிரமசிங்கபுரம், நெல்லைமாவட்டம்) ஆண்டு தெரியவில்லை.
24. **மே. கூ. நூ.**, (வீ. ஞானசிகாமணி, 1981.).
25. **சித்தர் பாடல்கள்**, 'முன்னுரை', (மணிவாசகர் பதிப்பகம்). ப. XI
26. க. நாராயணன், **சித்தர் தத்துவம்,** ப. 200.
27. R. Caldwell, **A comparative grammer of the Dravidian or South Indian Family of Languages,** pp. 83, 84.
28. K. Kailasapathy, **op. cit.,** p. 385.
29. C. Jesudasan & Hepzibah Jesudasan, **A History of Tamil Literature,** pp. 226, 227.
30. ச. மாடசாமி, **மு. கு. நூ.**, ப. 16.
31. டி. வி. சாம்பசிவம்பிள்ளை, **சித்த மருத்துவ அகராதி,** தொகுதி 3, ப. 221.
32. மு. தெய்வநாயகம், **விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் – ஒப்பாய்வு,** ப.149.
33. **மு. கு. இ.**
34. வீ. ப. கா. சுந்தரம், 'பாயிரம்', **இராமலிங்க அடிகளும் கிறிஸ்துவமும்.**
35. பலராமையா, **சாகாக்கலை,** ப. 28.
36. பா. கமலக்கண்ணன், **ஞானக்கனல்,** பக். 43, 44.
37. R. Venkatraman, **A History of the Tamil Siddha Cult,** pp. 74, 75.
38. **சிவவாக்கியம் – 1000,** (சிறுமணவூர் முனிசாமி முதலியார் பதிப்பு) பா. 928.
39. கே. கே. பிள்ளை, **தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்,** ப. 79.
40. D. Rajarigam, **The History of the Tamil Christian Literature,** p.4.
41. இரா. எட்வர்ட் சாம், **மலரும் திருமறை,** ப. 56.
42. **மு. கு. இ.**
43. **மே. கூ. நூ.**, பக். 58, 59.
44. **மே. கூ. நூ.**, பக். 60, 61.
45. D. Rajarigam, **op. cit.,** p. 11.
46. **Ibid.,** pp. 26-36.
47. ச. மாடசாமி, **மே. கூ. நூ.**, ப. 16.

48. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 82.
49. **மே. கூ. நூ.**, ப. 38.
50. **மே. கூ. நூ.**, ப. 80.
51. **மே. கூ. நூ.**, ப. 82.
52. **மே. கூ. நூ.**, ப. 80.
53. **மே. கூ. நூ.**, ப. 212.
54. **'இரத்தக்கண்ணீர்'** எனும் திரைப்படத்தில் இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ளன.
55. **குதம்பைச் சித்தர்**, கழகப் பதிப்பு, பா. 147.
56. **மே. கூ. நூ.**, ப. 153.
57. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 302.
58. **அகஸ்தியர் ஞான விளக்கம்**, பா. 20.
59. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 106, பா. 6.
60. **சுப்பிரமணியர் ஞான சைதன்யம்**, பா. 95.
61. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மே. கூ. நூ.**, ப. 153.
62. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 558.
63. **யாத்திராகமம்**, 20 : 3–5.
64. ஞான. இராபின்சன் & தயானந்தன் பிரான்ஸிஸ், **திருமறை விளக்கவுரை**, பகுதி I, ப. 38.
65. **உபாகமம்**, 7 : 25.
66. **மு. கு. இ.**
67. **சங்கீதம்**, 96 : 5.
68. **மே. கூ. நூ.**, 97 : 7.
69. **மே. கூ. நூ.**, 115 : 4.
70. **ஏசாயா**, 44 : 9–18.
71. I **கொரிந்தியர்**, 10 : 14.
72. **மே. கூ. நூ.**, 10 : 21.
73. I **கொரிந்தியர்**, 6 : 15, 16.
74. I **கொரிந்தியர்**, 6 : 9, 10.

75. **அப்போஸ்தலர் பணி,** 15 : 20.
76. I **யோவான்,** 5 : 21 & I **தெசலோனிக்கேயர்,** 1 : 9, 10.
77. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 106.
78. **சங்கீதம்** 96 : 5, 6.
79. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 66.
80. **ஏசாயா,** 44 : 15–17.
81. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 41.
82. **மே. கூ. நூ.,** ப. 8.
83. **மே. கூ. நூ.,** ப. 23.
84. **மே. கூ. நூ.,** ப. 40.
85. **மே. கூ. நூ.,** ப. 80.
86. **திருவருட்பா,** 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்', பா. 14.
87. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 306.
88. **மே. கூ. நூ.,** ப. 307.
89. **மு. கு. இ.**
90. **அகஸ்தியர் ஞான விளக்கம் 34,** பா. 29.
91. **மே. கூ. நூ.,** பா. 7.
92. **மே. கூ. நூ.,** பா. 12.
93. **குதம்பைச் சித்தர்,** கழகப் பதிப்பு, பா. 154.
94. **மே. கூ. நூ.,** பா. 3.
95. **மே. கூ. நூ.,** ப. 7.
96. **மே. கூ. நூ.,** ப. 21.
97. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.,** ப. 346.
98. **போகர் சப்த காண்டம் 7000,** காண்டம் 4, பா. 507.
99. **சுப்ரமணியர் சுத்த ஞானம்,** 8, பா. 53.
100. இரா. மாணிக்கவாசகம், **நம் நாட்டுச் சித்தர்கள்,** ப. 159.
101. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 108, பா. 20.

102. **யாத்திராமம்**, 20 : 3–5.
103. **சங்கீதம்**, 115 : 4–8 & 16 : 4, 5
104. **I & II இராஜாக்கள் & I & II நாளாகமம்.**
105. **I இராஜாக்கள்** 18 : 18–39.
106. **மத்தேயு**, 4 : 10.
107. **I தீமோத்தேயு**, 2 : 5, 6.
108. **I கொரிந்தியர்**, 8 : 4–6.
109. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 80.
110. **சங்கீதம்**, 16 : 4, 5.
111. சாமி சிதம்பரனார், **சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்**, ப. 52.
112. எய்ச். ஏ. பாப்லி, **மு. கு. நூ.**, பக் 109–113.
113. சாது செல்லப்பா, **மு. கு. நூ.**, பக். 33, 34.
114. Kamil V. Zvelebil 'The Cittar : an Enigma', **The Smile of Murugan**, p. 228.
115. K. Kailasapathy, **op. cit.**, p. 401.
116. வி. பலராமையா, **சித்தர் மெய்ப்பொருள்**, ப. 18.
117. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 11.
118. மா. வடிவேலு முதலியார் உரை (சிவவாக்கியர் பாடல்)
119. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 20.
120. **மே. கூ. நூ.**, ப. 15.
121. **மே. கூ. நூ.**, ப. 17.
122. **மே. கூ. நூ.**, ப. 61.
123. P. Jeya, **op. cit.**, pp. 214, 215.
124. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.**, ப. 274.
125. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 300.
126. **ஞானவெட்டியான் 1500,** ப. M2.
127. **எபிரேயர்,** 9 : 27, 28.
128. **யோவான்,** 3 : 36.

129. மத்தேயு, 25 : 31–46.
130. திருவெளிப்பாடு, 20 : 11, 12.
131. தானியேல், 12 : 2,3 & யோபு, 19 : 25–29.
132. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 11.
133. மே. கூ. நூ., ப. 6.
134. மே. கூ. நூ., ப. 20.
135. மே. கூ. நூ., ப. 35.
136. மே. கூ. நூ., ப. 71.
137. மே. கூ. நூ., ப. 9.
138. மே. கூ. நூ., ப. 218.
139. குதம்பைச் சித்தர், கழகப் பதிப்பு, பா. 137.
140. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 301.
141. போகர் சப்த காண்டம் 7000, காண்டம் 6, பா. 239.
142. காகபுசுண்டர் பெரு நூல் காவியம் 1000, பா. 202, 203.
143. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 420.
144. மே. கூ. நூ., ப. 567.
145. மே. கூ. நூ., ப. 337.
146. மே. கூ. நூ., ப. 183.
147. ஆதியாகமம், 1 : 27.
148. ஆதியாகமம், 12 : 1, 2, 3.
149. ரோமர், அத்தியாயம் 9.
150. யோவான், 4 : 22.
151. யோவான், 3 : 16.
152. எபேசியர், 2 : 14.
153. கலாத்தியர், 3 : 26, 28.
154. கொலோசேயர், 3 : 26, 28.
155. I கொரிந்தியர், 12 : 13.

156. **கொலோசேயர்,** 3 : 11.

157. இரா. மாணிக்கவாசகம், **சித்தர் பாடல்கள், தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி II,** ப. 222.

158. இராமலிங்க அடிகள், திருவருட்பா, திருமுறை 6, பகுதி 2, பா. 9.

159. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 30.

160. **மு. கு. இ.**

161. **மே. கூ. நூ.,** ப. 23.

162. **மே. கூ. நூ.,** ப. 63.

163. **மே. கூ. நூ.,** ப. 25.

164. **மே. கூ. நூ.,** ப. 27.

165. **மே. கூ. நூ.,** ப. 80.

166. **மே. கூ. நூ.,** ப. 23.

167. **மே. கூ. நூ.,** ப. 40.

168. **சித்தர் பாடல்கள்,** மணிவாசகர் பதிப்பகம், ப. 303.

169. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 299.

170. அகஸ்தியர் ஞான விளக்கம் **யோக ஞான சாஸ்த்திரத் திரட்டு,** பா. 16.

171. **அகத்தியர் பரிபாஷை 500,** காண்டம் 11, பா. 43.

172. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 212.

173. **குதம்பைச் சித்தர்,** பா. 176.

174. **மே. கூ. நூ.,** பா. 178.

175. **மே. கூ. நூ.,** பா. 181.

176. **மே. கூ. நூ.,** பா. 184.

177. **மே. கூ. நூ.,** பக். 53–55.

178. **மே. கூ. நூ.,** ப. 54.

179. **மே. கூ. நூ.,** பா. 202.

180. **மே. கூ. நூ.,** பா. 203.

181. **போகர் சப்த காண்டம் 7000,** காண்டம் 6, பா. 267–275.

182. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 241.

183. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.**, ப. 258.

184. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 248.

185. **மே. கூ. நூ.**, ப. 257.

186. **மே. கூ. நூ.**, ப. 259.

187. **கொங்கணர் கலைஞான சூத்திரம்,** பா. 1

188. **ஞானவெட்டியான் 1500,** பா. 48.

189. **சுப்பிரமணியர் ஞானம் 500** ; பா. 428.

190. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 595.

191. **மே. கூ. நூ.**, ப. 186.

192. **மே. கூ. நூ.**, ப. 325.

193. **மே. கூ. நூ.**, ப. 141.

194. **லேவியராகமம்,** அத்தியாயங்கள் 1–17, **உபாகமம்,** அத்தியாயங்கள் 16, 17 முதலியன.

195. **லேவியராகமம்,** அத்தியாயம் 21.

196. **சங்கீதம்,** 51 : 16, 17 & I **சாமுவேல்,** 16 : 22.

197. **மத்தேயு,** 15 : 1–15.

198. **லூக்கா,** 11 : 46–52.

199. **மத்தேயு,** 15 : 1–9.

200. **மே. கூ. நூ.,** 15 : 6.

201. **கொலோசேயர்**, 2 : 20–23.

202. **கலாத்தியர்,** 1 : 13–16.

203. க. கைலாசபதி, **ஒப்பியல் இலக்கியம்**, பக். 187–190.

204. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 300.

205. **மு. கு. இ.**

206. அகஸ்தியர் ஞான விளக்கம், **யோக ஞான சாஸ்திரத் திரட்டு**, பா. 2.

207. **மே. கூ. நூ.**, பா. 13.

208. க. கைலாசபதி, **மு. கு. நூ.**, பக். 190, 191.

209. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 6.

210. **மே. கூ. நூ.**, ப. 11.

211. **மே. கூ. நூ.**, ப. 30.

212. **மே. கூ. நூ.**, ப. 24.

213. **மு. கு. இ.**

214. **மே. கூ. நூ.**, பா. 475.

215. **குதம்பைச் சித்தர்**, பா. 152.

216. **போகர் சப்த காண்டம் 7000**, காண்டம் 5, பா. 983.

217. **மே. கூ. நூ.**, காண்டம் 5, பா. 986.

218. **மே. கூ. நூ.**, காண்டம் 6, பா. 623.

219. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 256.

220. **மே. கூ. நூ.**, ப. 258.

221. **ஞானவெட்டியான் 1500**, பக். 178, 179.

222. **மத்தேயு**, 5 : 17.

223. **மே. கூ. நூ.**, 5 : 21–48.

224. **லூக்கா**, 11 : 46–52.

225. **மத்தேயு**, 23 : 2–23.

226. **II தீமோத்தேயு**, 2 : 15–17.

227. K. Kailasapathy, **op. cit.**, p. 395.

228. க. இளமதி, 'சித்தர்கள் காட்டும் குரு' **பதினைந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி III**, பக் 45–49.

229. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 345.

230. **மே. கூ. நூ.**, பக். 200, 201.

231. **மு. கு. இ.**

232. **மே. கூ. நூ.**, ப. 307.

233. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.**, பக். 183, 184.

234. **மே. கூ. நூ.**, பக். 177, 178.

235. **மே. கூ. நூ.**, ப. 153.

236. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, பா. 491, 502, 507.

237. **மே. கூ. நூ.**, ப. 50.

238. **குதம்பைச் சித்தர்**, பக். 36, 37.

239. **போகர் சப்த காண்டம் 7000**, காண்டம் 3, பா. 796.

240. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 183.

241. **மே. கூ. நூ.**, ப. 133.

242. **மு. கு. இ.**

243. **மே. கூ. நூ.**, ப. 141.

244. **கொங்கணர் நடுக்காண்டம் 500**, ப. 48.

245. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 256.

246. **கடுவெளிச் சித்தர் பூரண ஞானம்**, பா. 1.

247. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 618.

248. **மு. கு. இ.**

249. **ஔவைக் குறள்** பால் 3, பா. 205 ('சித்தர் இலக்கியம்' – முதல் பகுதி).

250. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.**, ப. 181.

251. **எண்ணாகமம்**, 3 : 6–12.

252. **லேவியராகமம்**, அத்தியாயம், 21.

253. **எபிரேயர்**, 5 : 4.

254. **மத்தேயு**, 23 : 16.

255. **I தீமோத்தேயு**, 6 : 3, 4

256. **II தீமோத்தேயு**, 4 : 2–4

257. **II பேதுரு**, 2 : 1–3

258. **யோவான்**, 3 : 2.

259. **மே. கூ. நூ.**, 13 : 13.

260. **மத்தேயு**, 23 : 8–10.

261. சாது செல்லப்பா, **மு. கு. நூ.**, பக். 128–133.

262. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 50.

263. **மே. கூ. நூ.**, பா. 123.

264. **மே. கூ. நூ.**, பா. 315.

265. **யோவான்**, 17 : 16.

266. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 391.

267. அகஸ்தியர் ஞானவிளக்கம், **யோக ஞான சாஸ்திரத் திரட்டு**, பா. 23 & **அகத்தியர் ஞானம்**, பா. 29.

268. **அகத்தியர் ஞானம்**, வீ. ஞானசிகாமணி பதிப்பு, பா. 26.

269. அகஸ்தியர் ஞானவிளக்கம், **யோக ஞான சாஸ்திரத் திரட்டு**, பா. 29.

270. வீ. ஞானசிகாமணி, **அகத்தியர் ஞானம்**, பக். 177–190.

271. சாது செல்லப்பா, **மு. கு. நூ.**, பக். 128–133.

272. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 200.

273. **யோவான்**, 8 : 12.

274. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 200.

275. **யோவான்**, 10 : 10, 11.

276. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 201.

277. **மு. கு. இ.**

278. **யோவான்**, 1 : 8.

279. **மே. கூ. நூ.**, 14 : 7.

280. என். ஜே. எஸ். சிவசுந்தரம், **மு. கு. நூ.**, ப. 365.

281. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, பக். 133, 183.

282. எய்ச். ஏ. பாப்லி, **சற்சமய விளக்கம்**, பக். 24–32.

283. சாது செல்லப்பா, **மு. கு. நூ.**, பக். 128–133.

284. தாமஸ் இரத்தினம், **'பரமகுரு'** (1968).

285. வீ. ஞானசிகாமணி, **மு. கு. இ.**

286. R. Caldwell, Loc. cit.

287. **சிவவாக்கியம் 1000**, பா. 939.

288. **மே. கூ. நூ.**, பா. 940.

289. இயல் 1, 'சித்தர் பாடல் தொகுப்புகளின் காலம்'.

290. **ஆதியாகமம்**, 2 : 7.

291. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 209.

292. மே. கூ. நூ., ப. 201.

293. மே. கூ. நூ., ப. 215.

294. யோவான், 17 : 16.

295. ரோமர், 12 : 1.

296. யாக்கோபு, 4 : 4.

297. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 209.

298. மு. கு. இ.

299. எபிரேயர், 12 : 22

300. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 210.

301. ஆதியாகமம், 1 : 1, 2.

302. குதம்பைச் சித்தர், பா. 41.

303. மே. கூ. நூ., பா. 42.

304. கொலோசேயர், 1 : 14–18.

305. குதம்பைச் சித்தர், பா. 46.

306. மே. கூ. நூ., பா. 48.

307. யாக்கோபு, 1 : 14, 15.

308. குதம்பைச் சித்தர், பா. 114.

309. அப்போத்தலர் பணி, 17 : 24.

310. குதம்பைச் சித்தர், பா. 177.

311. மே. கூ. நூ., பா. 180.

312. மே. கூ. நூ., பா. 181.

313. மே. கூ. நூ., பா. 178.

314. எசேக்கியேல், 18 : 20.

315. யோவான், 9 : 3.

316. குதம்பைச் சித்தர், பா. 194.

317. குதம்பைச் சித்தர், பா. 195.

318. மே. கூ. நூ., பா. 200.
319. யோவான், 4 : 24.
320. குதம்பைச் சித்தர், பா. 38.
321. மே. கூ. நூ., பா. 91.
322. மே. கூ. நூ., பா. 92.
323. மே. கூ. நூ., பா. 34, 100, 117, 138, 139.
324. வீ. ஞானசிகாமணி, மு. கு. நூ., பக். 136–138.
325. மே. கூ. நூ., பா. 16.
326. மே. கூ. நூ., பக். 62, 63.
327. மே. கூ. நூ., பா. 17.
328. அகஸ்தியர் ஞானவிளக்கம், யோக ஞான சாஸ்திரத் திரட்டு, பா. 28.
329. மே. கூ. நூ., பா. 29.
330. அகத்தியர் ஞானம், பா. 28.
331. மே. கூ. நூ., பா. 9.
332. எசேக்கியேல், 28 : 12, 13, 16.
333. திருவெளிப்பாடு, 12 : 12, 20 : 2.
334. அகஸ்தியர் ஞானவிளக்கம், யோக ஞான சாஸ்திரத் திரட்டு, பா. 15.
335. மே. கூ. நூ., பா. 15, 18, 21, 26.
336. போகர் சப்த காண்டம் 7000, காண்டம் 3, பா. 216.
337. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 219.
338. மு. கு. இ.
339. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 226.
340. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 971.
341. மே. கூ. நூ., காண்டம் 3, பா. 972.
342. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 221.
343. மே. கூ. நூ., ப. 111.

* * * * *

இயல் ஐந்து

சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் _ வேற்றுமைகள்

இயல் ஐந்து

சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட் கொள்கைகளும் _ வேற்றுமைகள்

சித்தர் பாடல்கள் வழிப்புலனாகும் அவர்தம் கடவுட் கொள்கைகளுக்கும் விவிலியத்தின் வழிப்புலனாகும் கிறித்தவச்சமயக் கடவுட் கொள்கைகளுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அமைந்த ஒற்றுமைக் கூறுகள் இயல் நான்கில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வொப்பாய்வின் மறுபக்கமாக அமையும் வகையில் இவ்விரு பேரிலக்கியங்கள் வெளிப்படுத்தும் கடவுட் கொள்கைகளிடையே வேற்றுமைகள் சிலவும் புலப்படுகின்றன. அவற்றுள் வெளிப்படையாகத் தெரியக் கூடிய சில மட்டும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

வேற்றுமைகள் அமைதற்குரிய அடிப்படைகள்

இரு பேரிலக்கியங்களின் கடவுட் கொள்கைகளிடையே ஒற்றுமைப் பண்புகள் காணப்படுவதற்குச் சில காரணங்களும் பின்புலங்களும் அமைவது போலவே வேற்றுமைகள் தோன்றுவதற்கும் சில காரணங்களும் பின்புலங்களும் அமைகின்றன. இவ்வகையில், இவ்விருவகை இலக்கியங்களும் தோன்றிய பண்பாட்டுச் சூழல்களையும், சமுதாயப் பின்னணிகளையும் சிறப்பாகக் கருதுதல் வேண்டும்.

விவிலியத்தின் முதற்பெரும் பிரிவாகிய பழைய ஏற்பாடு, மிகப்பழங்காலத்தில் 'எபிரேயர்கள்' என அழைக்கப்பட்ட மக்களது வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டது. இம்மக்கள் பின்னாளில் 'இஸ்ரவேலர்கள்' எனவும் 'யூதர்கள்' எனவும் அழைக்கப்பட்டவர்கள் . இவர்கள் எண்ணற்ற அரசியல் மாற்றங்களுக்கும் போர்களுக்கும், படையெடுப்புகட்கும் உள்ளாக நேர்ந்த காரணத்தால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிதறடிக்கப்பட்டவர்கள். சில நூற்றாண்டு இடைவெளிக்குப் பின்பு, இந்த நூற்றாண்டில் தான் 'இஸ்ரவேல்' என்ற பழைய பெயரில் மீண்டும் ஒரு புதிய நாடாக உருவாகியிருக்கிறார்கள். இன்றைய

நிலையிலும் இந்நாடு, எண்ணற்ற அரசியல் குழப்பங்களுக்கும் உட்பூசல்களுக்கும் போருக்கும் உள்ளாகி நிற்கிறது.

தென்மேற்கு ஆசியக் கண்டத்தில் 'இஸ்ரவேல்' என்ற பெயருடன் இன்று ஒரு சிறு நாடாக விளங்கும் இப்பகுதி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் 'யூதேயா' 'சமாரியா' 'இஸ்ரவேல்' என அழைக்கப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய பெருநாடாக விளங்கியது. இந்நாடு இயேசு பெருமான் வாழ்ந்த புதிய ஏற்பாட்டுக் காலத்தில் 'பாலஸ்தீனம்' என்ற பெயருடன் விளங்கியது. அப்போது அந்நாடு உரோமர்களது ஆட்சிக்குட்பட்டிருந்தது. யூதர், உரோமர் மற்றும் கிரேக்கர் ஆகிய மூவகை மக்கள் அக்காலத்தில் அங்குப் பெரிதும் வாழ்ந்தனர்[1]. பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், பிறநாட்டாருடனும் மக்களினத்தவருடனும் அம்மக்கள் அரசியல், வாணிபத் தொடர்பு கொண்டு இருந்தமையை வரலாற்று ஏடுகள் தெரிவிக்கின்றன[2]. இவ்வாறு பல்வகைப் பண்பாடுகளும் பல்லின மக்களும் சூழ வாழ்ந்தாலும், தமக்கென ஒரு தனித்தன்மை பெற்றவர்களாக யூதர்கள் விளங்கினர். அவர்களது புனித வேத நூலே பழைய ஏற்பாடு. அப் பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சியாகவும் நிறைவேற்றமாகவும் விளங்கும் புதிய ஏற்பாடு, யூத சமயத்தினை அடித்தளமாகக் கொண்டு உலகப் பெருஞ்சமயமாக உருவாகிய கிறித்தவ சமயத்தின் புனித மறைநூலாகும். ஆகவே, விவிலியம் யூதப் பண்பாட்டின் அடிப்படையில் இஸ்ரவேல் நாட்டுப் பின்னணியில் உருவான தெய்வீக நூலாகப் போற்றப்படுகிறது. விவிலியம் கூறும் உண்மைகளும் இயேசு பெருமான் வழங்கும் மீட்பும் மனிதகுலம் அனைத்துக்கும் உரியனவாகக் கூறப்பட்டாலும், இவ்விறை இலக்கியம் உருவான பண்பாட்டு — சமுதாயச் சூழல்கள் ஆய்வு நோக்கில் கருதப்படுதல் வேண்டும். இவ்வாறே தமிழ்ச் சித்தர் பாடல்கள், தமிழகச் சமுதாயப் பின்னணியில் வைத்து ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். சித்தநெறி இந்தியா முழுவதும் பரந்து கிடந்ததொன்றே எனினும், தமிழ்ச் சித்தர்களின் தனித்தன்மைகள் பற்றி இவ்வாய்வில் முன்னரே (இயல் ஒன்று) சுட்டப்பட்டனவற்றை இங்குக் கருதுதல் பொருந்தும். மேலும், தமிழ்ச் சித்தர் பாடல்களில், தமிழர்களின்

சமய நம்பிக்கைகள், சமய இலக்கியங்கள்—புராணங்கள் முதலியவற்றின் நற்செய்திகள், சமுதாய அமைப்பு முதலியவை வெளிப்பட்டு நிற்கின்றன. எனவே பண்பாட்டு, சமுதாயச் சூழல்களின் அடிப்படையில் அமைந்த வேறுபாடுகளின் பின்னணியில், இரு இலக்கியங்களின் கடவுட் கொள்கைகளில் அமையும் வேறுபாடுகளையும் எண்ணிப்பார்த்தல் ஏற்புடையது.

மேலும் விவிலியம், யூதர்கள் மற்றும் கிறித்தவரது புனிதமறை நூலாகும். அதாவது முழுவதும் ஆன்மீகக் கருத்துக்களாலும் கடவுட் கொள்கைகளாலும் நிறைந்த இறை இலக்கியமாக விவிலியம் விளங்குகிறது. ஆனால் சித்தர் பாடல்களோ, யோகம்—இரசவாதம்—மருத்துவம் முதலிய பல துறைச் செய்திகளோடு கடவுட்கொள்கைகளும் கலந்து அமைந்தவையாகும். இலக்கிய அமைப்பு அடிப்படையிலான இவ்வேறுபாடும், இரு இலக்கியங்களின் கடவுட் கொள்கைகளில் அமையும் வேறுபாடுகளுக்கு ஒரு பின்னணியாகக் கருதப்படுதல் வேண்டும்.

வேற்றுமைகள்

(1) யோக நெறிவழி இறைவனை அறிதல்

சித்தநெறி என்பது அடிப்படையில் யோக நெறியாகும். 'கால் பிடித்து, கருவின் நிலையறிந்து மூலக்கனலெழுப்பி மணி மருந்து மந்திரங்களின் துணைகொண்டு மதியமுதமுண்டு நல்லுடம்பு பெற்றோரே சித்தர்கள்' என்று இது பற்றியே ஓர் அறிஞர் விளக்குகிறார்[3]. வாசி எனப்படும் மூச்சினை உள்ளே அடக்கி, மனத்தை யோக சக்தியால் ஒருமுகப்படுத்தி, வயப்படுத்தி, உடம்பில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலை உச்சி ஆகிய ஆறு இடங்களிலும் நிலைபெறுமாறு செய்து, குண்டலினியை எழுப்பிப் பலவகையான யோக அனுபவங்களில் வெற்றிகண்டு, அதற்கு அப்பால் உள்ள எல்லாமான மூலப் பொருளில் நிலைபெறுதலை 'யோகசித்தி' என்பர்[4]. மூலாதாரத்தில் தொடங்கும் இந்த யோகப் பயிற்சியின் இறுதிநிலை 'வெட்டவெளி' எனச் சித்தர்களால் குறிக்கப்படுகிறது. வெளி, வெட்டவெளி, உச்சவெளி,

முப்பாழ்வெளி, முதற்பாழ்வெளி என்றெல்லாம் பல தொடர்களால் குறிக்கப்படும். இந்நிலையே பேரின்ப நிலையாகவும் வீடுபேறாகவும் சித்தர்களால் கருதப்படுகிறது. இப்பரவெளியில்தான் கேளாதன கேட்டுக் காணாதன காணும் சுகானுபவங்களும் இறைத் தன்மையோடு இரண்டறக் கலக்கும் உயர்நிலையும் வாய்க்கும் என்பது சித்தர்கள் கருத்து[5]. ஆகவே, யோகப் பயிற்சியை உடலை மட்டுமே மையமாகக் கொண்டதொரு உடற்பயிற்சியாகச் சித்தர்கள் போற்றவில்லை. இத்தகு உடற்பயிற்சிகளின் வழி மனத்தை ஒருமுகப்படுத்தி, இறுதி இலக்கான இறையின்பத்தைப் பெறவல்ல ஆன்மப் பயிற்சியாகவே இதனைச் சித்தர்கள் பயின்றனர். ஆகவே சித்தர்தம் யோகப் பயிற்சியின் குறிக்கோள், இறைமையில் கலந்து இன்புறுதலாகும். நம் உடலின் மூலத்தானத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினி சக்தியை வீறுகொண்டெழச் செய்து, பூரணத்தில் கலக்க விடுவதே யோகப் பயிற்சியின் முதன்மையான குறிக்கோள் என்பர்[6]. இவ்வகையில்தான் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டுறுப்புகளைக் கொண்ட அட்டாங்க யோகம் முதலியன பேசப்படுகின்றன. ஆகவே, யோகநெறி வழி இறைவனை அல்லது இறைநிலையை அடைதல், சித்தர்களது கடவுட் கொள்கைகளுள்முதன்மையானது எனக் கொள்வதில் தவறில்லை.

இந்த யோகப் பயிற்சியைப் பற்றிப் பேசாத சித்தர்களே இல்லை எனலாம். இந்த ஆய்வில் சிறப்பாகக் கருதப்படும் சித்தர் ஐவரும் கூட விரிவாக இத்தகு யோகப் பயிற்சிகளையும் அவற்றின் வழி இறைவனை அடையும் அனுபவத்தையும் பற்றிப் பேசுகின்றனர். இந்த யோகநிலை பற்றிச் சித்தர்கள் பேசும் பல செய்திகள், யோகப் பயிற்சியில் ஈடுபடாத—யோகநெறி பற்றி நன்கு அறியாத பொதுநிலையினருக்கு விளங்காத மறைபொருள்களாக அமைந்து விடுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாகச் சிவவாக்கியர் ஏராளமான பாடல்களில் யோக நிலைகளைப் பேசுகின்றார். 'நெஞ்சிலே இருந்திருந்து நெருங்கி ஓடும் வாயுவை அன்பினால் இருந்து நீர் அருகிருத்தவல்லிரேல் அன்பர் கோயில் காணலாம்' என்று அவர் தெளிவுபடுத்துகின்றார்[7]. இந்த யோகப் பயிற்சியினையும் அதன் விளைவுகளையும் 'உருத்தரித்த நாடியில்'[8] 'வட்டமென்று உம்முளே'[9] 'விண்கடந்து நின்ற சோதி'[10] 'எட்டு மண்டலத்துளே'[11] 'தானிருந்து மூல அங்கி'[12] 'அங்கலிங்க பீடமும்'[13] 'ஆக்கை முப்பதில்லையே'[14] 'சுழித்தவோர் எழுத்தையும்'[15] 'வடிவுபத்ம ஆசனத்து'[16] 'பாலனாக வேணும் என்று'[17] எனத் தொடங்கும் பாடல்களிலும் இத்தகு பிறபாடல்களிலும் விளக்கமாகப் பாடுகின்றார். இந்த யோகப் பயிற்சியில் தேர்ந்தவரென்று பெருமை பாராட்டியும் பெண்ணாசையை விட்டு விலகாத பொய்யரையும் இன்னொரு பாடலில் கண்டிக்கிறார்[18].

பாம்பாட்டிச் சித்தரும் 'சித்தர் வல்லபம்' எனுந்தலைப்பில் யோக சித்தியால் தாம் விளைக்கவல்ல சாதனைகளைப் பட்டியலிடுகிறார்[19], 'தசநாடி தசவாயு'[20] 'வாயுவினை இரையாக வாங்கி உண்டே'[21] 'ஆகார முதலிலே பாம்பதாக'[22] 'ஓங்காரக் கம்பத்தின் உச்சி'[23] 'விரகக் குடத்திலே'[24] காயக் குடத்திலே[25] 'மூலத் தலத்திலே'[26] என்றெல்லாம் தொடங்குகின்ற பாடல்களில் குண்டலினி யோகப் பயிற்சியைக் குழூஉக் குறிகளாலும் நேரடியாகவும் விளக்குகிறார். இவரது பெயர்க் காரணத்தை விளக்கும் ஓர் அறிஞர், 'பாம்பு என்னும் சொல்லுக்கு 'வாசி' என்று பொருள். பாம்பு என்னும் வாசியின் மூலம் சித்தி பெற்றவராகையால், ~~பாம்பாட்டிச் சித்தர்~~, பாம்பு என்னும் வாசியைப் பிடித்து உச்சிக்கண் என்னும் வேதாந்த[27] முற்றத்தில் ஆட்டியவர் பாம்பாட்டிச் சித்தர்' என எழுதுகிறார். அகத்தியர் என்றழைக்கப்படும் சித்தரது பாடல்களும் இந்த யோகப் பயிற்சிகளைப் பேசுகின்றன. 'உண்ணும் போதுயிரெழுத்தை'[28] 'விந்துநிலைதனையறிந்து'[29] 'மூலமறையறிந்தோர்கள்'[30] 'ஆச்சப்பா இந்தமுறை'[31] 'பாரப்பா உதயத்தில்'[32] எனத் தொடங்கும் பாடல்களும் 'ஞானம்—13' என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களும்[33] யோகப் பயிற்சியின் விளக்கங்களாக அமைந்துள்ளன.

'யோக ஞான சாஸ்திரத் திரட்டு' எனும் தொகுப்பில் இச் சித்தர் பெயரால் காணப்படும் 'காமப் பாலெட்டாகி'[34] 'இருந்திட்ட சூட்சம்'[35] எனத் தொடங்கும் பாடல்களும் யோக நிலைகளை விளக்குவனவாகவே கொள்ளலாம்.

குதம்பைச் சித்தர் பெயரால் 'பதினெண் சித்தர் ஞானக் கோவையில் காணப்படும் 32 கண்ணிகளும் யோக நிலைகளையே பேசுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை குழூஉக் குறிகளால் அமைந்தவை. 'வெட்டவெளிதன்னை'[36] 'மாங்காய்ப்பால் உண்டு'[37] 'உச்சிக்கு மேற்சென்று'[38] அந்தரந்தன்னில்'[39] எனத் தொடங்கும் கண்ணிகள் குறிப்பிடத்தக்கன.

'போகர் சத்த காண்டம் 7000' எனும் நூலில் யோக நிலைகளை விளக்கும் பாடல்கள் பல காணப்படுகின்றன. யோகப் பயிற்சியின் உச்சநிலையில் பெறும் இறையின்பத்தைப் பேசும் பின்வரும் இருபாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

'சொன்னாரே கடவுளல்லால் வேறொன்றில்லை
சுந்தரனே கடவுள்தனைக் காணமாட்டார்
மன்னவனே தெய்வமதைக் காணுதற்கு
மகத்தான திருஷ்டாந்திர மேதென்றாக்கால்
தென்னவனே தேவஸ்தானந் தன்னில்
திகழான மணியோசை கேட்குமல்லோ
முன்னவனே மணியோசை கேட்கும்போது
முனையான மணியொன்று இருக்கலாச்சே'[40]

'இருக்கவென்றால் மணியென்ற கருவொன்றுண்டு
எழிலான கருவதனைக் கண்டதில்லை
திருத்தமுடன் மணியோசை கேட்டபோது
திகழான மணியொன்று யிருக்கும் பாரு
பொருத்தமுடன் வையகத்தில் அதிசயங்கள்
பொங்கமுடன் கோடான கோடியுண்டு

வருத்தமுடன் பிறப்பதுவும் பிறப்போர் தம்மை
வளப்பமுடன் மழைதனையே கண்டிட்டோமே'[41]

இவ்வாறே சித்தர்கள் பிறரும் யோகப் பயிற்சியினால் பெறும் இறை இன்பத்தையும் இறையனுபவத்தையும் பற்றித் தம் பாடல்களில் பேசுகின்றனர்.

ஆனால், கிறித்துவத் திருமறையான விவிலியமோ இத்தகு உடற்பயிற்சிகள்—மூச்சுப் பயிற்சிகள் முதலிய மனித முயற்சிகளால் இறைவனுடன் இணைய முடியும் என்ற கருத்தினை மறுக்கின்றது. புனிதர் பவுல், இப்படிப்பட்ட போதனைகளைப் பற்றி எச்சரித்துப் பேசுகின்றார். 'இவையனைத்தும் மனிதர்களுடைய கட்டளைகளும் படிப்பினைகளுமே! மனிதர்களே வகுத்துக் கொண்ட வழிபாடு, போலித் தாழ்மை, உடல் ஒறுத்தல் முதலியவற்றைக் கொண்டு உள்ளதால், இப்படிப்பினைகள் ஞானம் போல் தோன்றலாம். ஆனால் அவற்றிற்கு மதிப்பேதும் இல்லை. இச்சைகளைத் தீர்க்கத்தான் அவை பயன்படும்'[42] மனிதன் பெறுகின்ற பாவமன்னிப்பு, மீட்பு முதலிய இறை அனுபவங்கள் இயேசு கிறித்துவிலும் அவர் இயற்றிய தெய்வீகத் திருத்தியாகத்திலும் ஒருவன் கொள்ளும் நம்பிக்கையாலும் இறையருளாலும் வாய்ப்பனவேயன்றிப் பிற எவ்வகையாலும் கிட்டக்கூடியனவல்ல என்பது விவிலியத்தின் அழுத்தமான போதனை. இதனை 'அருளாலேயே விசுவாசத்தின் வழியாக மீட்பு அடைந்திருக்கிறீர்கள். இது உங்களால் ஆனதன்று; கடவுளின் நன்கொடையே. இது மனித செயல்களால் ஆனதன்று. எனவே எவனும் பெருமை பாராட்டிக் கொள்ளலாகாது'[43] எனும் விவிலியப் பகுதி தெளிவுபடுத்துகின்றது. இயேசு பெருமானும் தம்மாலே அல்லாமல் எவரும் தந்தையாகிய கடவுளை அடைய இயலாது[44] என வலியுறுத்திக் கூறியுள்ளார். இறைவனையடைய தாமே (கிறித்து) வழி என்பது அவரது முடிந்த முடிபாகும். எனவே, யோகப் பயிற்சி வழி இறைவனுடன் கலக்கலாம் என்பது கிறித்துவத்தின் அடிப்படைப் போதனையுடன் முரண்பட்டுக் காணப்படுகிறது. எனினும், கிறித்தவ எழுத்தாளர்கள் சிலரும் பிறரும் 'யோகம்' என்பதற்கு 'இறைவனுடன் கலத்தல்'

எனப்பொருள் கொண்டு கிறித்தவச் சமய உண்மைகளின்[45] அடிப்படையில் பல விளக்கங்களை வழங்கியுள்ளனர்.

(2) நமக்குள்ளேயே இறைவனை உணருதல்

நமக்குள்ளேயே இறைவனை நாம் காணவேண்டும் என்பது சிவவாக்கியர் போன்ற சித்தர் சிலர் பேசும் பிறிதொரு இறைக் கோட்பாடாகும். போகர், பத்திரகிரியார் போன்ற சித்தர் பாடல்களில் உட்பொருளாக வெளிப்படும் இக்கருத்தை சிவவாக்கியர் தம் பாடல்களில் வெளிப்படையாகவும், விரிவாகவும் பேசுகின்றார். இக்கருத்து, முன்னர்ச் சொல்லப்பட்ட யோக நெறியுடன் தொடர்புடையது என்பது இங்குக் கருதத்தக்கது. யோகப் பயிற்சியின் உச்ச நிலையில், இறைவனுடன் கலக்கும் அல்லது இறைநிலை எய்தும் ஒரு யோகி, தனக்குள் இருக்கும் இறைமையைத் தான் உணர்ந்து கொண்டவன் என்பது இச்சித்தர் தம் கருத்தாகும்.

சிவவாக்கியரின் பின்வரும் இருபாடல்கள் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தவல்லன.

'என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்த தில்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டனே'[46]

'நாடி ஓடி நம்முளே நயந்துகாண வல்லிரேல்
ஒடிஒடி மீளுவார் உம்முளே அடங்கிடும்
தேடிவந்த காலனும் திகைத்திருந்து போய்விடும்
கோடிகாலமும் உகந்து இருந்தவாறது எங்ஙனே'[47]

'சாத்திரங்கள் ஓதுகின்ற'[48] 'கைவடங்கள் கொண்டு நீர்'[49] 'கடலிலே திரியும் ஆமை'[50] 'செங்கலும் கருங்கலும்'[51] 'கோயில் பள்ளி ஏதடா'[52]

ஆடுகின்ற எம்பிரானை[53] 'தத்துவங்கள் என்று நீர்'[54] எனத் தொடங்கும் பாடல்களும் இத்தகு பிற பாடல்களும் கூட இக்கருத்தையே வலியுறுத்திப் பேசுகின்றன.

தமக்குள்ளேயே உள்ள இறைமையை உணருமாறு சித்தர் சிலர் வலியுறுத்தியதால்தான் க. கைலாசபதி 'சித்தர்கள் பண்புவடிவாகிய இறைமையில் நம்பிக்கை உடையவர்களே (abstract God Head) அன்றிப் பெரிதும் தனிப்பட்ட இறைவனில் (Personal God) நம்பிக்கை கொள்ளவில்லை'55 எனக் குறிப்பிடுகின்றார் எனக் கொள்ளலாம்.

இந்தியச் சமயத் தத்துவங்கள் பிறவற்றிலும் 'அத்துவிதம்' 'அகம்பிரம்மா' எனப் பல பெயர்களில் பேசப்படும் இவ்வுண்மை விவிலியத்தின் போதனைக்குப் பெரிதும் முரண்பட்டு நிற்பதாகும். படைத்தவர் (இறைவன்) வேறு; மானிடர் உள்ளிட்ட படைப்புகள் வேறு; படைப்புகள் படைத்தவரை வணங்குதல் வேண்டுமேயன்றிப் பிற படைப்புகளையோ தம்மைத் தாமேயோ வணங்குதலாகாது என்று விவிலியம் தெளிவுபடுத்துகின்றது[56] 'கர்த்தரே தேவனென்று அறியுங்கள், நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தைத் தோத்திரியுங்கள்'[57] என்ற பழைய ஏற்பாட்டுச் சங்கீத நூலின் வாசகம் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகிறது. எனினும், மனிதனுக்குள் இறைப் பண்பு பொதிந்து இருக்கிறதென்பதை விவிலியமும் சுட்டுகின்றது. ஆதியாகமம், கடவுள் மனிதனைத் தமது சாயலாகவே படைத்ததாகப் பேசுகின்றது[58] 'உங்களுக்குள்ளே இறையரசு வந்திருக்கிறது' என இயேசு பெருமானும் மொழிந்தருளினார்[59]. நாமே இறைவனின் ஆலயம்' என்றும்[60] 'நமக்குள் இறைவனின் தூய ஆவியானவர் குடியிருக்கின்றார்'[61] என்றும் புனித பவுலடிகளாரும் பேசுகின்றார். இறுதியாக, இறைமகன் இயேசு இறுதி நியாயத்தீர்ப்புக்காக இவ்வுலகிற்குத் திரும்ப வரும் போது, அவர் இருக்கிற

வண்ணமாகவே அவரைத் தரிசித்து, அவருக்கு ஒப்பாக மாறிவிடுவோம் என்று புனித யோவான் என்பவரும் தம் திருமுகத்தில் எழுதியுள்ளார்[62]. எனினும், இக்கருத்துக்கள் அனைத்தும் மனிதனுக்கும், இறைவனுக்கும் உள்ள நெருங்கிய உறவைச் சுட்டுகின்றனவேயன்றி 'மனிதனே இறைவன்' என்று கூறவில்லை.

சித்தர்களுள்ளும் சிவவாக்கியரைத் தவிரச் சித்தர் பிறர் இக்கருத்தை வலியுறுத்தவில்லை. குதம்பைச் சித்தரின்,

> 'தன் புத்தி தெய்வமாய்ச் சாற்றிய சார்வாகம்
> புன் புத்தி ஆகுமடி'[63]

என்ற பாடலடிகள் இக்கருத்தை மறைமுகமாக மறுத்துரைப்பதாகக் கொள்ளலாம்.

3 . உடற்பழிப்பு

மனித உடலின் நிலையாமையையும் இழிவையும் பாடுவது, சீர்திருத்த உணர்வுடன் பாடும் சித்தர்கள் சிலரிடம் காணப்படும் இன்னொரு பண்பாகும். மக்கள் உலக இன்பங்களைத் துறந்து, பற்றற்ற துறவிகளாக மாறும்படி அவர்களை வற்புறுத்தும் நோக்கத்தோடு சித்தர்கள் இத்தகு பாடல்களைப் பாடவில்லை. புறஅழகைப் பேணுவதே முக்கியம் எனும் உணர்வை மாற்றி மக்கள் இறையுணர்வு பெறத்தூண்டுவதே இப்பாடல்களின் நோக்கம் என்பதை இப்பாடல்களை ஆழ்ந்து கற்போர் தெளியலாம். ஆகவேதான் சித்தர்களின் உடற்பழிப்புப் பாடல்களையும் அவர்தம் கடவுட் கொள்கைகளைச் சார்ந்தவையாகக் கருத வேண்டியுள்ளது.

சித்தர்கள் அனைவருமே இத்தகு 'உடற்பழிப்பு'ப் பாடல்களைப் பாடியதாகக் கூறவியலாது. பட்டினத்தார்[64], பாம்பாட்டிச் சித்தர்[65], குதம்பைச் சித்தர்[66] ஆகியோரே இத்தகு பாடல்களை அதிகமாகப் பாடி உள்ளனர். சிவவாக்கியரும் அகத்தியரும் மிகச்சில பாடல்களில் தான் யாக்கை நிலையாமையைப் பாடுகின்றனர்.

'சரீரத்தின் குணம்' என்ற தலைப்பில் அமைந்த பாம்பாட்டிச் சித்தரின் பத்துப் பாடல்கள், மனித உடலின் நிலையாமையையும், இழிதகைமையையும் பயனின்மையையும் உவமை—உருவக அணிநயங்களுடன் விரித்துப்பாடுகின்றன. 'நீரில் தோன்றும் குமிழி நிலையின்றி மறைவது போல, இம் மனித உடலும் மறைந்து விடும். ஆகவே, நம்மைப் படைத்த இறைவனைப் பற்றிக் கொள்வதே ஏற்புடையது' என அவர் அறிவுறுத்துகிறார்[67].

குதம்பைச் சித்தரும் 'உடலைப் பழித்தல்' என்ற தலைப்பில் 9 கண்ணிகள் பாடியுள்ளார். அவர், 'நாற்றம் பெருகிய உடலுக்கு வீணான பூச்சுகளும் புனைவுகளும் எதற்காக? சீழும் நிணமும் பிதுங்கும் உடலுக்குச் சுகபோகவசதிகளும் வாகனங்களும் எதற்காக?' என்றெல்லாம் வினாக்கள் தொடுத்துத் தம் கருத்தை உணர்த்துகிறார்[68].

சிவவாக்கியரது பாடல் ஒன்று, மக்கள் பூசிப் புனைந்து அலங்கரிக்கும் இந்த மனித உடலை உயிர் பிரிந்தவுடன் நாறுமென்றஞ்சி, அவசரமாகச் சிதைத்துவிடும் மாயத்தை வியக்கிறது[69]. இன்னொரு பாடலில் சிவவாக்கியர் நமன்வந்து அழைக்கும்போது எத்துணைச் செல்வம் படைத்தவரின் மேனியும் எரிந்தழிய வேண்டிய நியதியைச் சுட்டுகிறார்[70].

அகத்தியர் 'ஊனென்ற உடலை நம்பி' வாழும் மனிதரைக் கண்டிக்கிறார்[71].

பட்டினத்தார் மிக அதிகமான பாடல்களில் மனிதவுடலை இழித்தும் பழித்தும் பேசினாலும் அவரது பாடல்கள் உணர்த்தும் உண்மையைப் பின்வரும் இரு பாடல்களும் நன்கு சுட்டுகின்றன எனலாம்.

> 'முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
> பிடிசாம்பராய் வெந்துமண்ணாவது கண்டு பின்னும் இந்தப்
> பிடிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம் பலவர்
> அடிசார்ந்து நாம் உய்ய வேண்டுமென்றே அறிவாரில்லை'[72]

'விட்டுவிடப் போகுதுயிர் விட்ட உடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் — பட்டதுபட்டு
எந்நேரமும் சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்'[73]

கிறித்தவத் திருமறையான விவிலியமும் மனித உடலின் நிலையாமை— அவ்வுடலை நம்பி வாழ்தலின் தவறு ஆகிய கருத்துக்களில் சித்தர் பாடல்களுடன் ஒன்றுபட்டாலும், எவ்விடத்திலும் மனித உடலைப் பழிப்பதுபோல் பேசவே இல்லை, மனித உடல், இறைவன் மனிதனுக்கு வழங்கிய ஒரு கொடை, அதனைத் தவறாகப் பயன்படுத்தலாகாது. மனித உடலைச் சிற்றின்ப இச்சைகளுக்கு இடமாகப் பயன்படுத்தலாகாது. உடல் உறுப்புகளைத் தீமை செய்யும் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்படைக்காமல் கடவுளுக்கு ஏற்புடையதாகச் செய்யும்படி அவற்றை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்றே விவிலியம் அறிவுறுத்துகிறது[74].

மேலும் 'உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள் என்பது உங்களுக்குத் தெரியாதா? அப்படியிருக்க, நான் ஆண்டவரின் உறுப்புகளை எடுத்து வேசியின் உறுப்புகளாகச் செய்யலாமா? ஒருக்காலும் செய்யலாகாது' என்றும்[75] 'உங்களுடைய உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குள் குடி கொண்டிருக்கும் அந்த ஆவியைக் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டீர்கள். ஆகவே, உங்கள் உடலில் கடவுளை மகிமைப்படுத்துங்கள்' என்றும்[76] அழுத்தந்திருத்தமாக, மனித உடலை இறைவன் குடியிருக்கும் தூய ஆலயமாகப் போற்ற வேண்டியதன் தேவையை வலியுறுத்துகிறது. உடற்பழிப்புரைகள் விவிலியப் போக்குக்கு மாறானவையாக விளங்குகின்றன. எனினும், உடலின்பம் நாடாமல் இறையின்பம் நாடவேண்டும் என்னும் உண்மையையே சித்தர் பாடல்கள் எதிர்மறை முகமாகச் சொல்ல, விவிலியம் உடன்பாட்டுப் போக்கில் அறிவுறுத்துகின்றது எனலாம். மேலும், 'மனித உடல் இறைவனின் ஆலயம்'

எனும் விவிலியக் கருத்து, பின்வரும் இருபாடல்களிலும் எதிரொலிப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

'கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்றது ஏதடா
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்கள் ஏதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே'[77]

— சிவவாக்கியர்

'மெய்த்தலத்தில்லாத மெய்ப்பொருளானவர்
பொய்த்தலத் தெய்வதுண்டோ குதம்பாய்
பொய்த்தலத் தெய்வதுண்டோ?[78]

— குதம்பைச் சித்தர்

4. பெண் பழிப்பு

சித்தர் சிலர் மனித உடலைப் பழித்துப் பாடுவது போலவே, பெண்ணின்பத்தின் இழிவையும் கேட்டையும் விளக்குமுகத்தான் பெண்களையும் அவர்தம் அழகினையும் பழித்துப் பாடவும் செய்கின்றனர். இவ்வகையில் பட்டினத்தாரும் பாம்பாட்டிச் சித்தரும் குதம்பைச் சித்தரும் மிக அதிகமான பாடல்களைப் பாடியுள்ளனர். பெண் இன்பமே கதியெனக்கிடவாது, இறையின்பம் நாடி உய்யுமாறு மக்களை அறிவுறுத்துவதே இப்பாடல்களின் உள்நோக்கமாகும்.

பாம்பாட்டிச் சித்தர், 'பெண்ணாசை விலக்கல்', எனும் தலைப்பில் பெண்களின் அழகும் கவர்ச்சியும் எத்துணை நிலையற்றன என்பதையும் பெண்ணின்பம் நாடுவோரின் இழிதகைமையையும் பத்துப் பாடல்களில் விரிவாகப் பாடுகின்றார்.

'சிக்கு நாறுங் கூந்தலையே செழுமை மேகமாய்ச்
செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக்கொப்பதாய்
நெக்குநெக்கு உருகிப் பெண்ணை நெஞ்சில் நினைப்பார்
நிமலனை நினையார் என்று ஆடுபாம்பே'

என்பது அவர் உள்ளக் கருத்தை விளக்கவல்ல ஒரு பாடலாகும்[79].

குதம்பைச் சித்தர் 'மயக்கும் மாதரைப் பழித்தல்' எனும் தலைப்பில் மாதர் அழகின் நிலையாமையைப் பன்னிரண்டு கண்ணிகளில் விளக்குகின்றார். மகளிரின் ஒவ்வொரு உறுப்பாகக் குறிப்பிட்டு, அவற்றின் அழகும் வனப்பும் முதுமை எய்தலும் எவ்வாறு குன்றும் என்பதை விளக்குகின்றார்.[80] இவ்வாறு மகளிரைப் பழிக்கும் சித்தர் பாடல்கள் பலவும், பெரும்பாலும் அனைத்து மகளிரைப் பற்றியும் பொதுவாகப் பேசாது, ஆடவரைத் தவறான வழியில் இழுக்கும் ஒழுக்கம் தவறிய பெண்டிரையே குறிக்கின்றன எனலாம். இதனை 'மயக்கும் மாதரைப் பழித்தல்' எனும் தலைப்பில் அமைந்த குதம்பையாரின்

'கையாலழைப்பது போல வுனதுகண்
மையால் அழைப்பதென்னை குதம்பாய்
மையால் அழைப்ப தென்னை'[81]

என்ற பாடல் தெளிவுபடுத்துகின்றது. சிவவாக்கியரது பாடல் ஒன்று தங்களைப் 'பெரிய யோகிகள்' எனப் பெருமை பாராட்டிக் கொண்டும், பெண்ணாசை விடாதாரைப் 'பேயர்' எனப் பழிக்கின்றது[82].

பட்டினத்தார் பாடல்களும் பெண் இன்பத்தை மிகவும் கடுமையாகவும் வெளிப்படையாகவும் சில இடங்களில் விரசமாகவும் பழித்துப் பேசுகின்றன.

'வேதத்தின் உட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்தவன் மொழிகேட்டிலையோ செய்த புண்ணியத்தால்

ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சம் அதாம்பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே'[83]

என்பது இக்கருத்துரைக்கும் அவரது பாடல்களுள் ஒன்று.

விவிலியத் திருமறையும், பெண்ணின்பம் நாடாது இறையின்பம் நாடுமாறும், இறைவனைத் தேடுமாறும் வலியுறுத்துகின்றதெனினும், மகளிரைப் பழிக்கும் வகையிலான வாசகங்களை எங்கும் காணவியலாது. புனித பவுலடிகளாரும் கிறித்தவ அடியவர் சிலரும் பாலுறவைப் பாவமென்று கூறுவதாகவும் அதனை விலக்குமாறு அறிவுறுத்துவதாகவும் தம் நூலில் ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் கூறும் கருத்துக்கு[84] விவிலியத்தில் வலுவான ஆதாரம் இல்லை. மாறாகத் தம்மைப் போல் திருமண வாழ்வைத் தவிர்த்து இறைத் தொண்டில் ஈடுபடுதல் அனைவர்க்கும் உரியதன்று எனப் புனித பவுலடிகளும்[85] சிறப்பான வரம் பெற்றோரேயன்றிப் பிறர் திருமண வாழ்வை இறைப்பணியை முன்னிட்டுத் துறந்திட வேண்டிய தேவை இல்லை என இயேசு பெருமானும்[86] தெளிவுபடுத்திடக் காணலாம்.

யூத சமுதாயத்தில் பெண்களுக்குச் சிறப்பான இடம் தரப்படவில்லை. பெண்கள் அங்கு இழிவாகக் கருதப்பட்டனர் என்பதற்கு யூத ஆடவர் செய்யும் ஒரு பிரார்த்தனையே சான்று பகர்கிறது. 'இறைவா! என்னை ஒரு நாயாகவோ புறவினத்தானாகவோ, பெண்ணாகவோ படைக்காமல் ஆணாகப் படைத்தமைக்காக நன்றி கூறுகிறேன்' என்பதே அப்பிரார்த்தனை[87]. எனினும், யூத சமயத்தின் வேதமான பழைய ஏற்பாட்டு நூல்களில், பெண்களை இழிவுபடுத்தும் ஒரு வாசகமும் காணப்படவில்லை. பெண்டிருக்குப் பாதுகாப்பும் நல்வாழ்வும் வழங்கும் அறிவுரைகளும் ஆடவருக்கும் பெண்டிருக்குமான கற்பு நெறிகளுமே பேசப்படுகின்றன[88].

கிறித்தவத்தைப் பொறுத்தவரைப் பெண்மைக்குப் பெருமையும் மாண்பும் தந்த நெறியாக அது விளங்குகிறது. இயேசுபெருமான் ஏழையும் கன்னியுமான

ஒரு புனிதமான பெண்ணின் வயிற்றில் மனிதனாக அவதரித்தார். ஒழுக்கம் தவறிய பெண்களைக் கூட இழித்துப் பேசிப் புறக்கணிக்காமல், பாவமன்னிப்பும், புதுவாழ்வும் வழங்கி ஆட்கொண்டார்; ஆதரித்தார்.[89] மரணத்தினின்று உயிர்த்தெழுந்ததும் ஒரு பெண்ணுக்கே முதற்காட்சி வழங்கினார்[90]. இவைபோன்ற சான்றுகளால் இயேசு பெருமான் பெண்மைக்குப் பெருமை தந்தமை புலப்படும். இதனாலேயே, 'கணவன் மனைவிக்குத் தலைவன்' என வலியுறுத்தும்[91] புனித பவுலடிகளும், 'கிறித்துவுக்குள் ஆணென்றும் இல்லை; பெண்ணென்றும் இல்லை. அனைவரும் இறையருளுக்கும் மீட்புக்கும் இணையான உரிமையுடையவரே எனத் தெளிவுபடுத்துகிறார்[92]. சிற்றின்பத்தையும் தீயொழுக்கத்தையும் கடுமையாக விவிலியம் கண்டித்தாலும்[93], பெண்டிரையும் அவர் உடலமைப்பையும் அழகையும் பழிக்கும் எதிர்மறைப் போக்கு எங்கும் காணப்படவில்லை.' சித்தர் சிலரது பாடல்களுக்கு விவிலியம் இவ்வகையில் மாறுபடுவது கருதத்தக்கது.

5. புராண மேற்கோள்களையும் இந்து சமயக் கடவுளர் பெயர்களையும் பயன்படுத்தல்

யூதமக்கள், 'ஏகோவா' என அழைக்கப்படும் 'உயிருள்ள மெய்க்கடவுளையேயன்றிப் பிற அந்நிய தெய்வங்களை வணங்குதலும் வழிபடுதலும் கூடாதெனப் பழைய ஏற்பாடு கண்டிப்பாக அறிவுறுத்துகிறது[94]. பிற தெய்வங்களை வணங்குதல் மட்டுமன்றி, அவர்தம் பெயர்களை உச்சரித்தலும் கூடாதெனக் கூறப்படுகிறது[95]. 'பிற தெய்வங்கள் பெயரை உச்சரிக்கவும் மாட்டேன்' எனத் தாவீது என்பார் பெருமிதத்துடன் சங்கீதநூலில் கூறுகின்றார்[96]. புதிய ஏற்பாட்டில் இத்தகு கண்டிப்பான விதிகளும் அறிவுரைகளும் கூறப்படவில்லை எனினும், உருவ வணக்கத்தையும் தெய்வச் சிலைகட்குப் படைக்கப்பட்டவைகளை உண்ணுதலையும் விலக்கி விடுமாறு அறிவுறுத்துகிறது[97]. இந்தப் பின்னணியில், உருவ வணக்கத்தையும் நம் நாட்டுச் சமயங்களின் பல்வேறு சடங்குகளையும் சாத்திரங்களையும் வேத ஆகமங்களையும் மறுத்துப் பேசும் சித்தர் பாடல்கள்,

புராணச் செய்திகளையும் இந்துக் கடவுளர் பெயர்களையும் குறிப்பிடுவது, ஒரு முக்கிய வேறுபாடாகும்.

பல்வேறு சித்தர்களும் புராணங்களையும் சடங்கு சாத்திரங்களையும் கண்டித்தும் மறுத்தும் பாடினாலும், தம் பாடல்களில் புராணச் செய்திகளை மேற்கோள் காட்டிப் பேசுகின்றனர்[98]. இந்து சமயக் கடவுளர் பெயர்களையும், மறுக்கும் வகையில் மட்டுமின்றி உடன்பாடாகவும், பயன்படுத்துகின்றனர்[99].

சிவவாக்கியர் 'எந்தை ராம ராம ராம ராமவென்னும் நாமமே'[100] 'தில்லை நாயகன் அவன் திருவரங்கனும் அவன்'[101] 'நாதர் பாதம் அம்மை பாதம்'[102] 'ஆலம் உண்ட கண்டர் ஆணை அம்மை ஆணை'[103] 'சிவாயவசி என்னவும் செபிக்கயாவும் சித்தியாம்'[104] என்றெல்லாம் குறிப்பிடுகிறார். அஞ்செழுத்து மந்திரமான 'நமச்சிவாய' என்பதைப் பற்றி அடிக்கடிப் பாடுகின்றார்[105].

அகத்தியச்சித்தரும் 'கண்ணான கணபதி'[106] 'அயன்மாலும் அரனோடும்'[107] 'மகேச்சுரி'[108] 'நந்தி மாலயன்'[109] 'உமைபாகன்'[110] ஆகிய தொடர்களைப் பயன்படுத்துகிறார்.

பல்வேறு தெய்வங்களை மனிதர்களே என்று 'சத்த காண்டம் 7000' எனும் நூலில் பாடும் போக சித்தரே, கணேசர், நந்தி, பராபரி என்பன போன்ற தெய்வப் பெயர்களைப் பயன்படுத்துகிறார்[111].

பாம்பாட்டிச் சித்தர் 'பாம்பின் சிறப்பு' என்ற தலைப்பில் பாம்பு தொடர்பான ஏராளமான புராணச் செய்திகளைப் பட்டியலிட்டுப் பாடுகின்றார்[112] பிறவிடங்களில் பிறதெய்வப் பெயர்களைக் குறிப்பிடாத பாம்பாட்டிச்சித்தர் இங்கு மட்டும் ஏராளமான புராணச் செய்திகளைப் பாடுவதனால், இப் பாடல்களின் உண்மைத் தன்மையைச் ச. மாடசாமி ஐயுறுகின்றார். எனினும் 'ஆதிசேடன்' முதலிய புராணக் கருத்துக்களை அவர் தாராளமாகப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது[113].

இந்து சமயக் கடவுளர் பெயர்களை எங்கும் குறிப்பிடாத குதம்பைச் சித்தர், 'சிவன்'[114] 'பிரமம்'[115] ஆகிய தொடர்களை மட்டும் பயன்படுத்தக் காணலாம். கிறித்தவக் கருத்துக்கள் பலவற்றுடன் சித்தர் பாடல்கள் ஒன்றுபட்டாலும், இவ்வகையில் மாறுபட்டு நிற்பது குறிப்பிடத்தக்கது.

6. பூசா விதிகள், மந்திரங்கள், யந்திரங்கள், முதலியனவற்றைக் குறிப்பிடல்

யோகப் பயிற்சி செய்யும் சித்தர்கள், அதனுடன் தொடர்புடைய மந்திரம், தந்திரம், யந்திரங்கள் ஆகியவை பற்றியும் பேசுகின்றனர். மந்திரம் என்பதனைத் தன்னை நினைப்பவரைக் காப்பது என வி.வி. ரமணசாஸ்திரியும்[116] 'நிறைமொழி மாந்தராகிய' சித்தர் கூறும் எல்லையற்ற ஆற்றலை உடைய ஒலிவடிங்கள் என இரா. மாணிக்கவாசகமும்[117] விளக்குகின்றனர். தந்திரம் என்பது தம் ஆற்றலைப் பெருக்குவது எனவும் யந்திரம் என்பது ஞானம் அடையத் தடையாயினவற்றை வேறு ஆற்றலின் துணையால் தகர்க்க உதவுவது என்றும் விளக்குவர்[118]. மந்திரம், தந்திரம், யந்திரம், ஆகிய இம்மூன்றும் அடங்கியதாகத் திருமந்திரம் எனும் நூல் விளங்குகின்றது. இவை பற்றிய விரிவான விளக்கங்கள் சித்தரது யோகப் பயிற்சிகள் தொடர்பான நூல்களில் காணலாம். இவையேயன்றிச் 'சக்கரங்கள்' பற்றியும் சித்தர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர்[119].

சிவவாக்கியர் தம் பாடல்களில் மந்திரம், மந்திரநிலை என ஆங்காங்குப் பேசுகிறார். 'நமச்சிவாயமே உயர் மந்திரம்' என்பது அவர் விளக்கம்[120] அகத்தியரோ, 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா' எனக் கூறுகின்றார்[121] குதம்பைச் சித்தர், யோகம் தொடர்பான மந்திரங்களை 'மந்திரநிலை' எனும் தலைப்பில் பாடுகிறார்[122] ஆனால் மாயமந்திரங்கள், கண்கட்டுவித்தைகள் செய்து பிழைப்போரையும் மையிட்டுக் காட்டுதல், நல்லநாள் கெட்டநாள் பார்த்தல், சோதிடம் பார்த்தல், முதலியனவற்றையும் கடுமையாகக் கண்டித்து அவை தீத்தொழில்கள் எனச் சாடுகிறார்[123]. இதற்கு மாறாகப் போகரது 'சத்தகாண்டம் 7000' எனும் நூலில், சோசியம் பார்த்தல், வசியம் செய்தல் முதலியவை

தொடர்பான விதிகளையும் வழிமுறைகளையும் பல பாடல்கள் விளக்குகின்றன[124] மேலும் இராமதேவர், கருவூரார் போன்ற சித்தர் சிலர், பல்வகைப் பூசா விதிகளை விரிவாகப் பாடுகின்றனர்[125].

கிறித்தவச்சமய மூலவராகிய இயேசு பெருமான், இத்தகு பூசைச் சடங்குகளையும் பாரம்பரியங்களையும் கண்டித்து, உள்ளத் தூய்மையோடும் உள்ளுணர்வோடும் எங்கும் எவரும் கடவுளை வழிபடலாம் எனப் போதித்தார்.[126] சடங்குகளைக் கடைப்பிடிக்கும் மக்கள், காலப்போக்கில் அச்சடங்குகளின் உட்பொதிந்துள்ள உண்மைகளை மறந்து விடுவதால், சடங்குகள் அகன்றதொரு சத்திய நெறியையே அவர் உருவாக்க விழைந்தார்[127].

மேலும் மாயமந்திரம், பில்லி சூனியம் வைத்தல், சோதிடம் பார்த்தல், நாள் பார்த்தல் முதலியவற்றைப் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் மிகக் கடுமையாகக் கண்டிக்கின்றன; அவை தீய ஆவிகளின் செயல்க்ள் என்று பேசுகின்றன;[128] இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இறைமக்களுக்கு எதிராக மந்திரவாதங்களும் பில்லிசூனியமும் செயல்படா என உறுதி கூறுகின்றன. 'யாக்கோபுக்கு எதிரான மந்திரவாதம் இல்லை' என்பது விவிலிய மொழி[129], ஆக, இவ்வகையிலும் சித்தர் பாடல்களுடன் விவிலியம் முரண்பட்டு நிற்கின்றது.

7. அனைத்துச் சமயங்களையும் மறுத்தல்

கிறித்தவச் சமயக் கடவுட் கோட்பாடுகள் சிலவற்றுடன் சித்தர் சிலரது இறைக் கொள்கைகள் வேறுபடுவது இதுவரை விளக்கப்பட்டது. இனி, சித்தர் சிலர் அனைத்துச் சமயங்களையுமே மறுத்துப் பேசுவது இங்குக் கருதத்தக்கது.

'சிவவாக்கியர் 1000' என்ற நூலில் காணப்படும் சில பாடல்கள், கிறித்தவ இஸ்லாம் சமயங்கள் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களையும் மறுத்தும் ஐயுற்றும் பேசுகின்றன. கிறித்தவம் இஸ்லாம் தொடர்பான அவரது பாடல்கள் இவை:

'ஏசுமதவாதிகள் இறந்தபின் கடைசியிற்
பாசம் வைத்து ஒருமிக்கப் பலரையு மெழுப்பியே
நேசமுறப் பாபத்தை நிராகரித்து மோட்சத்தில்
வாசமிக வைக்கவே சர்வேசர் வரலுண்மையோ'[130]

'இல்லல்லா மஹம்மது ரசூலுல்லா விஸ்லாமதம்
அல்லல்லா வெனுந் துலுக்க ரல்லாக்கை விரலைந்தை
மல்லல்லா கொடுத்து இந்து மதத்தர் கொண்டாடவிடின்
சொல்லல்லாச் சுடுகாடாகி சுற்றி நாய்களோடுமே'[131]

'பக்கச் செடிச்சிச் செடிற் பற்றுந் தீப்படுகளம்
முக்கியந் திருவிழாவை முற்றுநம்பு மூடர்கள்
கெக்கலி கொட்டியுந் திரியேழை மதியுள்ளவர்
மக்கியும் மடிவரென ஏவாதி நரகெய்வரே'[132]

இவ்வாறு சமயங்கள் பலவற்றையும் மறுத்துப் பாடிவிட்டு,

'எச்சமயத் தோர் கட்கும் ஈசன் ஒருவனலால்
மெச்சமயத் தெவர்க்குமெங் கெங்கும் வெவ்வேறு
தெய்வங்களோ?[133]

என வினவுகிறார்.

அவ்வாறே குதம்பைச் சித்தரும் 'சமயநிலை கூறல்' எனுந்தலைப்பில், பல்வேறு சமயக் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றை மறுக்கின்றார். பின்னர்

'பற்பல மார்க்கம் பகர்ந்திடும் வேதங்கள்
கற்பனை யாகுமடி'[134] என்றும்

'மெய்த்தேவன் ஒன்றென்று வேண்டாத பன்மதம்
பொய்த்தேவைப் போற்றுமடி'[135] என்றும்

துணிந்துரைக்கின்றார். இதே போக்கில் அமைந்த அகத்தியர் பாடல் ஒன்றும் உள்ளது[136]. இவ்வாறே சுப்பிரமணியர், திருவள்ளுவ நாயனார் ஆகிய சித்தர்களின் பாடல்களில் அனைத்துச் சமயங்களையும் மறுக்கும் பாடல்களும் சில பதிப்புகளில் காணப்படுகின்றன[137].

தொகுப்புரை

இவ்வாறு இவ்வியலில் விவிலியக் கடவுட் கொள்கைகள் சிலவற்றுடன் சித்தர் சிலரது கடவுட் கொள்கைகள் வேறுபட்டு நிற்பது விளக்கப்பட்டது. யோகநெறிவழி இறைவனை அறிதல், நமக்குள்ளேயே இறைவனை உணர்தல், உடற்பழிப்பு, பெண்பழிப்பு, புராண மேற்கோள்களையும் இந்து சமயக் கடவுளர் பெயர்களையும் பயன்படுத்துதல், பூசாவிதிகள் மந்திரங்கள் யந்திரங்கள் முதலியனவற்றைக் குறிப்பிடுதல் ஆகிய தலைப்புகளில் இவ்வேறுபாடுகள் விளக்கப்பட்டன. இத்தகு வேறுபாடுகள் அமைவதற்குரிய பின்புலமாக, இரு இலக்கியங்களும் உருவான பண்பாட்டுச் சமுதாயச் சூழல்களில் அமைந்த வேறுபாடுகளும் இயலின் தொடக்கத்தில் சுட்டப்பட்டுள்ளன. மேலும் சித்தர் பாடல்கள் சில கிறித்தவச்சமயக் கடவுட் கோட்பாடுகளோடு மட்டுமன்றி அனைத்துச் சமயங்களையுமே மறுத்து நிற்பதும் இயலின் இறுதியில் குறிப்பிடப்பட்டது. எனினும் அனைத்துச் சித்தரது கொள்கைகளும் விவிலியத்தின் அனைத்துக் கோட்பாடுகளுடனும் ஒன்றுபடவோ முற்றிலும் வேறுபடவோ இல்லை என்பதும் இங்குக் கருதப்படுதல் வேண்டும்.

* * * * *

இயல் 5

குறிப்புகள்

1. இரா. எட்வர்ட் சாம், **மலரும் திருமறை**, பக். 110, 111.
2. கே. கே. பிள்ளை, **தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்**, பக். 48–53.
3. சண்முகானந்த சாமிகள், **திருமூலர் வைத்தியம்**, ப. 4.
4. இரா. மாணிக்கவாசகம், **நம் நாட்டுச் சித்தர்கள்**, பக். 79–86.
5. க. நாராயணன், **சித்தர் தத்துவம்**, பக். 137, 138.
6. **மு. கு. இ.**
7. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 17.
8. **மே. கூ. நூ.**, ப. 4.
9. **மே. கூ. நூ.**, ப. 19.
10. **மே. கூ. நூ.**, ப. 22.
11. **மே. கூ. நூ.**, ப. 24.
12. **மே. கூ. நூ.**, ப. 30.
13. **மே. கூ. நூ.**, ப. 34.
14. **மே. கூ. நூ.**, ப. 35.
15. **மே. கூ. நூ.**, ப. 36.
16. **மே. கூ. நூ.**, ப. 57.
17. **மே. கூ. நூ.**, ப. 67.
18. **மே. கூ. நூ.**, ப. 81.
19. **மே. கூ. நூ.**, பக். 202–204.
20. **மே. கூ. நூ.**, ப. 209.
21. **மே. கூ. நூ.**, ப. 211.
22. **மே. கூ. நூ.**, ப. 215.
23. **மே. கூ. நூ.**, ப. 216.
24. **மு. கு. இ.**
25. **மே. கூ. நூ.**, ப. 217.

26. மு. கு. இ.
27. கே. ஆர். பசுபதி, **சித்தர்கள்**, ப. 42.
28. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 297.
29. **மே. கூ. நூ.**, ப. 298.
30. மு. கு. இ.
31. **மே. கூ. நூ.**, ப. 301.
32. **மே. கூ. நூ.**, ப. 303.
33. **மே. கூ. நூ.**, பக். 613–616.
34. அகஸ்தியர் ஞானவிளக்கம், **யோக ஞான சாஸ்த்திரதிரட்டு**, பா. 31.
35. **மே. கூ. நூ.**, பா. 32.
36. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 251.
37. **மே. கூ. நூ.**, ப. 254.
38. **மே. கூ. நூ.**, ப. 252.
39. மு. கு. இ.
40. **போகர் சப்த காண்டம் 7000**, காண்டம் 6, பா. 625.
41. **மே. கூ. நூ.**, பா. 626.
42. **கொலோசேயர்,** 2 : 22, 23.
43. **எபேசியர்,** 2 : 8, 9.
44. **யோவான்,** 14 : 6.
45. சாது செல்லப்பா, **கிறிஸ்தவம் தேவையா?**, பக். 12–21 & என். விவேகானந்தன், **இயேசுவின் யோகம்,** 1986 & V.C. Rajasekaran, A book review on **The Yoga of the Christ in the gospel according to St. John, The Hindu,** Dec. 11th, 1990.
46. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 4.
47. **மே. கூ. நூ.**, ப. 26.
48. **மே. கூ. நூ.**, ப. 5.
49. **மே. கூ. நூ.**, ப. 11.
50. **மே. கூ. நூ.**, ப. 18.

51. மே. கூ. நா., ப. 9.
52. மே. கூ. நா., ப. 30.
53. மே. கூ. நா., ப. 44.
54. மே. கூ. நா., ப. 48.
55. K. Kailasapathy, The writings of the Tamil Siddhas, **The Sants**, p.393.
56. **ரோமர்,** 1 : 25.
57. **சங்கீதம்,** 100 : 3, 4.
58. **ஆதியாகமம்**, 1 : 27.
59. **லூக்கா,** 11 : 20.
60. I **கொரிந்தியர்**, 3 : 16, 17
61. மே. கூ. நா., 6 : 19.
62. I **யோவான்**, 3 : 2.
63. **குதம்பைச் சித்தர்,** கழகப்பதிப்பு, பா. 146.
64. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, பக். 89–92.
65. மே. கூ. நா., பக். 207, 208.
66. **குதம்பைச் சித்தர்**, பக், 40, 41.
67. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 208.
68. **குதம்பைச் சித்தர்**, பக், 40, 41.
69. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 15.
70. மு. கு. இ.
71. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 301.
72. மே. கூ. நா., ப. 100.
73. மே. கூ. நா., ப. 118.
74. **ரோமர்,** 6 : 12.
75. I **கொரிந்தியர்**, 6 : 16.
76. மே. கூ. நா., 6 : 19, 20.
77. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை**, ப. 30.

78. குதம்பைச் சித்தர், ப.178.
79. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 207.
80. குதம்பைச் சித்தர், பக், 40, 41.
81. மு. கு. இ.
82. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 81.
83. மே. கூ. நூ., ப. 107.
84. A.V. Subramanya Iyer, **The Poetry and the Philosophy of Tamil Siddhas**, pp. 48, 49.
85. I கொரிந்தியர், 7 : 6, 7.
86. மத்தேயு, 19 : 11, 12.
87. 'Jesus and Women' **Religious Studies Teacher's Guide** Prepared by Christian Education Council (Unpublished) p.1.
88. லேவியராகமம், அத்தியாயங்கள், 15, 18, 20, 21 முதலியன.
89. லூக்கா, 7 : 36-50.
90. யோவான், 20 : 14-18.
91. எபேசியர், 5 : 23.
92. கலாத்தியர், 3 : 28.
93. I கொரிந்தியர், 6 : 15-18
94. யாத்திராகமம், 20 : 4, 5.
95. மே. கூ. நூ., 23 : 13.
96. சங்கீதம், 16 : 4.
97. I கொரிந்தியர், 10 : 20, 21, 28.
98. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, பக். 68, 69, 70, 202, 298.
99. மே. கூ. நூ., ப. 202.
100. மே. கூ. நூ., ப. 5.
101. மே. கூ. நூ., ப. 12.
102. மே. கூ. நூ., பக். 7, 26.
103. மே. கூ. நூ., ப. 22.

104. **மே. கூ. நா.,** ப. 82.

105. **மே. கூ. நா.,** பா. 71, 72, 73, 105, 110.

106. **மே. கூ. நா.,** ப. 298.

107. **மே. கூ. நா.,** ப. 301.

108. **மே. கூ. நா.,** ப. 613.

109. **மே. கூ. நா.,** ப. 615.

110. **மே. கூ. நா.,** ப. 616.

111. **போகர் சப்த காண்டம் 7000,** காண்டம் 1, பா. 241 & காண்டம் 2, காப்பு

112. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 202.

113. **மே. கூ. நா.,** ப. 204 & ச. மாடசாமி, **பாம்பாட்டிச் சித்தர்,** ப. 63.

114. **குதம்பைச் சித்தர்,** ப. 25.

115. **மே. கூ. நா.,** பா. 14.

116. **திருமந்திரம்,** எம். வி. விஸ்வநாதபிள்ளை பதிப்பு, ப. 16.

117. இரா. மாணிக்கவாசகம், 'சித்தர் பாடல்கள்', **தமிழ் இலக்கியக்கொள்கை தொகுதி 2,** ப. 197.

118. **மே. கூ. நா.,** பக்.198, 199.

119. **மே. கூ. நா.,** பக். 220, 221.

120. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** பா. 72, 73.

121. **மே. கூ. நா.,** ப. 297.

122. **குதம்பைச் சித்தர்,** ப. 49.

123. **மே. கூ. நா.,** பக். 54, 55.

124. **போகர் சப்தகாண்டம் 7000,** காண்டம் 6, பா. 5458–5568

125. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** பக். 315–322, 347–356.

126. **யோவான்,** 4 : 21–24.

127. **லூக்கா,** 11 : 39–42 & **மத்தேயு,** 15 : 1–9.

128. **I சாமுவேல்,** 15 : 23 & **கலாத்தியர்,** 5 : 20.

129. **எண்ணாகமம்,** 23 : 23.

130. **சிவவாக்கியர் 1000,** பா. 939.

131. **மே. கூ. நூ.,** பா. 928.

132. **மே. கூ. நூ.,** பா. 938.

133. **மே. கூ. நூ.,** பா. 941.

134. **குதம்பைச் சித்தர்,** பா. 152.

135. **மே. கூ. நூ.,** பா. 154.

136. **அகஸ்தியர் ஞான விளக்கம்,** பா. 7.

137. **சுப்பிரமணியர் ஞானம் 25,** பா. 2, 5 & **சுப்பிரமணியர் சுத்த ஞானம் 8,** பா. 53 & **ஞான வெட்டியான் 1500,** ப. 616.

* * * * *

இயல் ஆறு

சித்தர் பாடல்களும் விவிலியமும்

சமுதாயத்துக்கு வழங்கும் கடவுட் கொள்கைகள்

இயல் ஆறு

சித்தர் பாடல்களும் விவிலியமும் சமுதாயத்துக்கு வழங்கும் கடவுட் கொள்கைகள்

இவ்வாய்வின் முந்தின இரு இயல்களிலும் சித்தர் பாடல்களுக்கும் விவிலியத்திற்கும் இடையில், கடவுட் கொள்கைகளில் அமைந்த ஒற்றுமைக் கூறுகளும் சில வேற்றுமைப் பண்புகளும் பொது நிலையிலும் சிறப்பு நிலையிலும் மிக விரிவாக ஆய்வு செய்யப் பட்டன. அவ்வகையில் இரு பேரிலக்கியங்களின் கடவுட் கொள்கைகளை ஒப்பிட்டும் உறழ்ந்தும் ஆயும் இவ்வாய்வு, ஓர் இறையியல் இலக்கிய ஆய்வாக அமைகின்றது. எனினும், இந்நாட்களில் எவ்வகை ஆய்வும், அவ்வாய்வினால் சமுதாயம் பெறும் பயனைப் பொறுத்தே சிறப்புப் பெறுகின்றது. இலக்கிய ஆய்வுகளும் கூட அவற்றின் சமுதாயப் பயன்பாட்டின் அடிப்படையிலேயே முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றன. அவ்வகையில் இறைநெறி இலக்கியங்களான சித்தர் பாடல்களும் விவிலியமும் கடவுட் கொள்கைகளாக, இக்காலச் சமுதாயத்துக்கு வழங்கும் உயரிய கோட்பாடுகள் எவையெனச் சிந்தித்துப் பார்த்தல் ஏற்புடையதும், பயனுடைய்துமாகும், குறிப்பாக, வேறுபட்ட சமயங்களால் கூறுபட்டு நிற்பதும் சமயப் போர்களும் இனக் கலவரங்களும் மிகுந்ததுமான இன்றைய சமுதாயத்திற்கு இத்தகு ஒப்பாய்வுகளும் இவை வெளிப்படுத்தும் உயரிய சிந்தனைகளும் நல்வழி காட்டவல்லன. இவ்விரு பேரிலக்கியங்களும் இணைந்து மனித சமுதாயத்துக்கு வழங்கும் மாண்புடைய சிந்தனைகள் சிலவற்றைத் தொகுத்து வழங்குவதே இவ்வியலின் நோக்கமாகும்.

சமயத்துக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு

இவ்விறை இலக்கியங்கள் சமுதாயத்திற்கு வழங்கும் கோட்பாடுகளையும் கொடைகளையும் சிந்திக்கும் முன்னர், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் உள்ள உறவைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் பொருத்தமுடையது. சமய உணர்வு அல்லது இறை நம்பிக்கை என்பது ஒரு தனிமனிதனைச் சார்ந்த செய்தியாகவோ

கொள்கையாகவோ பொதுவாகக் கருதப்படுகிறது. எனினும் அது சமுதாயத்தின் மேல் அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்துவதை மறுக்க இயலாது. பல்வேறு மனிதர்கள் குறிப்பிட்டதொரு சமயத்தையோ இறைக் கொள்கையையோ பின்பற்றும் போது, அது ஒரு சமுதாய நெறியாக மாறிவிடுகிறது. மதம் அல்லது சமயம் என்பது ஒரு சமுதாய அமைப்பே என்பதைக் க. நாராயணன் 'குடும்பம் தொடங்கி அரசு வரை சமுதாய அமைப்புகள் பல இருக்கின்றன. 'மதம்' என்பதும் அத்தகைய சமுதாய அமைப்புகளுள் ஒன்றே. பிற சமுதாய அமைப்புகள் உலகியல் தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்டன. மதம் என்ற அமைப்பு உலகியல் கடந்த ஓர் அனுபவத்தை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. உலகியல் கடந்த இவ்வனுபவத்தை 'முக்திநிலை' என்பர்'[1] என விளக்குகிறார்.

உலக வரலாற்றில் மனித சமுதாயத்தை நன்னெறிப்படுத்துவதிலும் ஒருமைப்படுத்துவதிலும் சமயங்களும் இறைநம்பிக்கையும் பெரும்பணி ஆற்றிட வல்லன; ஆற்றியும் உள்ளன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. எனினும் காலப்போக்கில், அன்பில் தொடங்கி அன்பை வளர்த்து அன்பில் நிறைவுற வேண்டிய பக்திநெறி, சமயப் பூசல்களுக்கும் போர்களுக்கும் வன்முறைகளுக்கும் இடம்தந்து சமுதாயச் சீரழிவுக்கும் வன்முறைகளுக்கும் வழி வகுத்துவிட்டது. முற்காலத்தும் பிற்காலத்தும் சமயத்தின் பேரால் நடந்த — நடக்கிற பல்வேறு போர்களுக்கும், பூசல்களுக்கும் உலக வரலாற்றில் சான்றுகள் பல உள. மக்கள் அன்பு நெறியே இறையுணர்வின் அடிப்படையும் ஆதாரமும் என்பதை அறியாமையும், இறைவனின் பேரைச்சொல்லியே மனிதர்களைப் பாகுபடுத்தும் போலித் துறவியர் மற்றும் கள்ளக்குருக்களின் பொய்யுரைகளை உணராமையுமே இதற்குக் காரணங்கள் எனலாம். இவ்விழி நிலையை மாற்றுவதற்கு, சித்தர் இலக்கியங்களும் விவிலியமும் இணைந்து வழங்கும் உயரிய கடவுட் கோட்பாடுகளை உணர்தல் உதவும்.

சித்தர் இலக்கியத்திலும் விவிலியத்திலும் வெளிப்படும் சமுதாய நோக்கு

சித்தர் இலக்கியங்களையும் விவிலியத்தையும் ஆழ்ந்து கற்பாரும் ஆய்வாரும், அவ்விரு பேரிலக்கியங்களும் மனித சமுதாயத்தின் நலத்தையும் வளத்தையும் குறிக்கோளாகக் கொண்டு நிற்பதை உணரவியலும்.

உலகியல் வாழ்வை விட்டொதுங்கித் தனித்து வாழ்பவர்கள் என்றும் தம் ஆன்ம விடுதலையையே குறிக்கோளாகக் கொண்டு முயல்வோர் என்றும் சித்தர்களைப் பற்றிச் சிலர் குறிப்பிடுவதுண்டு. ஆனால், அவர்தம் இலக்கியங்களையும் நேரடியான தொண்டுச் செயல்களையும் ஆய்வார், அவர்கள் அறியாமை அகற்றும் ஆசான்களாக, நோய்தீர்க்கும் மருத்துவர்களாக, அறிவியல் முயலும் ஆய்வாளர்களாக அறமுரைக்கும் ஆன்றோர்களாக, சமுதாயச் சீர்கேடுகளைத் துணிந்து சாடும் புரட்சியாளர்களாக விளங்கியதை உணரலாம்.

எல்லா வகையிலும் சமுதாயத்தின் இடர்களைத் துடைத்திடவும், மக்களின் அறியாமையை அகற்றி, அவர்தம் உள்ளங்களில் விழிப்புணர்வை விதைத்திடவும் பாடுபட்ட பெருமக்களாக அவர்கள் விளங்குகின்றனர். அவ்வகையில் அவர்கள் தெளிவுபடுத்தி, விளக்கியுரைத்த கடவுட் கோட்பாடுகளைச் சமுதாயத்துக்கு அவர்கள் வழங்கும் கொடைகளாகவே சுட்டுவது இவ்வியலின் நோக்கமாகும்.

> 'சித்தர்கள் சமுதாயத்திற்குச் செய்த மிகப் பெரிய தொண்டு ஒன்று உண்டு என்றால் அது கடவுள் பற்றிய கொள்கையை விளக்கியது ஆகும். ஆலயங்களில் மட்டும் இறைவன் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்த காலத்தில் கண்மூடித்தனமான சம்பிரதாயங்களில் தமது பொழுதையும் பொருளையும் விரயம் செய்துவந்த காலத்தில் மிக அரிய கொள்கையை உலகுக்கு உணர்த்தினார்கள்'[2].

என்று இரா. மாணிக்கவாசகம் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

விவிலியமும், மனித சமுதாயத்துக்கு இறைவனையும் இறைவனின் திருவுளச் சித்தத்தையும் வெளிப்படுத்தி, இறைவனிடம் மனிதர்களை வழிநடத்தும் தெய்வீகத் திருநூலாகவே விளங்குகிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் அமைய வேண்டிய உறவை விவிலியம் விளக்குவதோடு, மனிதனும் மனிதனும் இணங்கி நல்லுறவுடன் வாழவேண்டிய வகையையும் விவிலியம் தெளிவுபடுத்தி நிற்கிறது. இதற்கு விவிலியத்திலிருந்து ஒரே ஒரு சான்றினை மட்டும் இங்குச் சுட்டுதல் சாலும். இயேசு பெருமான் இப் பூவுலகில் மனிதப் பிறப்பெடுத்து மழலை உருக்கொண்ட மாண்புறு செய்தியை எளிய மேய்ப்பர்க்கு எடுத்தியம்பிய இறைத்தூதர்கள்

> 'விண்ணிலிருக்கிற இறைவனுக்கு மகிமையும் மண்ணிலே
> அமைதியும் மனிதரிடை நல்லுறவும் உண்டாவதாக[3]

என்று பண்ணிசைத்ததாக எழுதப்பட்டுள்ளது. மேலும் பழைய ஏற்பாட்டில் யூத சமுதாயத்தினை இறைவன் வழிநடத்தி வந்த வரலாறு, அவர்களுக்கு இறைவன் தமது அடியவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் வழியாக வழங்கிய அருளாணைகள் மற்றும் எச்சரிப்புகள் வாயிலாகவும், புதிய ஏற்பாட்டில் இயேசு பெருமான் தம் மனித வாழ்வில் மக்களிடை உலவி ஊடாடி, தம் வாக்காலும் வாழ்வாலும் அவர்களை வழிநடத்திச் சென்ற வகையாலும் அவரது அடியவர்கள் திருச்சபைகளுக்கு எழுதிய அறிவுரைகள் ~~ஆகியவற்றின்~~ வாயிலாகவும் விவிலியத்தின் கடவுட் கொள்கைகள் உணரப்படுவதையும் இங்குக் கருதுதல் வேண்டும். மக்கட் சமுதாயத்துடன் விவிலியக் கோட்பாடுகள் கொள்ளும் நெருக்கமான உறவையே இவை பிரதிபலிக்கின்றன.

முந்தின இயல்களில் சுட்டப்பட்ட, இன்னொரு செய்தியையும் இங்கு ஒப்பு நோக்குதல் பொருந்தும் . யோகம், இரசவாதம், மருத்துவம் முதலியவை தொடர்பான செய்திகளைக் குறிப்பு மொழியால் (குழூஉக் குறி) புலப்படுத்தியிருக்கும் சித்தர்கள் இறைநெறி சார்ந்த உண்மைகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும்

எளியோர்க்கும் புரியும் வண்ணம் வெள்ளை மொழியில் விளங்கப் பாடியுள்ளனர். இஃது சமுதாயம் முழுமையும், இத்தகு உண்மைகளையும் செய்திகளையும் அறிந்து, விழிப்பும் தெளிவும் பெற வேண்டுமென்ற அவர்தம் அவாவையே வெளிப்படுத்தி நிற்கிறது. இந்த அடிப்படையில் யோக நெறி, உடற்பழிப்பு, பெண்பழிப்பு போன்றவற்றை ஒட்டுமொத்தச் சமுதாயத்திற்கும் சித்தர்கள் வற்புறுத்துவதாகக் கொள்ளாமல், இறைநெறியில் அல்லது துறவு நெறியில் தம்மை முழுமையும் ஈடுபடுத்திக் கொண்ட சிலருக்கு மட்டும் வற்புறுத்துவதாகக் கொள்ளலாம். இறைநெறி சார்ந்த பொதுவான பிற உண்மைகள் பலவற்றைச் சமுதாயம் முழுமைக்குமாக அவர்கள் பேசுதைக் காணலாம்.

இவ்வாறே இயேசு பெருமானும், தம் குடும்பத்தையும், தொழிலையும் துறந்து விடுதல், குடும்ப உறவுகளிலிருந்து விடுபடுதல், முதலிய சில செய்திகளைத் தாம் தெரிந்துகொண்ட தம் சீடர்களுக்கு மட்டுமே வலியுறுத்துவதையும்[4] பொதுவான பிற உண்மைகளைத் தம்மைப் பின்பற்றும் அனைவருக்குமே உரியதாகப் பேசுவதையும் விவிலியத்தில் காணமுடிகிறது. மேலும், ஒய்வு நாளை ஆசரித்தல் முதலிய யூத சமயத்தவருக்குரிய சிறப்பான ஒழுக்க விதிகளை மனித சமுதாயம் முழுமைக்கும் பொதுவாக்குவதை இயேசு பெருமான் மறுத்து நிற்பதையும்[5] காணமுடிகிறது.

இவ்வாறு, மனித சமுதாயம் முழுமைக்கும் பொருந்தும் வகையில் விவிலியமும் சித்தர் இலக்கியங்களும் இணைந்து வழங்கும் உயரிய கடவுட் கோட்பாடுகள் சிலவே இங்குத் தொகுக்கப்படுகின்றன.

இரு பேரிலக்கியங்களும் சமுதாயத்திற்கு வழங்கும் கடவுட் கொள்கைகள்

இவ்வாறு, இரு பேரிலக்கியங்களும் இணைந்து சமுதாயத்திற்கு வழங்கும் கடவுட் கொள்கைகளைப் பின்வரும் மூன்று தலைப்புகளில் வகுத்துக் காணலாம்;

1. கடவுளின் தன்மைகளை விளக்குதல்

2. மனித சமுதாயம் கடவுளை அடையும் வழியைப் புலப்படுத்துதல்.

3. கடவுளை அடைவதில் உள்ள சமுதாயத் தடைகளைக் கடிவதும் விலக்குவதும்.

1. கடவுளின் தன்மையை விளக்குதல்

உண்மையான கடவுள் நெறியை மனித சமுதாயம் உணர்ந்து பின்பற்ற வேண்டுமெனில் சிந்தனைக்கும், சொல்லுக்கும் அப்பாற்பட்டு விளங்கும் கடவுளின் இனிய இயல்புகளை ஓரளவேனும் மக்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். சமய இலக்கியங்கள் பலவும், இறைவனின் தன்மைகளையும் இயல்புகளையும் தெளிவுபடுத்துவதற்கு மாறாக, தெளிவு நீக்கிக் குழப்பத்தை விளைவித்த நிலையையும் காணமுடிகிறது. இதுபற்றி இராமலிங்க அடிகளார் கூறியுள்ள கருத்து ஒன்றினை இங்குக் குறிப்பிடுதல் பொருத்தமானது.

> 'நாம், நாமும் முன் பார்த்தும், கேட்டும், லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகள் ஒன்றிலாவது குழூஉக் குறியன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும் தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல் பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில் கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். 'தெய்வத்துக்குக்

கைகால் முதலியன இருக்குமா?' என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கிறார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டு இருந்தவர்களும் உண்மையை அறியாது அப்படியே கண்ணை மூடிக்கொண்டு கூறியிருக்கிறார்கள்'[6].

அகத்தியர் போன்ற சித்தர் சிலரும் இது போன்று தம் மனக் குறையைச் சில பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்[7].

இந்நிலைக்கு மாறாகச் சித்தர் இலக்கியங்களும், விவிலியமும் இறைவனின் இனிய இயல்புகளைப் பல நிலைகளில் தெளிவுபடுத்தி விளக்கியுள்ளன. இத்தகு செய்திகள் பலவும் முந்தின இயல்களில் குறிப்பாக, நான்காவது இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எனினும், அவற்றுள் முக்கியமானவை, 'ஒருவனே இறைவன்' என்பதும், 'உருவ வணக்க மறுப்பும்'உம் . சித்தர்கள் பலரும் ஓரிறைக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள் என்பது,

'ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்'[8]
'அங்குமிங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றல்லோ'[9]

முதலிய பல்வேறு தொடர்களால் ஏற்கனவே நன்கு விளக்கப்பட்டுள்ளது. கொங்கண நாயனார், கணபதிதாசர் முதலிய பிற்காலச் சித்தர் சிலர் சரசுவதி, சுப்பிரமணியர், விஷ்ணு, நந்தீசர் போன்ற பல தெய்வங்களின் பெயரிட்டுத் துதிப்பாடல்களை பாடி உள்ளதும்,[10] மக்கள் ஏற்கனவே அறிந்த பெயர்களால் இறைவனைச் சுட்டுவதற்கே என ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர்[11]. 'கடவுள் ஒருவரே', கடவுளை வெளிப்படுத்தி, கடவுளுடன் மனிதனை இணைக்கும் இணைப்பாளர் இயேசு கிறிஸ்துவே[12]' என விவிலியமும் உறுதிபட உரைக்கிறது.

அவ்வாறே எல்லையற்ற — மனித எண்ணங்களைக் கடந்த மகத்தான இயல்புடைய இறைவனுக்கு உருவங்கள் சமைப்பதையும் அவற்றை வழிபடுவதையும்,

சிவவாக்கியர், குதம்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர் உள்ளிட்ட எண்ணற்ற சித்தர்கள் கடுமையாக மறுத்துள்ளமை முன்னர் சுட்டப்பட்டது. உருவ வழிபாட்டைக் கடுமையாக மறுக்கும் கிறித்துநெறிக் கோட்பாடுகளும் முன்னரே தக்க விவிலியச் சான்றுகளுடன் இவ்வாய்வில் நான்காம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஓரிறைக் கோட்பாட்டையும், உருவ வணக்க மறுப்பையும், இரு பேரிலக்கியங்களும் வலியுறுத்துவதனால், இவை மக்கட் சமுதாயத்தில் பக்தி உலகில் விளைந்திடக் கூடிய பல்வேறு மூட நம்பிக்கைகளை அகற்றியிருக்கின்றன. ஒன்றான இறைவனைப் பலப்பல கூறுகளாக்கி, தாமும் கூறுபட்டு நிற்கும் மனிதர்களை இவை நெறிப்படுத்துகின்றன. மேலும், உருவ வணக்கம், பல்வேறு சமயச் சடங்குகட்கு வழிகோலுவதால், இச் சடங்குகளை இயற்றுவோரிடை பல பேதங்கள் உண்டாக வாய்ப்பெழுகிறது. செல்வம் படைத்தோர் இத்தகு சடங்குகளை இயற்றித் தருக்கி நிற்பதையும் வறியோர் இவற்றை இயற்றிட இயலாது தடுமாறுவதையும் காணமுடிகிறது. மேலும், புறச் சடங்குகளில் கவனம் செலுத்தி, உண்மையான இறைவனை உள்ளத்தால் உணர்ந்து, அவனருள் பெற்று அறவாழ்வும் தூய வாழ்வும் வாழும் ஆர்வம் இழந்து நிற்பதையும் காண முடிகின்றது. இத்தகு காரணங்களாலேயே, இவ்விரு பேரிலக்கியங்களும் ஓரிறைக் கோட்பாட்டையும், இறைவனின் உருவமற்ற தன்மையையும் வலியுறுத்துகின்றன. மேலும், இறைவன் அன்பு வடிவமாகவும், தூய்மையின் வடிவமாகவும் விளங்குவதையும் இவ்விலக்கியங்கள் விரித்துரைத்து, அத்தகு அன்பு வாழ்வுக்கும் தூய வாழ்வுக்கும் மக்களைத் தூண்டுவதையும் பல சான்றுகளால் உணரலாகிறது.

2. மனித சமுதாயம் கடவுளை அடையும் வழியைப் புலப்படுத்துதல்

இறைவனின் இயல்புகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பெரும்பணியை நன்கு செய்த சித்தர் இலக்கியங்களும் விவிலியமும் அவ்வளவில் நின்று விடவில்லை. இறைவனை அடைவதற்குரிய அருள் நெறிகளையும் அன்பு வழிகளையும் கூட அவை சுட்டிக்காட்டின. இறைவனை அடைவதற்கும்

இறையனுபவம் பெறுவதற்கும் இவை சுட்டிக் காட்டும் வழிகள் சில, அனைத்து மக்களும் பின்பற்றக் கூடிய பொது வழிகள் அல்ல என்பது முன்னர் சுட்டப்பட்டது. சான்றாக, சித்தர் பாடல்கள் பலவும் யோக நெறி நின்று, உடலுள் உறைந்து இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, அதன் உச்சநிலையில் அதனைப் பூரணத்துடன் கலக்க விட்டு, இறை நிலை எய்திக் கேளாதன கேட்டு, காணாதன காணும் உயர்நிலையைப் பற்பல சொற்களால் பற்பல வகைகளால் பேசுகின்றன[13]. எனினும் இத்தகு யோகமுறை எல்லார்க்கும் ஏற்றதென்று ஏற்றிடல் இயலாது. அவ்வாறே விவிலியத்திலும், யூதமார்க்கத்தினர்க்கு மட்டுமே உரியனவும் முழுநேரமாக இறைத் தொண்டில் ஈடுபடுவார்க்கு மட்டும் உரியனவுமாகிய சிலவழிகள் சொல்லப்படுகின்றன. இத்தகு செய்திகளை விடுத்து, இறை அனுபவம் எய்துதற்கு மானிடச் சமுதாயம் முழுமைக்கும் பொருந்தவல்ல பல வழிமுறைகளும் இவ்விரு இலக்கியங்களில் எடுத்துரைக்கப்படுகின்றன.

இறைவனை அடைவதற்குச் சமயச் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், நம்பிக் கொண்டிருந்த மக்களிடம், அகத்தூய்மையும், அன்பு வாழ்வுமே இறைவனை அறிதற்கும் அனுபவித்தற்குமுரிய வழிகளெனச் சித்தர் இலக்கியங்கள் தெளிவுபடுத்தின. ஊரெல்லாம் ஓடி உத்தமனைத் தேடாமல், உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, உள்ளத்துக்குள் இறைவன் உறைவதை உணருமாறு சித்தர்கள் மக்களை அறைகூவி அழைத்தனர்.

'கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே'[14] என அவர்கள் கொள்கை முழக்கம் செய்தனர். இன்னும் சொன்னால் 'காயமான பள்ளியிலும்' இறையைக் காணலாம்'[15] என அவர்கள் தெளிவுபடுத்தினர்.

இயேசுபெருமானும் புறச் சடங்குகளையும், சமயச் சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப்பதால் கடவுளை அடைந்திடலாம் எனக் கனவு காணலாகாது என்றும் உள்ளமே இறைவனின் ஆலயம் என்றும் அதனைத் தூய்மையாகக் காத்திடல் வேண்டுமென்றும்[16] அறிவுறுத்தினார். 'உடலும் இறைவன் வாழும் ஆலயமாகக்

கருதப்பட்டு, புனிதமானதாகப் பேணிக் காக்கப்படல் வேண்டும்[17] என்று விவிலியம் வற்புறுத்துகின்றது. மனித உடலை இறைவன் நமக்கு வழங்கிய கொடையாகக் கருதி, அதனைத் தீய பழக்க வழக்கங்களாலும் சிற்றின்பச் செயல்களாலும் சீரழிக்காது, பொறுப்புடன் பேணிடவேண்டும்[18] என விவிலியம் வலியுறுத்துகிறது. தூய்மை இல்லாதவர்கள் தூய இறைவனைக் காண முடியாது[19] என்று விவிலியம் மிக அழுத்தமாகப் பேசுகிறது.

கடுவெளிச் சித்தர் பாடல்களும் இதே முறையில் தனிமனித ஒழுக்க வாழ்வை மிகவும் வலியுறுத்திப் பேசுகின்றன[20]. பாம்பாட்டிச் சித்தரும் குதம்பைச் சித்தரும் மனித உடலைப் பழிப்பதுங்கூட[21], மனித உடல் சிற்றின்பம் பேணுதற்கன்றி இறையின்பம் நாடுவதற்கே பயன்படல் வேண்டும் என்னும் நோக்கினாலேயே எனத் தெளிதல் வேண்டும்.

ஒழுக்க வாழ்வினை வலியுறுத்துவது மட்டுமன்றி, ஏழைஎளியாரிடத்துக் காட்டும் கருணையும் எவரிடத்தும் கொள்ளும் அன்பும் இறையடியார்தம் இயல்புகளாக அமைந்திட வேண்டுமெனவும்இரு இலக்கியங்களுமே வலியுறுத்திப் பேசுகின்றன. 'கடவுள் அன்பாயிருக்கிறார்'[22] எனப் பேசும் விவிலியம் 'அன்பில்லாதவன் இறைவனை அறியான்'[23] என்றும் தெளிவுபடுத்துகிறது. 'நீங்கள் என் சீடர் என்பதை உங்கள் அன்பினாலேயே எல்லோரும் அறிந்து கொள்வார்கள்'[24] என்று இயேசுபெருமான் தம் மாணாக்கர்க்கு அறிவுறுத்தினார். 'எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முக்தி எய்துவது தொல்லுலகில் இல்லை'[25] என்று பாம்பாட்டிச் சித்தரும் பாடுகின்றார். 'ஏழைக்கு இரங்குபவன் இறைவனுக்குக் கடன் கொடுக்கின்றான்; அவன் கொடுத்ததை அவர் திருப்பிக் கொடுப்பார்'[26], என விவிலியமும், 'ஏழைப் பனாதிகள் இல்லையென்றால் அவர்க்கிருந்தாலன்னங்கொடுக்க வேண்டும்; நாளையென்று சொல்லாதே'[27] எனக் கொங்கண நாயனாரும் பேசிடக் காணலாம்.

புறச் சடங்குகளுக்கு முதன்மை தராது, அகத் தூய்மைக்கும், அன்பு நெறிக்குமே முதன்மை தருவதை வலியுறுத்தும் இவ்விலக்கியங்கள், கடவுளைக்

குருவாக உணர்ந்து அவர் வழிப்படுமாறும் அவரை வழிபடுமாறும் அறிவுறுத்துகின்றன. மெய்யான குருவாக இறைவனைச் சித்தர் இலக்கியங்கள் சித்திரித்துக் காட்டுவதும், சித்தர் இலக்கியங்களின் அத்தகு வர்ணனைகள் பல இயேசு பெருமானுக்குப் பேரளவு பொருந்தி நிற்பதும், இயேசு கிறித்து தாமே 'மெய்க்குரு' எனத் தெளிவுறுத்தியதும் நான்காம் இயலில் விரிவாக விளக்கப்பட்டன. உயர்ந்த குருவை ஊமாரப் பின்பற்றி, அவர் உள்ள விழைவுக் கேற்ப ஒழுகும் சீடர்களைப் போல, இறைவனை நாம் பின்பற்ற வேண்டுமென்று இருபேரிலக்கியங்களும் நமக்கு வழிகாட்டுகின்றன. இறைவனை வேண்டும் போதெல்லாம் வரமருளுபவராகவும் கேட்டதெல்லாம் கொடுப்பவராகவுமே எப்போதும் கருதாது, இறைவனின் தூயநெறியை — ஒழுக்க முறையை — அன்பு வழியைப் பின்பற்றும் மாணாக்கர்களாகவும் நாம் விளங்கிட வேண்டும் என்பது இவ்விரு இலக்கியங்களும் நமக்கு உணர்த்திக் காட்டும் உயரிய உண்மை எனக் கொள்ளலாம்.

இவ்வாறு இறைவனை மனித சமுதாயம் அடைதற்குரிய நல்வழிகளை இவ்விரு இலக்கியங்களும் சுட்டுவதோடு, இறைவனைத் தேடாதும் மறந்தும் மறுத்தும் வாழ்வோர் அடையவிருக்கும் தண்டனைகளையும் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. இறைவனின் இறுதித் தீர்ப்பு நாளில் இத்தகையோர் அடையும் தண்டனைகளை விவிலியம் தயக்கமின்றி விரித்துரைக்கின்றது[28]. குதம்பைச் சித்தர் நிரய (நரக) நிலைமை என்ற தலைப்பில் இதுபற்றி 10 கண்ணிகள் பாடியுள்ளார்[29].

3. கடவுளை அடைவதில் உள்ள சமுதாயத் தடைகளைக் கடிதலும் விலக்குதலும்

இறைவனை அடைதற்குரிய நல்வழிகளைப் போதிக்கும் இவ்விலக்கியங்கள், இறைவனை அடைவதற்குச் சமுதாயத்தில் தடையாக உள்ள செய்திகளைக் கண்டித்துப் பாடவும் முனைகின்றன. அவ்வகையில் பக்தி உலகில் நிலவும் மூடப் பழக்க வழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், இவற்றுக்கு நியாயம்

கற்பிக்கும் புராண சாத்திரங்கள் இவற்றையெல்லாம் இவ்விலக்கியங்கள் கடிந்தும், கண்டித்தும் பேசுகின்றன. தேர்த்திருவிழாக்கள், புண்ணியநதி நீராடல், புனிதயாத்திரைகள், மலர்சூட்டி மந்திரம் சொல்லுதல் முதலியன, இறைவனை அடையத் துணைகளாக அல்ல, தடைகளாகவே அமைந்து விடுவதைச் சித்தர்கள் உணர்ந்து பாடுகின்றனர். சித்தர்களின் இத்தகு கண்டனப் பாடல்கள், முந்தைய இயல்களில் விரிவாக விளக்கப்பட்டன[30]. இயேசு பெருமானும் யூத சமயத்தின் சடங்கு சம்பிரதாயங்கள், பழைய மரபுகளை மட்டுமே சார்ந்து, இறைவனை உணரும் உண்மை அனுபவத்தை மக்கள் இழந்து விடுவதைக் கண்டித்துப் பேசுவது முன்னரே விளக்கப்பட்டது. சித்தர்கள் பழைய ஆகமங்கள், வேதங்கள், புராண சாத்திரங்களை மறுத்துப் பாடுவது போலவே, இயேசுவும் யூதமதத்தின் பழைய விதிகள் பலவற்றை மாற்றி அமைத்திடவும், புதுப்பித்திடவும் தயங்கிடவில்லை.

சடங்கு சம்பிரதாயங்களையும், புராண சாத்திரங்களையும் கண்டிக்கும் சித்தர்கள், அவற்றைக் கற்பித்துப் போதித்துப் பாராட்டும் போலித் துறவியரையும், சமயத்தின் பேரால் மக்களை ஏய்த்து வயிறு வளர்க்கும் கள்ளக் குருக்களையும் கடுமையாகச் சாடுகிறார்கள். இத்தகு பொய்க்குருக்களை இனம்காட்டி, மெய்க்குருவாம் இறைவனிடம் மக்களை வழி நடத்துவதே சித்தர்களின் உள்ள விழைவாகும். இயேசு பெருமானும் போலியான சமயத் தலைவர்களையும் மக்களைத் தவறாக வழிநடத்தும் கள்ளக் குருக்களையும் கண்டிக்கிறார். மெய்க்குருவாம் தம்மைப் பின்பற்றுமாறு மக்களை அறைகூவி அழைக்கிறார்[31].

இவ்வாறு, சமுதாயத்தில் நிலவும் பல்வகைத் தடைகளை அகற்றி, மக்களை இறைவனிடம் வழி நடத்துதலே இவ்விரு பேரிலக்கியங்களின் நோக்கமாக விளங்குகிறது.

இக்கொள்கைகளின் விளைவும் இவற்றை வகுத்தோர் விழைவும்

இதுகாறும் சொல்லப்பட்ட கடவுட் கொள்கைகளின் விளைவாகத் தெளிவு பெற்ற புதியதொரு மானிட சமுதாயம் உருவாக வேண்டும் என்பது

இக்கொள்கைகளை வகுத்தோரது விழைவாகும், இறைநெறி என்பது அன்பு நெறிப்பட்ட – கருணை ததும்பும் தூய நல்வாழ்விற்கு மக்களை வழி நடத்துவதாக அமைதல் வேண்டும். மக்கள், சமய உலகில், போலித் துறவிகள் – கள்ளக் குருக்கள் போன்றோரது பிடியினின்று விடுபட்டு, அவர்தம் பொய்யான, பிழையான – சுயநலப் போதனைகளினின்று விடுதலை பெற்றுத் தெளிவுற்ற சமுதாயமாகத் திகழ்ந்திடல் வேண்டும் என்பதே இப் பேரிலக்கியங்களின் குறிக்கோள் எனலாம்.

தொகுப்புரை

இவ்வாறு, இவ்வியலில் இறைநெறி அல்லது சமயம் என்பது சமுதாயத்துடன் ஒன்று பட்டதென்பதும் சித்தர் இலக்கியங்களும் விவிலியமும் வெளிப்படுத்தும் சமுதாய நோக்கும் அவை சமுதாயத்துக்கு இணைந்து வழங்கும் சில உயரிய கடவுட் கோட்பாடுகளும் விளக்கப்பட்டன. கடவுளின் தன்மைகளை விளக்குதல், மனித சமுதாயம் கடவுளை அடையும் வழியைப் புலப்படுத்துதல், கடவுளை அடைவதில் உள்ள சமுதாயத் தடைகளைக் கடிதலும், விலக்குதலும் ஆகிய மூன்று தலைப்புகளில் இக்கடவுட் கொள்கைகள் விளக்கப்பட்டன.

* * * * *

இயல் 6

குறிப்புகள்

1. க. நாராயணன், **சித்தர் தத்துவம்**, ப. 56.
2. இரா. மாணிக்கவாசகம், சித்தர் பாடல்கள், **'தமிழ்–இலக்கியக் கொள்கை', தொகுதி 2**, ப. 223.
3. **லூக்கா,** 2 : 14.
4. **மத்தேயு**, 19 : 23, 27–30.
5. **மாற்கு**, 2 : 23–28, 3 : 1–5.
6. இராமலிங்க அடிகளார், 'உபதேசப் பகுதி', **மகாஉபதேசம்**, பாலகிருஷ்ணப் பிள்ளை பதிப்பு, ப. 131.
7. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** பக். 302–307.
8. **மே. கூ. நூ.,** ப. 307.
9. **மே. கூ. நூ.,** ப. 23.
10. **மே. கூ. நூ.,** பக். 323, 324, 565.
11. ப. சொ. காயாரோகணம், **சித்தர்களின் கடவுட் கொள்கை**, ப. 244.
12. I **தீமோத்தேயு,** 2 : 5.
13. இரா. மாணிக்கவாசகம், **நம் நாட்டுச் சித்தர்கள்**, பக். 79–85.
14. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** ப. 9.
15. **மே. கூ. நூ.,** ப. 30.
16. **மத்தேயு,** 5 : 8, & 15 : 18–20.
17. I **கொரிந்தியர்,** 6 : 19.
18. **மே. கூ. நூ.,** 6 : 15–18.
19. **எபிரேயர்,** 12 : 14.
20. **பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை,** பக். 255–260.
21. **மே. கூ. நூ.,** பக். 206–207 & குதம்பைச்சித்தர், பக். 71–82.
22. I **யோவான்,** 4 : 8.
23. **மு. கு. இ.**

24. யோவான், 13 : 34.
25. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 212.
26. நீதிமொழிகள், 19 : 17.
27. பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவை, ப. 335.
28. யோவான், 3 : 36, & திருவெளிப்பாடு, 20 : 11–15.
29. 'குதம்பைச்சித்தர்', பக். 83–92.
30. இயல்கள் 2 & 4.
31. மத்தேயு, 23 : 10, & லூக்கா, 6 : 40.

* * * * *

நிறைவுரை

நிறைவுரை

'தமிழ்ச்சித்தர் பாடல்களும் விவிலியமும் — ஓர் ஒப்பாய்வு' (கடவுட் கொள்கைகள்) எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வு, தமிழ்ச்சித்தர்கள்—பொது அறிமுகம், தமிழ்ச்சித்தர்களின் கடவுட் கொள்கைகள், விவிலியத்தின் கடவுட் கொள்கைகள், சித்தர்களின் கடவுட் கொள்கைகளும் விவிலியக் கடவுட்கொள்கைகளும் — ஒற்றுமைகள், இவற்றுக்கிடையே காணப்படும் வேற்றுமைகள், சித்தர் பாடல்களும் விவிலியமும் சமுதாயத்துக்கு வழங்கும் கடவுட் கொள்கைகள் என்னும் ஆறு இயல்களின் வாயிலாக இதுகாறும் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு இயலிலும் சொல்லப்பட்ட செய்திகள், அவ்வவற்றின் இறுதியில் தொகுத்துரைக்கப்பட்டன. சித்தர் இலக்கியங்களையும் விவிலியத்தையும் ஒப்பிட்டு ஆய்ந்த இவ் ஆய்வில் புதுவதாகச் சொல்லப்பட்ட செய்திகள் சிலவும், முன்னர் பிறரால் உரைக்கப்பட்டும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளனவும் தெளிவுறுத்தப் பட்டுள்ளனவும் ஆகிய உண்மைகள் சிலவும் மட்டும் இந்த நிறைவுரையில் தொகுத்துரைக்கப்படுகின்றன.

(1) சித்தர்கள் யார் என்பதற்குப் பல்வேறு ஆய்வாளர்களும் அறிஞர்களும் சித்தர்கள் தாமேயும் தந்த விளக்கங்கள் பல, இவ்வாய்வில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. இவ்விளக்கங்கள் சில தம்முள் மாறுபட்டிருக்கும் நிலை புலப்படுத்தப்பட்டது. சித்தர்களைப் புகழ்ந்து போற்றியவர்களோடு பழித்துரைத்தவர்களும் உண்டு எனும் செய்திக்குரிய சான்றுகள் தரப்பட்டுள்ளன. இவர்கள் சித்தர்களை வேறுவேறு கோணங்களில் நோக்கியமையும், சித்தரது புரட்சிச் சிந்தனைகளால் வெவ்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டமையுமே இக்கருத்து மாறுபாட்டிற்குரிய காரணங்கள் என்பது சுட்டப்பட்டது.

(2) சித்தர்கள் பற்றிய ஆய்வுக்கு அவர்தம் காலத்தை வரையறை செய்து கொள்வது அடிப்படைத் தேவை என்ற கருத்து இவ்வாய்வில்

வலியுறுத்தப்பட்டது. சித்தர்களின் காலத்தைக் கணிக்க வியலாது; அவர்கள் காலத்தைக் கடந்தவர்கள் என்றும், சித்தர்கள் காலத்தை அவர்தம் இலக்கியங்களை வைத்துக் கணித்திட இயலும்; கணித்திட வேண்டும் என்றும் வாதிடும் இரு சாராரது வாதங்களும் இந்த ஆய்வில் விளக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. விவிலியக் கோட்பாடுகளோடு சித்தர்களது கடவுட்கொள்கைகளை இவ்வாய்வு ஒப்பிடுவதால், காலத்தெளிவு இங்குக் கூடுதல் முக்கியத்துவம் பெறுவது சுட்டப்பட்டது. அந்த அடிப்படையில் சித்தர் இலக்கியங்களின் காலப் பகுப்புகளும் விவிலியக் கருத்துக்கள் தமிழகத்தில் பரவிய காலமும் தெளிவுபடுத்தப்பட்டன.

(3) சித்தர்கள் அனைவரும் ஒரே விதமான கடவுட்கொள்கை உடையவர்கள் எனப் பொதுவாகக் கருதும் பிழையான எண்ணம் இவ்வாய்வில் மறுக்கப்பட்டது. சித்தர்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய சில பொதுவான கடவுட்கொள்கைகள் இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டாலும் அவர்தம் கடவுட் கொள்கைகளுக்குள் அமைந்த வேற்றுமைகளும் தக்க சான்றுகளுடன் சுட்டப்பட்டன. இக்கொள்கை வேற்றுமைகளின் அடிப்படையில் சித்தர்கள் இவ்வாய்வில் பகுத்துக்காட்டப்பட்டுள்ளனர் ,

(4) சித்தரது இலக்கியங்கள் பெரும்பாலும் குழூஉக்குறிகளும் குறியீடுகளும் நிறைந்த 'மறைபொருள் இலக்கியங்களாக' மதிக்கப்படுகின்றன. எனினும் சித்தர்கள் எவ்வெவற்றை குழூஉக்குறிகளாலும் எவ்வெவற்றை வெளிப்படையாகவும் பேசுகின்றனர் என்பது இவ்வாய்வில் விளக்கப்பட்டது. அவர்கள், சிலர்மட்டுமே பயின்று பழகக்கூடிய யோகம், மருத்துவம், இரசவாதம் முதலிய செய்திகளைக் குழூஉக் குறிகளாலும், முழுச்சமுதாயத்துக்கும் விழிப்புணர்வும் அறிவுத்தெளிவும் தரவல்ல இறைக் கோட்பாடுகளையும் புரட்சிச்சிந்தனைகளையும் வெள்ளைமொழியில்

விளக்கமாகவும் பாடியுள்ள பாங்கும் அவற்றுக்கான காரணங்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

(5) சித்தர்கள் மறுபிறவிக் கொள்கை அல்லது பிறவிச் சுழற்சியை ஏற்கின்றனரா இல்லையா என்பது ஆய்வுலகில் அடிக்கடி விவாதிக்கப்படும் ஒரு செய்தியாகும். இக்கருத்தில் ஓரளவு தெளிவு தரும் வண்ணம் பலராலும் பேசப்படும் 'கறந்த பால் முலை புகா' என்னும் சிவவாக்கியரின் பாடலோடு அவரது வேறு சில பாடல்களையும், 'ஞான வெட்டியான்' போன்ற சித்தர்கள் இயற்றிய — பலராலும் அறியப்படாத சில பாடல்களையும் ஒப்பிட்டுச் சித்தர்களுள் ஒருசாரார் பிறவிச் சுழற்சியை மறுப்போரே என்னும் கருத்து நாட்டப்பட்டது.

ஒற்றுமைகள்

(6) சித்தரது இறைச் சிந்தனைகளை விவிலியச் சிந்தனைகளுடன் ஒப்பிடும் இவ்வாய்வு, இருவகை இலக்கியங்களிடையே அமைந்ததொரு சிறப்பான ஒற்றுமையை எடுத்துக்காட்டியுள்ளது. சடங்குகள் மிகுந்த யூத சமயத்திலிருந்து புரட்சியாளராகவும் புதுநெறி சமைப்பவராகவும் இயேசுபெருமான் எழுந்தது போல, சடங்குகளும் சாத்திரங்களும் மலிந்த இந்து சமயத்திலிருந்து ஆன்மீகப் புரட்சியாளர்களாகவும் சமூகச் சீர்திருத்தவாதிகளாகவும் சித்தர்கள் கிளர்ந்தெழுந்தமை ஒப்பு நோக்கில் விளக்கப்பட்டது. இயேசு பெருமானும் சித்தர்களும் விளைத்த புரட்சிகளுக்கு முறையே விவிலியமும் சித்தர் இலக்கியங்களும் தெளிவாகச் சான்று பகரும் நிலையும் நன்கு விளக்கப்பட்டது.

(7) சித்தர் இலக்கியங்கள் அடிக்கடி 'குரு வணக்கம்' பற்றியும் 'குருவின் மாண்புகள்' பற்றியும் பேசுகின்றன. புதிய ஏற்பாடும் இறைமகன் இயேசுவைக் குருவாகவும் அவர்தம் அடியவர்களை மாணாக்கர்களாகவும் (சீடர்கள்) அடிக்கடி விவரித்துப் பேசுகிறது. இயேசுபெருமானும் தம்மை 'மெய்க்குரு'வாக ஏற்குமாறு தம் சீடர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்வொப்புமையின்

அடிப்படையில், சித்தர்கள் பேசும் 'மெய்க்குரு'வுக்குரிய பண்பு நலன்கள் இயேசுபெருமானுக்குப் பொருந்தும் நிலைகள் இவ்வாய்வில் விரிவாக விவாதிக்கப்பட்டன. சித்தர்கள் பேசும் 'குரு'வாக இயேசுநாதரைக் காணும் கிறித்தவ எழுத்தாளர்களின் கருத்துக்கள் சிலவும் எடுத்துக்காட்டப்பட்டன.

(8) கிறித்தவர்களும் கிறித்தவரல்லாத பிறரும் வெளியிட்டுள்ள பதிப்புகளில் காணப்படும் சித்தர்களின் சில அரிய பாடல்கள், கிறித்தவக் கோட்பாடுகளான திரித்துவம் (Trinity), திருமுழுக்கு (Baptism) போன்றவற்றை வெளிப்படுத்தக் கூடியனவாக விளங்குவது இவ்வாய்வில் எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் போகர், சுப்பிரமணியர் போன்ற சித்தர்களது பாடல்களும் இவ்வகையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

தொடர்புகள்

(9) சித்தர்களது கடவுட் கொள்கைகள் சில தம்முள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக விளங்குவது, இவ்வாய்வில் தெளிவுறுத்தப்பட்டது. குறிப்பாகச் சித்தர்களது சாதி பேத மறுப்புக்கும், ஆகமவேத வேதபுராண சாத்திர மறுப்புக்கும் உள்ள தொடர்பும், சித்தர்களது ஒரிறைக் கோட்பாடு, பலதெய்வ வணக்க மறுப்பு, உருவ வணக்கமறுப்பு ஆகியனவற்றுக்குள் அமைந்த தொடர்பும் விளக்கிக் காட்டப்பட்டன.

வேற்றுமைகள்

(10) சித்தர்களது கடவுட் கொள்கைகளுக்கும் விவிலியக் கடவுட் கொள்கைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை விளக்கும் இவ்வாய்வு, அவற்றிடை அமைந்த வேற்றுமைகள் சிலவற்றையும் தனியொரு இயலில் சுட்டிச் செல்லுகிறது. குறிப்பாக, யோகப் பயிற்சி வழி இறைநிலை அடையலாம் எனும் சித்தர் கோட்பாடு, கிறித்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளுடன் முரண்பட்டு நிற்பது சுட்டப்பட்டது. யோகப் பயிற்சியைக் கிறித்தவக் கோட்பாடுகளுக்குள்

பொருத்தும் வண்ணம், கிறித்தவ எழுத்தாளர்கள் சிலர் தரும் புதிய விளக்கங்களும் சுட்டப்பட்டன.

(11) நமக்குள்ளேயே நாம் இறைவனை உணர வேண்டும் எனும் சித்தர் கோட்பாடும் கிறித்தவ நம்பிக்கைக்கு மாறுபட்டு நிற்பது விளக்கப்பட்டது.

(12) சித்தர் இலக்கியங்களில் பலராலும் விமர்ச்சிக்கப்படும் உடற்பழிப்பு, பெண் பழிப்புப் பாடல்களின் உண்மை நோக்கம் பற்றி இவ்வாய்வில் விவாதிக்கப்பட்டது. 'நிலையற்ற உடலின்பத்தையே பெரிதாகக் கருதாது, நிலையான இறையின்பம் தேடுவதற்கு முதன்மை தர வேண்டும்' எனும் கருத்தையே சித்தர் இலக்கியங்கள் எதிர்மறைப் போக்கில் இயம்ப, விவிலியம் உடன்பாட்டுப் போக்கில் உரைப்பதாக விளக்கப்பட்டது.

இவ்வாறு ஒப்பீட்டு முறையில் சித்தர்களது கடவுட்கொள்கைகளை ஆய்ந்து தெளிவுறுத்த முயன்ற இவ்வாய்வு, சித்தர் இலக்கியங்களில் மேலும் பல ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்குத் தூண்டுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால ஆய்வுக்குரிய களங்கள்

இலக்கிய உலகிலும் ஆய்வுலகிலும் பலகாலும் கவனம் செலுத்தப்படாதிருந்த சித்தர் இலக்கியங்களில்—குறிப்பாக சித்தர்களின் இறைக்கோட்பாடுகளில் நிகழ்த்தப்பட வேண்டிய ஆய்வுகள் மிகப்பலவாகும். **அடிப்படை நிலையில்** தனித்தனிச் சித்தர்களின் கடவுட் கொள்கைகள் தனித்தனியே விரிவாக ஆயப்பெறலாம். ஞானச்சித்தர்கள், காயச்சித்தர்கள் எனப்படுவோரின் கடவுட் கொள்கைகளையும் தனித்தனியே விரிவாக ஆய்வு செய்யலாம். **ஒப்பீட்டு நிலையில்** தமிழ்ச்சித்தர்களின் கடவுட்கொள்கைகளை வடநாட்டு நவநாதச் சித்தர்கள், சீனத்துத் 'தாவோயி'கள், இசுலாம் சமயத்துச் சூஃபிகள் ஆகியோரது கடவுட் கொள்கைகளுடன் ஒப்பிட்டாயலாம். சித்தர்தம் கடவுட் கோட்பாடுகளைக் கிறித்தவக் கோட்பாடுகளுடன் இவ்வாய்வு ஒப்பிட்டது போல, இசுலாம் சமணம் முதலிய பிற சமயக்

கோட்பாடுகளுடனும் ஒப்பிட்டாயலாம். கிறித்தவத்துள்ளும், இயேசு நாதரின் இறைச்சிந்தனைகளுடன் மட்டும் சித்தர்கள் கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம். இயேசுநாதரின் அடியவரும், புதிய ஏற்பாட்டு நூல்களில் பெரும்பாலானவற்றின் ஆசிரியருமாகிய புனித பவுலின் இறைச் சிந்தனைகளுடனும் சித்தர் சிந்தனைகளை ஒப்பிடலாம்.

இனி, **சமுதாயவியல் நோக்கில்** சித்தர்கள் ஆன்மீகக் கருத்துக்களையும் சமுதாயச் சிந்தனைகளையும் இணைத்து வழங்கிய பாங்கினை ஆய்வுக்குட்படுத்தலாம்.

இவ்வாறு சித்தர்தம் இறைச்சிந்தனைகளில் மேற்கொள்ளப்படக் கூடிய ஆய்வுகள், அவர்தம் கடவுட் கொள்கைகளை நன்கு துலக்கிக் காட்டுவதோடு, பல்சமயத்தினர் இணைந்து வாழும் மனித சமுதாயத்தின் ஒருமைப்பாட்டுக்கும் சுரண்டலும் போலித்தனங்களும் பிற அநீதிகளும் நீங்கிய தூய நல்வாழ்வுக்கும் வழிகாட்ட வல்லன.

* * * * *

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு ஒன்று

விவிலிய நூல்கள்

கத்தோலிக்கத் திருச்சபையார் கையாளும் விவிலியத்தில், பழைய ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களுமாக மொத்தம் 73 நூல்கள் அமைந்துள்ளன; அவை பின்வருமாறு:

பழைய ஏற்பாடு

ஆதி ஆகமம்.	உன்னத சங்கீதம்.
யாத்திராகமம்.	ஞான ஆகமம்.
லேவிய ராகமம்.	சீராக் ஆகமம்.
எண்ணாகமம்.	இசையாஸ் ஆகமம்.
உப ஆகமம்.	எரேமியாஸ் ஆகமம்.
யோசுவா ஆகமம்.	புலம்பல் ஆகமம்.
நீதிபதிகள் ஆகமம்.	பாரூக் ஆகமம்.
ரூத் ஆகமம்.	எசேக்கியேல் ஆகமம்.
1 சாமுவேல் ஆகமம்.	தானியேல் ஆகமம்.
2 சாமுவேல் ஆகமம்.	ஒசே ஆகமம்.
1 அரசர் ஆகமம்.	யோவேல் ஆகமம்.
2 அரசர் ஆகமம்.	ஆமோஸ் ஆகமம்.
1 நாள் ஆகமம்.	அப்தியாஸ் ஆகமம்.
2 நாள் ஆகமம்.	யோனாஸ் ஆகமம்.
எஸ்ரா ஆகமம்.	மிக்கேயாஸ் ஆகமம்.
நெகேமியா ஆகமம்.	நாகும் ஆகமம்.
தொபியாசு ஆகமம்.	அபாக்கூக் ஆகமம்.
யூதித் ஆகமம்.	செப்போனியாஸ் ஆகமம்.
எஸ்தர் ஆகமம்.	ஆகாய் ஆகமம்.
யோபு ஆகமம்.	சக்கரியாஸ் ஆகமம்.
சங்கீதங்கள்.	மலாக்கியா ஆகமம்.
பழமொழி ஆகமம்.	1 மக்கபே ஆகமம்.
சங்கத்திருவுரை ஆகமம்.	2 மக்கபே ஆகமம்.

புதிய ஏற்பாடு

புனித மத்தேயு
புனித மாற்கு
புனித லூக்காஸ்
புனித அருளப்பர்
அப்போஸ்தலர் பணி

புனித சின்னப்பர் திருமுகங்கள்

உரோமையர்
1 கொரிந்தியர்
2 கொரிந்தியர்
கலாத்தியர்
எபேசியர்
பிலிப்பியர்
கொலோசேயர்
1 தெசலோனிக்கேயர்
2 தெசலோனிக்கேயர்
1 தீமோத்தேயு
2 தீமோத்தேயு
தீத்து
பிலமோன்
எபிரேயர்

பொதுத் திருமுகங்கள்

யாகப்பர்
1 இராயப்பர்
2 இராயப்பர்
1 அருளப்பர்
2 அருளப்பர்
3 அருளப்பர்
புனித யூதா
திருவெளிப்பாடு

சீர்திருத்தத் திருச்சபையில் விவிலியம்

பழைய ஏற்பாடு — 39 புதிய ஏற்பாடு — 27
மொத்தம் = 66.

பழைய ஏற்பாடு

ஆதியாகமம்
யாத்திராகமம்
லேவியராகமம்
எண்ணாகமம்
உபாகமம்
யோசுவா
நியாயாதிபதிகள்
ரூத்
1. சாமுவேல்
2. சாமுவேல்
1. ராஜாக்கள்
2. இராஜாக்கள்
1. நாளாகமம்
2. நாளாகமம்
எஸ்றா
நெகேமியா
எஸ்தர்
யோபு
சங்கீதம்
நீதிமொழிகள்
பிரசங்கி
உன்னதப்பாட்டு
ஏசாயா
எரேமியா
புலம்பல்
எசேக்கியல்
தானியேல்
ஒசியா
யோவேல்
ஆமோஸ்
ஒபதியா
யோனா
மீகா
நாகூம்
ஆபகூம்
செப்பனியா
ஆகாய்
சகரியா
மல்கியா

புதிய ஏற்பாடு

மத்தேயு
மாற்கு
லூக்கா
யோவான்
அப்போஸ்தலருடைய நடபடிகள்
ரோமர்
1. கொரிந்தியர்
2. கொரிந்தியர்
கலாத்தியர்
எபேசியர்
பிலிப்பியர்
கொலோசெயர்
1. தெசலோனிக்கேயர்
2. தெசலோனிக்கேயர்
1. தீமோத்தேயு
2. தீமோத்தேயு
தீத்து
பிலமோன்
எபிரேயர்
யாக்கோபு
1. பேதுரு
2. பேதுரு
1. யோவான்
2. யோவான்
3. யோவான்
யூதா
வெளிப்படுத்தின விசேஷம்

பின்னிணைப்பு இரண்டு

APPENDIX - TWO

A list of some importnt books of Agattiyar and Bhogar Published at different times.

	BOOK	Publisher
1.	Agattiyar-12,000	E. Rm. Gurusamy Konar, Madurai, 1935.
2.	Agattiyar Amuda Kalainanam-1200	Tiruvenkadu Arumugasamy (ed.). Parasurama Mudaliyar, Tiruvorriyur, 1872.
3.	Agattiyar Ayulvedam-1200	Sirumanavur Munisamy Mudaliyar, Madras, 1913.
4.	Agattiyar Balavasagam-1200	Publisher and Date not known.
5.	Agattiyar Balavasagam-207	A.A. Krishnasamy Mudaliyar, Madras, 1895.
6.	Agattiyar Batshani-300	S.V. Kandasamy Mudaliyar, Madras, 1915.
7.	Agattiyar Diskshavidhi-200	Deenadayalu Mudaliyar, Madras, 1925.
8.	Agattiyar Emakandam - 800	Kalattur Kandasamy Mudaliyar. Madras, 1868.
9.	Agattiyar Ematattuvam - 800	R.S. Sundaramarthandar, Vadalivilai, 1939.
10.	Agattiyar Etshini	Duraisamy Mudaliyar, Madras, 1924.
11.	Agattiyar Jala Nikandu-200	Sirumanavur Munisamy Mudaliyar, Madras, 1910.
12.	Agattiyar Jalasuttiram-500	Takkolam Ramasamy Naidu. Madras, 1890.
13.	Agattiyar Jalattirattu-1200	Magudu Ravuttar, Tirunelveli, Pettai, 1894.

14. Agattiyar Kalainanam-1000	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1950.
15. Agattiyar Kalainana Suttiram-1200	Publisher and Date not Known.
16. Agattiyar Kanakamani-100	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1950.
17. Agattiyar Karpam-500	Takkolam Ramasamy Naidu, Madras, 1892.
18. Agattiyar Karpamuppu Gurunul-100	E. Rm. Gurusamy Konar Son, Madras, 1953.
19. Agattiyar Karukkadai-500	Publisher and Date not known.
20. Agattiyar Kaumudi Nul-400	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1952.
21. Agattiyar Kirukkunul-64	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1954.
22. Agattiyar Lakshnakaviyam-1000	Deenadayalu Mudaliyar, Madras, 1956.
23. Agattiyar Mahadiravakam-800	T. Duraisamy Mudaliyar, Madras, 1928.
24. Agattiyar Manakkolam-200	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1950.
25. Agattiyar Manonmani Diksai-100	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1953.
26. Agattiyar Mantiriga Kaviyam-1000	Kalattur Kandasamy Mudaliyar, Madras, 1865.
27. Agattiyar Mantiriga Nikandu	T. Sabhapathy Pillai, Tirisirapuram, 1885.
28. Agattiyar Meynanam - 1000	Sirumanavur Munisamy Mudaliyar Madras, 1910.
29. Agattiyar Moli Nalayiram	Parasurama Mudaliyar, Tiruvotriyur, 1875.
30. Agattiyar Naluka Jalam 1200	Kalattur Kandasamy Mudaliyar, Madras 1868.

31. Agattiyar Nalukanda Vaiddiyam-1200	Publisher and date not known
32. Agattiyar Nana Caitaniyam - 51	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1953.
33. Agattiyar Nan kaviyam-1000	A. Veerasamy Naicker, Tiruvotriyur, 1870
34. Agattiyar Nanasuttiram-1200	Takkolam Ramasamy Naidu, Madras 1894.
35. Agattiyar Narpadumukkona Pujai	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1952.
36. Agattiyar Nayanavidhi-500	Publisher and date not known
37. Agattiyar Pancakaviya Nikandu-800	R.S. Sundara Marthandar, Vadalivilai, 1939.
38. Agattiyar Paribhashai-300	E. Rm. Gurusamy Kone, Madurai, 1933.
39. Agattiyar Paripuranam-1200	E. Rm. Gurusamy Kone, Madurai, 1924.
40. Agattiyar Pujavidhi-200	Tirisirapuram Maturbhutesvara Svamigal (ed), T. Sabhapathi Pillai, Tirisirapuram, 1883.
41. Agattiyar Purana Kaviyam-1000	E. Rm. Gurusamy Kone, Madurai, 1932.
42. Agattiyar Puranam-205	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1953.
43. Agattiyar Puranasuttiram-216	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1952.
44. Agattiyar Sakalakalai Nanasuttiram-1200	V. Kandasamy Mudaliyar, Madras, 1915.
45. Agattiyar Sarakkusuddhi-500	Publisher and date not known.
46. Agattiyar Saumiyasagaram-1200	Kalattur Kandasamy Mudaliyar (ed.) Ramasamy Kone, Madurai, 1935.

47. Agattiyar Senduram-300	T. Duraisamy Mudaliyar, Madras, 1925.
48. Agattiyar Senduram-1500	Publisher and date not known
49. Agattiyar Simitturattinaccurukkam-360	Magudu Ravuttar, Tirunelveli Pettai, 1895.
50. Agattiyar Surukkam-100	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1953.
51. Agattiyar Tailaccurukkam-500	Publisher and date not known.
52. Agattiyar Tattuvakaviyam-1000	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1954.
53. Agattiyar Tattuvam-300	Siddayogi Sundara Mahalingam (ed) E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1941.
54. Agattiyar Tirumandiram-1500	Takkolam Ramasamy Naidu, Madras, 1892.
55. Agattiyar Vadakaviyam-1000	Publisher and date not known.
56. Agattiyar Vadasaumiyam-1200	Deenadayalu Mudaliyar, Madras, 1930
57. Agattiyar Vaiddiya Cintamani-4000	Publisher and date not known.
58. Agattiyar Vaiddiyakaviyam-1500	A Veerasamy Naicker, Tiruvotriyur, 1869.
59. Agattiyar Vaiddiyakkovai-125	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1952.
60. Agattiyar Vaiddiyam-205	Parasurama Mudaliyar, Tiruvotriyur, 1872.
61. Agattiyar Vaiddiyam-600	Hindu Press, Madras, 1882.
62. Agattiyar Vaiddiya Rattinaccurukkam-360	Saravanapuram Shanmuga Mudaliyar (ed.) Raghava Pillai, Madras, 1896.
63. Agattiyar Vaiddiyattirattu-81	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1950.

64. Agattiyar Vaiddiya Valladi-600	A. Deenadayalu Mudaliyar, Madras, 1924.
65. Agattiyar Vakadasuttira Nadimurai-1500	A. Veerasamy Naicker, Tiruvotriyur, 1870
66. Agattiyar Vakarasuttiram-200	E. Rm. Gurusamy Konar Son, Madurai, 1951.
67. Agattiyar Varma Ani-112	R.S. Sundara Marthandar, Vadalivilai, 1938.
68. Bhogar-700	Mayilam Subramaniya Swamigal (ed.) V. Munisamy Mudaliyar, Madras, 1889.
69. Bhogar-700 or Bhogar Sapta Kandam	B. Ratna Naicker Sons, Madras, 1936.
70. Bhogar Jananasagaram-557	Magudu Ravuttar, Tirunelveli Pettai, 1892.
71. Bhogar Nikandu-1200	Kalattur Arumuga Mudaliyar et. al (ed.), A. Deenadayalu Mudaliyar, Madras (nd).
72. Bhogar Sarakkuvaippu-800	E. Rm. Gurusamy Kone, Madurai, 1930.
73. Bhogar Vaiddiya Kaviyam-1000	Kalattur Arumuga Mudaliyar et. al (ed.), A. Veerasamy Naicker, Tiruvotriyur, 1868.

Taken from 'A History of the Tamil Siddha Cult' by

Dr. R. Venkatraman,

Ennes Publications, Madurai-625 019,

August, 1990.

* * * * *

பின்னிணைப்பு மூன்று

தேவரிஷிமுனி சித்தர்கள்
திருவாய்மலர்த்தருளிய
வைத்தியவாதயோக
ஞான சாஸ்திரத் திரட்டு
பத்தாம் பாகப் புஸ்தகம்

இஃது
மதுரை வித்துவான்
த. குப்புசாமி நாயுடு அவர்களால்
பரிசோதிக்கப்பெற்று

மதுரை புதுமண்டபம் புத்தக ஷாப்
இ.ராம. குருசாமிக் கோனார்
அவர்களால் நமது
மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது
1922

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான விளக்கம் 34

பூரணமாய் மும்மூர்த்தி தந்த வாறும்
  பூமியென்றுந் திகிரியென்றும் படைத்த லாறும்
காரணமாய் தேவியருள் நிறைந்த வாறும்
  கற்பமுண்டு ருஷிகள்சித்தர் சாகா வாறும்
வாரணமாம் பறைவையொடு நாற்கால் ஜென்மம்
  மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பாரணமாய் நால்வேதம் வந்த வாறும்
  பகருதற்கு கணேசனுட பாதங் காப்பே. (1)

பாரப்பா பூரணத்தில் மனதை யோட்டிப்
பரப்பிரம நாதமதைச் சினத்திற் சேர்த்து
தேரப்பா சத்தியையுஞ் சாம்ப லாக்கி
சிவசிவா வென்று பொருள் கைக்குள் ளாக்கி
போரப்பா நால்வேத மயக்கத் தோடு
பூமியிலே மானிடரை மோச மாக்கி
வேரப்பா சித்தர்களும் பூரணத்தை
வேடிக்கை போற் கட்டி விடுத்தார் தானே. (2)

விடுத்தார்கள் சித்தர்பதி னெட்டுப் பேரும்
வெவ்வேறாய் நூல்சொன்னார் அனந்தங் கோடி
கொடுத்தானே கொங்கணவன் ஞானந் தன்னைக்
குறிபோலே இருநூறு குறுக்கிச் சொன்னான்
எப்பாய்நாம் பஞ்சகா வியத்திற் சொன்னோம்
என்சொல்வே னதன் பெருமை சொல்லப் போமோ
எடுப்பாகப் பலநூலை யூன்றிப் பார்க்கக்
கடுமை யாய்க் கட்டிவிட்டான் கலங்கத் தானே. (3)

கட்டினான் யென்சிஷ்யன் சுந்த ரன்றான்
கலைஞானம் பார்த்திருந்தும் வெளிய தாகக்
கொட்டினான் பலநூலைப் பாடிப் போட்டான்
குறிப்பறிந்து மச்சமுனி வெளியாய்ச் சொன்னான்
கட்டியதோர் கோரக்கன் சொன்ன நூலோ
கஞ்சாவின் மயக்கத்தாற் கபடில் லாமல்
எட்டினான் தேரையனுஞ் சொன்னான் ஞானம்
எட்டி லொன்று திட்டமதா யியம் பினானே (4)

இயம்பினான் வஸ்துநிலை யறிந்து முன்னம்
என்னுடைய சுந்தரனுஞ் சொல்ல வில்லை
நயம்பெறவே நந்தீசர் கபடில் லாமல்
ஞானமது கோடி சொன்னான் நன்மை யாகச்
சுயம்பாக போகருந்தான் சுருக்கிச் சொன்னார்
சுகமாகப் பதிணெண்பேர் சித்தர் சொன்னார்
பயம்புடைய பாம்பாட்டிச் சித்த ருந்தான்
பதினெட்டுப் பேர்களுக்கு மேலா மாச்சே (5)

ஆச்சப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு
ஆறுலட்சங் கிரந்தமதை யருளிச் செய்தேன்
பேச்சப்பா பூரணத்தில் மூன்று லட்சம்
பேசினே னாயிரத்துள் ளடக்கிப் போட்டேன்
நாச்சப்பா வாயிரத்தை ஐந்நூறாக்கிக்
கட்டினேன் ஐந்நூற்றை நூற்றுக் குள்ளே
மூச்சப்பா நூறதுவை ஐம்ப தாக்கி
முடித்திட்டேன் முப்பதுக்குள் முகில் போற்றானே (6)

முகிலாகச் செய்துவிட்டேன் மைந்தா மைந்தா
முப்பதுக்கு ளடக்கி விட்டேன் முன்னூல்பார்த்து
அகிலமதில் விரித்து விட்டே னிந்தநூலை
யார்தானு மெந்தனைப்போ லறையமாட்டார்
பகிரதியாம் கலைமகளாம் வாணி தானும்
பார்பதியும் அறுமுகனும் பலபேர்தானும்
சகியாதமூர்த்திகளா மிவர்கள் தானும்
சத்திசிவ னிருப்பிடமோ சாற்றுவீரே (7)

சாற்றுதற்கு யிதின்ஞாயந் தெரியக்கேளு
தந்திமுக னாரென்றும் அயனா ரென்றும்
தேற்றுதற்கு வுலகமதின் மயக்கமப்பா
தேவர்கள் முப் பத்து முக் கோடி யோரும்
வேற்றுருவோ வுருத்திரனோ டைந்து பேரும்
வேதாந்த விருப்பிடத்தின் வெளிச்ச மாகும்
காற்றிருப்பா ரிவர்களுட திரத்தை நாடிக்
கருவூரா ரிப்படியே கருதி னாரே (8)

கருதினா ரிப்படியே சொன்னேன் சொன்னேன்
கயிலாய விடமெங்கே கருவூரெங்கே
பருதியடா வுலகமது பணியின் வாழ்வு
பராபரனா ராறுசுயம் பகர்ந்தசோதி
ஒருவருமே நிகரற்ற வஸ்து வப்பா
ஓகோகோ மயங்காதே யூன்றிப்பார்த்துத்
திரிபொருளை யறிவினா லறிந்துபார்த்துத்
தெரிசிப்பாய் நெறிபத்துந் தீட்சை செய்யே (9)

தீட்சையது யேதென்றாற் சொல்லக்கேளு
செய்யதிரு குருவருளைத் தேடியோடி
ஆச்சதனா லங்கமதைச் சுத்தஞ்செய்து
அருள்வெளியாய்ப் பரவெளியி லாசையோடி
வாச்சுதென்றே பரப்பிரம மொன்றைப்போற்றி
வகையுடனே பூரணத்தை நாடிக்கொண்டு
காச்சுதென்ற பராபரையின் பூசைசெய்து
கண்டுகொள்வாய் சங்கதிகள் யாவுந்தானே (10)

சங்கமதிற் பரப்பிர்ம மொன்றைப்போற்றி
சகலபவந் தீர்த்தநன்மை தனையேபோற்றி
துங்கமுறு லிங்கமென்றும் பூசைசெய்து
சுனைகெட்ட மாடப்பா சாம்பற்பூசி
எங்கினும்போய் சிவசிவா வென்றலைந்தே
ஏங்கியெரி நரகமதில் விழுவாரப்பா
பொங்குதிரைக் கடல்மூழ்கித் தீட்சைபெற்றால்
புகழ்கிரியாங் கைலாசம் போகலாமே. (11)

போகவொரு தடையுண்டோ அந்தநாட்டிற்
போவதற்குப் பொய்கைதனில் முழுகவேண்டாம்
சாகுதற்குத் தலைகீழாய் நிற்கவேண்டாம்
சத்தலிங்கந் தனக்குமலர் சாத்தவேண்டாம்
தாகமுடன் தீவளர்த்துக் குதிக்கவேண்டாம்
தாரணியிற் பலதெய்வந்தொழவே வேண்டாம்
ஏகமென்ற பிரமாவை நாடவேண்டாம்
இந்தநூல் பார்த்தறிவீ ரின்பந்தானே (12)

இன்பமாய் நால்வேதம் வந்தவாறும்
எழுதினார் வியாசமுனி ரத்தினம் போல்
அன்பாகப் பலவிதத்திற் கட்டிப்போட்டார்
அதினாலே மானிடர்கள் கெட்டுப்போனார்
முன்போலச் சித்தரெல்லாங் கொஞ்சங்கொஞ்சம்
மூடினதைத் திறந்துவிட்டார் முடுகிநானும்
அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக
அரனார்தா னுரைத்தபடி யறிவித்தேனே. (13)

அறிவித்தே னென்றுசொன்ன வார்த்தைகேட்டு
ஐயையோ வுலகத்தி லனேகம் பேர்கள்
பொறியான அறிவுமிக வழிந்துபோனார்
புலத்தியனே நினைத்துப்பார் பொய்யோமெய்யோ
நெறியான பூசைதினஞ் செய்திட்டாலும்
நிமலர்பதங் காண்பாரோ நிசமதாக
அறிவான தழிந்துவிட்டா ரப்பாவப்பா
அலகைவச மாவதுவு மறிக்கைதானே (14)

அலகையது தேவனுக்குச் சரியாய்நின்று
ஆங்காரந் தானெடுத்து அகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள்நின்று
நித்தியமும் மானிடரை மோசம் போக்கி
பலகலையு முணரறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச்செய்யும்
நிலையதுவை யறியாமற் போனார்போனார்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே (15)

நிசமான நால்வேதம் ஆறுசாஸ்திரம்
நினைவதுவை மறைத்துவைக்கும் பூர்ணசாஸ்திரம்
வசமான நால்மதத்தின் வந்தசாஸ்திரம்
மற்றமற்ற சாஸ்திரத்தின் வசமீதெல்லாம்
குசமசக்குக் குசமசக்கு அப்பாஅப்பா
கூறுகிறேன் சுயவேத சாஸ்திரந்தன்னை
நிசமாய்நம் பினபேர்க்கீ டேற்றமுண்டு
நிலைஞானக் கண்ணொளியும் நிற்குந்தானே (16)

கண்ணீரை விட்டுள்ள கசட்டைப்போக்கி
காரணசற் குருதன்னாற் சுத்தமாக்கி
வெண்ணீராய் வேதாந்தத் திருவினுள்ளே
வீடேக வேணுமென்னில் விரும்பிக்கேளு
தண்ணீரை யுருவேற்றித் தியானஞ்செய்து
சட்கோணந் தன்னையுமே சரணஞ்செய்து
கண்ணீர்விட் டமுதருந்திச் சட்டைபோக்கி
கரையேற வேணுமிதைக் கைக்கொள்வீரே. (17)

கைக்கொள்ள வேணுமென்றால் யின்னம்வேறே
கற்பனையு முண்டதனைக் கருத்தில்வைத்தே
பைக்கொண்ட பிதாமாதா பாதம்போற்றி
பழியேதா னுண்டுசெய்யும் பாவைமாரை
திக்கென்ன நினையாமல் திருட்டைப்போக்கிச்
சிவம்வேணு மென்றுதினம் செபத்தைச்செய்து
மெய்க்கொண்டே யிருந்திடுவாய் சொல்லிப்போட்டேன்
வேதாந்த வேதத்தின் வெளிச்சமாமே. (18)

வேதாந்த சாஸ்திரத்தின் மார்க்கந்தன்னை
விரித்துனக்குச் சொல்லுகிறேன் வியந்துகேளு
நாதரென்று மும்மூர்த்தி வந்தேதானும்
நாகுதனிற் பலபலதந் திரங்கள்பண்ணி
காதகமாய்ப் பாசவலைக் குள்ளேயாக்கி
காசிகெங்கை யென்று சொல்லிக் காட்டிவிட்டு
பாதகமாய்ப் போவதற்குச் செய்துவிட்டார்
பண்பாக நீதானும் பகுத்துப்பாரே. (19)

பாரப்பா பிப்படியே தெளிவில்லாமல்
பராபரத்தை யறியாமல் மோசம்போனார்
ஆரப்பா எதிர்ப்பார்கள் யென்னோடேதான்
அஞ்ஞான மூடர்கள்தா னதையென்னாமல்
வேரப்பா சிவலிங்கம் விட்ணுலிங்கம்
வேதாந்த லிங்கமதை விரித்துப்பார்த்தால்
சேரப்பா ஒன்றுமே யில்லையில்லை
சிவம்வேணு மென்றுதினஞ் செபத்தைச்செய்யே (20)

செபத்தையே செய்வதற்குச் சீவன்வேணும்
செபஞ்செய்யத் திருச்சித் தந் தேடவேணும்
பவத்தையே யொழிப்பதற்குத் தண்ணீர்வேணும்
பரமபத மடைவதற்குத் தபசுவேணும்
அவத்தமாய்ப பலதானம் பண்ணவேண்டாம்
ஆறுகுளந் தனில்மூழ்கி யலையவேண்டாம்
சிவன்பேரி லாணையிது சொல்லிவிட்டேன்
தீட்சைபெறச் சிவன்பாதந் தெரிசிப்பாயே (21)

தெரிசிப்பாய் புலத்தியனே நன்றாய்க்கேளு
செப்பினதோர் நூல்களெல்லாந் தள்ளிப்போட்டு
அரிதியா யோர்வழுமெய்ஞ் ஞானப்பாதை
அடைவதற்கு அடையாள மொன்றுசொல்வேன்
பரிசிப்பாய் ஞானமொழி கையிற்கொண்டு
பரப்பிரம மொன்றையே நாடிக்கண்டு
வரிசிப்பாய் நிலைதவறா மார்க்கந்தேடி
வணங்குமந்த மறைபுகுந்து வாழுவாயே (22)

வணங்கியே செகசோதி யொருவனாகி
    மானிலத்தை யொருநொடியில் வகுத்தேமண்ணில்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
    குவலயத்திற் றானுதித்துக் குருவாய்வந்து
பணமான சமுசார - மொன்றில்லாமற்
    பரதேசி போலிருந்து தவத்தைக்காட்டி
தணமான சித்தர்களை யிறுத்திப்போட்டு
    தவஞ்செய்த பெரியோரை யண்டுவாயே (23)

அண்டாம லிருப்பதென்ன வென்றுகேட்டால்
    ஐயையோ சிவன்பார்த்து அகஸ்தியாவென்றும்
ஒன்றான மார்க்கமதை விரித்துக்காட்டி
    உலகமதி லிந்நூலை விரிக்கச்செய்து
தண்டாமற் பொதியமா மலையிலென்னைத்
    தாபித்துத் தயங்காம லிருக்கச்சொல்லி
ஒன்றான பரப்பிரமஞ் சொன்னார்சொன்னார்
    ஒகோகோ புலத்தியனே வுரைத்திட்டேனே (24)

உரைத்திட்டே னென்றுசொல்லிச் சித்தரெல்லாம்
    ஒட்டார மாகவென்னைந் கோபித்தார்கள்
மரைத்திட்ட பெரியோரும் உலகத்தோரும்
    மயங்குவார் வேறொன்றுந் தெரியாமற்றான்
விரைந்திட்டே யுரைத் தவிந்த நூலைத்தானும்
    மேன்மையென்று அறியாமற் கிழிக்கப்பார்ப்பார்
அரைந்திட்டேன் புலத்தியனே சமயம்பார்த்து
    அவர்களுக்குப் புத்திசொல்லி யறிவிப்பாயே (25)

அறியாத காரியங் எனைத்துங்கேளு
ஆசைமுறை தானடக்கி யறிவோடேநீ
பொறியகந்தை தானடக்கிப் பொசிப்பொடுக்கிப்
பூரணத்து ஞானமதைப் பிரசங்கித்துச்
சரியாக ஆத்துமத்தின் கசட்டை தீர்க்கும்
சற்குருவைத் தேடிப்போய்ச் சரணஞ்செய்தால்
அரிபாதங் காண்பிப்பா ரினேகருண்டு
அம்புவியில் அவர்களைநீ தேடுவாயே (26)

தேடுவாய் புத்தியனே நன்றாய்க்கேளு
தீக்கிடங்கைத் தேடாதே தெளியச்சொன்னேன்
பாடுவார் பதினெட்டுப் புராணத்தோடு
பாரதமும் பகட்டாகப் பாடிவிட்டார்
நாடுதனி னுலகோர்கள் பிழைக்கவேண்டி
நவநீதம் போலவுமே சொன்னாரப்பா
ஒடுவாய் வாலைபதம் பூசைசெய்து
உத்தமனே கண்ணீராற் கழுவுவாயே (27)

கழுவியே ஆத்துமத்தைப் படிகஞ்செய்யக்
கருவிகளைத் தெட்சணையாய் வைத்துக்கொண்டு
மெழுகுவா யிருதயத்தைக் கண்ணீராலே
மெழுகினபின் தெய்வத்தின் பக்திவைத்துத்
தொழுகுவாய் தவஞான தீபமேத்தித்
தோத்தரிப்பாய் சகலநன்மை சொரூபங்காண்பாய்
முழுகுவாய் சிறுபொய்கைக் குள்ளேநீயும்
மூர்த்திபரனருகேமுச் சுடராய்த்தானே (28)

மூச்சுடரு மொன்றாம்மும் மூர்த்தியல்லால்
மூவருமே யாளுருவ மொன்றேயாகும்
அச்சுதனார் யிவர்களுமே ஆண்பெண்ணல்ல
அரனுமல்ல விங்கமல்ல வனாதியான
சச்சிதா னந்தனையே வணக்கஞ்செய்து
சற்குருவைத் தெரிசித்துச் சரணம்பண்ணி
எச்சரிக்கை கொண்டுநட வப்பாஅப்பா
எண்ணில்லா முக்திவழி யோடுவாயே (29)

ஒடுகின்ற வுகைகளெல்லாம் உரைத்துப்போட்டேன்
உலகுதனில் மார்க்கமெல்லா முவந்துசொன்னேன்
தேடுகின்ற புராணமதின் கருத்துச்சொன்னேன்
சிவன்பிர்மா விஸ்ணுவெல்லா மறியச்சொன்னேன்
ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசத்தவென்றேன்
அஞ்ஞானம் பண்ணுவது அகந்தையென்றேன்
பாடுகின்ற யெந்நூலில் வெளியாய்த்தோற்றும்
பார்த்துநீ காமப்பா லறிந்திடாயே. (30)

காமப்பா லெட்டாகி யிரண்டுமான
கானற்பா லறிந்துகொள்ளு சித்தனாவாய்
நாமப்பா நந்திகுரு சுழுனைதன்னில்
நாட்டினோம் நிந்துநிலை பத்திக்கொண்டு
சோமப்பா லுண்டுயெட்டிற் கசார்ந்தசூட்சம்
சொல்லார்கள் நாதாக்கள் சுயம்பாய்த்தானும்
ஏமப்பா யெட்டறிந்து அதனுள்மேவி
இயல்பாகத் திரிகோணத் திருந்திட்டேனே. (31)

இருந்திட்ட சூட்சமரி தாரம்வாரம்
ஏழேழு மேழதிலே மனந்தான்சொக்கி
இருந்திட்டேன் மேலமூல கணேசன்மூலம்
இரண்டுக்கு மெட்டாத அறிவின்மூலம்
தெரிந்திட்டோ மெய்ஞ்ஞான தீபமான
சிவக்கொழுந்தா மறிவாக அதனுட்சென்று
இருந்திட்ட உள்மூல மாதிசூட்சம்
இருதயத்தி லறிந்தறிவா யோதுவோதே (32)

ஓதுவதுக் கறிவுகுரு நாமேசொன்னோம்
உற்றமொழி கள்சொன்ன தண்டகத்தில்
ஓதுதற்குச் சித்தித்த பொருளைச்சொல்லி
உற்பண்ணன் மெய்ஞ்ஞானக் கிரியைசொன்னோம்
மாதுதாக்கஞ் செய்துமுனை மாயைமுட்டும்
மாயைதனைத் தவிப்பதற்கு வகையுஞ்சொன்னேன்
பாதகர்க்குக் கிட்டாது பயனைக்காணான்
பத்திவைத்து விட்டகுறை பார்த்துத்தேரே (33)

பார்க்கையிலே அறிவுகுரு தன்னாப்பாரு
பட்சனியில் நாம்சொன்ன கருவைப்பாரு
ஏர்க்கையிலே யறிந்துகொள்ளத் தப்போயில்லை
யீசனுமே நீயாவாய் மேலுங்கேளு
மார்க்கமது அம்மாளுக் குகந்த பிள்ளை
மாசற்ற காதாக்க ளுன்னை மெச்சச்
சேர்க்கையிலே சேர்ந்துகுரு பாதத்துள்ளே
சேர்ந்து நவ கோடிசித்து மாடலாமே. (34)

ஆடலாம் நினைத்தபடி சித்தியாகும்
    ஆதிசிவ சத்திருகு அமைப்புத் தோணும்
நாடெலாம் வணங்குமெய்ஞ் ஞானி யாவாய்
    பாதாந்த வேதாந்த மெல்லாஞ் சித்தி
காடெலாந் திரிந்தலைந்து வீணே சும்மா
    கருக்குழிவீணாதேமா ளரதேஜயா
தேடாத தேட்டதுதான் ஞானத்தேட்டு
    செப்பினோம் உற்றமொழி அறிந்து கொள்ளே. (35)

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய ஞானவிளக்கம் 34 முற்றிற்று.

* * * * *

பின்னிணைப்பு நான்கு

சிவவாக்கியம்

(1000 பாடல்)

இ∴து
செழுமணவை—சித்திரக்கவி
தேவேந்திர நாத பண்டிதரவர்களால்
தமதிடத்திருந்த ஏட்டுப்பிரதிக்கிணங்க
பரிசோதித்து.

சிறுமணவூர்
முனிசாமி முதலியார் அவர்களாற் றமது
சிவகாமி விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது
1903

சிவவாக்கியம்

விண்கடந்த சோதியாய் விளங்கு ஞானமூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே
எண்கடந்த யோகினோடிரந்துசென்று மாணியாய்
மண்கடந்த வண்ணநின்னை யார் மதிக்கவல்லரே (1)

ஆதியாதியாதிநீ யொரண்டமாதியாதலால்
சோதியாத சோதி நீய துண்மையில் விளங்கினாய்
வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி யாயனாய மாயமென்ன மாயமோ (2)

வேறிசைந்த செக்கர் மேனி நீறணிந்த புன்சடை
கீறுதிங்கள் வைத்தவன்கை வைத்தவன் சிறமிசை
ஊறு செங் குருதியால் நிறைந்த காரணந்தனை
ஏறு சென்றடர்த்த வீச பேசு கூசமின்றியே (3)

அத்தனாகி யன்னையாகி யாளுமெம் பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மையாட் கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்துநம் முன் மேவினார்
எத்தினாலிடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே (4)

பிறப்பதற்குமுன்னெலா மிருக்கு மாறதெங்கனே
பிறந்துமண்ணி றந்து போயிருக்கு மாறதெங்கனே
குறித்துநீர் சொலாவிடிற் குறிப்பில்லாத மாந்தரே
அறுப்பனே செவியிரண்டு மஞ்செழுத்துவாளினால் (5)

கறந்தபால் முலைப் புகாகடைந்த வெண்ணெய் மோர்புகா
துடைந்துபோன சங்கினோசை யுயிர்களுமுடற்புகா
விரிந்த பூவுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப் பதில்லை யில்லை யில்லை யில்லையே (6)

திருத்திவைத்த சற்குருவைச் சீர்பெறவணங்கிலீர்
குருக் கொடுக்கும் பித்தரே கொண்டு நீந்த வல்லிரோ
குருக் கொடுக்கும் பித்தரும் குருக்கொள்வந்த சீடனும்
பருத்திபட்டபாடுதான் பன்னிரண்டும் பட்டதே (7)

ஒரெழுத் திலிங்கமா யோது மட்சரத்துளே
ஒரெழுத்தியங் குகின்ற வுண்மையை யறிகிலீர்
மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாவெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே (8)

செம்மை சேர்மரத்திலே சிலதலைகள் செய்கிறீர்
கொம்மையற்ற கிளையில் பாதகுரடு செய்தழிக்குறீர்
நம்முளே விளங் குவோனைநாடி நோக்கவல்லிரேல்
இம்மளமும் மளமும் மெம்மள முமல்லவே (9)

யோகஜாடை காட்டுவார் உயரவும் எழும்புவார்
வேகமாகவட்ட சித்துவித்தை சற்றெட்டுவார்
மோகங் கொண்டுமாதரின் மூத்திரப்பை சிக்கிபின்
பேயது பிடித்தவன் போற் பேருலகிற்சாவரே (10)

வாதஞ்செய்வேன் வெள்ளியும் பொன்மாத்துயர்ந்த தங்கமும்
போதவே குருமுடிக்கப் பொன்பணங்கள் தாவென
சாதனை செய் தெத்தி சொத்து தந்ததைக் கவர்ந்துமே
காததூரமோடிச் செல்வர் காண்பது மருமையே (11)

காவியுஞ் சடைமுடி கமண்டலங் களாசனம்
தாவிருத்தி ராட்சம் யோகதண்டுகொண்ட மாடுகள்
தேவியையலைய விட்டுத் தேசமெங்கும் சுற்றியே
பாவியெனவீடெலாம் பருக்கைகேட் டலைவரே (12)

பொய்யெலாந்திரண் டுருண்ட பொய்யெடுத்த பொய்யர்கள்
மெய்யலாத பொய்யிதனை மெய்யதென்ப தேதுகாண்
மெய்யிலே யிருந்துதித்த மெய்க்கருணை பெற்றிடில்
பொய்யதென்ற மெய்யுமிக்க மெய்யதாகு மெய்யீதே (13)

இல்லல்லா மஹம்மது ரசூல்லாவிஸ்லாமதம்
அல்லல்லா வெனுந் துலுக்கரல்லாக் கைவிரலைந்தை
மல்லல்லா கொடுத்துஇந்து மதத்தர் கொண்டாடாவிடின்
சொல்லல்லாச் சுடுகாடாகி சுற்றி நாய்களோடுமே (14)

பக்கச் செடிலுச்சிச் செடிற் பற்றுந்தீப் படுகளம்
முக்கியந்திருவிழாவை முற்றுநம்பு மூடர்காள்
கெக்கலிக் கொட்டியுந்திரி யேழை மதியுள்ளவர்
மக்கியும் மடிவ ரென ஏவாதி நரகெய்வரே (15)

ஏசு மதவாதிகளிறந்தபின் கடைசி யிற்
பாசம் வைத்தொருமிக்கப் பலரையுமெழுப்பியே
நேசமுறப் பாபத்தை நிராகரித்து மோக்ஷத்தில்
வாசமிக வைக்கவேசர் வேசர் வரலுண்மையோ (16)

மண்ணினிற்றன் சாயலாய் மனிதனைப் படைத்ததின்
எண்ணத்தாற் கழுதையினை யெத்தேவன் சிருஷ்டித்தார்
குண்ணவாத மெலும்பினைக் கொண் டேவாளினைப்படைத்
தண்ணே வுயிரே ற்றியதில் வாறெனக்குரையுமே (17)

எச் சமயத் தேவர்கட்கு மீசனொரு வனலால்
மெச்சமயத்தெவர்க்கு மெங்கெங்கும் வெவ்வேறு தெய்வங்களோ
மிச்ச வாடுமாடு வானை வெம் புலி குரங்குநாய்
வச்சகல்லுசாணி மண்ணு வாண்பெண் தெய்வமல்லவே (18)

கும்பிடுந்தெய்வ மெலாங் குலத்தெய்வமாய்க் கோடித்தே
நம்பிநாளும் பூசைபொங்கல் நற்பலிகள்தந்திட
வெம்பிட வெதும்பிட மிடியதி னலிபட
தெம்பிடக் குடிகெடுக்குஞ் செத்த தெய்வமாகுமே (19)

பேயுடன் பிசாசதும் பிரம ராட்ச சானதும்
தாயுடன் தமக்கையும் தண்ணீரில் மாண்டழிந்ததும்
நோயுடன் ஒருங்கியும் நொடியிற் செத்தொழிந்ததும்
ஈயுடனெறும்பு மொய்த்திறந்த தெய்வமீதலோ? (20)

* * * * *

துணை நூற்பட்டியல்

துணை நூற் பட்டியல்

அ. முதன்மை ஆதாரங்கள்

I. சித்தர் நூல்கள்

1. **அகத்தியர் ஞானம்**, வீ. ஞானசிகாமணி (ப.ஆ.), ஞானோதயம், சென்னை—60, 1981.

2. **அகஸ்தியர் 200 (முதல் பாகம்)**, எஸ். வெங்கட்ராஜன் (ப.ஆ.), சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1958

3. **அகஸ்தியர் 200 (மூன்றாம் பாகம்)**, எஸ். வெங்கட்ராஜன் (ப.ஆ.), சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1963

4. **கற்பம் 300,** (திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியது), ஜி. இராமசாமிக் கோன் (ப.ஆ.), ஸ்ரீ இராமச்சந்திர விலாசம் பிரஸ், மதுரை, 1965.

5. **சத்த காண்டம் 7000,** (போக முனிவர் திருவாய் மலர்ந்தருளியது), இரா.ம. குருசாமி கோனார் & த. துரைசாமி முதலியார் பதிப்பு, ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ், மதுரை, 1922.

6. **சித்தர் பாடல்கள்,** (குதம்பைச் சித்தர்), திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1, 1987.

7. **சித்தர் பாடல்கள்,** (சிவவாக்கியர்), திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1, 1984.

8. **சித்தர் பாடல்கள்,** தா. கோவேந்தன் (ப.ஆ.), பூம்புகார் பிரசுரம், சென்னை—13, 1976

9. **சித்தர் பாடல்கள்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987

10. **சித்தர் பாடல்கள் (முதற்பாகம்),** அரு. ராமநாதன் (ப.ஆ), பிரேமா பிரசுரம், சென்னை—24, 1984 (நான்காம் பதிப்பு)

11. **சித்தர் பாடல்கள் (இரண்டாம் பாகம்),** அரு. ராமநாதன் (ப.ஆ), பிரேமா பிரசுரம், சென்னை—24, (ஆண்டு இல்லை)

12. **சிவ வாக்கியம் (1000 பாடல்),** சிறுமணவூர் முனுசாமி முதலியார் பதிப்பு, சிவகாமி விலாச அச்சுக் கூடம், 1903

13. **சிவ வாக்கியர் பாடல் மூலமும்** மா. வடிவேலு முதலியாரவர்கள் இயற்றிய உரையும், B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், சென்னை, 1959

14. **சுண்ணக் காண்டம் 600,** (யாகோபு திருவாய் மலர்ந்தருளிய பெருநூல்), குருசாமி கோனார் பதிப்பு, ஸ்ரீ இராமச்சந்திர விலாசம் பிரஸ், மதுரை, 1954. (மூன்றாம் பதிப்பு).

15. **ஞான வெட்டியான் சூருன,** (திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியது) சரவண முத்துப் பிள்ளை பதிப்பு, ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக் கூடம், சென்னை, 1906.

16. **ஞான வெட்டியான் 1500,** (திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்தது), மயிலை, திருவேங்கட முதலியார் பதிப்பு, வாணி விலாசம் பிரஸ், சென்னை, 1925.

17. **ஞான வெட்டியான் 1500** — மூலமும் பொழிப்புரையும், (திருவள்ளுவ நாயனார்), திருப்பதி இரத்தினசாமி முதலியார் — பதிப்பு, கலைக்கியான முத்திராக்ஷர சாலை 1931.

18. **நடுகாண்டம் 500,** (கொங்கணர் அருளிச் செய்தது), இ.ராம. குருசாமிக் கோனார் சன் ஜி. ராமசாமிக் கோன் மதிப்பு, ஸ்ரீ இராமசந்திர விலாசம் பிரஸ், மதுரை, 1951.

19. **பட்டினத்தடிகள் திருப்பாடற் திரட்டு,** B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை—1 (ஆண்டு இல்லை).

20. **பதினெண் சித்தர் ஞானக் கோவை,** வா. சரவண முத்துப் பிள்ளை தொகுத்தது, திருமகள் விலாச அச்சு யந்திரசாலை, சென்னை, 1935.

21. **பதினெண் சித்தர் பெரிய வைத்திய சில்லரைக் கோவை,** B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ், சென்னை, 1930.

22. **பரிபூரணம் 1200,** (அகத்திய மாமுனிவவ் அருளிச் செய்தது), ந.தெ. சிகாமணி முதலியார், அகத்தியர் பரம்பரை சித்த வைத்திய சாலை, திருவத்திபுரம், 1986.

23. **பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்,** ஆர்.ஜி. பதி கம்பெனி, சென்னை—1 (ஆண்டு இல்லை).

24. **பெருநூல் காவியம் 1000,** (காகபுசுண்டர் திருவாய் மலர்ந்தருளியது) இ.ராம. குருசாமிக் கோனார் சன், ஜி. இராமசாமிக் கோன் பதிப்பு, ஸ்ரீ இராமச்சத்திர விலாசம் பிரஸ், மதுரை, 1957 (இரண்டாம் பதிப்பு).

25. **போகர் ஏழாயிரம் (இரண்டாம் ஆயிரம்),** அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு, 1975.

26. **போகர் சப்த காண்டம் ஏழாயிரம் — போகர் கண்ட யோகம்,** யோகி.சா.க. ராமய்யா, சக்தி நிலையம், சென்னை—4, 1982.

27. **போகர் வைத்தியம் 700,** சே. பிரேமா (ப.ஆ.) ப.வெ. நாகராசன் (உ.ஆ), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 1985.

28. **போகர் 7000** (4, 5, 6, 7 ஆயிரங்கள்) தாமரை நூலகம், சென்னை—26, 1991.

29. **வைத்திய சில்லரைக் கோவை,** (அகஸ்தியர் அருளியது), ஆ. இரத்தின முதலியார் பதிப்பு, 1888. (இடம் இல்லை)

II. **விவிலியப் பதிப்புகள்**

1. **பரிசுத்த வேதாகமம்,** (பவர் மொழிபெயர்ப்பு), இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர்—1.
2. **பரிசுத்த வேதாகமம்,** (கத்தோலிக்க மொழிபெயர்ப்பு), தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி நடு நிலையம், திண்டிவனம்.
3. CHAIN – REFERENCE BIBLE (Fourth improved edition) B.B.Kirkbride Bible Co., Inc., Indianapolis, Indiana, U.S.A.

ஆ. துணைமை ஆதாரங்கள்

I **நூல்கள் – தமிழ்**

1. **அருணாசலம், மு.,** *தமிழ் இலக்கிய வரலாறு (14ஆம் நூற்றாண்டு),* காந்தி வித்யாலயம், மாயூரம், 1969.
2. __________, *தமிழ் இலக்கிய வரலாறு (15ஆம் நூற்றாண்டு),* காந்தி வித்யாலயம், மாயூரம், 1969.
3. **ஆண்டியப்பன், தே., & குமாரசாமி, இரா.,** *சித்த மருத்துவம்,* முத்துப் பதிப்பகம், ஆழ்வார் நகர், மதுரை—19, 1979.
4. **ஆர்தர், G.J.,** *இரட்சிப்பின் ஒரே வழி,* பென் தாம்சன் அண்ட் கோ, சென்னை—7, 1960.
5. **ஆல்பர்ட் மனுவேல்,** *திருமறைச் சொற்பொருள்,* கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை—3, 1963.
6. **எட்வர்ட் சாம், இரா.,** *மலரும் திருமறை,* கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை—3, 1973.

7. **கமலக்கண்ணன், பா.,** *ஞானக் கனல்,* வானதி பதிப்பகம், சென்னை—17, 1989.

8. **கல்யாண ராமன், எஸ்.** *சித்தர் போகர் மூலிகை விஞ்ஞானம்* சித்த ஆயுர் வேதர், நங்கநல்லூர் காலனி, சென்னை—61, 1970.

9. **கீதா, ஜி.,** *சித்தர்கள் அருளிய தெய்வீக மந்திரங்கள்,* மாருதி பதிப்பகம், சென்னை—14, 1986.

10. **குணா,** *தமிழர் மெய்யியல்,* பொதுமை வெளியீடு, சென்னை—17, 1980.

11. **கைலாசபதி, க.,** *ஒப்பியல் இலக்கியம்,* பாரிநிலையம், சென்னை—1, 1969.

12. **சாது செல்லப்பா,** *கிறிஸ்தவம் தேவையா?,* இவான்ஜலிக்கல் ஆக்ஸன் டீம் ஆப் இந்தியா, கோயம்புத்தூர், 1985 (விரிவு செய்யப்பட்ட பதிப்பு)

13. **சிதம்பரனார், அ.,** *அகத்தியர் வரலாறு,* திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1, 1950.

14. **சிதம்பரனார் சாமி,** *சித்தர்கள் கண்ட விஞ்ஞானம், தத்துவம்,* இலக்கிய நிலையம், சென்னை—94, 1974 (நான்காம் பதிப்பு)

15. **சித்தமருத்துவக் கருத்தரங்கு சிறப்பு மலர்,** இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னை.

16. **சிவசுந்தரம், N.J.S.,** *முக்தி வழி,* ஞானப்பால், சங்ககரி, சேலம்—1, 1977.

17. **சிவஞானம், ம.பொ.,** *வள்ளலார் கண்ட சாவாக் கலை,* காந்திய இலக்கிய சங்கம், மதுரை—20, 1987 (மூன்றாம் பதிப்பு).

18. **சிவலிங்கனார், அ.,** *அகத்தியர்கள்,* ஒற்றுமை ஆபீஸ், சென்னை—17.

19.	**சிவானந்த பரஹம்சர், ஸ்வாமி,**	*சித்த வேதம் — மோக்ஷ சூத்ரம்,* சித்த சமாஜம் ஜெனரல் பிரசிடெண்ட், 1928, (இடம் இல்லை).
20.	**சுப்பிரமணிய அய்யர், ஏ.வி.,**	*தமிழ் இலக்கியத்தில் அறுவகை சமயம் — ஓர் ஆராய்ச்சி,* ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், சி.என். வில்லேஜ், திருநெல்வேலி—1, 1973.
21.	**சுப்பிரமணியன், ச.வே., & திருநாவுக்கரசு, க.த. (ப.ஆ),**	*தமிழ் இலக்கியக் கொள்கை—2* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை—20.
22.	**சுப்ரமணியம், மே.சீ.,**	*சித்தர் இரசவாதக் கலை* தாமரை நூலகம், சென்னை—26. 1956.
23.	**சோமு. மீ.ப.,**	*சித்தர் இலக்கியம் — முதல் பகுதி,*
24.	__________,	*சித்தர் இலக்கியம் — இரண்டாம் பகுதி,*
25.	__________,	*சித்தர் இலக்கியம் — மூன்றாம் பகுதி,* அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1988.
26.	**ஞான ராபின்சன் (ப.ஆ.),**	*திருமறைத் தோழன்,* கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை—3, 1972.
27.	__________, **& தயானந்தன் பிரான்சிஸ், தி.,**	*திருமறை விளக்கவுரை,* தமிழ் நாடு இறையியல் நூலோர் குழு, மதுரை—10 1990.
28.	**தங்கவேல் சுவாமி, எம்.பி.,**	*இராஜகோபுரம்,* இயற்கை இல்லம், பழனி—2.
29.	**தெய்வநாயகம், சி.கோ.,**	*சித்தர் சிந்தனைகள்,* மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1984.

30. **தெய்வநாயகம், மு.,** *விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம்—ஒப்பாய்வு,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை—113, 1985.

31. **தேவ நேயன், ஞா.,** *தமிழ் இலக்கிய வரலாறு,* நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி, வேலூர், 1979.

32. **தேவாரம் அடங்கல் முறை (இரண்டு தொகுதிகள்),** மயிலை இளமுருகனார் பதிப்பு, திருவளகம், சென்னை, 1953.

33. **நாராயணன், க.,** *சித்தர் தத்துவம்,* தமிழ்ப் புத்தகாலயம், சென்னை—5, 1988.

34. **பசுபதி, கே.ஆர்.,** *சித்தர்கள்,* புதுப்புனல் பதிப்பகம், திருச்சி—2, 1963.

35. **பலராமய்யா, வி.,** *சாகாக் கலை,* அருள் சோதி பதிப்பகம், சென்னை—29.

36. ——————, *சித்தர் மெய்ப்பொருள்,* அருள் சோதி பதிப்பகம், சென்னை—29, 1984 (நான்காம் பதிப்பு)

37. **பாப்லி, எச்.ஏ.,** *சற்சமய விளக்கம்,* கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை—3, 1917.

38. **பழனியப்பா, ஆர்.கே., (தொ.ஆ.).,** *சித்த மருத்துவ விளக்கம்,* ஞான வச்சலா வைத்திய சாலை, சேலம்—2.

39. **மாடசாமி, ச.,** *பாம்பாட்டிச் சித்தர்,* ஒ வெளியீடு, மதுரை—9, 1980.

40. **மாணிக்க வாசகம், இரா.,** *சித்தர்கள் சொன்னவை,* அன்னை அபிராமி அருள், சென்னை—30, 1985.

41. ——————, *சித்தர் பரிபாஷை அகராதி,* அன்னை அபிராமி அருள், சென்னை—30.

42. __________, *நம் நாட்டுச் சித்தர்கள்,* அன்னை அபிராமி அருள், சென்னை—30, 1982 (இரண்டாம் பதிப்பு).

43. **முத்தையா, நா.,** *ஈழத்துச் சித்தர்கள்,* ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பட்டி (இலங்கை), 1980.

44. **முருகேசன், சி.எஸ்,** *சித்தர் கண்ட இறைமை,* பூம்புகார் இலக்கியச் சங்கம், புதுவை—3, 1988.

45. **லாரன்ஸ், எஸ்.,** *இராமலிங்க அடிகளும் கிறிஸ்தவமும்,* தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை—10, 1988.

46. **வரதராசன், மு.,** *தமிழ் இலக்கிய வரலாறு,* சாகித்ய அகாடமி, நியுடெல்லி—19.

47. **விவேகானந்தன், என்.,** *இயேசுவின் யோகம்,* விவேகானந்தா பதிப்பகம், ஆசாரி பள்ளம் (குமரிமாவட்டம்), 1986.

48. **வேலுப்பிள்ளை, ஆ.,** *தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும்,* பாரிபுத்தகப் பண்ணை, சென்னை—5, 1978 (இரண்டாம் பதிப்பு)

49. **ஸ்தேவான், நீல்.,** *இயேசு கிறிஸ்து யார்?,* கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை—3, 1963.

50. __________, *கடவுள் : கிறிஸ்தவரது விளக்கம்,* கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை—3, 1971 (மறு பதிப்பு)

ஆங்கிலம்

1. **Bernhad, W. Anderson,** *Understanding the Old Testament*, Prentice-Hall, Inc., Englewood Cliffs, New Jersey, 1975 (III Ed.).
2. **Caldwell, R.,** *A Comparative Grammar of the Dravidian or South Indian Family of languages*, Harrison, London, 1856.
3. **Dayanadhan Francis, T.,** *Ramalinga Swamy*, CLS, Madras 3, 1972.
4. **Jesudasan, C., & Hephzibah Jesudasan,** *A History of Tamil Literature*, YMCA Publishing House, Calcutta, 1961.
5. **Jepegnanam, S.T.,** *Fundamentals of Christianity*, The Tamil Nadu Theological Seminary, Madurai-10.
6. **Kamil V. Zvelebil,** *A History of Indian Literature – Tamil Literature* Vol. X., Otta Harrassowitz., Wiezbadon, 1974.
7. ______________, *The Poets of the Powers*, Rider & Co., London, 1973.
8. ______________, *The Smile of Murugan on Tamil literature of South India*, Leiden, E.J., Br. : 11, Netherlands, 1973.
9. **Kanine Schomer & Mcheod, W.H., (Ed.,),** *The Sants*, Motilal Banarsidas, Jawaharlal Nagar, Delhi, 7, 1987.
10. **Mahadevan, T.M.P.,** *The idea of God in Saiva-Siddhantha*, Annamalai University, Annamalai Nagar, 1955.

11. **Robin Boyd,** *What is Christianity,* CLS, Madras-3, 1970.

12. **Shanmugavelan, A.,** *Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India,* Sakthi Nilayam, Alagappa Nagar, Madras-10, 1963.

13. **Shashi Bhusan Das Guptha,** *Obsecure religious cults,* Firma, K.L. Mukhopadyay, Calcutta-12, 1962 (II Ed.).

14. **Subramania Aiyer, A.V.,** *Kapilarahaval,* A.V. Subramani Aiyer, Madras-82, 1975.

15. ________________, *The Poetry and the Philosophy of the Tamil Siddhas – An essay in criticism,* Manivasakar Noolagam, Chidambaram, 1969,

16. **Venkatraman, R.,** *A History of the Tamil Siddha Cult.,* Ennes Publications, Madurai-9, 1990.

II. கட்டுரைகள்

I. தமிழ்

1. **அருணாசலம், மு.** *திருக்குறளும் உறுதிப் பொருளும் – சித்தர் பாடல்கள்,* திருக்குறள் கருத்தரங்கு, மதுரைக் காமாராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1978.

2. **இளமதி, க.,** *'கொங்கணரும் குறியீடும்',* பதினாறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை—தொகுதி—3, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1984.

3. ___________, *'சித்தர் காட்டும் குரு'* பதினைந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை—தொகுதி—3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1983.

4. **மதியழகன், மா.,** *'சித்தர்களின் ஆய்வுக் களங்கள்',* இருபதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை—தொகுதி—3, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1988.

5. **முத்தப்பன், பழ.,** *'சித்தர் தத்துவம்',* பதினேழாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை—தொகுதி—3, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1985.

6. **ஜெயா, பி.,** *'சித்தர் கூறும் தெய்வங்கள்'* ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1974.

II. ஆங்கிலம்

1. **Raja P.,** *'A few minutes with Paambatti Siddha'* Indian Express, Feb 2, 1988.

2. **Subramanian, A.V.** A book reiview on *Gnanakanal*, The Hindu, July 9, 1991.

3. **Vengal Chakkarai Raja Sekaran,** *'Fourth Gospel from an Indian view Point'* a book review on *The yoga of the Christ in The Gospel according to St. John.*, The Hindu, Dec 11, 1990.

III ஆய்வேடுகள்

1. **காயாரோகணம், ப.சொ.,** *'சித்தர்களின் கடவுட் கொள்கை',* பதிப்பிக்கப் பெறாத பி.எச்டி., ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1983.

2. **Jaya P.,** *'Works of Cittars and their place in Hindu religion's thought in Tamil Literature'* Unpublished Ph. D., Thesis, University of Kerala, 1978.

IV. களஞ்சியம், அகராதிகள்

1. **கலைக்களஞ்சியம் (தொகுதி—4),** தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1955.

2. **தமிழ் மொழி அகராதி,** நா. கதிரைவேற் பிள்ளை (ப.ஆ.), ஆசியன் எஜுகேஷனல் சர்வீஸஸ், நியுடெல்லி, 1984 (ஆறாம் பதிப்பு).

3. **மதுரை தமிழ்ப் பேரகராதி (முதற்பாகம்),** இ.மா. பால கிருஷ்ணன் (ப.ஆ.), மதுரை.

4. **விமலானந்தம், மது.ச.,** தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் — முதல் தொகுதி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை—5.

5. **New Bible Dictionary** (Second Ed.), Tyndale House Publishers, Inc., Wheaton, Illinois, U.S.A.,

6. **Tamil-English Dictionary,** Rev. Miron Winslow (Ed.), American Mission Press Madras-1, 1862.

7. **The interpreter's Dictionary of the Bible** George Arthur Buttrick (Ed.), Abingdon Press, Nashville, Newyork, 1957.

* * * * *